வரு.74 இல. 26 ★

www.vaaramanjari.lk

/Thinakaran.lk /ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

தினகரன் வாரமஞ்சரி

24 பக்கங்கள் 80/-

2022 ஜூன் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

June 26 Sunday, 2022

03

21 ஆவது திருத்தமே IMF இன் எதிர்பார்ப்பு

எரிபொருள் பிரச்சினையை அடுத்த மாதத்திற்குள் சமாளித்து விடுவோம் 05

09

அரிசி அரசியலே!

24

தேசிய கனிஷ்ட மெய்வல்லுநரில் சாதித்த வீரர்கள்

இக்கட்டான சூழ்நிலையில் இலங்கைக்கு உதவத் தயார்

IMF பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் தெரிவிப்பு

சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகளுக்கேற்ப இந்த இக்கட்டான சூழ்நிலையில் இலங்கைக்கு உதவ 04

கடினமான காலத்தில் வழங்கும் உதவி

சீனத் தூதுவரை சந்தித்து நன்றி தெரிவித்த மஹிந்த

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் சீனத் தூதுவருக்கும் இடையிலான சந்திப்பு வெள்ளிக்கிழமை (24) நடைபெற்றுள்ளது. இலங்கையின் கடிமனமான இந்த கால கட்டத்தில் இலங்கைக்கு 04

பொருளாதார வீழ்ச்சிக்கு காரணமானவர்கள் யார்?

விசாரணை நடத்தப்பட வேண்டும் – பேராயர்

இரண்டு, மூன்று ஆண்டுகளென்ற மிகக் குறுகிய காலப்பகுதிக்குள் நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு காரணமானவர்கள் தொடர்பில் உடனடி விசாரணை நடத்தப்பட வேண்டுமென கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார். றாகம பகுதியில் நடைபெற்ற 04

கதிர்காம ஆடிவேல் விழா ஜூலை 29 இல் ஆரம்பம்

ஆகஸ்ட் 12இல் தீர்த்தோற்சவத்துடன் நிறைவு

காரைதீவு குறூப் நிருபர்

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் கந்தன் ஆலய வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் எதிர்வரும் ஜூலை 29 ஆம் திகதி ஆரம்பமாகிறது. ஜூலை 29 ஆம் திகதி திருவிழா 04

அசௌகரியமற்ற பாடசாலைகள் வழமைபோல இயங்கும்;

நகர்புற பாடசாலைகள் யாவும் வாரத்தில் 03 தினங்கள் நடைபெறும்

ஆரம்பப் பிரிவுகளை நடத்தும் தீர்மானம் அதிபர்களிடம்

லோரன்ஸ் செல்வநாயகம்

பாடசாலை கற்பித்தல் நடவடிக்கைகள் நாளை (27) திங்கட்கிழமை முதல் ஜூலை மாதம் முதலாம் திகதி வரையான காலப்பகுதியில் முன்னெடுப்பது தொடர்பான அறிவித்தலை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது. இதன்படி, கடந்த வாரம் கிராமப் பகுதிகளில் பாடசாலைகள் முன்னெடுக்கப்பட்டமை போன்று, மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு போக்குவரத்து அசௌகரியமற்ற பாடசாலைகளை வழமைபோன்று நடத்த வேண்டும்.

இப்பாடசாலைகளில், போக்குவரத்துப் பிரச்சினை உள்ள ஆசிரியர்கள் அதிபர்களுடாக, அந்த ஆசிரியர்களின் பிரத்தியேக விடுமுறையில் விடுவித்து பொருத்தமான நேர அட்டவணையை தயாரிக்க வேண்டும். அதேநேரம் கடந்த வாரம் பாடசாலைகள் இயங்காத 04

ஜனாதிபதி பைடனை சந்தித்த இலங்கைத் தூதுவர் சமரசிங்க

அமெரிக்காவுக்கான இலங்கை தூதுவர் மஹிந்த சமரசிங்க, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை சந்தித்துள்ளார். இச் சந்திப்பு (13) வெள்ளை மாளிகையில் ஓவல் அலுவலகத்தில் நடைபெற்றுள்ளது. பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியுள்ள இலங்கைக்கு அமெரிக்கா உதவிகளை வழங்கி வரும் இச் சந்தர்ப்பத்தில் இச் சந்திப்பு மிக முக்கியத்துவம் வாய்ந்தாக அமைந்துள்ளது. 04

எங்கள் கருத்து...

பொது ஊடகங்களில் ஆபாச அரசியல் செய்வது அநாகரிகம்

இலங்கை மதங்களால் பண்பட்ட, செழுமை அடைந்த ஒரு நாடு. இலங்கைக்கென வளமான, பொருள் பொதிந்த ஒரு கலாசார வரலாறு உண்டு. அரசியலை அகற்றிவிட்டுப் பார்த்தால் இந்நாட்டில் எல்லாக் காலங்களிலும் அனைத்து மதத்தவர்களும் பேதங்களை கற்றுக் கொள்கின்ற மனப்பக்குவத்துடனுமே வாழ்ந்து வந்துள்ளார்கள். இலங்கையிலும் மன்னர் காலம் முதல் சாதி அமைப்பு இருந்து வந்துள்ள போதிலும் அது இந்தியா அளவுக்கு கொடூரமானதாக இருந்ததில்லை. இன்றைய இலங்கையில் சாதி எதற்கும் ஒரு முட்டுக்கட்டை அல்ல. 19ம் நூற்றாண்டில் கேரளப் பெண்கள் மார்பு கச்சை அணிவதற்கு தடை இருந்தது. அதை எதிர்த்து மார்பு சீலைப் போராட்டத்தை அப் பெண்கள் நடத்தி வெற்றி பெற வேண்டிய தேவை இருந்தது. இலங்கைப் பெண்கள் இவ்வாறான போராட்டங்களை ஆண் அடக்குமுறையை எதிர்த்து போராட வேண்டிய அவசியம் எழவில்லை. உரியவருக்கு உரிய சுதந்திரத்தை வழங்கும் பண்பு எமது கலாசாரத்தில் இயல்பாகவே ஊறிக்கிடந்தது.

இப் பண்பை கடுமையாக மீறும் ஒரு போக்கை அவ்வப்போது, குறிப்பாக இணைய தளங்களில், நாம் அவதானிக்க முடிகிறது. அச்சு ஊடகமும் இலந்திரனியல் ஊடகமும் மட்டும் இருந்த போது அவை செய்திகளையும், படங்களையும், காணொளிகளையும் கண்ணியமாகவே கையாண்டன.

தடியெடுத்தவன் தண்டல்காரன் என்பதைப் போல, எவர் வேண்டுமானாலும் செய்தி ஆசிரியராகலாம் என்ற நிலை இணைய தளங்கள் மற்றும் 04

40,000 மெற்றிக் தொன் தாங்கிய

பெற்றோல் கப்பல் வந்தடைவதில் தாமதம்

அமைச்சர் கஞ்சன டுவிட்டரில் பதிவு

40,000 மெற்றிக் தொன் பெற்றோலுடன் நேற்று முன்தினம் நாட்டை வந்தடையவிருந்த கப்பல், மேலும் தாமதமடையுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த எரிபொருள் விநியோக நிறுவனம் இது தொடர்பில் பெற்றோலிய கூட்டுதாபனத்துக்கு அறிவித்துள்ளதாக வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தமது டுவிட்டர் பதிவில் 04

15,000 டொலருக்கு மேல் வைத்திருப்போருக்கு

இரண்டு வாரம் காலம் மட்டுமே பொது மன்னிப்பு வழங்கல்

மத்திய வங்கி கடும் எச்சரிக்கை

பொது மன்னிப்புக் காலத்தின் இறுதியில், மேலதிக வெளிநாட்டு நாணயத்தை தம் வசம் வைத்திருப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தமக்கு அதிகாரம் உள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது. இலங்கையிலுள்ள அல்லது வதிகின்ற ஆளொருவரினால் 04

அமெரிக்க உயர்மட்ட தூதுக்குழு இன்று இலங்கை வருகிறது

அரசியல், பொருளாதார நிபுணர்களை சந்தித்துரையாடுவர்

அமெரிக்க திறைசேரி திணைக்களம் மற்றும் இராஜாங்க திணைக்களம் ஆகியவற்றின் உயர்மட்டத் தூதுக்குழு, நான்கு நாள் விஜயம் மேற்கொண்டு இன்று இலங்கை வருகிறது. இந்த தூதுக்குழுவின் இலங்கை விஜயம் இன்று முதல் எதிர்வரும் 29 ஆம் திகதிவரை அமையவுள்ளதாக கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது. ஆசியாவுக்கான பிரதி உதவித் திறைசேரி செயலாளர் றொபர்ட் கப்ரொத், தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான பிரதி உதவி இராஜாங்க செயலாளரான 04

யாழ். பல்கலை ஊடகத்துறையின் தலைவர் கலாநிதி ரகுராம் பேராசிரியராக பதவி உயர்வு

யாழ். விசேட,பருத்தித்துறை விசேட நிருபர்கள்

யாழ்.பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி சி. ரகுராம், பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். இதற்கான ஒப்புதலை பல்கலைக்கழகப் பேரவை வழங்கியது. பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று 04

எரிபொருள் வரிசையில் நால்வருக்கு கத்திக்குத்து

வாக்குவாதம் முற்றியதால் சம்பவம்

எரிபொருள் வரிசையில் நின்ற நபர்களுக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதம் காரணமாக ஒரு நபர் நான்கு பேரை கத்தியால் குத்தியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வெல்லவாயவில் லங்கா ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் (24) மாலை இரு தரப்பினருக்கிடையே மோதல் இடம்பெற்றுள்ளதைத் தொடர்ந்து இந்த கத்திக்குத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது. 04

எரிபொருள் வரிசையில் இளைஞர் ஒருவர் மரணம்

கொள்கலன் லொறியில் சிக்கி பலி

எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கருகில் வரிசையில் காத்திருந்த 19 வயது இளைஞன் ஒருவர் கொள்கலன் லொறியொன்றில் சிக்கி உயிரிழந்துள்ளார். அநுராதபுரம் – புத்தளம் 04

15 வயதுக்கு உட்பட்ட சகலருக்கும் டிஜிட்டல் ID

ஆட்பதிவு திணைக்கள தலைவர் அறிவிப்பு

15 வயதுக்குட்பட்ட அனைத்து இலங்கையருக்கும் இலத்திரனியல் அடையாள அட்டையை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக்க தெரிவித்துள்ளார்.

பொதுவான தகவல்களுடன் ஒரு நபரின் கைரேகை, 04

FUN BLASTER இடமிருந்து

மாதம் முழுவதும் Fun ஆக இருக்க மிகச்சிறந்த UNLIMITED பக்கேஜ்

Facebook WhatsApp மற்றும் YouTube

உடன் மேலதிக டேட்டா*

ரூ.360/- மட்டுமே

மேலதிக வரிகள் இல்லை

செயற்படுத்தல் ரீலோட், MyDialog App அல்லது #678# மூலம்

* 1GB Anytime Data மற்றும் 1GB Free Night Bonus உள்ளடக்கப்பட்டுள்ளது

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது

SD (360p) Video தரத்தினை வழங்குகின்றது

4G SIM அட்டையுடன் 4G Smartphone அவசியமாகும்

TRC/D/PRO/20/10

Dialog

எதிர்காலம் இன்றே.

எல்லோருக்குமான நெருக்கடி இது இணைந்துதான் மீண்டெழ முடியும்

மீண்டும் பஞ்சமொன்று ஏற்படுமாயின், அதனை முன்னே உணர்ந்து செயற்படும் பக்குவமும் அனுபவமும் எங்கள் மக்களிடம் உள்ளது. பல இளையோர்கள் விவசாயத்தில் நாட்டம் காட்ட ஆரம்பித்துள்ளார்கள். தன்னிறைவு பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் ஆரம்ப நடவடிக்கைகள் இப்போது யாழ்ப்பாணத்தில் தொடங்கியுள்ளன என்கிறார் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன். தினகரனுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் தெரிவித்த கருத்துக்கள்...

கே: இலங்கையில் மிகப்பாரிய பஞ்சமொன்று ஏற்படவுள்ளது. அதைப்போன்று யாழ்ப்பாணமும் பாரிய பஞ்சத்தை எதிர்கொள்ளவுள்ளது. தென்னிலங்கை போன்று யாழ்ப்பாணத்திலும் பாதிப்பு ஏற்படுமா?

எமது வரலாற்றும் அனுபவங்களும் இதற்கான பதிலை வழங்கியுள்ளன. நாடு பஞ்சத்தை எதிர்கொண்ட கடந்தகால சந்தர்ப்பங்களில் எல்லாம் முதலில் மீண்டெழுந்த பிரதேசங்களாக தமிழர் பிரதேசங்கள் விளங்கின. அதிலும் யாழ் மாவட்டம் முன்னுதாரணமாக திகழ்ந்தது. யுத்தகால பொருளாதார தடைகளின் போதும் யாழ் மாவட்டம் தன்னிறைவோடு செயற்பட்டது. அதற்கான காரணம் எமது மாவட்டத்தில் விவசாயம், கடற்தொழில், கிராமிய கைத்தொழில்கள், சுயசார்பு தொழில்கள் என்பவற்றில் மக்கள் சம அளவில் ஈடுபட்டு வந்தனர். அத்தோடு இவற்றுக்கு துணை சேர்க்கும் வகையில் கல்வியையும் எங்கள் மக்கள் கட்டிக்காத்து வந்தனர். ஸ்ரீமாவோ அம்மையார் கால பஞ்சத்தின்போது எங்கள் விவசாய பெருமக்கள் தமக்கான கல்வீடுகளை தமது விவசாய வருமானத்தில் கட்டும்வகையில் பொருளீட்டியிருந்தனர்.

அதேபோல போர் நிலவிய காலத்தில் புலம்பெயர் உறவுகள் எங்கள் மாவட்டத்தையும் மக்களையும் பொருளாதார ரீதியில் காப்பாற்றி வந்திருந்தனர். அது இப்போதும் எங்கள் மக்களின் பலமாகவே அமைகிறது.

மீண்டும் பஞ்சமொன்று ஏற்படுமாயின், அதனை முன்னே உணர்ந்து கொண்டு செயற்படும் பக்குவமும் அனுபவமும் எங்கள் மக்களிடம் உள்ளது. பல இளையோர்கள் விவசாயத்தில் நாட்டம் காட்ட ஆரம்பித்துள்ளார்கள். வீட்டுத்தோட்டங்களை ஆரம்பித்துள்ளார்கள். தென்னைசார் கைத்தொழில்களை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளார்கள். தன்னிறைவு பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் ஆரம்ப நடவடிக்கைகள் இப்போது யாழ்ப்பாணத்தில் தொடங்கியுள்ளன. இதற்கு பக்கபலமாக புலம்பெயர் முதலீடுகளும், கல்வியறிவும் பெரிதும் கைகொடுக்கின்றன. குறிப்பாக IT தொழில்துறையில் ஈட்டும் வருமானத்தை விவசாயத்தில் முதலீடு செய்யும் பல இளைஞர்களை யாழ் மண்ணில் சந்தித்துள்ளேன். அவர்கள் பெரும் நம்பிக்கை தருகிறார்கள்.

எரிவாயு அடுப்புகளுக்கு பழக்கப்பட்டிருந்தாலும் விறகை மீண்டும் பாவிக்க ஆரம்பித்துள்ளனர். ஒப்பீட்டளவில் தென்னிலங்கையை விட எமக்கு மாற்றீடுகளுக்கான வாய்ப்புகள் அதிகம் இருப்பதாலும், கடந்த கால அனுபவங்களைக் கொண்டு சுதாகரிக்கும் பக்குவம் இருப்பதாலும் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டாலும் அதிலிருந்து மீண்டுவர யாழ்ப்பாண மாவட்டம் தயாராகவே இருக்கும். மக்கள் பிரதிநிதியாக தற்சார்பு பொருளாதார மேம்பாட்டு திட்டங்களை எமது மாவட்டத்தில் ஆரம்பிக்க பெரிதும் பங்களிப்பு வழங்கியுள்ளேன்.

கே: இந்த நெருக்கடி நேரத்தில் வடபுலம் முழு நாட்டுக்கும் வழங்கும் பங்களிப்பு எவ்வாறு இருக்கும்?

நிச்சயமாக பெரியளவில் பங்களிப்பை வழங்கும். இறக்குமதி பொருட்களை கட்டுப்படுத்தி அவற்றை நாட்டிலேயே உற்பத்தி செய்ய வேண்டும் என்ற அரசின் நோக்கத்தை நிறைவேற்றும் வாய்ப்பு வடபுலத்துக்கு உள்ளது. உர இறக்குமதியை தொடர்ந்து வருகிற பெரும்போகத்தில் நெல் வயல்கள் அதிக விளைச்சலை தருமென எதிர்பார்க்கப்படுகிறது. அதே போன்று வெங்காயம், உருளைக்கிழங்கு, காய்கறி வகைகள், திராட்சை உற்பத்தி என விவசாயம் சார்ந்த பங்களிப்பை நாட்டுக்கு வடபுலம் வழங்கும். விவசாய பிரதி அமைச்சராக நான் செயற்பட்டபோது, உருளைக்கிழங்கு மற்றும் திராட்சை செய்கையை யாழ் மாவட்டத்தில் ஆரம்பித்து வைத்திருந்தேன். அதன் நற்பலன்களை இந்த காலகட்டத்தில் எம்மால் பெறமுடியும். அதேபோன்று விவசாய குளங்களை அனைத்து பிரதேச செயலக பிரிவுகளிலும் புனரமைத்துள்ளோம். எனவே தேவையான அளவு உரமும் எரிபொருளும் எமது விவசாயிகளுக்கு கிடைக்கும் பட்சத்தில் விவசாய பங்களிப்பை எமது மக்கள் வழங்குவார்கள்.

அதேபோன்று புலம்பெயர் உறவுகளின் முதலீடுகள், அவர்கள் நாட்டுக்கு அனுப்பிவைக்கும் அந்நிய செலவாணி என்பனவும் எமது நாட்டுக்கு பலம் சேர்க்கும். ஒப்பீட்டளவில் அந்நிய செலவாணியை நுகரும் மக்கட்தொகை நாட்டின் வடபுலத்திலேயே அதிகமாக உள்ளது. அத்தோடு யாழ்ப்பாண விமான நிலையம் செயற்பட ஆரம்பிக்கும் போது சுற்றுலாசார், ஏற்றுமதி வர்த்தகங்கள் ஊடான வருவாயும் எமது பகுதிகளிலிருந்து கிடைக்கும். குறிப்பாக கருவாட்டு உற்பத்தி, தெங்கு சார் உற்பத்திகள், பனைசார் உற்பத்திகள், பற்றிக் ஆடை உற்பத்திகள் போன்ற துறைகள் மீளவும் வேகமெடுக்கும்போது அவற்றினூடாக கணிசமான அளவு வருமானம் கிடைக்கும். அதற்காகவே உற்பத்தி கிராமங்களை நிறுவி ஓர் ஆரம்பத்தை ஏற்படுத்தியுள்ளோம்.

இவற்றோடு உள்ளூர் உற்பத்தியாளர்கள், சந்தைப்படுத்துனர்கள், தொழில்முனைவோர் எமது பிரதேசங்களில் இந்த நெருக்கடிநிலையில் கைகொடுக்க தயாராக இருக்கிறார்கள்.

எனவே பிரதேச மட்டத்தில் ஆரம்பித்து நாடு தழுவிய முன்னேற்றத்தை ஏற்படுத்த எமது பிரதேசங்களை சேர்ந்தவர்கள் நிச்சயம் பங்களிப்பார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.

கே: நாடு மிகவும் வங்குரோந்து நிலையை அடைந்துள்ளது. அதற்கான காரணம் என்ன என்பதை கலக்காது சொல்வீர்களா?

பலர் பல்வேறு காரணங்களை சொல்வார்கள். என்னைப் பொறுத்தவரை இழந்தவற்றை நினைத்து நினைத்து காலத்தை வீணடிப்பதை விட இழந்த இடத்திலிருந்து மீண்டெழுந்து வருவதே வெற்றியாகும். குறிப்பாக பொருளாதார வெற்றி என்பது எல்லாருக்கும் தேவையாக உள்ளது. நாடும் இன்று அதையே எதிர்பார்த்து நிற்கிறது. எனவே பொருளாதார ரீதியாக அடுத்தவரை சார்ந்திருக்கும் நிலையை விட்டு தமக்கான சுயசார்பு பொருளாதார கட்டமைப்பை வளர்த்தெடுப்பது அவசியம். அதில் நாமெல்லோரும் தவறிழைத்துவிட்டோம். அதன் பிரதிபலன்களை இப்போது எதிர்கொண்டுள்ளோம். எங்கள் நாடு அனைத்து வளங்களையும் கொண்டிருந்தாலும் அவற்றை சரிவர பயன்படுத்தி முன்னேற தவறிவிட்டோம். கடந்தகால போர், அதனை தொடர்ந்த அரசியல் போக்குகள் என்பன நாட்டை தடுமாற வைத்துள்ளது. இனி அந்த தவறுகளை செய்யாதிருக்க வேண்டும் என அனைத்து தரப்பினரையும் கேட்டுக்கொள்கிறேன்.

கே: இந்த நெருக்கடி நிலையில் தமிழ் தரப்பு அரசியல் மற்றும் சமூக பங்களிப்பை போதிய அளவு அளிக்கவில்லையே. இதற்கான காரணம் என்ன?

கடந்தகால அனுபவங்களாக இருக்கலாம். அல்லது அரசியல் கொள்கைநிலைகள் காரணமாக இருக்கலாம். ஆனால் இப்போதைய சூழலில் அரசியல் நிலைப்பாடுகளை ஒரு பக்கமாக வைத்துவிட்டு மக்களை கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும். நாமெல்லோரும் இந்த நாட்டினை மீட்டெடுக்க வேண்டிய பொறுப்புக்குரியவர்கள். கடந்த காலங்களில் எமது பெற்றோர்கள் எவ்வாறு எம்மை வளர்த்தெடுத்தார்களோ அதே பொறுப்பும் கடமையும் எமக்கும் உண்டு. அதை உணர்ந்து நாம் செயற்பட வேண்டும். இயற்கை அனர்த்தங்களின் போதேல்லாம் எங்கள் தரப்புகள் எவ்வாறு கடந்தகாலங்களில் நாடு முழுவதுக்கும் பங்களித்தார்கள் என்பதை நினைவில் நிறுத்தி செயற்பட வேண்டும். இது அரசியல் பிரச்சினையல்ல. இதனை வைத்தும் அரசியல் செய்ய நினைக்க கூடாது. அது மக்களுக்கு மீண்டும் மீண்டும் செய்யும் நம்பிக்கை துரோகமாக மாறிவிடும். இப்போது மக்கள் பிரதிநிதிகள் ஒன்றாக நின்று மக்களின் பொருளாதார மீட்சிக்காக செயலாற்ற வேண்டும் என எதிர்பார்க்கிறேன்.

கே: காலிமுகத்திடல் போராட்டங்கள் பற்றிய உங்கள் கருத்து என்ன?

நாட்டின் ஜனநாய மாண்பை உலக நாடுகள் உணர்ந்து கொள்ளும் ஒரு சந்தர்ப்பமாக கருதுகிறேன். மக்களுக்கு உரித்தான கருத்து சுதந்திரத்தை, அரசை நல்வழிப்படுத்தும் உரிமையை மிக பொறுமையாக அமைதி வழியில் முன்னெடுக்கும் பாங்கானது சிறந்த முன்னுதாரணமாக உள்ளது. போராட்டத்தில் கலந்துகொண்டிருப்போர் இந்த நாட்களில் பல்வேறுபட்ட விடயங்களை சாத்தியப்படுத்தியுள்ளனர். குறிப்பாக இன முரண்பாடு தொடர்பாக விளக்கத்தை ஆரோக்கியமான உரையாடலாக மாற்றியுள்ளனர். கடந்த கால அரசியல்வாதிகளால் சாத்தியப்படுத்த முடியாத விடயங்களாக கூட அவை அமைந்திருந்தன. நாட்டை முன்னேற்றுவதற்கான யோசனைகளை வெளிப்படுத்துகிறார்கள். இந்த ஆரோக்கியமான உரையாடல் சூழலானது வளர்ச்சியடைந்த நாடுகளில் காணக்கூடியது. அங்குள்ள அரசுகள் மக்களின் பிரதிபலிப்பை இப்படியான சந்தர்ப்பங்கள் ஊடாகவே பெற்றுக்கொள்ளும். அவை நாட்டின் வெற்றிகரமான ஆட்சிமுறைக்கு உதவுவதாய் அமையும். அத்தகைய சூழலாகவே இதனை நான் கருதுகிறேன். இது அரசியல் வடிவம் பெறாமல் மக்கள் மயப்பட்டதாக தொடர வேண்டியதும் அவசியமானதாகும்.

கே: தமிழர்கள் ஓரமாக நின்று வேடிக்கை பார்ப்பது இந்த சமயத்தில் சரியானதா?

முற்றுமுழுதும் தவறானது. அரசியல் நிலைப்பாடுகளை களைந்தெறிந்து நாம் ஒன்றாக நின்று நாட்டை பொருளாதார ரீதியாக மீட்டெடுக்க வேண்டிய தருணமிது. எங்கள் தலைமுறைக்கு பொருளாதார பலத்தை நாம் கொடுக்க வேண்டியது எமது கடமை. அதை நாம் தட்டிக்கழிப்பதும், வேடிக்கை பார்ப்பதும் பெரும் தவறு.

வெற்றிகரமான உலக நாடுகளை பார்த்தீர்களானால், தேர்தலுக்கு பின்னதாக அனைத்து கட்சிகளும் பிரதிநிதிகளும் மக்கள் முன்னேற்றத்தையும் தேவைகளை தீர்க்கும் பொறுப்பையும் ஏற்று செயற்படுவார்கள். ஆனால் எங்களில் சிலர் அடுத்த தேர்தலுக்கான தயார்படுத்தல்களில் ஈடுபட்டுக் கொண்டே இருக்கிறார்கள். மக்களையும் அதனை நோக்கிய சிந்தனையோடு வைத்திருக்க விரும்புகிறார்கள். இது இந்த சூழ்நிலைக்கு பொருத்தமில்லாதது. வேடிக்கை பார்க்கும் மனிதர்களாக நாம் நிற்பதை விடுத்து திட்டவகுப்பில், அவற்றை நடைமுறைப்பட்டுதலில் கூட்டுப்பொறுப்போடு செயலாற்ற வேண்டும் என்பதே எனது எண்ணப்பாடு. இதன் காரணமாகவே எனது கட்சி எதிரணியில் இருந்தாலும், அரசை வழிப்படுத்தும் பொறுப்பில் நான் இணைந்து செயற்படுகிறேன். இது எம் எல்லோருக்குமான நெருக்கடி. இதிலிருந்து நாம் இணைந்துதான் மீண்டெழ முடியும்.

கே: யாழ்ப்பாணத்தை எடுத்துக் கொண்டால் எவற்றை பிரதான பிரச்சினையாக கருதுகின்றீர்கள்?

போர் நடந்த பிரதேசமொன்று எதிர்கொள்ளும் அத்தனை பிரச்சினைகளும் யாழ்ப்பாணத்துக்கும் உள்ளன. அவை இன்னும் தீரவில்லை. எமது மாவட்டத்தின் சுமார் 40 ஆண்டுகால முன்னேற்றம் பாதிப்படைந்த நிலை காணப்படுகிறது. இந்நிலையில் தற்போதைய பொருளாதார நெருக்கடியானது யாழ் மாவட்டத்துக்கு பேரிடியாகவே பார்க்கிறேன். யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டுவந்த உட்கட்டுமான திட்டங்கள் அனைத்தும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. புதிய தொழில் வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. துரித அபிவிருத்திக்கான அனைத்து பாதைகளிலும் தடங்கல்கள் ஏற்பட்டுள்ளன. மக்களின் புதிய திட்டங்கள் அனைத்தும் ஆரம்பிக்கப்படாமல் இருக்கின்றன. எங்கள் மக்களும் எரிவாயுக்காகவும் எரிபொருளுக்காகவும் வீதிகளில் காத்திருக்கிறார்கள். விவசாயிகள் மண்ணெண்ணைக்காக காத்திருக்கிறார்கள். மக்களின் அன்றாட வாழ்வியலில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எரிபொருட்களும் உரங்களும் எமது மக்களுடைய உடனடிக் கோரிக்கையாக இருக்கின்றன. அவற்றை பெற்றுக்கொடுப்பதற்கான *அழுத்தங்களை நான் மேற்கொண்டுள்ளேன்.*

கே: மக்கள் எதிர்க்கும் தலைவர்கள் அரசியலில் இருந்து வெளியேற வேண்டும் என்று கருதுகின்றீர்களா?

இது ஜனநாயக நாடு. இதில் அரசியலில் யார் இருக்க வேண்டும், யார் வெளியேற வேண்டும் என்பதை மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும். அதுவே சரியானதுமாகும். ராஜபக்ச தரப்பின் அரசியலை மக்கள் ஆதரித்திருந்தனர். இப்போது எதிர்ப்பலை இருப்பதாக தென்படலாம். ஆனால் மக்கள் முடிவை யாராலும் முற்கூட்டியே தீர்மானிக்க முடியாது. மக்கள் முடிவெடுக்கும்போது அதனை ஏற்பதுதான் மக்கள் பிரதிநிதிகளின் கடமை.

கே: இது அரசியல் பிரச்சனைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடுமா?

அரசியல் பிரச்சினைக்கான முற்றுப்புள்ளியை நோக்கிய ஒரு அடித்தளத்தை உருவாக்கும் வாய்ப்புள்ளது. இப்போது இன முரண்பாடுகள் தொடர்பாக உரையாடல்கள் ஆரம்பித்துள்ளன. நாடு முழுவதும் ஒரே மாதிரியான நெருக்கடியை சந்தித்துள்ளது. எல்லோரும் எல்லோரைப்பற்றியும் பேசுகிறார்கள். கடந்தகால அரசியல் முரண்பாடுகள் தொடர்பில் பரஸ்பர புரிதல்கள் வடக்கிலும் தெற்கிலும் ஏற்படத் தொடங்கியுள்ளது. தவறிழைத்த தருணங்கள் தொடர்பான பார்வைகள் அகலமாகியுள்ளன. அதே தவறுகள் மீண்டும் ஏற்பட்டுவிடக்கூடாது என்ற பக்குவம் மக்களிடத்தில் ஏற்படத்தொடங்கியுள்ளது. நெருக்கடியான மன அழுத்தங்கள் கூடிய இந்த சூழ்நிலையிலும் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள இந்த அபிப்பிராய மாற்றங்களும் உரையாடல்களும் முரண்பாடுகளற்ற இன ஒற்றுமையை ஏற்படுத்தும் அடித்தளங்கள் என நம்புகிறேன். இதனை நேர்மையான முறையில் கட்டியெழுப்புவதை அரசியல் தலைமைகள் உறுதி செய்ய வேண்டும்.

கே: இந்த விடயத்தில் நீங்கள் சொல்லும் தீர்வு என்ன?

உழைப்பை நம்பி நேர்மையுடன் செய்யும் பணிகளில் செயலாற்ற வேண்டும். இப்போதைய சூழலில் சிக்கனத்தை கடைப்பிடித்து கிடைக்கும் மீதியை முதலீடுகளாக்கி அதிலிருந்து பொருளாதார மீட்சியை பெற எல்லோரும் செயற்பட வேண்டும்.

உள்ளூர் உற்பத்திகளை ஏற்றுமதி வருமானத்தை பெறும் வகையில் அதிகரித்து அதனூடான அந்நிய செலவாணியை பெறுதல், உள்ளக பொருளாதார கட்டமைப்பை வலுப்படுத்துதல், சுற்றுலாத்துறையை முழுவீச்சுடன் செயற்பட வழிவகை செய்தல் மற்றும் அதற்கான முதலீடுகளை அதிகரித்தல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை பெறுவதில் கூடிய கவனத்தை திருப்புதல், திறன் மிக்க உயர்கல்விக் கோட்பாட்டை வரையறை செய்தல், உற்பத்தி வலயங்களை அப்பிரதேசங்களின் வளங்களை மையப்படுத்தி அதிகரித்தல், தொழில் முனைவோர்களை ஊக்கப்படுத்தலும் சந்தை வாய்ப்பை உறுதி செய்தலும் உள்ளிட்ட பல விடயங்களை முன்னெடுப்பதே இப்போதைய நெருக்கடி நிலையிலிருந்து நிரந்தரமாக மீள வாய்ப்பாக அமையும்.

இவ்விடயம் தொடர்பாக ஏனைய தமிழ் பிரதிநிதிகளை விட நான் அதிக அக்கறை கொண்டு செயற்படுகிறேன். திட்ட முன்மொழிவுகள், ஆலோசனை கூட்டங்கள், சந்திப்புக்கள் என்பவற்றில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகிறேன். அதே நேரத்தில் ஏனைய தமிழ் பிரதிநிதிகளையும் இவ்விடயத்தில் கைகோர்க்குமாறு அழைப்பு விடுக்கிறேன்.

கே: ஜனாதிபதியின் அதிகாரம் குறைக்கப்பட்டால் செல்வந்த நாடுகள் எங்களுக்கு உதவி செய்யுமென நம்புகிறீர்களா?

ஜனநாயக பாதுகாப்பு உறுதிசெய்யப்பட்டுள்ள நாடுகளில்தான் செல்வந்த நாடுகள் முதலீடுகளையும், உதவிகளையும் செய்ய முன்வரும். அத்தகைய ஜனநாய பாதுகாப்பை இலங்கை உறுதி செய்யும் நடவடிக்கைகள் இப்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை குறைப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்படுகிறது. தனியொருவருக்கான அதிகார குவிப்பை மக்கள் பிரதிநிதிகள் நிறைந்த சபையான பாராளுமன்றத்திடம் கொண்டுவருவது ஒரு ஜனநாய பாதுகாப்பு நடவடிக்கையாகும். ஆனால் இவையனைத்தையும் தாண்டி, பொருளாதார நிலைபேற்றை உறுதிப்படுத்தி, அதற்கான கொள்கை வகுப்புகளை தீட்டினால் மாத்திரமே செல்வந்த நாடுகளின் உதவிகளை எம்மால் அதிகரிக்க முடியும். அந்தப் பணிகளை காலம்தாழ்த்தாது அரசு முன்னெடுக்க வேண்டும். தாமதிக்கும் தருணங்கள் அனைத்தும் எமக்கான உதவிகளை தடுப்பதாகவே அமையும்.

சுமித்தி தங்கராசா...✍

கொழும்பு கிராண்ட்வே லயன்ஸ் கழகத்தின் 2022/23 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக அதிகாரிகளை தெரிவுசெய்யும் நிகழ்வு கடந்த ஜுன் 14ஆம் திகதி தி செஃப் சிலோன், கொழும்பு 6 இல் நடைபெற்றது. முதல் துணை மாவட்ட ஆட்சியர் (தேர்வு) லயன் பிளாசிடஸ் எம் பீட்டர் (MJF) மற்றும் அவரது துணைவி லயன் சாவித்திரி பீட்டர் (MAF) ஆகியோர் இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டனர். இந்நிகழ்வின் போது லயன்ஸ் கழக நிர்வாகிகளால் வடிவமைக்கப்பட்ட www.colombograndway.org இணையத்தளம் பிரதம விருந்தினரால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. கொழும்பு கிராண்ட்வே லயன்ஸ் கழக தலைவராக கு. சுகந்த், செயலாளர் லயன் ஜான்ஸ்டன், பொருளாளர் லயன் புஷ்பராஜ், 2ஆவது துணைத் தலைவராக லயன் சந்தானம் (MJF), உறுப்பினருக்கான தலைவர் லயன் ஜெயபிரகாஷ் (MJF), LCIF ஒருங்கிணைப்பாளராக லயன் தமிழ்ச்செல்வன், சந்தைப்படுத்தல் தொடர்பாளர் லயன் திவ்யா பாஸ்கரன் மற்றும் லயன் பிரகாஷ், லயன் திலீபன் ஆகியோர் 2022/23 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக அதிகாரிகளாக தெரிவுசெய்யப்பட்டனர்.

தம்மிக்க பெரேரா முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக நியமனம்

பாராளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். கொழும்பு கோட்டை ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முன்னிலையில் நேற்று முன்தினம் மாலை இப்பதவிப் பிரமாணம் நடைபெற்றது. ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத்தும் இச்சந்தர்ப்பத்தில் கலந்துகொண்டார்.

முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகியதையடுத்து, அந்த வெற்றிடத்துக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தேசியப் பட்டியல் மூலம் பிரபல வர்த்தகரான தம்மிக்க பெரேரா நியமிக்கப்பட்டார். அவர் கடந்த 22 ஆம் திகதி சபாநாயகர் முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

கனடா, அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலியாவில் வாழும் இலங்கையர்களால் வழங்கப்பட்ட IV Fluconazole மருந்துகளின் 1000 குப்பிகளை அண்மையில் சென்னையிலுள்ள இலங்கைத் துணை உயர்ஸ்தானிகராலயம் ஏற்றுக்கொண்டது. இந்த நன்கொடைக்கான நிதி கனடாவில் நடத்தப்பட்ட நிதி திரட்டும் நிகழ்வின் மூலம் திரட்டப்பட்டுள்ளது. இம்மருந்துகள் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஊடாக கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டு, மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்படவுள்ளது.

இலங்கையில் தலைமையகத்தைக் கொண்டு பல நாடுகளில் கிளை நிறுவனங்களை நடத்திவரும் சென்சுரி 21 நிறுவனம் தன் மாலைக் கொண்டாட்ட நிகழ்வை கடந்த 14ம் திகதி கொழும்பு தலைமையகக் கட்டடத்தில் நடத்தியபோது பிடிக்கப்பட்ட படம். புதிய பிரதம நிறைவேற்று அதிகாரி ஆனந்த செனரத் தன் அலுவலக ஊழியர்களுடன் காணப்படுகிறார்.

யாழ். கோப்பாய் கந்தவேல் தமிழ் கலவன் பாடசாலையில் மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு கனடாவை சேர்ந்த துரைராஜா சரஸ்வதி என்பவரின் பிறந்த நாளை முன்னிட்டு இப் பாடசாலையில் கல்வி பயிலும் 90 மாணவர்களுக்கும் மதிய உணவுக்காக அரிசி பருப்பு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்பட்டன.இவற்றை இலங்கைக்கான பூமணியம்மா அறக்கட்டளையின் இலங்கைக்கான தலைவரும் யாழ். மாநகரசபை உறுப்பினருமான லயன் கலாநிதி.நா.தனேந்திரன் பாடசாலைஅதிபரிடம் கையளித்தபின்னர் பிடிக்கப்பட்ட படம். *(படம்: வேலணை குறூப் நிருபர்)*

நாம் 21 ஆவது திருத்தத்தைக் கொண்டு வருகிறோமா என்பதை சர்வதேச நாணய நிதியம் போன்ற சர்வதேச நன்கொடை நிறுவனங்களும் இன்னும் பல நாடுகளும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன என்பதே எனது தனிப்பட்ட நிலைப்பாடாகும். இவ்வாறான மாற்றங்களை அவர்கள் நேரடியாகக் கோராவிட்டாலும் நாட்டின் அரசியல் கட்டமைப்பு மாற்றம் அவசியம் என்பதை அவர்கள் கோடிட்டுக் காட்டுவர். இவ்வாறு துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி. சில்வா தெரிவித்தார். நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதாயின், அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவது அவசியமானது எனவும் அமைச்சர் நிமல் சிறிபால டி. சில்வா தெரிவித்தார். 21 ஆவது அரசியல–மைப்புத் திருத்தத்தைக் கொண்டு வரும் முயற்சிகள் உள்ளிட்ட தற்போதைய நிலைவரங்கள் குறித்து அவர் தன்னுடைய கருத்துகளை எம்முடன் பகிர்ந்து கொண்டார்.

21 ஆவது திருத்தத்தை சர்வதேச நாணய நிதியம் போன்ற நிறுவனங்கள் எதிர்பார்த்தபடி உள்ளன

அமைச்சர் நிமல் சிறிபால டி. சில்வாவுடன் சந்திப்பு

கே: தற்பொழுது காணப்படும் சூழ்நிலையில் 21 ஆவது தி–ருத்தம் போன்ற புதிய அரசியலமைப்பு திருத்தம் நாட்டுக்குத் தேவையானதா?

பதில்: அத்தகைய திருத்தம் நாட்டிற்கு மிகவும் தேவையாக உள்ளது. இளைஞர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் சமூகத்தின் பல துறைகளின் கோரிக்கை இதுவாகத்தான் இருக்கிறது. அத்துடன், சர்வதேச சமூகமும் இவ்வாறானதொரு திருத்தத்தைக் கோருவதுடன், எமது நாட்டின் அரசியல் கட்டமைப்பு அதற்கமைய மாற்றியமைக்கப்பட வேண்டும் என அவர்கள் கருதுகின்றனர்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட வேண்டும் என சிலர் கூறுகின்றனர். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது மாத்திரமன்றி 19 ஆவது திருத்தத்தை அரசியலமைப்பு ஏற்பாடுகளுடன் மீட்டெடுப்பதை உறுதி செய்வதற்காக, இரட்டைக் குடியுரிமை பெற்ற எவரும் ஜனாதிபதியாகவோ, அமைச்சராகவோ அல்லது பாராளுமன்ற உறுப்பினராகவோ முடியாது என்பதை உறுதிப்படுத்தும் வகையில் திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும் என்பதும் அவர்களுடைய நிலைப்பாடாக உள்ளது. பல அரசியல் கட்சிகளும் இந்தக் கோரிக்கையை முன் வைத்து வருகின்றன. சுயாதீன ஆணைக்குழுக்களை பலப்படுத்த வேண்டும். அதேநேரம், கணக்காய்வு ஆணைக்குழுவை மீளக் கொண்டு வருவது நாம் 21 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ளடக்கிய ஒரு முக்கிய அம்சமாகும்.

உண்மையில், அரசாங்கத்தின் அன்றாட விவகாரங்களில் தலையிடக் கூடாது என்பதற்காக நீதி அமைச்சர் கொண்டு வரும் அரசியலமைப்புத் திருத்தமே இதுவாகும். நாம் 21 ஆவது திருத்தத்தை கொண்டு வருகிறோமா என்பதை சர்வதேச நாணய நிதியம் போன்ற சர்வதேச நன்கொடை நிறுவனங்களும் இன்னும் பல நாடுகளும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன என்பதே எனது தனிப்பட்ட நிலைப்பாடாகும். இவ்வாறான மாற்றங்களை அவர்கள் நேரடியாகக் கோராவிட்டாலும் நாட்டின் அரசியல் கட்டமைப்பு மாற்றம் அவசியம் என்பதை அவர்கள் கோடிட்டுக் காட்டுவர்.

கே: எனினும், அரசியலமைப்புத் திருத்தத்துக்குப் பதிலாக பொருளாதார நெருக்கடிக்கே அர–சாங்கம் தீர்வு காண வேண்டும் என ஆளும் கட்சியிலுள்ள பாராளுமன்ற உறுப்பி–னர்கள் சிலர் கூறி வருகின்றனர். இதில் உண்மை இருப்பதாக நீங்கள் கருதுகின்றீ–ர்களா?

பதில்: பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் தன்னால் முடிந்த அனைத்தையும் செய்து வருகிறது என்பதை அமைச்சரவை அமைச்சர் என்ற ரீதியில் நான் நன்கு அறிவேன். நாங்கள் பல்வேறு மன்றங்களில் சந்தித்து, எரிவாயு, எரிபொருள் மற்றும் உணவுக்காக வரிசைகள் ஏதும் இல்லாத சூழலை உறுதி செய்து இந்தப் பிரச்சினையைத் தீர்க்க எங்களால் முடிந்த அனைத்தையும் செய்து வருகிறோம். எனினும் 24 மணித்தியால நேரத்திற்குள் முடிவுகளை அடைய முடியாது. சர்வதேச நாணய நிதியத்தின் நம்பிக்கையைப் பெற நமது கடனை மறுகட்டமைக்க வேண்டும். அதற்கு நாம் பல பொருளாதார நடவடிக்கைகளை மறுசீரமைக்க வேண்டும். சர்வதேச நாணய நிதியம் என்பது எமது திறைசேரிக்குப் பணத்தைக் கொட்டும் ஒரு அமைப்பல்ல.

நமது எதிர்காலத் திட்டங்கள் என்ன, பொருளாதாரத்தை எப்படி வலுப்படுத்தப் போகிறோம் என்பதை அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். ஏற்றுமதியை அதிகரிப்பது மற்றும் செலவினங்களைக் குறைப்பது மற்றும் இலாப நோக்கற்ற நிறுவனங்களை எவ்வாறு நிர்வகிக்கப் போகிறோம் என்பதைத் தெரிவிக்க வேண்டும். அதேபோல், சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற பொருளாதார மீட்புத் திட்டத்தை வழங்க வேண்டும். இப்போது அவர்கள் இலங்கையை மிகவும் சாதகமாக பார்க்கின்றனர். அடுத்த இரண்டு மூன்று வாரங்களில் மக்களும் இதைப் பார்க்கலாம் என்று நினைக்கிறேன். இலங்கையின் மீட்புக்கான நிதியை சர்வதேச நாணய நிதியம் வழங்கும் என்று நாங்கள் நம்புகிறோம், பின்னர் எங்களுக்கு உதவி செய்யும் மற்ற சர்வதேச நன்கொடையாளர்களிடம் நாங்கள் செல்லலாம்.

> **“நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதாயின், அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவது அவசியம்”**

எவ்வாறாயினும், இந்த நேரத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் அர்ப்பணிப்பு எங்களுக்கு மிகவும் அவசியம். சீனா கூட சர்வதேச நாணய நிதியத்திற்குச் சென்று அவர்களின் நம்பிக்கையைப் பெறச் சொல்கிறது. நிறைய பேருக்கு இது தெரியாது. சிலருக்கு இது தெரிந்தாலும் சொல்ல விரும்புவதில்லை. எனவே, இதை நாம் அப்படித்தான் அணுக வேண்டும்.

இந்த நெருக்கடியை இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குள் தீர்க்க முடியாது, ஆனால் அரசாங்கத்தின் ஒவ்வொரு கையும் நிலைமையை சமாளிக்க கடுமையாக முயற்சிக்கிறது. உதாரணமாக, விவசாயிகள் உரம் கேட்கிறார்கள். பல பிரச்சினைகள் மற்றும் சிரமங்களுடன், இப்போது இந்திய கடன் வரியிலிருந்து பணத்தைப் பெற முடிந்தது, ஆனால் இந்தியாவிடம் உரம் இல்லை. எனவே, ஓமானில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டும். ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளது என்பதை நான் புரிந்து கொள்கிறேன், ஆனால் இலங்கைக்கு உரங்களை கொண்டு வர ஓமானுக்கு ஒரு கப்பலை அனுப்ப வேண்டும். பின்னர் அவற்றைப் பொதி செய்து விவசாயிகளிடையே விநியோகிக்க வேண்டும். இது 24 மணி நேரத்தில் நடக்காது. அதற்கு சிறிது காலஅவகாசம் தேவை ஆனால் உரம் சம்பந்தமாக நாம் சரியான பாதையில் செல்கிறோம். அடுத்த பருவத்திற்கான உரத்திற்கான பணத்தை உலக வங்கி ஏற்கனவே உறுதி செய்துள்ளது.

விவசாய அமைச்சரிடமிருந்து நான் புரிந்து கொள்வது என்ன எவ்வாறாயினும், இந்த நேரத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் அர்ப்பணிப்பு எங்களுக்கு மிகவும் அவசியம். சீனா கூட சர்வதேச நாணய நிதியத்திற்குச் சென்று அவர்களின் நம்பிக்கையைப் பெறச் சொல்கிறது. நிறைய பேருக்கு இது தெரியாது. சிலருக்கு இது தெரிந்தாலும் சொல்ல விரும்புவதில்லை. எனவே, இதை நாம் அப்படித்தான் அணுக வேண்டும்.

இந்த நெருக்கடியை இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குள் தீர்க்க முடியாது, ஆனால் அரசாங்கத்தின் ஒவ்வொரு கையும் நிலைமையை சமாளிக்க கடுமையாக முயற்சிக்கிறது. உதாரணமாக, விவசாயிகள் உரம் கேட்கிறார்கள். பல பிரச்சினைகள் மற்றும் சிரமங்களுடன், இப்போது இந்திய கடன் வரியிலிருந்து பணத்தைப் பெற முடிந்தது, ஆனால் இந்தியாவிடம் உரம் இல்லை. எனவே, ஓமானில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டும். ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளது என்பதை வென்றால், அவர் கொள்முதல் செயல்முறையைத் தொடங்கியுள்ளார். அடுத்த பருவத்தில் உரம் சம்பந்தமாக எந்தப் பிரச்சினையும் இருக்காது. எரிவாயு மற்றும் எரிபொருளுக்காக பல்வேறு பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும் மத்திய வங்கி மற்றும் பிற வங்கிகளிடம் போதுமான டொலர்கள் இல்லாததால் இதனைத் திரட்டுவதற்குக் கடுமையாக முயற்சிக்கிறோம்.

கே: 21 ஆவது திருத்தம் நாட்டில் அரசியல் ஸ்திரமற்ற தன்மையை இல்லாதொழிக்க வழி வகுக்கும் என நீங்கள் நினைக்கிறீ–ர்களா?

பதில்: ஓரளவிற்கு. அரசியல் ஸ்திரமின்மையின் விளைவாக, நாட்டில் பொருளாதார ஸ்திரமின்மை மற்றும் சமூக உறுதியற்தன்மை காணப்படுகிறது. இந்தக் காரணியை நாம் நிவர்த்தி செய்ய வேண்டும். 21 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த வேண்டும் என்று கோரி வீதியில் இறங்கிப் போராடும் மக்களின் கோரிக்கையும் இதுதான். உதாரணமாக, அரசாங்கக் கட்சிகளுக்குள்ளேயே 21 ஆவது திருத்தச் சட்டத்திற்கு ஆதரவாக ஏராளமான பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர் மற்றும் முழு எதிர்க்கட்சியும் அதற்கு ஆதரவாக உள்ளது.

> **அரசாங்கக் கட்சிகளுக்குள்ளேயே 21 ஆவது திருத்தச் சட்டத்திற்கு ஆதரவாக ஏராளமான பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். அத்துடன் முழு எதிர்க்கட்சியும் அதற்கு ஆதரவாக உள்ளது**

(15ஆம் பக்கம் பார்க்க)

மக்களிடமிருந்து பிரதிநிதிகள் தூரமாகி போயுள்ளதால் உருவாகியுள்ள சிக்கல்!

வாக்காளர்கள் மற்றும் பொது மக்கள் பிரதிநிதிகளுக்கு இடையிலான இடைவெளி இன்னும் சற்று தூரமாகிப் போயுள்ளது. மக்கள் போராட்டம் ஆரம்பமாகிய வேளையில் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் உள்ளிட்ட மக்கள் பிரதிநிகள் மீதான கோபம் சமூகத்தில் காணப்பட்டது. நாட்டின் பொருளாதார நிலைமை மிகவும் மோசமாகியது. அதிருப்திக்குள்ளான மக்கள் எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டதோடு, இறுதியில் பாதிப்புக்கு முடிவே இல்லாது போயுள்ளது.

ஜனநாயக கட்டமைப்புக்குள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முறைகள் உள்ளன. பெரும்பான்மையானோரின் விருப்பம் ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்ட பண்புகளாகும். போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அணியினர் ஜனநாயகத்தின் சாரத்தை அறியாதவர்கள் அல்லர். அவர்கள் எழுப்பும் குரல் தெளிவானது. நீண்ட காலமாக புரையோடிப் போயிருந்த பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வுகள் கிடைக்கவில்லை. தேவையான பொழுதில் முடிவுகளை எடுக்க பின்வாங்கினார்கள். அடிக்கடி கூறுவது போன்று நாட்டிற்கு கிடைத்தது பிளாஸ்டர் தீர்வுகளே.

தகிக்கும் பிரச்சினைகளை மூடிமறைக்கும் பொதுமக்களின் பிரதிநிதிகள் அவற்றைத் தீர்ப்பதாக பெரும் நம்பிக்கையுடன் உரையாற்றுகிறார்கள். அவர்கள் பாராளுமன்றத்தில் பேசுவது பொதுமக்களின் தேவைகளையல்ல. இறுதியில் இந்த வழமையான உரைகள் மக்களை ஆறுதல்படுத்த முடியாத இடத்திற்கு வந்துள்ளன. அன்றாட வாழ்க்கையை நடத்துவதற்கான வழிமுறை ஒன்றை உருவாக்க வேண்டியது உடனடித் தேவையாகும். பாதுகாப்பான எதிர்காலத்தை உருவாக்குவதாக நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். தற்போது காணப்படும் சூழ்நிலை கூட எந்தவொரு அரசியல்வாதி அல்லது அரசியல் கட்சி மீது நம்பிக்கையற்றவர்களாக அநேகமானோர் எம்மிடையே உள்ளார்கள் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது.

இருப்பைப் பற்றிய நம்பிக்கை இல்லாத பயணம் இல்லை. தன்னை பிரதிநிதித்துவப்படுத்தும் நபர்களுடன் நல்ல உறவு ஜனநாயகத்துக்கு தேவையாகும். மக்கள் பிரதிநிதிகளை வெறுக்கும்,சொத்துக்களுக்கு தீயிடும், அவை எரியும் போது கைகொட்டி சிரிக்கும் முறைகளால் எமக்கு வாழ்க்கை இல்லை. வாக்குகளைப் பெற பொருட்களை விநியோகிக்கும், ஆதரவாளர்களுக்கு மாத்திரம் சேவை செய்யும் பழங்கால முறையில் இருந்து பொதுமக்களின் பிரதிநிதிகளை வெறுக்கும் நிலைமை வரை தற்போது வந்துள்ள பயணம் பற்றி கேள்வி கேட்க வேண்டிய காலம் உருவாகியுள்ளது. இதற்கு அப்பால் நாட்டிலுள்ள நிர்வாக முறை என்ன? பிரதிநிதித்துவ ஜனநாயக நிர்வாகத்தை நிராகரிக்கும் நிலைப்பாட்டுக்கு பின்னர் சமூகம் கேட்பது என்ன?

எமக்குத் தெரிந்தவரையில் நேரடியான நிர்வாக முறை தேவை என்ற கருத்து உள்ளது. நிறைவேற்று மற்றும் அரசியல் அமைப்புக்கிடையே இருக்க வேண்டிய அதிகாரம் தொடர்பாக நீண்ட விவாதங்கள் உள்ளன. கடுமையான முடிவுகளை எடுக்கும் நிர்வாகி பற்றிய கருத்தும் உண்டு. அதிகாரத்தை பகிரும் முறை குறித்தும் நீண்ட காலமாக தீர்க்கப்படாத விவகாரம் உண்டு. இவற்றிடையே பொருத்தமான முறையை தெரிவு செய்வதற்காக இன்னுமொரு பரம்பரை இழப்பீடு செலுத்தத் தேவையில்லை.

இந்த இடத்தில் இருந்து முன்னேறிச் செல்லக் கூடிய முறையொன்றே நாட்டுக்குத் தேவை. மக்கள் நம்பிக்கையை வெல்லக் கூடிய அரசியல் கட்சி தேவையாக உள்ளது. மக்கள் பிரதிநிதிகள் நன்மதிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும். மக்களுக்கு உண்மையைக் கூறும், நாட்டை உருவாக்க அர்ப்பணிப்புடன் செயற்படும் பிரதிநிதித்துவ ஜனநாயக முறை ஒன்று அவசியமாகும். குறுகிய கருத்துகளைத் தெரிவித்து நாட்டைப் பிரிக்கும், நாட்டை விற்கும் மற்றும் அந்நியரின் சூழ்ச்சி போன்ற கருத்துக்களைத் தூண்டுவதால் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை மதிப்பீடு செய்ய வேண்டியதோடு, இவற்றைக் கைவிட்டு புதிய நாடு, புதிய பொருளாதாரத்திற்குத் தேவையான சக்தியை மற்றும் முதலீட்டை பெற்றுக் கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டியுள்ளது.

தேர்தல் ஆணைக்குழு புதிதாக பல கட்சிகள் பதிவு செய்வதற்காக முன்வந்துள்ளன எனக் கூறுகின்றது. தற்போதுள்ள கட்சிகளுக்கு மேலதிகமாக தேர்தலுக்குத் தயாராகும் இந்தக் கட்சிகள் தங்களது நோக்கங்கள், கொள்கைகள் மற்றும் அர்ப்பணிப்புகள் பற்றித் தெரிவிக்கும் புதிய கருத்துக்கள் எவை? பிரதேச மட்டத்தில் மக்களை இணைக்கக் கூடிய, மாயை அரசியலை தவிர்க்கும் முறையைத் தவிர நாட்டுக்கு எதிர்காலம் இல்லை. விருப்புவாக்கு முறை மற்றும் மாவட்ட தொகுதி முறை மூலம் பாரிய வள அழிவும் ஊழலும் இடம்பெறுகின்றன. அரசியல் கட்சிகளால் பெயர் குறிப்பிடப்படும் கட்சித் தலைவர்களைத் தெரிவு செய்யும் பிரதிநிதிகளுக்கு வாக்குகளை வழங்கும் முறையை உடனடியாக மாற்ற வேண்டும்.

மக்கள் எழுச்சி மூலம் ஏற்பட்டுள்ள நிலைமையை கலந்துரையாடும் அரசியல் கட்சி மற்றும் அரசியல்வாதிகள் வாக்குமூலம் அளிக்க வேண்டியதோடு வாக்காளர்களிடம் இருந்து விலகிப் போவது பற்றி கவலை அடைய வேண்டியுள்ளது. ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டியது முக்கியமாகும். பொதுமக்கள் முன்பாகச் சென்று வாக்குகளை எவ்வாறு கேட்பது என சிந்திப்பது அவசியம். மக்களை நெருங்கும் திட்டங்கள் பற்றி அரசியல் மற்றும் கட்சிகள் முடிவொன்றை எடுக்க வேண்டியுள்ளது.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

இலங்கையர் 30 பேர் தற்கொலை முயற்சி

தண்டனை காலம் முடிந்தும் விடுதலை செய்யவில்லையாம்'

திருச்சி முகாமில் ஒருவர் தீக்குளித்து ஆபத்தான நிலையில்

திருச்சி மத்திய சிறை சிறப்பு முகாமில் இலங்கை தமிழர் ஒருவர் தீக்குளித்து ஆபத்தான நிலையில் திருச்சி அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

திருச்சி மத்திய சிறை வளாகத்திலுள்ள சிறப்பு முகாமில் குற்ற வழக்குகளில் தொடர்புடைய இலங்கை, பங்களாதேஷ், ரஷ்யா, பல்கேரியா உள்ளிட்ட நாடுகளை சேர்ந்த அகதிகள் சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் இலங்கை தமிழர்கள் சிலர் சிறையில் அடைக்கப்பட்டு தண்டனை காலம் முடிந்து 03 ஆண்டுகளுக்கு மேல் ஆவதால், தங்களை

விடுதலை செய்யக்கோரி கடந்த மே மாதம் 20 ஆம் திகதி முதல் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

முகாமிலுள்ள இலங்கைத் தமிழர்கள் 21 பேர் தங்களை விடுதலை செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி தொடர்ந்து தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

சிறப்பு முகாமிலுள்ள இலங்கை தமிழர்கள் 30 பேர் மாத்திரை உட்கொண்டு தற்கொலை முயற்சியில் ஈடுபட்டனர்.

30 பேரையும் மீட்டு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக பொலிஸார் அனுமதித்தனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த சம்பவம் திருச்சி அகதிகள் முகாமில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அங்குள்ள இலங்கை தமிழர்கள், நாங்கள் 03 ஆண்டுகளுக்கு மேலாக தண்டனை அனுபவித்து வருவதாகவும் தங்களை தமிழக அரசும், மாவட்ட நிர்வாகமும் விடுதலை செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

ஆனால் அதில் உடன்பாடு ஏற்படவில்லை. இதனிடையே இலங்கையை சேர்ந்த நான்கு பேர், மரத்தில் ஏறி தற்கொலை செய்யப் போவதாக நேற்றுமுன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர். தண்டனை காலம் முடிந்தும் விடுவிக்காமல், சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக கூறி, உமா ரமணன் (42 வயது) என்பவர் திடீரென உடலில் மண்ணெண்ணெய் ஊற்றி தீக்குளித்தார்.

பலத்த தீக்காயமடைந்த அவர், திருச்சி அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த சம்பவம், அங்கு பரபரப்பை ஏற்படுத்தியது.

74 வருடங்களாக தமிழருக்கு தீர்வை வழங்கவில்லை

பொருளாதார நெருக்கடிக்கான காரணத்தை விளக்கிய சம்பந்தன்

'ஹிந்து' நாளிதழுக்கு வழங்கிய செவ்வியில் கருத்து

எமது நாட்டில் 74 வருடங்களாக எந்த அரசாங்கமும் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு வழங்காததன் விளைவாகவே பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் 'தி ஹிந்து' நாளிதழுக்கு அவர் அளித்த பேட்டியிலேயே இதனை குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள இந்த நிலை ஒருமுறை அல்ல, படிப்படியான செயலென்றும் அவர் கூறினார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

இவ்வாறான நிலையிலும் அரசாங்கம் பொருளாதாரப் படுகுழியிலிருந்து மீள சில அரசியல் கட்சிகளின் உதவியை நாடுகிறது. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அல்லது வேறு எந்த தமிழ் அரசியல் கட்சிகளின் ஆதரவையும் பெறாதது பாரிய குற்றமாகும்.

இது எதிர்காலத்தில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துமெனவும் அவர் தெரிவித்துள்ளார். பொருளாதார அபிவிருத்தியையடைய இலங்கை அரசாங்கம் திட்டவட்டமான ஒரு திட்டத்தை முன்னெடுக்க வேண்டும். அதற்கு தமிழ் அரசியல் கட்சிகளின் ஆதரவைப் பெற வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ், முஸ்லிம், சிங்களமென அனைத்து மக்களும் ஒன்றிணைந்து நாட்டைக் கட்டியெழுப்பவும், நாட்டு மக்கள் அனைவரினதும் இறையாண்மையை உறுதிப்படுத்தும் அரசியல் உடன்படிக்கையின் ஊடாக நாம் ஒன்றுபட்டுள்ளோமென்பதை உலகுக்கு எடுத்துக் காட்ட முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இக்கட்டான சூழ்நிலையில்...

எதிர்பார்த்துள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் தூதுக்குழுவினர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்காக நியமிக்கப்பட்டுள்ள பிரதிநிதிகள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை (24) பிற்பகல் கொழும்பு கோட்டை ஜனாதிபதி மாளிகையில் சந்தித்தனர்.

இதன்போதே அவர்கள் ஜனாதிபதியிடம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் ஒரு வார காலம் தங்கியிருக்கும் பிரதிநிதிகள் குழுவினர் நிறைவேற்று பணிக்குழாம் மட்டத்திலான உடன்படிக்கையை எட்டுவது தொடர்பாகவும் மற்றும் கொள்கை ரீதியான விடயங்கள் தொடர்பிலும் விரிவான ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளனர்.

பிரதமர், நிதியமைச்சு, மத்திய வங்கி மற்றும் ஏனைய பொருளாதார அதிகாரிகள், நிபுணர்களுடனான கலந்துரையாடல்கள் மற்றும் தற்போதைய நிலைமை குறித்து அவர்கள் ஜனாதிபதிக்கு இச் சந்திப்பின்போது விளக்கமளித்தனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகளுக்கேற்ப இந்த இக்கட்டான சூழ்நிலையில் இலங்கைக்கு உதவ எதிர்பார்த்துள்ளதாக தூதுக்குழுவினர் இதன்போது தெரிவித்தனர்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமை குறித்து விரிவாக தெளிவுபடுத்திய ஜனாதிபதி, இக்கட்டான சந்தர்ப்பத்தில் இலங்கைக்கு உதவுவது தொடர்பில் சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் குழுவுக்கு தமது நன்றியைத் தெரிவித்தார்.

பொருளாதார வீழ்ச்சிக்கு...

நிகழ்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலையில் நாட்டுக்கு சகோதரத்துவமும், ஒத்துழைப்பும் அவசியமாகும். நாடு என்பது அரசியல் தலைவர்கள் அல்லர், மக்களே. மக்களுக்குத்தான் உதவி செய்ய வேண்டும். அரசியல்வாதிகளுக்கு உதவி செய்வது பொய்யான செயலாகும்.

ஏனெனில், பல ஆண்டுகளாக இந்த நாட்டின் வளங்களை வீணடிக்கும் செயல் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது. ஒரு தரப்பல்ல, பல தரப்பினர் இதில் தொடர்புபட்டுள்ளனர்.

7, 8 பில்லியன் என்ற பாரிய நாட்டின் கையிருப்பு எவ்வாறு பூச்சியமானது? மத்திய வங்கியிலிருந்த தங்கம் எவ்வாறு காணாமல்போனது? ஏன் இவை பொறுப்பற்ற முறையில் வீணாக்கப்பட்டன என்பது குறித்து எப்போதேனும் ஒரு நாள் விசாரிக்கப்பட வேண்டும். அதுதான் மக்களுக்கு தற்போது ஏற்பட்டுள்ள துன்பத்துக்கு ஒரு தீர்வாகுமென கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

இந்தப் பணத்தை வீணடித்தவர்கள் யார்? என்பதை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும். இந்த முட்டாள்தனமாக தீர்மானத்தை எடுத்தவர்கள் யார்? மக்களை சௌபாக்கியத்தை நோக்கி கொண்டுசெல்லத்தான் தலைவர் ஒருவருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

எனவே, 2, 3 ஆண்டுகளில் நாட்டை முழுமையாக கையேந்தும் நிலைக்கு கொண்டு சென்றவர் யார்? என்பது குறித்து முழுமையாக விசாரணை நடத்தி அவர்களிடமிருந்து அவற்றை மீளப்பெற்றுக்கொள்ள முடியுமாயின் மீளப்பெற வேண்டுமென கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

இரண்டு வாரம் காலம் மட்டுமே...

உடமையில் வைத்திருக்கும் வெளிநாட்டு நாணயத் தொகையை 15,000 டொலரிலிருந்து 10,000 டொலர் அல்லது வேறு வெளிநாட்டு நாணயங்களில் அதற்குச் சமனான தொகைக்குக் குறைத்தல் தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு கடந்த 16 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

இத் தொகைக்கு மேலதிகமான வெளிநாட்டு நாணயத்தை உடமையில் வைத்திருக்கும், இலங்கையிலுள்ள அல்லது வதிகின்ற ஆட்களுக்காக கடந்த 16ஆம் திகதி முதல் செயற்படத்தக்கவாறு 14 வேலை நாட்களைக் கொண்ட பொதுமன்னிப்புக் காலம் வழங்கப்பட்டுள்ளது.

இக் காலப்பகுதியின் இறுதியில் மேலதிக வெளிநாட்டு நாணயத்தை உடமையில் வைத்திருக்கும் ஆட்களுக்கு எதிராக நடவடிக்கைகளைத் எடுப்பதற்கான அதிகாரம் தங்களிடம் இருப்பதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

யாழ். பல்கலை ஊடகத்துறையின்...

சனிக்கிழமை காலை, துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெற்றது.

அதன்போது, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவி உயர்வுக்காக விண்ணப்பித்த கலாநிதி சி. ரகுராமின் விண்ணப்பத்தை மதிப்பீடு செய்த, மூதவையினால் விதந்துரைக்கப்பட்ட துறைசார் நிபுணர்களின் மதிப்பீட்டறிக்கை, நேர்முகத் தேர்வு முடிவுகள் ஆகியன பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் அடிப்படையில், ஊடகக் கற்கைகள் துறைத் தலைவரும் கலைப்பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி சி. ரகுராம் ஊடகக் கற்கைகளில் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

நகர்புற பாடசாலைகள்...

நகர்ப்புற பாடசாலைகளை 03 நாட்களுக்கு மட்டும் இயக்க கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி செவ்வாய், புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் காலை 7.30 முதல் பிற்பகல் 1.30 வரையில் இப் பாடசாலைகள் இயங்க வேண்டும்.

அந்தப் பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவு கற்பித்தல் பணிகளை முன்னெடுக்கும் நாட்கள் குறித்து தீர்மானிக்கும் அதிகாரம் அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மாணவர்கள் வராத நாட்களில் இணையவழி முறைமையில் வீட்டுப் பாடங்களை வழங்குதல் உள்ளிட்ட முறைகளூடாக கற்பித்தல் பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டும்.

போக்குவரத்துப் பிரச்சினை காரணமாக பாடசாலைகளுக்கு சமுமளிக்க முடியாத ஆசிரியர்களுக்காக இந் நாட்களை தனிப்பட்ட விடுமுறையாக கருதாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

எங்கள் கருத்து...

பொது ஊடகங்களில் ஆபாச அரசியல் செய்வது அநாகரிகம்

சமூக வலைத்தளங்களின் மிகை வருகையின் பின்னர் உருவானதும் வரைமுறையற்ற தனிமனித தாக்குதல்கள் மற்றும் கேவலமான சித்திரிப்புகள் அதிகமாகி வருகின்றன.

இதற்கான சமீபத்திய உதாரணம் இருனிகா பிரேமசந்திர. ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் முக்கிய உறுப்பினரான அவர் தன் கட்சிக்காகவும் தன் நியாயங்களுக்காகவும் ஆவேசமாக போராடக்கூடிய ஒரு பெண்மணியாகத் தன்னை வெளிப்படுத்தி வருபவர். இலங்கை பெண் அரசியல்வாதிகளான விவியன் குணவர்தன, குசுமா குணவர்தன, எட்ரின் மொள்ளமுரே, சீதா மொள்ளமுரே ஆகியோரை புரட்சி சிந்தனை கொண்ட முன்னோடி பெண் அரசியல்வாதிகள். அச்சமற்றவர்களாகவும் எதிர்த்து போராடக் கூடியவர்களாகவும் திகழ்ந்தார்கள். தற்போது அந்த வரிசையில் இருனிகாவை சொல்ல முடியும்.

சமீப காலமாக இப் பெண் அரசியல்வாதி தொடர் போராட்டங்களை ஆக்ரோஷமாக நடத்தி வருகிறார். கடந்த வாரம் அவர் பிரதமர் ரணில் இல்லத்துக்கு எதிரே ஆர்ப்பாட்டத்தில் இறங்கியிருந்தபோது இரும்புவேலி தடைகளைத் தாண்டிச் செல்ல முயன்றார். அப்போது பொலிஸாருக்கும் அவருக்கும் இடையே வாக்குவாதத்துடன் கூடிய மோதல் இடம்பெற்றது. அப்போது அவரின் முந்தானை விலகியிருந்தது. இதெல்லாம் போராட்டத்தில் சகஜம். வினாடிக்கு வினாடி காட்சிகள் மாறும். இந்தக் காட்சிகளை படம் பிடித்து இணையத்தளத்தில் எவரோ பதிவேற்றம் செய்துவிட்டார்கள். அரசியல்வாதி என்ற வகையில் இருனிகா பிரேமச்சந்திரவை கொள்கை ரீதியாகவோ அல்லது அவரது போராட்ட வடிவத்தையோ விமர்சனம் செய்திருக்கலாம். பதிலாக, மூன்று குழந்தைகளின் தாயான அவரை பாலியல் ரீதியாக காட்சி வர்ணனை செய்வது மிகவும் கீழ்த்தரமான அரசியலாகவோ அல்லது எமக்கு தலை குனிவை ஏற்படுத்தக்கூடிய செயலாகவே தான் இதைப் பார்க்க வேண்டும். இது எமது ஒட்டுமொத்த கலாசார, பண்பாட்டு சீரழிவை பிரதிபலிப்பதாகக் கொள்ள முடியாது என்றாலும் அதைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதை இச் செயல் கோடிட்டு காட்டியிருக்கிறது.

இங்கே இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். இந்த அவலம் வெளிப்பட்டதுமே பிரதமர் ரணில் விக்கிரசிங்க அதைக் கண்டித்தும் இருனிகாவின் தாய்மை பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் அறிக்கை வெளியிட்டார். இத்தனைக்கும் ரணில் விக்கிரமசிங்கவை எதிர்த்தே இருனிகா அந்த ஆர்ப்பாட்டத்தை அவர் வீட்டுக்கு எதிரே ஆக்ரோஷமாக நடத்தியிருந்தார். பிரதமருக்கு எதிராக கோஷங்களையும் எழுப்பினார். ஆனால் இருனிகாவின் தாய்மைக்கு கௌரவம் அளிக்கப்பட வேண்டும் என்று சொன்ன பிரதமர், மோதல்கள் கொள்கை ரீதியாக அமைய வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

பிரதமரின் இக் கூற்று கனவான் அரசியலுக்கு ஒரு பதச் சோறு. ஆபாச அரசியல் செய்வோர் கவனிக்க வேண்டிய விஷயம். சமூக ஊடகங்களில் எதை வெளியிட வேண்டும், தவிர்க்க வேண்டும் என்பதைக் கட்டுப்படுத்த சட்டங்கள் இல்லை என்பது உண்மையானாலும் கையில் கத்தி இருக்கிறது என்பதால் எதை வேண்டுமானாலும் வெட்டி எறியலாம் என எவரும் நினைக்கக் கூடாது. இருனிகா தன் மீது வீசப்பட்ட அவலத்தை தைரியமாகத் துடைத்தெறிந்து விட்டார். அதைச் செய்தவர்கள் தலைகுனிய, இருனிகாவே வெற்றி பெற்றவராகக் காட்சி தருகிறார். எனவே, சமூக ஊடகங்களை கண்ணியமாகக் கையாளப் பழகுவோம்.

அமெரிக்க உயர்மட்ட தூதுக்குழு...

தூதுவர் கெல்லி கெய்டர்லிங் ஆகியோர் இந்தத் தூதுக்குழுவில் அடங்குகின்றனர்.

அவர்கள் பல்வேறு அரசியல் பிரதிநிதிகள், பொருளாதார நிபுணர்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகளை சந்திக்கவுள்ளனர்.

இலங்கையருக்கு அமெரிக்கா உதவிசெய்வதற்கான மிகவும் செயற்திறன்வாய்ந்த வழிமுறைகள் தொடர்பில் தமது அனைத்து சந்திப்புகளிலும் அவர்கள் ஆராய்வார்களென அமெரிக்க தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை மக்களின் பாதுகாப்பு மற்றும் செழிப்புக்கான தமது தொடர்ச்சியான உறுதிப்பாட்டை இந்த விஜயம் அடிக்கோடிட்டுக் காட்டுவதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜுலீ சங் தெரிவித்துள்ளார்.

இலங்கையர் தமது வரலாற்றில் மிகப்பெரும் பொருளாதார சவால்களை எதிர்கொள்கையில், பொருளாதார வளர்ச்சிக்கு உதவி செய்வதற்காகவும், ஜனநாயக நிறுவனங்களை பலப்படுத்துவதற்காகவும் தாங்கள் மேற்கொள்ளும்முயற்சிகள்முன்னரைவிடதற்போது மிகவும் முக்கியமானதாக உள்ளதென அமெரிக்க தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த இரண்டு வாரங்களில், இலங்கையின் சிறு மற்றும் நடுத்தர வணிகங்களுக்கான புதிய நிதியளிப்பாக 120 மில்லியன் டொலர்களையும், பாலுற்பத்திக் கைத்தொழில் துறைக்கு 27 மில்லியன் டொலர்களையும், பொருளாதார நெருக்கடியால் கடுமையாக பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கான மனிதாபிமான உதவியாக 5.75 மில்லியன் டொலர்களையும் அமெரிக்கா வழங்குவதாக அறிவித்துள்ளது.

இலகுவில் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கான வாழ்வாதார உதவிகள் மற்றும் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கு உதவக்கூடிய நிதி சீர்திருத்தத்துக்கான தொழில்நுட்ப உதவிகள் ஆகியவற்றை வழங்குவதற்காக 06 மில்லியன் டொலர்களை புதிய மானியங்களாக வழங்க அமெரிக்கா உறுதியளித்துள்ளது.

இலங்கையர் தமது பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காகவும், உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்த்துப் போராடுவதற்காகவும், பொதுச் சுகாதாரம் மற்றும் கல்வியை மேம்படுத்துவதற்காகவும் முயற்சி செய்துகொண்டிருக்கும் இவ்வேளையில் எதிர்வரும் மாதங்களில் அமெரிக்கா தொடர்ந்தும் இலங்கையருக்கு உதவி செய்யும்.

தற்போதைய நெருக்கடிக்கு மிகவும் நீடித்த நிலையான தீர்வை வழங்கக்கூடிய சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து உதவி பெறுவதற்கான இலங்கையின் முடிவை அமெரிக்கா பலமாக ஆதரிப்பதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கதிர்காமம் ஆடிவேல் விழா...

ஊர்வலம் ஆரம்பமாகி இறுதி ஊர்வலம் ஆகஸ்ட் 11 ஆம் திகதி நடைபெறும்.

வருடாந்த திருவிழா ஆகஸ்ட் 12 ஆம் திகதி கதிர்காமம் மாணிக்க கங்கையில் தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறும்.

கதிர்காமக் கந்தனின் திருவிழா ஊர்வலம் நடைபெறும் திகதிகள் தொடர்பில் பஸ்நாயக்க நிலமே திஷான் குணசேக்கர தெரிவிக்கையில்,

ஜூலை 29 முதல் பெரஹரா, ஜூலை 30 இரண்டாவது பெரஹெரா, ஜூலை 31 மூன்றாவது பெரஹெரா, ஆகஸ்ட் 01 நான்காம் பெரஹெரா, ஆகஸ்ட் 02 ஐந்தாவது பெரஹெரா, ஆகஸ்ட் 03 ஆறாவது பெரஹெரா, ஆகஸ்ட் 04 ஏழாவது பெரஹெரா, ஆகஸ்ட் 05 எட்டாவது பெரஹெரா, ஆகஸ்ட் 06 ஒன்பதாவது பெரஹெரா, ஆகஸ்ட் 07 பத்தாவது பெரஹெரா, ஆகஸ்ட் 08 பதினோராவது பெரஹெரா மற்றும் தீ மிதிப்பு விழா, ஆகஸ்ட் 09 பன்னிரண்டாம் பெரஹெரா, ஆகஸ்ட் 10 பதின்மூன்றாவது பெரஹெரா, ஆகஸ்ட் 11 பதினான்காவது பெரஹெரா, ஆகஸ்ட்12 – தீர்த்தோற்சவம் நடைபெறுமென அவர் தெரிவித்தார்.

சொந்தக் காலில் நிற்கக்... (09ஆம் பக்கத் தொடர்)

(ஈ) இவ்வாறே கடற்றொழிலில் காணப்படும் சவாலைச் சீர்செய்வதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். அது முடியும்.

(உ) அதோடு இடர்கால உணவு முறைகளையும் உருவாக்க வேண்டும். பஞ்சத்தைப் போக்குவதோடு சத்தான உணவை குறைந்த விலையில் உருவாக்கக் கூடிய, சுவையும் சத்துமுள்ள உணவு முறைகளை அறிமுகப்படுத்த வேண்டும்.

(ஊ) விவசாயம், கடற்றொழில் உணவு முறைகள் தொடர்பான கற்கைகளுக்கான உயர் கல்வி மையமான பல்கலைக்கழகங்களே உண்டு. இவற்றுக்கான ஆராய்ச்சி நிலையங்கள், வள நிலையங்கள், உற்பத்தி மற்றும் தொழில் வழிகாட்டுதலுக்கான ஏற்பாடுகள் பலவும் உண்டு.

ஆனாலும் இவை எதுவுமே இந்த இடர் நீக்கத்துக்காகச் செயற்படுவதைக் காணவில்லை. மட்டுமல்ல இவற்றை ஒருங்கிணைப்புச் செய்யக் கூடிய, வழிப்படுத்தக் கூடிய ஒருங்கிணைப்புக் குழுக்கள், மக்கள் பிரதிநிதிகள் (பாராளுமன்ற உறுப்பினர்கள்) போன்றவர்களையும் காண முடியவில்லை. பாராளுமன்றத்திற் கூட இவர்கள் புதிதாக எதையும் பேசக் காணோம். இந்த நெருக்கடியைப் பற்றிப் பேசாமல் வேறு எதோ பழைய கதைகளை எல்லாம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். மாற்று உபாயங்களை வைக்கக் காணோம். மக்களோடு வாழவும் காணவில்லை.

நாட்டை மீட்பதென்பது மந்திரத்தால் முடியாத ஒன்று என்பதை அனைவரும் உணர வேண்டும். இப்பொழுது பரவலாகப் பேசப்படுவதைப்போல ஐ.எம். எவ் போன்ற உலக வணிக உதவியினால் (கடனால்) ஒரு போதும் முடியாது. நாம் நம்முடைய சொந்தக் காலில் நிற்கக் கூடிய அரசியற் சமூகப் பொருளாதாரத்தின் மூலமே அது சாத்தியமாகும். அதற்குக் கடுமையாக உழைக்க வேண்டும்.

பெட்ரோல் கப்பல்...

தெரிவித்திருந்தார்.

ஒக்டேன் 95 ரக பெற்றோல் தாங்கிய இக் கப்பல் கடந்த24 ஆம் திகதி நாட்டை வந்தடைய இருந்தது. எனினும், அந்தக் கப்பல் நேற்று முன்தினம் நாட்டை வந்தடையுமென பின்னர் அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் எரிபொருள் தாங்கிய கப்பல் இலங்கையை வந்தடையும் தினம் பின்னர் அறிவிக்கப்படுமென அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிரதி வெள்ளிக்கிழமைகளில் சுகாதார சேவை பணிக்குழாமினருக்காக தெரிவு செய்யப்பட்ட 74 எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் விநியோகிக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் வைத்தியர், தாதியர், ஔடதவியலாளர்கள் உள்ளிட்ட சுகாதார பணிக்குழாமினர் நேற்று முன்தினம் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கருகில் வரிசைகளில் காத்திருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

வைத்தியர்களுக்கு எரிபொருளைப் பெற்றுக் கொடுக்க வினைத்திறனான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டுமென அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு மற்றும் ஊடகக்குழு உறுப்பினர் வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் வலியுறுத்தி இருந்தார்.

எரிபொருள் வரிசையில் இளைஞன்...

பிரதான வீதியின் பந்துலகம பிரதேசத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. உயிரிழந்த இளைஞனின் தந்தை தெரிவிக்கையில்,

"எனது மகன் வெளிநாடு போக வேண்டும் என்றார். நாட்டை விட்டுப் போகாதே என நான் சொன்னேன். நீ இங்கேயே இரு. எப்படியாவது இங்கேயே வாழ்வோம் என்றேன். பிறகு வவுனியாவுக்குப் போக வேண்டி இருந்ததால் தான் எரிபொருள் வாங்க சென்றார். இதன்போதுதான் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது." என்றார்.

எரிபொருள் வரிசையில் நீண்ட நேரம் காத்திருந்த சுமார் 15 பேர் இதுவரை பலியாகியுள்ளனர். இறந்தவர்களில் எட்டு பேர் நீண்ட வரிசையில் அதிக நேரம் காத்திருந்ததால் உடல்நிலை மோசமானதன் காரணமாக உயிரிழந்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி பைடனை...

இலங்கையின் தற்போதைய நிலைவரங்கள் தொடர்பில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மஹிந்த சமரசிங்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கு விளக்கமளித்துள்ளார்.

சீனத் தூதுவரை...

உதவுவதற்காக சீனாவுக்கு மஹிந்த ராஜபக்ஷ இதன்போது தனது நன்றிகளை தெரிவித்துக் கொண்டார்.

இதேவேளை, இலங்கை மக்கள் மிகவும் பொறுமையாக இருப்பதாகவும் அதற்கு தனது பாராட்டுகளை தெரிவிப்பதாகவும் இலங்கையின் நிலை மிக விரைவில் வழமைக்கு திரும்புமெனவும் சீனத் தூதுவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

எரிபொருள் வரிசையில்...

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக வெல்லவாய ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆபத்தான நிலையில் இருந்த ஒருவர் மொனராகலை மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். வெல்லவாய பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

15 வயதுக்கு உட்பட்ட...

இரத்த வகை உள்ளிட்ட உயிரியல் தகவல்களை உள்ளடக்கியதாக இந்த டிஜிட்டல் அடையாள அட்டை வடிவமைக்கப்படவுள்ளது.

இலங்கையிலுள்ள 17 மில்லியன் மக்களுக்கு இந்த புதிய அடையாள அட்டையை ஒன்றரை ஆண்டுகளில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

"நான் சவாலொன்றை ஏற்றுக் கொண்டுள்ளேன், அது எவ்வாறு முடிவடைகின்றது என்று பார்ப்போம். ஆனால் எனது கட்சியைச் சேர்ந்த ஒருவர் மட்டுமே பாராளுமன்றில் இருப்பது பலவீனம் அல்ல "
– பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

எரிபொருள் பிரச்சினையை

அடுத்த மாதத்திற்குள் சமாளித்து விடுவோம்

பிரதமர் ரணில் கூறுகிறார்

இடைவிடாத அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கு மத்தியில் முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்சவின் இராஜினாமாவைத் தொடர்ந்து தனது எதிர்பாராத நியமனம் இடம்பெற்று ஒரு மாதத்திற்குப் பின்னர், விக்கிரம சிங்க அண்மையில் தனது கொழும்பு அலுவலகத்தில் இந்து பத்திரிகையுடன் உரையாடினார். அவர், ஆறு முறை பிரதமராக இருந்தவர். ஏறக்குறைய அரை நூற்றாண்டு கால அரசியல் வாழ்க்கையில் மிகவும் கடினமான காலங்களில் அவர் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் உற்சாகமாக இருந்தார். "இது பரபரப்பானது, இது ஒரு புதிய அனுபவம். வாரத்தில் எட்டு நாட்கள் வேலை செய்கிறேன்" என்று கூறிச் சிரித்தார்.

பொருளாதார மீட்சிக்கான தனது உடனடித் திட்டங்களை கோடிட்டுக் காட்டிய நிதி அமைச்சருமாக விளங்கும் பிரதமர், விரைவில் சர்வதேச நாணய நிதியத்துடன் ஊழியர்கள் மட்ட ஒப்பந்தத்தை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் எதிர்பார்க்கிறது என்று கூறினார். "பின்னர் கடன் மறுசீரமைப்பு திட்டத்திற்காக நாம் காத்திருக்க வேண்டும். நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதற்கான தெளிவான குறிப்பை அது கொடுக்கும். ஜூலைக்குள், இடைக்கால வரவுசெலவுத் திட்டத்தையும் கொண்டு வருவேன்," எனவும் இலங்கை மேலும் வெளிநாட்டு உதவியை நாடும் என்றும் குறிப்பிட்டதுடன் "நன்கொடையாளர் மாநாடு" பற்றியும் கதைத்தார். அத்துடன் "இந்தியா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகள் அனைத்தும் ஒரே

நிலைப்பாட்டை கொண்டிருப்பதை நாங்கள் உறுதி செய்ய வேண்டும்." எனவும் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார் . இலங்கை "புவிசார் அரசியலின் மையத்தில் " உள்ளது, என்றும் முக்கியமாக குவாட்மூலம் அதன் உறுப்பினர்களான இந்தியா, ஜப்பான் மற்றும் சீனா வழங்கும் உதவிபற்றி அவர் குறிப்பிட்டார்.

வெளிநாட்டு முதலீடு குறித்து கருத்து தெரிவித்த விக்கிரமசிங்க, அதானி குழுமத்தின் திட்டம் சர்ச்சையில் சிக்கிய போதிலும், அக் குழுமத்தின் பிரவேசத்தை அழுத்தமாக வரவேற்றார், இலங்கையின் வடபகுதியில் 500 மில்லியன் டொலர் பெறுமதியான மீளப் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டத்திற்கு அனுமதி வழங்குவதற்கு பிரதமர் நரேந்திர மோடி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கு "அழுத்தம்" கொடுத்ததாக இலங்கையின் உயர்மட்ட அதிகாரி ஒருவர் பாராளுமன்றக் குழுவிடம் தெரிவித்திருந்தார் பின்னர் அந்த அதிகாரி தனது அறிக்கையை வாபஸ் பெற்றிருந்தார் .

"இந்திய அரசு உண்மையிலேயே ஆர்வமாக இருந்திருந்தால், பிரதமர் மோடி அல்லது அவரது அலுவலகம் இதைப் பற்றி என்னிடம் கூறியிருக்கும். அதை விரைவுபடுத்துமாறு எந்த கோரிக்கையும் என்னிடம் விடுக்கப்படவில்லை" என்று விக்கிரமசிங்க கூறியிருக்கிறார்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பில் இந்துப்பத்திரிகையின் நிருபர் மீரா ஸ்ரீநிவாசனுக்கு அளித்துள்ள பேட்டி வருமாறு;

கேள்வி: வரலாறு காணாத நெருக்கடிகளுக்கு மத்தியில் நீங்கள் பிரதமராக பொறுப்பேற்று ஒரு மாதத்திற்கும் மேலாகிறது. இதுவரை நீங்கள் மேற்கொண்ட முக்கியமான தலையீடுகள் என்ன?

பதில்: பொருளாதாரத்திலேயே முக்கிய தலையீடு என்று நான் கூறுவேன். அடுத்த மாதத்திற்குள், எரிபொருள் பிரச்சினையை எம்மால் நிச்சயமாக சமாளிக்க முடியும். நாங்கள் உள்ளே வந்தபோது, அது ஒருங்கிணைக்கப்படவில்லை, இப்போது நாங்கள் அதை ஒருங்கிணைக்கிறோம். இந்திய கடன் உதவியை எங்களால் பயன்படுத்த முடிந்தது. நாங்கள் கொஞ்சம் பணத்தையும் காணக்கூடியதாக இருக்கிறது.

ஆனால் நான் சொன்னது போல், முன்னைய பதிவுகளை திரும்பிப் பார்த்தால், அடுத்த மூன்று வாரங்கள் கடினமானவையாக இருக்கும். அதனால்தான் பெட்ரோலுக்கான சில வரிசைகளைப் பார்க்கிறீர்கள். அதிர்ஷ்டவசமாக, டீசல் மற்றும் எரிவாயும் உடனடி பிரச்சினையாக இல்லை. நாங்கள் தடையில்லாத விநியோகத்தைப் பெற விரும்புகிறோம், அடுத்த மாதத்திற்குள் நாங்கள் அதைக் கையாள முடியும் என்று உணர்கிறோம்.

முக்கிய பிரச்சினை என்னவென்றால், தற்போது, சாதாரண நுகர்வில் 50% மட்டுமே வழங்க முடியும். நாம் இப்போது முன்னுரிமையான விடயங்களைப் பற்றி முடிவு செய்ய வேண்டும். அதனால், மக்களுக்கு பிரச்சினை ஏற்பட்டுள்ளது. வரிசையில் நிற்கும் அவர்களின் விரக்தியை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால், எமக்குக் கிடைக்கும் எரிபொருளை சமாளிப்பதில் கவனமாக இருந்தால், சிறியளவில் கையிருப்பை வைத்துக் கொள்ளலாம்.

நிதி நிலைமையைப் பொறுத்தவரையில் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடலை தொடங்கியுள்ளோம். எங்களிடம் லசார்ட் மற்றும் கிளிபோர்ட் சான்ஸ் [நிதி மற்றும் சட்ட ஆலோசகர்கள்] உள்ளனர். விரைவில் நாணயநிதிய ஊழியர்கள்மட்ட ஒப்பந்தத்தை பூர்த்தி செய்ய முயற்சிக்கிறோம்.

பின்னர் கடன் மறுசீரமைப்பு திட்டத்திற்காக காத்திருக்க வேண்டும். நாம் என்ன செய்ய வேண்டும் என்பதற்கான தெளிவான குறிப்பை இது கொடுக்கும். ஜூலைக்குள், இடைக்கால பட்ஜெட்டையும் கொண்டு வருவேன். நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் ஜூலை மாதம் வர்த்தமானியில் வெளியிடப்படும். யாரும் அது தொடர்பாக நீதிமன்றத்திற்கு செல்லவில்லை என்றால், நிச்சயமாக மாத இறுதியில் நாம் அதை விவாதிக்க முடியும்.

சர்வதேச நாணய நிதியம் ஏற்றுக் கொண்டால், நாம் இடையீட்டு நிதியைப் பெறலாம். தற்போது இந்தியா மட்டுமே எங்களுக்கு நிதியுதவி அளித்து வருகிறது.

சர்வதேச நாணய நிதியம் நீடித்த நிதிவசதியை அங்கீகரித்தவுடன், உலக வங்கி மற்றும் ஏனையவர்களிடமிருந்து சில இடையீட்டு நிதியைப் பெறலாம், மேலும் சில நாடுகளும் எமக்கு உதவும்.

கேள்வி: ஏப்ரல் மாதத்தில் இலங்கையின் ஏற்றுமதி வருமானம் சுமார் 915 மில்லியன் டொலர்களாகவும், தொழிலாளர்கள் அனுப்பிய பணம் 250 மில்லியன் டொலர்களாகவும் இருந்தது. இறக்குமதி 1.7 மில்லியன் டொலர்களாகும். கிடைக்கும் ஏற்றுமதி வருவாயில் அரசு எதற்கு முன்னுரிமை அளிக்கும் ?

பதில்: அத்தியாவசிய இறக்குமதி மட்டுமே. ஏற்றுமதி வருவாய்க்கு மேலதிகமாக இந்தியா வழங்கிய கடன் வசதிகளையும் நாங்கள் பயன்படுத்துகிறோம், விவசாயம் மற்றும் சுகாதாரம் போன்ற பல்வேறு துறைகளுக்கு உதவும் வகையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இங்கு சில திட்டங்களுக்கு டொலர்களில் அனுப்பப்படும் பணம், பயன்படுத்தப்படுகிறது. இந்த மூன்று வழிகளில் நாங்கள் சமாளிக்கின்றோம் .

கேள்வி: இடம்பெற்றுக்கொண்டிருக்கும் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகளைப் பற்றி நீங்கள் கதைத்தீர்கள், மேலும் அலுவலர் மட்டத்திலான ஒப்பந்தத்தை விரைவில் உறுதிசெய்வது தொடர்பாக எதிர்பார்ப்பதாக கூறினீர்கள். இந்திய உதவிக்கு கூடுதலாக (இந்த ஆண்டு மொத்தம் 3.5 பில்லியன் டொலர்), நீங்கள் சீனா மற்றும் ஜப்பானின் உதவியை நாடியுள்ளீர்கள். இலங்கைக்கான உதவிக் கூட்டமைப்பை அமைப்பதில் குவாட் குழுமத்தை முன்னின்று நடத்துமாறு நீங்கள் வலியுறுத்தியுள்ளீர்கள். அவர்கள் அனைவரும் எவ்வாறு பதிலளிக்கிறார்கள்?

பதில்: குவாட் டில் இரண்டு பிரதான உறுப்பினர்கள் ஈடுபட்டுள்ளனர், அதாவது இந்தியா மற்றும் ஜப்பான் ஆகியவையாகும். உதவி வழங்குவதில் இந்தியா இதுவரை முன்னிலை வகித்து வருகிறது. நாங்கள் ஜப்பானுடன் தொடர்பு கொள்ளத் தொடங்கினோம், இதைப் பற்றி பேசுகிறோம், ஏனென்றால் உறவுகள் சில காலமாக மோசமாக உள்ளன. அதுமட்டுமின்றி, சீனாவும் எம்மிடம் வருகிறது.

இப்போது எங்களிடம் இரண்டு குவாட் உறுப்பினர்கள் மற்றும் ஒரே சுற்று ஒரேபாதை முன்முயற்சி உறுப்பினர் உள்ளனர். எங்களிடம் ஒரு பாரிஸ் கிளப் உறுப்பினர் உள்ளார் , அது ஜப்பான், மற்றும் இரண்டு பாரிஸ் கிளப் அல்லாத உறுப்பினர்களான, இந்தியா மற்றும் சீனா ஆகியன உள்ளன. எனவே நாம் புவிசார் அரசியலின் மையத்தில் இருக்கிறோம் [சிரிக்கிறார்].

இந்த கடினமான காலங்களில் இந்திய உதவி கைகொடுத்தது என்று நான் சொல்ல வேண்டும். கலாநிதி ஜெய்சங்கர் பாராளுமன்றக் குழுவைச் சந்தித்து, இந்தியா இலங்கைக்கு ஆதரவாக நிற்கிறது என்று கூறியுள்ளார்.

இந்துசமுத்திர மாநாட்டிற்காக நான் அவரை அபுதாபியில் சந்தித்தபோது கூட, நாங்கள் பிரச்சினை பற்றி கலந்துரையாடினோம், அந்த நேரத்தில், அவர் நிலைமை குறித்து கவலைப்பட்டார். இலங்கையில் எந்தவொரு கொந்தளிப்பையும் அவர் விரும்பவில்லை. மீண்டும், அவர் இங்கு வந்தபோது, இலங்கைக்கு உதவ தாம் தயார் என்றார்.

நீங்கள் எங்களை மீட்டு விடுவிக்க வேண்டும் என்று அவரிடம் கூறினேன். அவர்கள் சில காலம் செயற்பட்டுள்ளதுடன், நிதி அமைச்சரும் பெரும் உதவியாக இருந்துள்ளார். இந்த நேரத்தில் அவர்கள் இருவரும், மற்றும் பிரதமரும் உண்மையில் எங்களுக்கு உதவியுள்ளனர்

கேள்வி: 3.5 பில்லியன் டொலர்களைத் தவிர, இந்தியாவிடம் இருந்து மேலும் உதவியை எதிர்பார்க்கிறீர்களா?

பதில்: எரிபொருளுக்காக கூடுதலாக 500 மில்லியன் டொ லர் உதவி கிடைக்கும் என நம்புகிறோம்.

கேள்வி: இலங்கைக்கான இந்தியாவின் உதவியைகுறிப்பிடத்தக்க வகையில், சீனா பாராட்டியுள்ளதுடன், இலங்கைக்கு உதவ இந்தியா மற்றும் சர்வதேச சமூகத்துடன் இணைந்து பணியாற்ற விருப்பம் தெரிவித்துள்ளது. அண்மையில் கொழும்பில் உள்ள சீன மற்றும் அமெரிக்க தூதுவர்கள் சந்தித்து கலந்துரையாடியதை நாம் பார்த்தோம். சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுடன் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு முயற்சியை ஆதரிக்க சீனா தயாராக இருப்பதாக நீங்கள் நினைக்கிறீர்களா?

பதில்: அவர்கள் நிச்சயமாக செய்வார்கள் என்று நினைக்கிறேன். அவர்களுடன் பேசுவோம். ஜப்பான், சீனா மற்றும் இந்தியா ஆகிய மூன்று நாடுகளும் சில சமயங்களில் ஒன்றுடனொன்று பேசும் என்று நம்புகிறேன். இந்தியாவின் பங்களிப்பை சீனா அங்கீகரித்துள்ளது. இது நல்லதொரு ஆரம்பம் என்று நான் நினைக்கிறேன், ஆனால் விவாதிப்பதற்கு இன்னும் பல விட யங்கள் இருக்கும்.

கேள்வி: நீங்கள் முன்வைத்துள்ள பொறிமுறைகளில் ஒன்று, புதிய வரி விதிப்பு முறையுடன் கூடிய புதிய வரவு செலவுத்திட்டமாகும் . அதிகரித்த 'வற்' போன்ற சில திருத்தங்கள் ஏற்கனவே வந்துள்ளன. இலங்கை அதிகளவுக்கு நேரடி வரி விதிப்புக்கு செல்வதை பார்க்கிறீர்களா?

பதில்: ஆம், அதிக நேரடி வரி விதிப்புக்கு செல்வோம். நாட்டில் சமத்துவமின்மை அதிகரித்து வருவதால் அதைச் செய்ய வேண்டும். பட்ஜெட் இடைக்கால பட்ஜெட்டாக இருக்கும். பல துறைகளில் செலவுகளை குறைக்க வேண்டும். அதிக வட்டி வீதங்களை செலுத்துவதற்காக பணத்தைச் சேமிக்கிறோம். நான் சமூக நலத்துறையில் 200 பில்லியனுக்கும் மேல் முதலீடு செய்ய விரும்புகிறேன்.

வரிவிதிப்பு மற்றும் பலவற்றில் வேறு சில சட்டங்களையும் கொண்டு வருவோம். இது ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் இருக்கும். அதன்பிறகு நவம்பர் மாதம் புதிய பட்ஜெட் தாக்கல் செய்கிறோம். ஆக, ஆகஸ்ட் முதல் டிசம்பர் வரை, அனைத்து பொருளாதார விடயங்களும்சிலசமயம் 2023ன் முற்பகுதியில் விவாதிக்கப்படும், ஆய்வு செய்யப்படும்.

கேள்வி: சமத்துவமின்மை அதிகரித்து வருவதால், சமூக நலனுக்காக சில வளங்களைத் திசை திருப்பிவிட திட்டமிட்டுள்ளீர்கள். உலகளாவிய சமூக நலனில், குறிப்பாக கல்வி மற்றும் சுகாதாரத்தில் இலங்கை எங்கள் பிராந்தியத்தில் ஒரு பெருமைக்குரிய பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது. இப்போது இலக்கு சமூக பாதுகாப்பு பற்றி பேசப்படுகிறது, நீங்கள் எப்படி இரண்டையும் சமரசம் செய்வீர்கள்?

பதில்: இலக்கு என்பது ஏழைகளை இலக்காகக் கொண்ட திட்டங்கள். நலத் திட்டங்கள் சிலவற்றை, தகுதியற்றவர்களும் பெறுகிறாரகள்.பெறுநர்களாக இருக்க தகுதியற்ற நபர்களை நீக்குவதன் மூலம் பணத்தைச் சேமிக்கலாம்.

கேள்வி: சர்வதேச நாணய நிதியத்துடனான த பேச்சுவார்த்தையில் இலங்கைக்கு போதுமான அளவுக்கு பேரம் பேசும் சக்தி உள்ளது என்று கூறுவீர்களா?

பதில்: முன்னைய காலங்களிலிருந்து தற்போதைய காலம் வேறுபட்டதாகும், இருப்பினும், நீங்கள் முதலில் நிலைமையைப் பார்த்து, என்ன செய்ய வேண்டும் என்று முடிவு செய்தால், உங்கள் பேரம் பேசும் சக்தி உங்களிடம் உள்ளது. அதுவே உங்கள் பேரம் பேசும் சக்தியாக மாறும். என்ன நடக்கிறது என்பதை நீங்கள் உணர்ந்துவிட்டீர்கள், நீங்கள் சரியான பாதையில் செல்கிறீர்கள் என்று அர்த்தம். நீங்கள் நாணய நிதியத் துடன் விடயங்களை கையாளும் போது அது உங்கள் நிலைப்பாட்டை வலுப்படுத்துகிறது.

இரண்டாவதாக, சிக்கனம் பற்றி என்னிடம் கேட்டீர்கள். ஆம், சிக்கனம் இருக்க வேண்டும், ஆனால் அது ஒரு குறுகிய காலத்தில் இருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம், இதன் மூலம் 2024க்குள் நாம் நகர் வதற்கு தொடங்கலாம். 2023 ஒரு கடினமான ஆண்டாக இருக்கும், ஏனென்றால் நாம் ஒரு முன்னேற்றத்தை ஏற்படுத்தும் போது , உலகளாவிய நிகர தேசிய உற்பத்தி இப்போது 2.9% ஆகக் குறைந்துள்ளது. உக்ரைன் போர் மற்றும் மேற்கு நாடுகளில் உள்ள பணவீக்கம், சீனாவில் உள்ள பிரச்சினைகள் காரணமாக இது இன்னும் குறையுமா என்பது எங்களுக்கு இன்னும் தெரியவில்லை.

கேள்வி: கடந்த ஆண்டு இரசாயன உரத் தடையின் தாக்கம் உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படுத்திய பாதிப்பு என்ன?

பதில்: உக்ரைன் நெருக்கடி மற்றும் உலகளாவிய உணவு நெருக்கடிகள் காரணமாக பெரும்பாலான நாடுகள் உணவை ஏற்றுமதி செய்யாது என்பதால், உணவுப் பற்றாக்குறை இருக்கும் என்ற அடிப்படையில் நாங்கள் இப்போது உள்நாட்டு உற்பத்தியைப் பார்க்கிறோம். எனவே நாம் அடிப்படை உணவுப் பொருட்களில் பாதுகாப்பாக இருப்பதை உறுதிசெய்யும் உணவுப் பாதுகாப்புத் திட்டத்தைக் கொண்டிருப்போம். அரிசி கிடைக்காவிட்டால், பயறு மற்றும் பலவற்றை எடுத்துக் கொள்ள வேண்டும்.

மக்களுக்குத் தேவையான குறைந்தபட்ச கலோரிகள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும், மேலும் அதற்கான வசதி இல்லாதவர்களுக்கு உணவளிக்க வேண்டும். எனவே, இது 336 உள்ளூராட்சிப் பிரிவுகளுக்கு பரவலாக்கப்பட்டு, நாங்கள் தொடங்கவிருக்கும் போராட்டமாகும். **(15 ஆம் பக்கம் பார்க்க)**

தேர்தல் முறைமையில் நிலவும் குறைபாடுகள்;

பாராளுமன்ற விசேட குழுவின் இறுதி அறிக்கை சமர்ப்பிப்பு

மாகாண சபைகளின் பதவிக் காலம் முடிவடைந்து பல வருடங்கள் கடந்துள்ள போதிலும், அதனை நடத்துவதற்கான பௌதிகச் சூழல் மாத்திரமன்றி சட்டரீதியான சூழலும் காணப்படவில்லை. கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் மாகாணசபைத் தேர்தல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட்ட போதும், எல்லை நிர்ணய சபையின் அறிக்கை பாராளுமன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்படாத காரணத்தினால் இச்சட்டமூலம் இன்னமும் முழுமையடையவில்லை.

இவ்வாறான நிலையிலேயே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் இதன் ஒரு அங்கமாக தற்பொழுது காணப்படும் தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமையில் காணப்படும் குறைபாடுகளை இனங்காண்பதற்கு பாராளுமன்ற விசேட குழுவொன்றை நியமித்திருந்தது.

அமைச்சர் தினேஷ் குணவர்தன தலைமையிலான இந்தக் குழுவில் அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், டக்ளஸ் தேவானந்தா மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான பவித்ராதேவி வன்னிஆரச்சி, விமல் வீரவங்ச, அநுர திசாநாயக்க, கபீர் ஹாசிம், ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார, மனோ கணேசன், எம்.ஏ. சுமந்திரன், எம்.யூ.எம். அலி சப்ரி, ஜீவன் தொண்டமான், மதுர விதானகே, சாகர காரியவசம் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாக பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளம் காண்பதும் தேவையான திருத்தங்களை பரிந்துரை செய்வதும் இக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பாகும். சுமார் ஒரு வருடத்துக்கு மேலாக இக்குழு பல தடவை கூடியிருந்தது. அது மாத்திரமன்றி இக்குழுவின் அறிக்கையை தயாரிப்பதற்கு விசேட நிபுணர்கள் குழுவொன்றும் நியமிக்கப்பட்டிருந்தது.

தேர்தலில் போட்டியிடும் பணம் படைத்த வேட்பாளர்கள், தமது பிரசாரங்களுக்காக ஊடகங்களில் அதிக இடத்தைப் பெற்றுக் கொள்வது தவறு

இந்தக் குழு பல்வேறு அரசியல் கட்சிகள், சிவில் சமூக அமைப்புக்கள் உள்ளிட்ட பலதரப்பினரின் கருத்துக்களைப் பெற்றுக் கொண்டு தனது இறுதி அறிக்கையைத் தயாரித்துள்ளது. இதனை அமைச்சர் தினேஷ் குணவர்தன கடந்த வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார்.

மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு கலப்பு முறையிலான தேர்தல் முறையை நடைமுறைப்படுத்துவது உள்ளிட்ட பல பரிந்துரைகள் இதில் காணப்படுகின்றன. விகிதாசார முறை மற்றும் தொகுதிவாரி முறையை உள்ளடக்கிய கலப்புமுறை குறித்து இந்தக் குழுவில் விரிவாகக் கலந்துரையாடல்கள் மற்றும் விவாதங்கள் நடைபெற்றிருந்தன. இது பற்றிய குழுவின் நிலைப்பாடு இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் குறித்துப் பிரஸ்தாபித்துள்ள இந்தக் குழு, தற்பொழுது காணப்படும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளது. புதிய எல்லை நிர்ணயம் மூலம் வட்டாரங்களின் எண்ணிக்கையைக் குறைப்பதன் ஊடாக அல்லது விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் பகுதியைக் குறைப்பதன் ஊடாக இதனைச் செய்ய முடியும் எனக் குழு தனது அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது.

மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு கலப்பு முறையிலான தேர்தல் முறையே பொருத்தம்

உள்ளூராட்சி மன்றங்களுக்கு தொகுதிவாரி முறையில் 60 வீதமானவர்களும், எஞ்சிய 40 வீதமானவர்கள் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் அடிப்படையிலும் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதும் இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், மாகாணசபைத் தேர்தல்கள் குறித்துச் சுட்டிக்காட்டியுள்ள இந்தக் குழு, இதற்கு முன்னர் இருந்த விகிதாசார முறையின் கீழ் தேர்தலை நடத்துவதற்கு குழு இணங்கியமையால், உள்ளூராட்சித் தேர்தலில் குறிப்பிடப்பட்ட விகிதாசரத்தின் படி தேவையான வரையறை நிர்ணயத்துடன் கூடிய கலப்புத் தேர்தல் முறைக்கான சட்டம் இயற்றப்படும் வரை விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதற்குப் பொருத்தமான சட்டத்தை இயற்றுமாறும் பரிந்துரைத்துள்ளது.

மாகாணசபைத் தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கு முன்மொழியப்பட்ட சட்டத்தை அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்குமாறும் குழுவின் பரிந்துரையில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பாராளுமன்றத் தேர்தலைப் பொறுத்தவரையில் பாராளுமன்றத்துக்குத் தெரிவாகும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 225 ஆக அமைய வேண்டும் என்பதுடன், கலப்பு முறையில் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும், தொகுதி வாரிமுறையில் 70 விகிதமும், விகிதாசார முறையின் கீழ் 30 விகிதமும் அல்லது தொகுதி வாரிமுறையின் கீழ் 65 விகிதமும், 35 வீதம் விகிதாசார முறையின் கீழும் அமைய வேண்டும் எனப் பாராளுமன்ற விசேட குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற அமைப்பில் ஏதேனும் மாற்றங்கள் செய்யப்பட்டால் அது சிறுபான்மையினத்தவரின் பிரதிநிதித்துவத்தில் மாற்றத்தை ஏற்படுத்தலாம் என குழுவின் உறுப்பினர்கள் சிலர் சுட்டிக் காட்டியுள்ளனர்.

(15ஆம் பக்கம் பார்க்க)

பி.ஹர்ஷன்...✍

இலங்கைக்கு இந்தியா உதவிக்கரம் நீட்டுவது என்பது இது முதல் முறையல்ல; புதிதும் அல்ல. கடந்த 1971 மற்றும் 1988 ஆம் ஆண்டுகளில் ஜனதா விமுக்தி பெரமுன கிளர்ச்சியாளர்களின் போராட்டம், 2004 ஆம் ஆண்டு சுனாமி, உள்நாட்டுப் போர், போருக்கு பிந்திய வடக்கு, கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தி, புனரமைப்புஎன்றெல்லாம் இந்தியா இலங்கைக்கு தொடர்ந்து உதவி வந்துள்ளது. இந்தியாவின் உதவிகள் இன்றும் தொடர்கின்றன.

இலங்கைக்கு இலாபத்தைத் தராத சீனாவின் கடந்த கால முதலீடுகள்!



இலங்கையில் சீனா மேற்கொண்ட கட்டுமானத் திட்டங்கள் ஏராளம்; ஆனால் அதன் ஊடாக இலங்கை அடைந்த பயன்கள் கேள்விக்குறி!

தீவு நாடான இலங்கையில் ஏற்படும் அரசியல், சமூக, பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு ஸ்திரத்தன்மை ஆகியவை தெற்கு ஆசிய பிராந்தியத்தை பாதிக்கும் பட்சத்தில், முதலில் பாதிக்கப்படுவது இந்தியாவாகத்தான் இருக்கும். அதனால்தான், இலங்கைக்குத் தேவையான மனிதாபிமான, பொருளாதார மற்றும் பாதுகாப்பு உதவிகளை இந்தியா அவ்வபோது உடனடியாக அளித்து வருகின்றது.

இந்தியா இவ்வளவு உதவிகளை செய்து வரும் போதிலும், சுதந்திரம் அடைந்த நாள் முதல் இலங்கை இந்தியாவை ஒரு அச்சுறுத்தலாகவே பார்ப்பதற்குக் காரணம் தென்னிலங்கையிலுள்ள இனவாத அரசியல் கட்சிகள் ஆகும். தென்னிலங்கை இனவாதிகள் தங்களது அரசியல் ஆதாயத்துக்காக இந்தியாவை விரோத நாடாகவே பெரும்பான்மை மக்கள் மத்தியில் காண்பித்து வருகின்றனர். வடக்கு, கிழக்கு தமிழர்களின் அபிலாஷைகளில் இந்தியா விசேட கரிசனை செலுத்தி வருவதனால் பெரும்பான்மை மக்கள் உள்ளங்களில் இந்தியா மீதான கசப்பு இன்னும் தொடரவே செய்கின்றது.

எனவே, இந்தியாவுக்கு விரோதமான ஏதாவதொரு மூன்றாவது நாட்டுடன் நெருக்கம் காட்டுவதன் மூலம் இந்தியாவை எதிர்க்க வேண்டுமென இனவாதிகள் விரும்புகின்றனர். அதனால்தான், இந்தியாவிடம் இருந்து உதவிகளைத் தொடர்ந்து பெற்று வரும் நிலையிலும் தென்னிலங்கை இனவாத கட்சிகள் இன்னமுமே இந்தியா மீது நெருக்கத்தைப் பேண முன்வரவில்லை.

ஆனால் சீனா மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகள் இந்தியாவைப் போல பிரதிபலன் கருதி உதவும் மனோநிலையில் இல்லை என்பதை நாம் முதலில் ஒப்புக் கொள்ள வேண்டும். இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் அதன் கடன் மறுகட்டமைப்புக்கு உதவுவதற்று சீனா இன்னுமே முன் வரவில்லை. ஆனால் சீனாவுக்கு மீளச் செலுத்த வேண்டிய கடன், அந்நிய செலாவணி கையிருப்பு குறைவு போன்ற நிலையிலும் கூட இலங்கைக்கு இந்தியா தொடர்ந்தும் உதவிகளை வழங்கி வருகின்றது.

பொருளாதார சவால்களை எதிர்கொண்டுள்ள இலங்கை, 2015 ஆம் ஆண்டில் துறைமுக நகர் திட்டத்தை தற்காலிகமாக நிறுத்தி வைத்தது. கடந்தாண்டு இயற்கை உரம் விநியோக திட்டத்தையும் ரத்து செய்தது. இந்த இரண்டு திட்டங்களுக்கும் இழப்பீடாக சீனாவுக்கு இலங்கை அரசு வழங்க வேண்டிய தொகை மிக அதிகமாகும்.

இது போன்று, இலங்கையில் முடிக்கப்படாத பல திட்டங்களில் சீனாவின் தலையீடு உள்ளதாக தகவல்கள் வருகின்றன. இத்திட்டங்கள் உரிய நேரத்தில் முடிந்தால் மட்டுமே இலங்கை சீரான பொருளாதார வளர்ச்சி காண முடியும். இதனால்தான், சீனாவுக்கு எதிரான எந்த நடவடிக்கையிலும் ஈடுபட இலங்கை அரசு தயக்கம் காட்டுகிறது என்பது பொதுவான அபிப்பிராயம்.



தென்னிலங்கை கடும்போக்கு சக்திகளின் சந்தேகப் பார்வைக்கு மத்தியிலும் இந்தியாவிடமிருந்து இலங்கைக்கு தொடர்கின்ற மனிதாபிமான உதவிகள்

அமெரிக்காவிற்கு எதிராக ஆயுதபலத்தில் நிகரான வளர்ச்சி கண்டுள்ள சீனா, உலகம் முழுவதையும் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வர நினைக்கிறது. இதனால், தனது ஆயுதபலத்தைக் கொண்டு முடிந்த வரை எல்லையை விரிவாக்கி வருகிறது. தென் சீனக் கடல் பகுதிக்கும் சொந்தம் கொண்டாடி வருகிறது.

தனது எல்லை விரிவாக்கத்திற்கு தொந்தரவாக இருக்கும் இந்தியாவையும் சீனா விரோதமாக நினைக்கிறது. அதனால் எல்லையில் உள்ள கிழக்கு லடாக் உள்பட உள்நாட்டு எல்லைப் பிரச்சினைகளை உருவாக்கி வருவதாக இந்தியா குற்றம் சாட்டி வருகின்றது. இந்தியாவின் அண்டை நாடுகளான இலங்கை, பாகிஸ்தான், நேபாளம் உள்ளிட்ட நாடுகளுக்கு கடன் கொடுத்து மறைமுக நிகழ்ச்சித் திட்டத்தையும் சீனா முன்னெடுப்பதாக இந்தியா கருதுகின்றது.

உலகின் 2 ஆவது மிகப் பெரிய மக்கள் தொகை கொண்ட இந்தியா, அசுர வளர்ச்சி காணும் பொருளாதார நாடாக உருவெடுத்து வருகின்றது. உலக நாடுகளின் பார்வையில் இந்தியா மிகப் பெரிய பொருளாதார சந்தையாக கருதப்படுகிறது. இதுவும் சீனாவின் கண்களை உறுத்துவதால், இந்தியாவுக்கு தொடர்ந்து சிக்கல்கள் கொடுத்து வருவதாக இந்தியா எண்ணுகின்றது.

இதற்கான வாய்ப்பை எதிர்பார்த்துக் காத்திருந்த சீனா, இலங்கையில் தனது கால்தடத்தை வலுவாக பதிக்கத் தொடங்கியது என்றே சொல்லலாம். இலங்கைக்கு பெரும் தொகைக் கடன் கொடுக்க முன் வந்த சீனாவிடம், இலங்கை கடன்களை வாங்கிக் கொண்டது.

(15ஆம் பக்கம் பார்க்க)

எஸ்.சாரங்கன்...✍

வார இறுதி

அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

இலங்கைத் தேசத்தின் இன்றைய ஆபத்தான நிலைமை இதுதான்!

இலங்கை தனது வரலாற்றில் முதன் முறையாக பாரியதொரு பொருளாதார நெருக்கடிக்கு தற்போது முகம் கொடுத்துள்ளது. எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயுவைப் பெற்றுக் கொள்வதற்காக மக்கள் ஒவ்வொரு நாளும் பல்வேறு நம்பிக்கைகளுடன் நீண்ட கியூ வரிசைகளில் காத்திருக்கும் நிலை தொடர்ந்து காணப்படுகிறது.

அன்றாட பாவனைப் பொருட்களின் விலைகள் மோசமாக அதிகரித்துச் செல்கின்றன. உணவுப் பொருட்களின் விலைகளும் மிகவும் அதிகம். அன்றாட வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாமல் மக்கள் திண்டாட வேண்டியுள்ளது.

மக்கள் எதிர்கொள்ளும் இவ்வாறான இன்னல்களைத் தீர்த்து, நாட்டை சரியான பாதையில் முன்னோக்கிக் கொண்டு செல்வதற்குப் பல்வேறு முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது என்பதை மறுக்க முடியாது. இருந்தபோதும்,



தாய்நாட்டின் தற்போதைய அதலபாதாள பொருளாதாரத்தை சபையில் தெளிவாக விளக்கிக் கூறிய பிரதமர் ரணில்!

நாட்டில் காணப்படும் பிரச்சினைகளுக்கு ஒரே நாளில் தீர்வு காண முடியாது என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டிய உண்மையாகும். இதனை அரசியல்வாதிகள் பலரால் புரிந்து கொள்ள முடியாமலுள்ளது.

அதனைப் புரிந்து கொண்டாலும் அரசியல் ஆதாயத்துக்காக அரசியல்வாதிகள் பலர் போலி வார்த்தைகளை அள்ளி வீசுகின்றனர்.

இன்றைய நெருக்கடியில் இருந்து மீள்வதாயின் படிப்படியாக ஒவ்வொரு அடியையும் எடுத்து வைக்க வேண்டும் என்பதுடன், இதற்கு சகல தரப்பினரினதும் ஒத்துழைப்புக்களும் வழங்கப்பட வேண்டும்.

நாட்டின் உண்மையான பொருளாதார நிலைமை மற்றும் அரசாங்கம் சார்பில் முன்னெடுக்கப்படும் முயற்சிகள் தொடர்பில் இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெளிவுபடுத்தி வருகிறார்.

இதன் தொடர்ச்சியாக கடந்த 22 ஆம் திகதி பிரதமர், அரசின் செயற்பாடுகளை விளக்கியிருந்தார். நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டெழுவதே தற்போதைய பிரச்சினையென்றும், இதற்கு சர்வதேச ரீதியில் பல்வேறு தரப்பினருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் பிரதமர் குறிப்பிட்டிருந்தார்.

அது மாத்திரமன்றி 2022 ஆம் ஆண்டில் எஞ்சிய மாதங்களுக்கான இடைக்கால வரவுசெலவுத் திட்டமொன்றை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் சமர்ப்பிக்க எதிர்பார்த்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

அரசாங்கம் எடுத்துள்ள அனைத்து முயற்சிகளுக்கும் அரசியல் கட்சிகள் யாவும் அர்ப்பணிப்புடன், அரசியல் இலாபங்களைக் கடந்து ஒத்துழைப்பு வழங்குமாறும் பிரதமர் ரணில் தனது உரையில் கோரிக்கை விடுத்திருந்தார்.

'நாட்டில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பில் எடுத்துக் கூறுவதற்காகவே பிரதமர் பதவியை ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக் கொண்டுள்ளார்' என தெரிவிக்கப்படுகின்ற விமர்சனத்துக்கும் அவர் பதில் வழங்கியிருந்தார்.

'நாடு எதிர்கொள்ளும் கஷ்டங்களை எங்களிடம் கூறுவதற்காகவே அவர் பிரதமர் பதவியை ஏற்றுக் கொண்டாரா?' என்று என்னை விமர்சிக்கிறார்கள். எவ்வாறாயினும் நாங்கள் அவர்களிடம் முழு உண்மையையும் கூறுகிறோம் என்பதற்காக பலர் நன்றி கூறுகின்றனர் மேலும் இந்தச் சிக்கல்களை சமாளிக்க எங்களுக்கு உதவும் பல்வேறு திட்டங்களை முன்வைக்க அவர்கள் முன்வந்துள்ளனர்' எனக் கூறியுள்ளார் பிரதமர்.

"எரிபொருள், எரிவாயு, மின்சாரம் மற்றும் உணவுப் பற்றாக்குறைக்கு அப்பால் மிக மோசமான நிலைமையை நாம் இப்போது எதிர்கொண்டுள்ளோம். நமது பொருளாதாரம் முழுமையான சரிவைச் சந்தித்துள்ளது. அதுதான் இன்று நம் முன்பாக உள்ள மிகத் தீவிரமான பிரச்சினை. இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதன் மூலமே இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். இதைச் செய்ய நாம் எதிர்கொள்ளும் அந்நிய கையிருப்பு நெருக்கடியை முதலில் தீர்க்க வேண்டும்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 700 மில்லியன் அமெரிக்க டொலர் கடனில் உள்ளது. இதன் விளைவாக உலகில் எந்த நாடும் அல்லது அமைப்பும் எங்களுக்கு எரிபொருளை வழங்கத் தயாராக இல்லை. பணத்துக்கு எரிபொருளைக் கொடுக்கக் கூட தயங்குகிறார்கள்" என்றும் பிரதமர் தனது உரையில் தெரிவித்தார்.

இலங்கை ஒவ்வொரு முறையும் இக்கட்டான சூழ்நிலையைச் சந்திக்கும் போது உதவிக்கரம் நீட்டும் உண்மை நண்பனாக விளங்கும் இந்தியாவின் ஒத்துழைப்பைப் பிரதமர் நன்றியுடன் பிரஸ்தாபித்திருந்தார். இலங்கை இதுவரை இந்தியாவிடமிருந்து கடன் திட்டத்தின் கீழ் 4 பில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெற்றுள்ளது. இதற்கும் அப்பால் இலங்கைக்கு மேலும் உதவிகளைச் செய்வது குறித்து ஆராய்வதற்கு இந்திய உயர்மட்டக் குழுவின் அதிகாரிகள் இலங்கைக்கு வருகை தந்திருந்தனர்.

இந்திய வெளியுறவுச் செயலாளர் வினய் குவாத்ரா தலைமையில் பொருளாதார விவகாரங்களுக்கான திணைக்களத்தின் செயலாளர் ஸ்ரீஅஜய்சேத், தலைமைப் பொருளாதார ஆலோசகர் கலாநிதி வீ. ஆனந்த நாகேஸ்வரன் மற்றும் இந்திய வெளியுறவு அமைச்சின் இந்து சமுத்திர பிராந்தியத்துக்கான இணைச் செயலாளர் கார்த்திக் பாண்டே உள்ளிட்ட இந்திய அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் குழுவே இலங்கை வந்திருந்தது.

இந்தக் குழுவினர் கடந்த வியாழக்கிழமை காலை இலங்கை வந்து உயர்மட்டச் சந்திப்புக்களை நடத்தி விட்டு மீண்டும் நாடு திரும்பியிருந்தனர். இவர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைச் சந்தித்து வெளிப்படையான மற்றும் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களை நடத்தியிருந்தனர்.

சர்வதேச உதவிகள் இவ்வேளையில் மிகவும் அவசியம். இக்கட்டான வேளையில் இந்தியா வழங்கி வருகின்ற உதவிகள் பெரும் நன்றிக்குரியவை. சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறும் முயற்சியில் அரசாங்கம் தீவிர அக்கறை

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு ஒரேநாளில் தீர்வு காண்பதென்பது சாத்தியமானதல்ல. ஒவ்வொரு அடியையும் படிப்படியாக எடுத்து வைக்க வேண்டியுள்ளது.

அரசியல் கட்சி வேறுபாடுகளை அடிப்படையாக வைத்து செயற்படும் தருணம் இதுவல்ல. சிறிது காலத்துக்கு நமது கருத்துவேறுபாடுகளை ஒதுக்கி வைத்து விட்டு, நம் தாய்நாட்டைப் பற்றி மட்டும் சிந்தித்தால் மட்டுமே எதிர்காலப் பேரழிவிலிருந்து இலங்கையைக் காப்பாற்ற முடியும்!

இலங்கைக்கு இந்தியா வழங்கி வரும் உதவிகள் குறித்து நாம் விசேடமாகக் கூற வேண்டிய அவசியம் இல்லை. சுனாமிப் பேரலைத் தாக்கம், அதன் பின்னர் கொரோனா தொற்று போன்று பல்வேறு இக்கட்டான சந்தர்ப்பங்களில் முதன் முதலில் ஓடிவந்து இலங்கைக்கு நேசக்கரம் நீட்டிய நாடு இந்தியா என்பதையும் நாம் மறந்து விட முடியாது.

இந்தியாவின் உதவிகளுக்கு அப்பால் சர்வதேச நாணய நிதியத்துடன் நடத்தப்படும் பேச்சுக்கள் குறித்தும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் விளக்கியிருந்தார். நாட்டை மீட்டெடுப்பதில் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக் கொள்வதே அரசின் விருப்பமாகும். அவர்களுடன் கலந்துரையாடல்களை நடத்தி கூடுதல் கடன் வசதியைப் பெறுவதற்கான ஒப்பந்தத்தை எட்டுவதே அரசாங்கத்தின் நோக்கம். இதற்காக பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி, ஏற்றுமதி வருவாயை அதிகரிப்பதற்கான உடனடி வேலைத் திட்டம் செயற்படுத்தப்படும் எனவும் பிரதமர் நம்பிக்கை வெளியிட்டார்.

'மத்திய வங்கி, திறைசேரி, சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள், தொழில் வல்லுநர்கள் மற்றும் நிபுணர்களுடனான கலந்துரையாடலைத் தொடர்ந்து இந்தத் திட்டம் ஏற்கனவே வகுக்கப்பட்டுள்ளது. ஒரு சிறந்த தீர்வு கிடைத்தால் எங்களுக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். உண்மையில் நீங்கள் நாட்டிற்கு ஒரு நடைமுறை மற்றும் மிகவும் சாதகமான திட்டத்தை வைத்திருந்தால் அதை முன்வைக்க நாங்கள் உங்களை அழைக்கிறோம். அரசியல் கட்சிகள் விரும்பினால் அவைகளால் முன்வைக்கப்படும் தீர்வுகளை பாராளுமன்றத்தில் முன்வைக்கலாம். அவர்களுக்குத் தேவையான இடத்தையும் வாய்ப்பையும் வழங்க நாங்கள் தயாராக இருக்கிறோம்' எனவும் பிரதமர் தெரிவித்தார்.

"வருமானம் மற்றும் வரிவிதிப்பு தொடர்பான சர்வதேச நாணய நிதியக் குழு கலந்துரையாடலுக்காக இலங்கைக்கு விஜயம் செய்தது. அதற்கான அறிக்கையை எங்களிடம் முன்வைத்தனர். திங்கட்கிழமை சர்வதேச நாணய நிதியத்தின் பிரதான குழு இலங்கை வந்தடைந்ததும் குழுவுடனான பேச்சுவார்த்தை அடுத்த சில நாட்களுக்கு தொடரும். நாங்கள் ஆரம்ப விவாதங்களை முடித்து விட்டோம், பொது நிதி, நிதி, கடன் நிலைத்தன்மை, வங்கித் துறையின் ஸ்திரத்தன்மை மற்றும் சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு போன்ற பல்வேறு துறைகள் பற்றிய கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டோம்" என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

முன்னோக்கிச் செல்லும் பாதைக்கான அடித்தளத்தை உருவாக்க ஓகஸ்ட் 2022 இல் மீதமுள்ள காலத்திற்கு இடைக்கால வரவு செலவுத் திட்டம் முன்வைக்கப்படவிருப்பதுடன், நவம்பர் மாதத்தில் 2023 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம் முன்வைக்கப்படவுள்ளது.

இதற்கும் அப்பால் பொருளாதாரத்தை வலுப்படுத்த தேவையான பல புதிய சட்டங்களை பாராளுமன்றத்தில் முன்வைப்பது பற்றி பிரதமர் பிரஸ்தாபித்திருந்தார். இது பற்றி அரசியல் கட்சிகளுடன் ஏற்கனவே கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டிருப்பதாகவும், தேசத்தைக் கட்டியெழுப்பும் முயற்சிகளுக்கு உறுதுணையாக இந்தக் கலந்துரையாடல்களில் பங்கேற்கும் அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் புத்திஜீவிகளுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் கூறினார்.

'உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் அரசியல் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்கும் நாங்கள் பணியாற்றி வருகிறோம். விலைக் கட்டுப்பாட்டை உறுதிப்படுத்தும் வகையில் இந்தியக் கடன் வரியின் கீழ் அரிசியை இறக்குமதி செய்வதற்கும் இலங்கைச் சந்தைக்கு இருப்புக்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுப்போம். இதன் மூலம் இலங்கை நுகர்வோருக்கு ஓரளவு நிம்மதி கிடைக்கும்.

நாட்டின் விவசாயத் துறைக்கு புத்துயிர் அளிக்கும் முயற்சிகளுக்காக தனிநபர்கள் மற்றும் குழுக்களுக்கு எனது நன்றியைத் தெரிவிக்கவும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்துகிறேன். அனைத்துக் கட்சிப் பிளவுகளையும் ஒதுக்கி வைத்து விட்டு உணவுப் பாதுகாப்பு தொடர்பான அரசாங்கத்தின் விவாதங்களில் பல குழுக்கள் கலந்து கொள்கின்றன என்பதையும் நான் கவனிக்க விரும்புகிறேன்.

நாட்டில் விவசாய பண்ணைகளை நிறுவுவதில் முன்னணியில் இருப்போம் என ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி கட்சி ஆகியவை உறுதியளித்துள்ளன. இந்த செயல்முறைக்கு எந்த ஆதரவையும் அரசாங்கத்திடம் கோராமல் இந்தப் பண்ணைகளை அமைப்பதில் அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளுக்கு நன்றி தெரிவிக்கிறேன். பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க அண்மையில் குறிப்பிட்டது போல் இந்த வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான பிரதேசங்களை அவரது கட்சி ஏற்கனவே தெரிவு செய்துள்ளது.

இதேவேளை, புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான பாரியளவில் பயன்படுத்தப்படாத காணியை விவசாய தேவைகளுக்காக ஒதுக்குவதற்கும் அமைச்சர் பந்துல குணவர்தன நடவடிக்கை எடுத்துள்ளார். திரு. சஜித் பிரேமதாச மற்றும் திரு. அனுரகுமார திஸாநாயக்க ஆகியோர் தமது விவசாயத் திட்டங்களுக்காக காணிகளைப் பெற்றுக் கொள்வதில் ஏதேனும் சிரமங்கள் இருந்தால் அமைச்சர் பந்துல குணவர்தனவுடன் கலந்துரையாடுமாறு நான் கேட்டுக் கொள்கிறேன். இரு கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடுமாறு உணவுப் பாதுகாப்புக் குழுவின் செயலாளரிடமும் தெரிவித்துள்ளேன்' எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது உரையில் குறிப்பிட்டார்.

மறுபக்கத்தில் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதுடன் தொடர்புபட்டுள்ள அரசியல் ஸ்திரத்தன்மைக்கான வழிகள் குறித்தும் பாராளுமன்றத்துக்குத் தெளிவுபடுத்தப்பட்டது. 21 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருக்கும் அதேநேரம், ஐக்கிய மக்கள் சக்தி முன்வைத்த தனிநபர் சட்டமூலம் குறித்த வியாக்கியானத்தை உயர் நீதிமன்றம் முன்வைத்திருந்தது. இவ்வாறான நிலையில் அரசாங்கத்தின் சட்டமூலத்தில் உரிய மாற்றங்களை உள்ளடக்கியதாக 21 ஆவது திருத்தத்தை நிறைவேற்ற முடியும் என்பது பிரதமரின் கருத்தாக இருந்தது.

சிறிது காலத்துக்கு நமது கருத்து வேறுபாடுகளை ஒதுக்கி வைத்து விட்டு, இந்த நேரத்தில் நம் நாட்டைப் பற்றி மட்டும் நினைத்தால் வரவிருக்கும் இந்த பேரழிவிலிருந்து நம் தாய்நாட்டைக் காப்பாற்ற முடியும் என்று எனவும் பிரதமர் தெரிவித்தார்.

மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல

சோதனைக்கு மேல் வேதனைகளை எதிர்கொண்டிருக்கும் தோட்ட சமூகம்

அரசியல்வாதிகள் நேரிடையாக தலையிட வேண்டிய நேரம்

பன். பாலா ...✍

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வருமானம் என்பது ஆரம்ப காலந் தொட்டே போதுமானதாக இருந்ததில்லை. தோட்ட மக்களுக்கான நுகர்வுப் பொருள் விநியோகம் உள்ளிட்ட அனைத்துத் தேவைகளையும் தோட்ட நிர்வாகங்களே கையாண்டு வந்ததால் மக்கள் மத்தியில் சம்பளக் குறைவு என்பது பிரச்சினைக்குரிய சமாச்சாரமாகப் படவில்லை. அதேநேரம் இவ்வாறான கட்டமைப்பு இச்சமூகத்தைக் கட்டுப்பெட்டித்தன வாழ்க்கைக்குப் பழக்கப்பட வைத்தது. எனவே உழைப்புக்கேற்ற ஊதியம் எனும் கோரிக்கை எழவில்லை. ஆனால் 1972களில் அப்போதைய ஸ்ரீமாவோ அரசாங்கம் பெருந்தோட்டங்களை தனியார் நிறுவனங்களிடம் இருந்து பொறுப்பேற்றுக் கொண்டது.

அத்துடன் பெருந்தோட்ட மக்களுக்கு உரிமைகள் வழங்கப்படும், தொழில் பாதுகாப்பு உத்தரவாதப்படுத்தப்படும் என்றெல்லாம் பிரச்சாரங்கள் செய்யப்பட்டன. தோட்டங்கள் தோறும் விளையாட்டுப் போட்டிகளை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. தோட்டங்களுக்கிடையிலான போட்டிகளை நகர மைதானங்களில் பிரமாண்டமாக ஏற்பாடு செய்து அசத்தப்பட்டது. விளையாட்டு வீரர்களுக்கு வேலை நேர சலுகை காட்டப்பட்டது. இதன் மூலம் தோட்ட நிர்வாகங்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் புரிந்துணர்வு ஏற்படவும் வழிவகுத்தது. இவ்வாறான காரணங்களால் பெருந்தோட்ட இளைஞர்கள் (தொழிலாளர்கள்) ஈர்க்கப்பட்டனர்.

எனினும் இந்த முறைமை நாளடைவில் தொய்வடைந்தது. அடியோடு கைவிடப்படலானது. இனவாத நோக்கில் தொழிலாளர்கள் நடத்தப்பட்டார்கள். அந்நியர் கைவசம் பெருந்தோட்டங்கள் இருந்த பொழுது நடைமுறையில் இருந்த உணவு விநியோக முறைகளில் கட்டுப்பாடுகளும் கொண்டுவரப்பட்டன.

அக்காலக்கட்டத்தில் நாடு முழுவதும் உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. இதனால் அதிகமாகப் பாதிக்கப்பட்டவர்கள் தோட்ட மக்களே. அவர்கள் தாலி முதல் தகரவாளி வரை விற்க வேண்டிய அவலம் ஏற்பட்டது. பட்டினியால் பல இடங்களில் பரிதாபச் சாவுகள் இடம்பெற்றன. தாய்சேய் மரணம் போஷாக்கு குறைப்பாட்டால் அதிகரித்தன. இந்தக் கொடிய அனுபவமே இம்மக்களை வருமான பற்றாக்குறை பற்றிய சிந்தனையைத் தூண்டியது. பெருந்தோட்டத் தொழிற்சங்கங்கள் தமது சுயநல தேவைகளுக்காக தோட்ட மக்களை காட்டிக் கொடுத்தன. இதனைப் பயன்படுத்திக் கொண்ட ஆட்சியாளர் சம்பள நிர்ணய சபை மூலம் அவ்வப்போது சிறு சிறு சம்பள அதிகரிப்பைச் செய்தனர்.

'பாடசாலை மாணவர்கள் காலை ஆகாரமின்றி பாடசாலைகளில் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டியுள்ளது. இதனால் உடல், உளவியல் ரீதியில் பாதிக்கப்படும் ஒரு சமூகமாக தொடர்ந்தும் பெருந்தோட்ட மக்கள் இருக்க வேண்டியுள்ளது'

1992 களுக்குப் பின் மீண்டும் சந்திரிகா ஆட்சி பெருந்தோட்டங்களை தனியார் நிறுவனங்களுக்குக் குத்தகைக்கு விட்டது. இதன்போது தனியார் கம்பனிகளோடு செய்து கொள்ளப்பட்டது தான் கூட்டு ஒப்பந்தம். இந்த ஒப்பந்தம் சம்பள நிர்ணய சபை மூலம் தோட்டத் தொழிலாளரது சம்பள அதிகரிப்பு முறைமையை இல்லாமல் ஆக்கியது. இந்த ஒப்பந்த சூத்திரதாரி அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான்.

2003 ஆம் ஆண்டில் மேற்படி ஒப்பந்தத்தில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. மேலோட்டமாகப் பார்த்தால் தோட்டக் கம்பனிகள், தோட்டத் தொழிலாளர் தரப்பு என இருதரப்புக்குமே சமமான விதிகளை கொண்டது போலவே இவ்வொப்பந்தம் தோன்றும். ஆனால் நடைமுறையில் கடந்த வருடம் வரை நடந்து வந்தது என்னவோ கம்பனி தரப்புக்குச் சார்பான சங்கதிகளே. இந்த வேலையிலேயே 1000 ரூபா அடிப்படைச் சம்பளக் கோரிக்கையை முன்வைத்தார் அமரர் ஆறுமுகன் தொண்டமான். ஆனால் அவர் உயிர்வாழும் வரை அது ஈடேறவில்லை. இதன் பின்னரான ஆட்சி மாற்றம், ஜீவன் தொண்டமான் இராஜாங்க அமைச்சராக பொறுப்பு ஏற்ற பின்புலத்தில் 1000 ரூபா சம்பள அதிகரிப்புக்கு சமிக்ஞை கிடைத்தது. இது சம்பள நிர்ணய சபையின் தலையீட்டால் நடந்தது.

ஆனால் 1000 ரூபா சம்பள அதிகரிப்புக்கு எதிராக கம்பனி தரப்பு நீதிமன்றம் போனது. இந்த வழக்கின் முடிவு இம்மாத இறுதியில் வரவுள்ளது. ஆனால் சம்பள நிர்ணய சபையின் தீர்ப்பை முறையாக கையாள தோட்டக் கம்பனிகள் இதுவரை முன்வரவில்லை. பல்வேறு நெருக்கடிகளைக் கொடுத்து 1000 ரூபா நாட்சம்பளத்தை முழுமையாக பெறமுடியாத நிலமையை தோற்றுவித்துள்ளது.

இது சம்பந்தமாக இ.தொ.கா. எதை எதையோ சொன்னாலும் நடப்பது ஒன்றுமே இல்லை. செந்தில் தொண்டமான் தாம் கம்பனி தரப்புக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளதாகவும் இதைக் கேட்டு கம்பனி தரப்பு தடுமாற்றம் அடைந்துள்ளதாகவும் கூறிக் கொண்டிருக்கின்றார். யதார்த்தம் என்னவெனில் தற்போது கூட்டு ஒப்பந்தமும் இல்லை. சம்பள அதிகரிப்பும் இல்லை.

இதனால் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, விலைவாசி ஏற்றத்தால் வழமைபோலவே பெருந்தோட்ட சமூகமே பாரிய சவாலை எதிர்நோக்குகின்றது. கோதுமை மா நிவாரணமோ வேறு வருமானமோ இல்லை. மாதாந்தம் கிடைக்கும் சம்பளம் கடனை அடைக்கவே போதாத நிலை. சாப்பாட்டுச் செலவு, பிள்ளைகளின் பாடசாலை செலவு, வேறு தவிர்க்க முடியாத அத்தியாவசிய செலவுகளுக்காக அல்லாட வேண்டிய பரிதாபம். கடன் வாங்கவோ கைமாற்று கேட்கவோ வழியில்லை. எல்லோரது நிலைமையும் மரமோறி விழுந்தவனை மாடேறி மிதித்த கதை தான்.

இதனால் ஏற்கனவே வேறு வழியின்றி தேயிலைத் தொழிலில் ஈடுபட்டு வந்த எஞ்சிய ஆண், பெண் தொழிலாளர்கள் அதைக் கைவிட்டு அன்றாடம் கைக்குக் காசு கிடைக்கக் கூடிய தனியார் தொழில்களை நாடத் தயாராகி விட்டார்கள். இதனால் கம்பனி தரப்பு மேலும் ஆளணி இழப்பை சந்திக்க நேரிடும். இன்று தேயிலைத் தொழிலைத் தவிர பிற வேலைகளில் ஈடுபடுவோருக்கு நாட்சம்பளமாக 2000 ரூபா வரை கிடைக்கின்றது. தவிர காலை, பகல் சாப்பாடு, தேனீர் கிடைக்கின்றது. வேலையை முடித்து வீடு திரும்பும்போது வேலை கொள்வோர் வீடுகளில் இருந்து பலாக்காய், ஈரப்பலா, மரவள்ளிக் கிழங்கு வீட்டுத் தோட்டங்களில் கிடைக்கும் மரக்கறிகள் என எதையாவது கொண்டு செல்ல முடிகிறது. இதனால் பலரும் இதன்பால் ஈர்க்கப்பட்டு வருகிறார்கள். மேலும் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக தேயிலை தொழிற்சாலைகள் இயங்குவதில் பிரச்சினைகள் எழுந்துள்ளன. இதனால் பெருந்தோட்டத் துறையில் வேலைவாய்ப்புகள் குறைந்து வருகின்றன. விரக்தியும் வியாகூலமும் கொண்டவர்களாக தோட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். தவிர தனியார் வேலை வாய்ப்பு தினமும் கிடைப்பதும் அல்ல. அவை நிரந்தரமானதும் அல்ல.

உணவுப் பொருட்கள் விலையேற்றம் அரைப்பட்டினி நிலைமையைத் தேற்றுவித் துள்ளதால் சாப்பாட்டுப் பிரச்சினை தலைவிரித்தாடுகிறது. குழந்தைகள் மென்மேலும் மந்தபோஷ நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ஏலவே 200 வருடங்களாக மந்தபோஷன தன்மையில் முதலிடம் பெற்று வருவது பெருந்தோட்ட பிரதேசங்களே ஆ கும். தற்போதைய நிலை மேலும் அதனை உக்கிரமடையச் செய்துள்ளது.

பிந்திய தகவலாக உலகிலேயே மந்த போஷனத்தால் பாதிக்கப்படுவோர் நாடுகளின் பட்டியலில் இலங்கை 7ஆவது இடத்திலும் ஆசியாவில் 2ஆவது இடத்திலும் இருக்கின்றது. அதேவேளை சத்தான ஆகாரத்துக்கு வழியின்றி மலையகத்தில் தாய்மை அடைந்துள்ள பெண்கள், பாலூட்டும் தாய்மார், நோயாளிகள், வயோதிபர்கள் அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். பாடசாலை மாணவர்கள் காலை ஆகாரமின்றி பாடசாலைகளில் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டியுள்ளது. இதனால் உடல், உளவியல் ரீதியில் பாதிக்கப்படும் ஒரு சமூகமாக தொடர்ந்தும் பெருந்தோட்ட மக்கள் இருக்க வேண்டியுள்ளது. எதிர்காலம் பற்றிய நிச்சயம் இன்றி அன்றாடம் சவால்களை சந்திக்க வேண்டிய நிர்ப்பந்தம் இங்கு நிலவுகின்றது.

பெருந்தோட்ட மக்கள் வாழ்வில் நிரந்தர தீர்வுகாணப்பட வேண்டிய பல காரியங்கள் அப்படியே இருக்கின்றன. அவற்றுள் முக்கியமானது, போதுமான வருமானத்துக்கான வழியை உருவாக்குவதாகும். அதேநேரம் இளைஞர்களுக்கு பெருந்தோட்டப் பிரதேசங்களை மையப்படுத்திய வேலைவாய்ப்புகள். அத்துடன் தற்போது எதிர்கொண்டுள்ள பஞ்ச நிலைமைக்கு நிவாரணங்கள்.

பெருந்தோட்ட சுகாதார சேவைகள் பொது சுகாதார முறைமைக்குள் கொண்டு வரப்பட்டு தோட்ட மருத்துவமனைகள் அபிவிருத்தி செய்யப்படுவது அவசியம். தவிர இங்கு நிலவும் சிறுவர் தாய்மார் மந்தபோஷன நிலைமையை இல்லாதொழிக்கும் குறுகியகால, நீண்டகால வேலைத்திட்டங்கள் உருவாக்கப்படல் வேண்டும்.

தேவைகள் ஏராளம். தீர்வுகள் அவசரம். திட்டங்கள் உருவாக்கப்படுமா? என்ன செய்யப் போகிறார்கள் பொறுப்புக்கூற வேண்டிய மலையகத் தலைமைகள்? பழைய கேள்வி தான் இன்னும் எத்தனை காலத்துக்கு இதனையே திரும்பித் திரும்பிக் கேட்க வேண்டி இருக்குமோ!

லிட்டில் லண்டனில் கரும்புள்ளியாகக் காணப்படும் நுவரெலியா ரேஸ்கோஸ் குடியிருப்புகள்

அடிப்படை வசதிகள் எவையுமின்றி திண்டாடும் ஏழைத் தமிழர்கள்!

நூரளையூரான் ...✍

நுவரெலியா பிரதான நகரிலிருந்து அரை கிலோ மீற்றர் தூரத்திலுள்ள நுவரெலியா குதிரைப் பந்தயத் திடல் உள்ளது. இத் திடலினுள் 'ரேஸ்கோஸ்' கிராம மக்கள் கடந்த 200 வருடங்களுக்கு முன் ஆங்கிலேயரால் கட்டப்பட்ட லயன் குடியிருப்புகளில் அடிப்படை வீட்டு வசதிகளும் ஏனைய வசதிகளும் இல்லாமல் வாழ்ந்து வருகின்றனர். 54 குடும்பங்களைச் சேர்ந்த 300 இக்கும் அதிகமானவர்கள் எந்த வித வசதிகளும் இல்லாமல் இங்கே வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களில் சிலர் மட்டக் குதிரைகளை சுற்றுலாப் பயணிகளுக்காக வளர்த்து வருகிறார்கள். குதிரைகளைப் பார்த்துக்கொள்வதற்காக ஒரு சிலரும் இன்னும் ஒரு சிலர் குதிரைப்பந்தய ஓட்ட மைதானத்தை ஒழுங்கமைப்பு செய்வதிலும் இன்னும் சிலர் நுவரெலியா மாநகர சபையிலும் மற்றும் மரக்கறி தோட்டங்களிலும் தொழில் செய்து வருகின்றனர்.

விளையாட்டுத்துறை அமைச்சு பொறுப்பேற்றிருப்பதை அறிவிக்கும் பலகை

இதேவேளை குதிரைப்பந்தய போட்டிகள் வருடம் தோறும் ஜனவரி, ஏப்ரல் ஒகஸ்ட் மற்றும் டிசம்பர் மாதங்களில் நடைபெறும். ஏனைய மாதங்களில் குதிரைப்பந்தய போட்டிகள் நடைபெறாது.

இந்த குதிரைப் பந்தய போட்டிகள் நடைபெறாத மாதங்களில் ஓட்ட மைதானத்தில் தொழில்புரியும் தொழிலாளர்களுக்கு தொழில் கிடைப்பதில்லை. இவர்கள் வேறு தொழில்களைத் தேடிச் செல்வார்கள். இவர்களுக்கான நிரந்தரமான ஒரு தொழில் கிடையாது.

அதேவேளை குதிரைப்பந்தய போட்டிக்காக செலவிடும் பணத்தில் ஒரு சிறிய தொகையாவது இந்த கிராம மக்களின் வாழ்வாதார தேவைக்காக பயன்படுத்தலாமே என இவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவர்கள் இக் கஷ்ட காலத்தில் எப்படி வாழப்போகிறார்கள் என்பதையும் சிதிலமடைந்துபோன குடியிருப்புகளையும் பற்றி எவரும் சிந்திப்பதில்லை. ஆனால் தேர்தல் காலங்களில் மாத்திரம் இம் மக்களின் வாக்குகளை பெற்றுக் கொள்வதற்காக இவர்களிடம் வாக்கு கேட்டு வரும் வேட்பாளர்கள் அனுதாப வார்த்தைகளைக் கூறி வாக்குறுதிகளை அள்ளி வீசுவார்கள். தான் வெற்றி பெற்றதும் உங்களுக்கான வீடமைப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு உங்களுக்கு வசதியான வீடுகள் வழங்கப்படும். அத்தோடு உங்களின் பிள்ளைகளுக்கு தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். பிள்ளைகள் கல்வி பற்பதற்கான வசதிகள், பாடப்புத்தகங்கள் சீருடைகள் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனக்கூறி வாக்குகளை பெற்றுச் சென்ற பின் இவர்களை திரும்பிக்கூட பார்ப்பதில்லை என்பதே வாடிக்கையாம். வாக்குறுதி வழங்கிய அரசியல்வாதிகளை தேடிச் சென்றாலும் அவர்கள் திரும்பியும் பார்ப்பதில்லையாம்.

நுவரெலியா ஹாவா எலியவில் அமைந்துள்ள இன்டர்பெஷன் நிறுவனத்திற்கு அருகில் ஒரு புதிய வீடமைப்புத் திட்டத்தை உருவாக்கி இக் குடும்பங்களுக்கு வீடுகள் வழங்க வேண்டும் என கடந்த ஐந்து வருடங்களுக்கு முன் நுவரெலியா மாநகர சபைக் கூட்டத்தில் ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டது. அந்த தீர்மானம் இன்றுவரை செயற்பாட்டுக்கு வரவில்லை.

எவ்வளவு காலத்துக்கு தொடரப்போகிறது நூரளை மாநகர சபையின் உதாசீனப் போக்கு?

இந்த ரேஸ்கோஸ் குடியிருப்புகள் நுவரெலியா மாநகரசபைக் குட்பட்ட பகுதியாகும். எனினும் இங்கு வசிப்போர் எதிர்நோக்கும் அடிப்படை பிரச்சினைகளை நுவரெலியா மாநகரசபை கண்டுகொள்வதில்லை என்பது இவர்களின் குற்றச்சாட்டாகும்.

இந்த ரேஸ்கோஸ் குடியிருப்புகள் நுவரெலியா பீதுறுதாலகால மலையடிவாரத்திலிருந்து நுவரெலியா கிறகரி வாவிக்குச் செல்லும் நீரோடைக்கு அருகில் அமைந்துள்ளது. வருடம்தோறும் ஜுன், ஜுலை மாதங்களில் நுவரெலியாவில் பலத்த காற்றுடன் மழைபெய்யத் தொடங்கும். இந்த மழைக்காலத்தில் அதிக மழை பெய்யும் பொழுது இந்நீரோடை பெருக்கெடுத்து இக்குடியிருப்புகளுக்குள் புகுந்து விடுவது வழக்கம்.

இக்காலத்தில் இவர்கள் மழை நீர் குறையும் வரை நுவரெலியா மாநகர விளையாட்டு உள்ளரங்கிலும் குதிரைப் பந்தய ஓட்டப்போட்டியை பார்வையிடுவதற்காக அமைக்கப்பட்டுள்ள உயரமான கட்டடத்திலும் தங்கவைக்கப்படுகிறார்கள். வெள்ள நீர் வடிந்தோடிய பின் சேறும் சகதியுமான வீடுகளுக்குச் செல்லும் அவலநிலை வருடந்தோறும் திகழ்கிறது.

இந்த மாநகரத்தில் ஏனைய மக்கள் அனுபவிக்கும் அடிப்படை உரிமைகளை தாமும் அனுபவிக்க வேண்டும் என்கின்ற நியாயமான ஆசை இவர்களிடத்தில் காணப்பட்டாலும் இதனை கண்டறிந்து நிவர்த்தி செய்ய எவரும் முன்வருவதில்லை.

இதனடிப்படையில் ஒவ்வொரு தேர்தல் காலத்திலும் வாக்களிக்க தகுதி பெற்றுள்ள இந்த மக்கள் நுவரெலியா மாநகரில் சகல அபிவிருத்தித் திட்டங்களில் இருந்தும் ஒதுக்கி வைக்கப்பட்டு விடுகிறார்கள்.

இக்கிராமத்தில் இருக்கும் 54 குடியிருப்புகளில் ஒன்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் பல சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றன. இவர்கள் கேட்பதெல்லாம் வீடுகளைத் திருத்தித் தாருங்கள், வசதியற்ற மலசலகூடங்களை திருத்தி தாருங்கள் சுத்தமான குடிநீரை பெற்றுக்கொள்ள வசதி செய்து தாருங்கள், மழைக்காலங்களில் வெள்ள நீரினால் பாதிக்கப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுங்கள் என்பனவற்றையே!

மேலும் தொழில் வாய்ப்புகளுக்கு வசதி செய்து தாருங்கள் மற்றும் கல்வி வசதிகளை மேம்படுத்தித் தாருங்கள் என்ற இவர்களின் கோரிக்கை மிக நியாயமானவை!

லிட்டில் லண்டன் எனப் புகழப்படும் நுவரெலியா மாநகரத்தின் அழகிற்கு ஒரு கரும்புள்ளியாக ரேஸ்கோஸ் குடியிருப்புப் பகுதி விளங்குவதால் இந்த கிராமத்தை அபிவிருத்தி செய்ய சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டும்.

இது இவ்வாறிருக்க, தற்பொழுது இந்த குதிரைப்பந்தயத் திடலையும் அதனைச் சுற்றியுள்ள காணியையும் விளையாட்டுத்துறை அமைச்சு பொறுப்பேற்றுள்ளது. விளையாட்டுத்துறை அமைச்சு விடுதியொன்றை கடந்த வருடம் இந்த ரேஸ்கோஸ் கிராமத்திற்கு அருகில் அமைத்தது.

ஆனால் உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாமல் வாழும் இந்த மக்களுக்கு எந்தவொரு வசதிகளும் இந்த விளையாட்டுத்துறை அமைச்சு மூலம் வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையை புரட்டிப்போட்ட 1952 ஹர்த்தாலுக்கு பின்னணி அரிசி அரசியலே!

ஜே.ஆர். ஜயவர்தன 1977ஆம் ஆண்டு பதவியேற்ற பின்னர் இலங்கையில் நீண்ட கால மாகவே நடைமுறையில் இருந்து வந்த கூப்பன் பங்கீட்டு முறைக்கு முடிவு கட்டினார். 1973 - 76 காலப்ப குதியில் இலங்கையில் அரிசி மற்றும் மாவுக்குத் தட்டுப்பாடு நிலவியது. ஒவ்வொரு வாரமும் லைசன்ஸ் கடைகள் மற்றும் கூட்டுறவு கடைகள் மூலம் அரைக் கொத்து அரிசி 25 சதத் துக்கு ஒவ்வொரு நபருக்கும் வழங்கப் பட்டு வந்தது. பாணும் ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு அரை இறாத்தல் என்ற வகையில் பங்கீடு செய்யப்பட்டது. அக்காலத்தில் ஒவ்வொரு குடும் பத்துக்கும் குடும்ப அட்டை வழங் கப்பட்டிருந்தது. அக் குடும்ப அட் டைக்கு ஒரு குடும்ப அங்கத்தவருக்கு இத்தனை அவுன்ஸ் என்ற அளவில் மாசி, டின்மீன், சீத்தை, செத்தல் மிளகாய், கடுகு, வெந்தயம், சீரகம், மல்லி போன்ற பலசரக்கு பொருட்கள் மாதம் ஒரு தடவை பங்கீடு செய்யப் பட்டன.

கூப்பன் என்பது அக்காலத்தில் அடையாள அட்டை மாதிரி என்று சொன்னால் மிகையாகாது. கூப்பன் புத்தகத்தைத் தொலைத்துவிட்டால் அரிசி கிடைக்காது என்பது ஒரு புறமி ருக்க ஒரு முக்கியமான ஆவணத்தை இருப்பை இழந்த மாதிரியாகிவி டும். கூப்பன் மூலம் வழங்கப்படும் அரிசி மற்றும் குடும்ப அட்டை மூலம் வழங்கப்படும் ஏனைய சமையல் பொருட்கள் அனைத்துமே குறைந்த விலையிலேயே வழங்கப்பட்டன. இந்த கூப்பனும் குடும்ப அட்டையும் ஏழை, பணக்காரன் பேதமில்லாமல் அனைவருக்கும் அளிக்கப்பட்டிருந் தது. தமிழகத்தில் இன்றைக்கும் இந் நடைமுறை வெற்றிகரமாக செயல் பாட்டில் உள்ளது. அங்கே பசும் பாலும், பங்கீட்டு அட்டையின் வழியேதான் குடும்பங்களுக்கு வழங் கப்படுகிறது.

கூப்பன் மற்றும் குடும்ப அட்டை முறை இரண்டாம் உலக யுத்த காலத் தில் இருந்து அமுலில் இருந்து வந் திருக்கிறது. ஐம்பது அறுபதுகளில் உலகில் அரிசிக்கு தட்டுப்பாடு நிலவி வந்தது. அரிசி விலையும் அதிகரித் தது. அரிசி இறக்குமதி செய்வதில் பிரச்சினை எழுந்தபோது, அதாவது கொரிய யுத்தம் காரணமாக அரிசிக்கு உலக சந்தையில் தட்டுப்பாடு ஏற்பட் டதால், 1952ம் ஆண்டு இலங்கை சீனாவுடன் அரிசி. இறப்பர் ஒப்பந் தத்தை செய்து கொண்டது.

இலங்கையில் போதிய அரிசி உற் பத்தி இல்லாத நிலையிலேயே வெளி நாடுகளில் இருந்து அரிசி இறக்குமதி செய்ய வேண்டிய கட்டாயத்துக்கு இலங்கை அரசுகள் உட்பட்டிருந் தன. பிரிட்டிஷ் ஆட்சியில் அரிசியில் தன்னிறைவு காண வேண்டும் என்ற கொள்கை கடைப்பிடிக்கப்பட வில்லை. அவர்கள் ஏற்றுமதி பயிர்க ளின் விருத்தியிலேயே அதிக அக்கறை

1952 அமைச்சரவை: ஜி.ஜி. பொன்னம்பலம், ஜோன் கொத்தலாவல, டட்லி சேனநாயக்க, ஜே.ஆர். ஜயவர்தன.

கொண்டிருந்தனர். இதில் என்ன துர திர்ஷ்டம் என்றால், அன்றைக்கு பிரிட் டிஷ் கொலனி அரசு தனது தேவைக ளுக்காக உள்ளூர் நெல்சாகுபடிக்கு முக்கியத்துவம் தரவில்லை என்று வைத்துக்கொண்டால் அதன் பின்னர் பொறுப்பேற்ற உள்ளூர் அரசியல்வா திகளும் அவர்கள் அமைத்த அரசுக ளும் அரிசி உற்பத்தியில் தன்னிறைவு என்பதை கோஷமாக வைத்தனரே தவிர அத் தன்னிறைவை அடைதலை யும் அதைத் தொடரந்து பேணிவர வேண்டும் என்பதிலும் அக்கறை கொள்ளவில்லை. துரித மகாவலித் திட்ட நிறைவில் அரிசியையும் மின் சாரத்தையும் ஏற்றுமதி செய்யக்கூடி யதாக இருக்கும் என அக்காலத்தில் எதிர்வு கூறப்பட்டது.

ஆனால் அரிசி இறக்குமதி செய்வதை இலங்கை நிறுத்தவே யில்லை. இயற்கை பசளையால் மட்டுமே விவசாயம் என்ற ஒரு நடைமுறை சாத்தியமற்ற கொள்கை யால் இலங்கையில் நெல்சாகுபடி ஐம்பது சதவீதத்தால் குறைவடைந் ததையும் தற்போது அரிசி பஞ்சம் வருமா என மக்கள் பதைத்து நிற்பதை யும் இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

எனவேதான் அரிசி என்பது 77வரை அரசியலில் தீரமானிக்கும் சக்தியாகத் திகழ முடிந்தது. தற்போது மறுபடி யும் அரிசி தீர்மானிக்கும் சக்தியாக மாறி இருப்பதாகவே தோன்றுகிறது. 1950முதல் 53வரை கொரிய யுத்தம் நடைபெற்றது. வட கொரியாவுக்கு சீனா ஆதரவுக் கரம் தரவே தென் கொரியாவில் ஜனநாயகத்தைக் காப் பாற்றுவதற்காக அமெரிக்கா மூக்கை நுழைத்தது. இது அக்காலத்தல் நடைபெற்ற மிக மோசமான யுத்தம். சிங்கள மொழியில் சேரிப்பகுதியை 'அது சரியான ஒரு கொரியா' என்று அழைக்கும் வழக்கம் இப்போ தும் உள்ளது. சரியான வாயாடிப் பெண்ணை 'கொரியா பெண்' என்பார் கள். அதாவது சண்டை சச்சரவு உள்ள ஒரு இடத்தை, நபரை கொரிய யுத்தத் துடன் ஒப்பிட்டு சொல்வது சிங்களத் தில் வழமை. இந்த யுத்தத்தினால் இப் பிராந்தியத்தில் அரிசி விளைச்சல் குன் றியது. இந்தியாவிலும் அந்நாட்டின் தேவையை பூர்த்தி செய்யுமளவுக்கு அரிசி உற்பத்தி காணப்படவில்லை. இதனால் உலக சந்தையில் அரிசி விலை ஏற்றம் கண்டது. போதிய அரிசியும் இறக்குமதிக்குக் கிடைக்க வில்லை. இதே சமயம் அமெரிக்கா வின் நடவடிக்கைகளால் சீனாவுக்கு போதிய இறப்பர் கிடைக்கவில்லை. இந்தப் பின்னணியிலேயே அன்றைய உணவு அமைச்சரான ஆர். ஜி.சேனநா யக்கவின் முயற்சியால் அரிசி. இறப்பர் ஒப்பந்தம் சாத்தியமானது. சீனாவில் இருந்து இறக்குமதியாகும் அரிசிக்கு ஈடாக இலங்கை சீனாவுக்கு இறப்பரை ஏற்றுமதி செய்யும் என்பதே இந்த ஒப் பந்தம்.

1952ஆம் ஆண்டு ஹர்த்தால் இலங்கை அரசியல் வரலாற்றில் மிக முக்கியமானது. அந்த ஹர்த்தாலின் பின்னணியில் நின்றது அரிசியலே! மேலும் இலங்கையில் சோஷலிச கொள்கைகள் நிலைபெறுவதற்கும் அரிசியே காரணமானது. அச்சமயத்தில் இலங்கையை ஐ.தே.கஆட்சி செய்து வந்தது. பிரதமர் டட்லி சேனாநாயக்க. நிதியமைச்சர் ஜே.ஆர். ஜயவர்தன.

கொரிய யுத்தம், விளைச்சல் குறைவு போன்ற காரணங்களினால் அரிசி விலை உலகச் சந்தையில் அதிகரித்தி ருந்தது. 1952 தேர்தலின்போது பிரசார பீரங்கியாக அரிசி விளங்கியதால் ஐக்கிய தேசிய கட்சி தன் தேர்தல் வாக் குறுதிகளில் ஒன்றாக 25 சதத்துக்கு ஒரு கொத்து அரிசி என்ற கோஷத்தை முன் வைத்தது. அரசியல் என்பதை 'அரிசியல்' என்பதாக புரிந்து வைத் திருந்த சிங்கள வாக்காளர்களும், 25 சதத்துக்கு ஒரு கொத்து அரிசி என்றால் வயிறு புடைக்கத் தின்னலாமே என்ற எண்ணத்தில் ஐ.தே.கவுக்கு வாக் களித்து 54ஆசனங்களை அளித்து ஐ.தே.க அரசை பதவிக்கு கொண்டு வந்தனர். இத்தேர்தலில் 54 ஆசனங்க ளைப் பெற்று டட்டலி சேனாநாயக்க பிரதமரானார். இத் தேர்தலில் மூன்று முக்கிய விஷயங்கள் நடைபெற்றன. இதற்கு முந்திய தேர்தலில் மலையக வாக்காளர்கள் வாக்களித்து ஏழு மலை யகத் தமிழ் வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்திருந்தனர். அதன் பின்னர் டீ.எஸ். சேனநாயக்க குடியுரிமைச் சட் டத்தைக் கொண்டுவந்து மலையக மக்களின் வாக்குரிமையை பறித் தார். எனவே மலையகத்தில் இருந்து எவரும் பாராளுமன்றத்துக்கு தெரிவா கவில்லை. இரண்டாவது, இலங்கை தமிழரசி கட்சியின் தோற்றம். குடியுரி மைச் சட்டத்துக்கு தமிழ்க் காங்கிரஸ் ஆதரவளித்ததால் தலைவரான ஜி.ஜி. பொன்னம்பலத்துடன் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் முரண்பட்டதாகவும் அதனால் அவர் காங்கிரசில் இருந்து வெளியேறி இலங்கை தமிழரசுகட்சி என்ற புதிய கட்சியை ஆரம்பித்தார். என்றும் சொல்லப்படுகிறது. 1952 தேர் தலில் அக்கட்சி முதல் தடவையாக போட்டியிட்டு இரண்டு ஆசனங்க ளைக் கைப்பற்றியது.

மூன்றாவது, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட் சியின் தோற்றம். எஸ். டபிள்யூ, ஆர். டி. பண்டாரநாயக்க ஐக்கிய தேசிய கட் சியைச் சேர்ந்தவர். அவருக்கு கட்சித் தலைமையுடன் பிரச் சினை ஏற்பட்டதால் கட்சியை விட்டு வெளியேறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்ற பெயரில் புதிய கட்சியை ஆரம் பித்து 1952 பொதுத் தேர்தலில் போட்டியிட்டார். அத் தேர் தலில் அவருக்கு ஒன்பது ஆசனங்கள் கிடைத்தன.

தேர்தலில் வெற்றிபெற்று அரச மைத்ததும்தான் நடைமுறைப் பிரச் சினைகளை டட்லி அரசு உணர்ந்து கொள்ள ஆரம்பித்தது. அரசின் மொத்த செலவீனத்தில் 20 சதவீதத்தை அரிசி மானியம் பிடித்திருந்தது. 1953க்கான செலவீனத்தை எடுத்துக்கொண்ட போது உணவுக்கான மானியத்துக்கு 300மில்லியன் ரூபாவை செலவிட வேண்டியிருந்தது. உத்தேச செலவீ னத்தில் இது மூன்றில் ஒரு பங்காக இருக்கவே, வாக்களித்தபடி 25 சதத் துக்கு ஒரு கொத்து அரிசியை வழங்கு வது, சாத்தியமல்ல என்ற முடிவுக்கு டட்லியின் அரசு வந்தது. அன்றைய நிதியமைச்சரான ஜே.ஆர். ஜயவர் தன, அரிசியை 25 சதத்துக்கு மானிய விலையில் வழங்குவதைக் கடுமை யாக எதிர்த்தார். வரவு செலவு திட்டத் தில் துண்டு விழும் தொகை மேலும் அதிகரிக்கும் என்பதை சுட்டிக்காட்டி வாதிட்டார். எனவே அரிசி விலையை 70 சதமாக உயர்த்துவது என்று ஐ.தே.க அரசு முடிவு செய்தது. அடுத்தடுத்த நட வடிக்கைகளாக சீனி விலை அதிகரிக் கப்பட்டது. பாடசாலை பகல் உணவு நிறுத்தப்பட்டது. புகையிரத கட்டணம் அதிகரிக்கப்பட்டதுடன் தபால் கட்ட ணமும் உயர்த்தப்பட்டது.

1953 ஹர்த்தாலுக்கு பின்புலமாக அமைந்த பிரதான காரணங்கள் இவை.

ஐக்கிய தேசிய கட்சி அரசை எதிர்ப் பதற்கான சரியான சந்தர்ப்பமாகக் கருதிய இடதுசாரி கட்சிகளும் புதிதாக கட்சி ஆரம்பித்த எஸ். டபிள்யூ. ஆர். டீ பண்டாரநாயக்கவும் ஹர்த்தாலை வெற்றிகரமாக நடத்துவதற்கான வேலைகளை செய்ய ஆரம்பித்தனர். ஹர்த்தால் அதாவது முழு அடைப்பு வேலை நிறுத்தம் 1953 ஓகஸ்ட் 12ம் திகதி நடைபெற்றது. 25 சதத்துக்கு தரு வதாகச் சொன்ன அரிசியை எழுபது சதமாக அறிவித்ததை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் இந்த விலை உயர்வுகளையும் பாடசாலை மதிய போசனத்தை நிறுத்தியதையும் அதிர்ச்சியுடனேயே பார்த்தார்கள்.

நாட்டின் பொருளாதாரம், அதிக விலைக்கு அரிசி, சீனி என்பன வற்றை இறக்குமதி செய்து குறைந்த விலையில் வழங்குவதால் ஏற்படும் நஷ்டம், இந்த நஷ்டத்தை குறைக்கா விட்டால் எதிர்காலத்தில் தனிமனித பொருளாதாரம் எவ்வாறெல்லாம் பாதிக்கப்படும் என்பதெல்லாம் அன்றைய மக்களுக்கு புரிகின்ற விஷ யங்கள் அல்ல. அரிசியை 25 சதத்துக்கு தருவதாக வாக்குறுதி அளித்துவிட்டு எப்படி அதை 70 சதமாக உயர்த்தலாம் என்பதே மக்களின் கேள்வி. அது ஆத் திரமாக அரசின்மீது திரும்புவதற்கு எதிர்க்கட்சிகளின் ஹர்த்தால் வழியேற் படுத்தித் தந்தது. எனவே, ஹர்த்தால் முழு வெற்றியடைந்தது.

அன்றைய தினம் இலங்கையில் சகல கடைகள், நிறுவனங்கள், அலு வலகங்கள் மூடப்பட்டன. பஸ் ஓட வில்லை. ரயில் ஓடவில்லை. பாதை களுக்கு குறுக்கே மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டன. ரயில் தண்டவாளங் கள் ஆங்காங்கே அகற்றப்பட்டன. தந்திக் கம்பங்கள் சாய்க்கப்பட்டதோடு கேபிள்களும் அறுத்து வீசப்பட்டன. பேராதனையில் எண்ணெய் ஏற்றிச் சென்ற ஒரு ரயிலுக்கு தீ வைக்கப்பட் டது.

அப்போது தேசாதிபதியாக பதவி வகித்தவர் சேர் ஒலிவர் குணதிலக்க. கொழுத்த செல்வந்தர். கொழும்பு கேஸ்கம்பனி அவர் குடும்பத்துக்கு சொந்தமானது. கொழும்பு ஐந்து லாம்பு சந்தியையும் புறக்கோட்டை பஸ் நிலையத்தையும் இணைக்கும் பாதை இன்றைக்கும் கேஸ் வேர்க் ஸ்ட்ரீட் அல்லது கேஸ்பா ஹந்திய என்றே அழைக்கப்படுகிறது.

(தொடரும்)

நாட்டை மீட்பதென்பது வெறும் மந்திரத்தால் ஆகாது

சொந்தக் காலில் நிற்கக் கூடிய அரசியல் சமூக பொருளாதாரத்தின் மூலமே அது சாத்தியமாகும்

நாட்டின் நிலவரத்தையும் மக்களையும் புரிந்து கொள் வதற்கு எரிபொருள் பிரச்சி னையும் நிரப்பு நிலையக் காட்சிகளும் போதும். பற்றாக்குறை வரவரக் கூடிக் கொண்டிருக்கிறது. பற்றாக்குறை கூடக் கூட பாவனையாளர்கள் எரி பொருளைப் பெறுவதற்கு முண்டிய டிக்கின்றனர். இதனால் கிலோ மீற்றர் கணக்கில் வரிசைகள் (க்யூ) நீள்கின் றன. வரிசை நீள நீள காத்திருப்பின் நேரம் கூடுகிறது. இரவு பகலாக எரி பொருள் நிரப்பு நிலையங்களிலிருந்து தெரு நீளத்துக்கும் மக்கள் காத்துக் கொண்டிருக்கின்றனர். ஆண்கள், பெண்கள், கர்ப்பிணிகள், நோயா ளிகள், அரச உத்தியோகத்தர்கள், முதியோர் என்று எந்த வேறுபாடும் இல்லாமல் இரண்டு நாட்கள் கூடக் காத்திருக்க வேண்டியிருக்கிறது. அப் படிக் காத்திருந்தாலும் எரிபொருள் கிடைக்கும் என்பதற்கு எந்த உத்தர வாதமுமில்லை. அப்படிக் கிடைத்தா லும் போதிய அளவுக்குப் பெற முடி வதில்லை. குறைந்த பட்சம் எடுத்துச் செல்லும் வாகனத்தின் கொள்கலனை நிரப்பக் கூடிய அளவுக்குக் கூட கிடைப்பதில்லை. யானைப் பசிக்குச் சோளப்பொரி என்பதைப்போல மிகக் குறைந்தளவு எரிபொருளே கிடைக்கி றது. மண்ணெண்ணெய் கிடையவே கிடையாது. இது காத்திருப்பின் பெறுமதி என்ன என்ற கேள்வியை எழுப்புகிறது. இந்த நெருக்கடி மக் களிடம் கோபத்தையும் எரிச்சலை யும் உண்டாக்குகிறது. இதனால் ஒவ்வொரு எரிபொருள் நிரப்பு நிலை யங்களிலும் அதன் சுற்றயல் பிரதேசங் களிலும் சண்டையும் அடிதடி பிரச்சி னையுமாகவே உள்ளது.

இதைக் கட்டுப்படுத்துவதற்கென இராணுவத்தையும் பொலிசையும் அர சாங்கம் நிறுத்தியுள்ளது. சமயங்களில் பாதுகாப்புப் படையினரைப் பொருட் படுத்தாமலே மக்கள் சண்டையிட் டுக் கொள்கின்றனர். அவர்களாலும் எதுவும் செய்ய முடிவதில்லை. இதேவேளை எரிபொருளுக்கான வரிசையில் காத்திருந்தோரில் ஏழு எட்டுப்பேர் மரணமடைந்திருக்கின் றனர். இந்த எண்ணிக்கை எதிர்வரும் நாட்களில் கூடப்போகிறது. இவ்வ ளவுக்கும் இடையில் வாராவாரம் எரிபொருளுக்கான விலையேற்றம் வேறு நடந்து கொண்டிருக்கிறது. இந்த நிலைமையைச் சீர்ப்படுத்துவ தைப்பற்றி அரசாங்கத்தரப்பிலிருந்து எந்த உத்தரவாதங்களுமே இல்லை. எரிபொருளுக்கான அமைச்சு வழங் கும் உத்தரவாதங்களும் விடுக்கப்ப டும் அறிவிப்புகளும் அன்றே மதிப் பிழக்கின்றன. அந்த அளவுக்குத்தான் நிலைமை உள்ளது. எரிபொருள் கப்பல் வரவில்லை. அல்லது தாமத மாகிறது. அல்லது எரிபொருளைப் பெறுவதற்கான டொலர் இல்லை என்ற காரணங்கள் சொல்லப்படுகின் றன. இந்த அறிவிப்புகள் வரவர மக் களிடம் கொந்தளிப்பும் பதட்டமும் உருவாகின்றன.

எரிபொருள் இல்லை என்றால் ஏறக்குறைய சமூக இயக்கமே இல்லை என்றாகி விடும். போக்கு வரத்து, உணவு உற்பத்தி தொடக்கம் அனைத்து உற்பத்தித்துறைகளும் சேவைத்துறைகளும் படுத்து விடும் அபாயமுண்டு. இப்பொழுதே ஏறக் குறைய பாதி அளவுக்கு பல துறைகள் படுத்து விட்டன. எரிபொருளுக்காகக் காத்திருப்பதால் மக்களின் உழைப்புச் சக்தியும் வீணாகிறது. மூன்று லீற்றர் பெற்றோலை அல்லது பத்து லீற்றர் டீசலைப் பெறுவதற்காக ஒரு நாள் முழுவதும் வண்டியோடு (வாகனத் தோடு) நின்றால் எப்படி உற்பத்தியில் அல்லது சேவையில் ஈடுபட முடியும்?

இதை முகாமைத்துவம் செய்வ தற்கு அரசாங்கம் எந்த விதமான நட வடிக்கைகளையும் எடுக்கவில்லை. ஒரு மாதம் எவ்வளவு எரிபொருள் தேவை? இதில் அத்தியாவசிய தேவைகளுக்கான எரிபொருளின் விகிதம் என்ன? அவற்றை வழங்கு வதற்கான நடவடிக்கையும் பொறி முறையும் என்ன? கிடைக்கும் எரிபொருள் அல்லது பெறக்கூடிய அளவு எவ்வளவு? அதை எப்படி, எந்த அடிப்படையில் முகாமைத்து வம் செய்வது? என எந்த விதமான திட்டமிடல்களிலும் அரசாங்கத்த ரப்பு ஈடுபடுவதாகத் தெரியவில்லை. குறைந்த பட்சம் மாவட்டச் செய லங்கள், பிரதேச செயலகங்களாவது இதில் ஒரு பொருத்தமான ஏற்பா டுகளைச் செய்யலாம். அப்படிச் செய்ய முன்வர வேண்டும். இல்லை யென்றால் நிலைமை படுமோசமாகி விடும். இப்பொழுதே நிலைமை மிக மோசம். சட்டமும் மனித நடத் தைகளும் மிகக் கேவலமாகியுள்ளன. யாரையும் யாரும் மதிப்பதில்லை. எவருடைய நிலைமையையும் எவரும் பொருட்படுத்துவதில்லை. இதனால் ஒவ்வொரு எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் அதனைச் சூழ நிற்கும் பாவனையாளர்களிடத்தி லும் ஏகப்பட்ட குழப்பங்கள், பிரச்சி னைகள். மிக வருத்தமளிக்கக் கூடிய அளவுக்குத் தரந்தாழ்ந்த செயற்பாடு கள். மூன்று லீற்றர் பெற்றோலுக்காக மானத்தை, கௌரவத்தை, மதிப்பை இழக்க வேண்டிய நிலை. இது கொலைகளில் கொண்டு போய் விடக் கூடிய சூழலை உருவாக்குகிறது.

நாடு எந்த வகையிலும் மீட்பர்க ளும் வழிப்படுத்துநர்களும் இல்லா மல் பின்னடைந்து கொண்டிருக்கி றது. ஒவ்வொரு நிமிசமும் மேலும் மேலும் நெருக்கடிக்குள்ளாகிக் கொண்டிருக்கிறது. அரசாங்கத்தி னால் நிலைமையை உடனாடியாகச் சீர் செய்ய முடியவில்லை என்றால், அதற்குரிய வளங்களைத் தேட முடிய வில்லை என்றால், வழங்கல்களைச் சீராகச் செய்யக் கூடியதாக இல்லை என்றால் அரசுக் கட்டமைப்பிலுள்ள நிர்வாகப் பிரிவு அதை முகாமைத்து வம் செய்ய வேண்டும். இது தேசிய இடர்காலம். இத்தகைய தேசிய இடர் களின்போது அதை முகாமைத்துவம் செய்து நிலைமையைப் பாதக நிலைக் குச் செல்லாமல் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அரச நிர்வாகக் கட்டமைப் புச் சார்ந்தோருக்கே அதிகம் உண்டு. அதிகாரிகள் இதில் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். தமது நிபுணத் துவ அறிவையும் சமூக அக்கறையும் ஒருங்கிணைத்து இதைச் செயற்படுத்த முடியும். இது தனியே எரிபொருள் பிரச்சினைக்கு மட்டுமல்ல, உணவு உற்பத்தி தொடக்கம் கல்வி, மருத்து வம் உள்ளிட்ட அத்தியாவசியத்துறை கள் அனைத்துக்கும் பொருந்தும்.

கருணாகரன்

உதாரணமாக இரண்டு விசயங் களை இங்கே குறிப்பிடலாம்.

1. எரிபொருள் முகாமைத்துவம் (மாவட்டச் செயலகம் / பிரதேச செய லகம்)

(அ) தமது மாவட்டத்தில் அல்லது பிரதேசத்தில் உள்ள தொழில் மையங் கள், உற்பத்தியாளர்களின் விவரங் கங்களின் அடிப்படையில் அவர்க ளுக்கான எரிபொருள் ஒதுக்கீட்டைச் செய்தல்.

(ஆ) தமது மாவட்டத்தில் அல்லது பிரதேசத்தில் உள்ள வாகனங்க ளுக்கு அவற்றின் வகை (ஓட்டோ, மோட்டார் சைக்கிள், பாரவூர்தி, கார், பேருந்து, சிற்றுந்து போன்றவற்றை வகைப்படுத்தி) அவற்றுக்கான எரி பொருள் விநியோக அளவையும் நாட் களையும் தீர்மானித்தல்.

(இ) ஒரே தரப்பு அல்லது ஒரே கும்பல் மறுபடி மறுபடி எரிபொரு ளைப் பெறவும் அடாவடி செய்வ தையும் தவிர்த்து அனைவரும் எரி பொருளைப் பெறக்கூடிய வகையில் பங்கீட்டு முறையை நடைமுறைப் படுத்துதல். அதில் பதிவு முறையை அமுல் படுத்துதல்.

(ஈ) வாகனங்களின் மூலமாகத் தொழில் செய்வோருக்கு வாழ்வாதா ரத்தைக் கொண்டோருக்கு (வாடகை ஓட்டோ, வாடகை கார், வாடகை வான், பேருந்துகள் மற்றும் நடமா டும் வியாபாரிகள் போன்றோருக்கு) அதற்கேற்ப எரிபொருளை வழங் குதல். (கிடைக்கும் எரிபொருளுக் கேற்ப இந்தப் பகிர்வைச் செய்வது).

(உ) அரச உத்தியோகத்தர்கள் மற்றும் சமூக சேவை அமைப்புக ளுக்கு அவர்களுக்குரிய பங்கீட் டின் அடிப்படையில் வழங்கலைச் செய்தல். இதில் ஒவ்வொரு தரப்புக் கும் உரிய நாட்களையும் கூட ஓர ளவுக்கு அறிவிக்கலாம். ஆனால், எரிபொருள் கப்பல் வரவில்லை என்றால் இதில் குழப்பங்களும் நெருக்கடிகளும் ஏற்பட வாய்ப் புண்டு. அதையும் உரிய முறையில் சிந்தித்தால் முகாமைத்துவம் செய்ய முடியும்.

(ஊ) இப்பொழுது வாகனங்களை எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு எடுத்துச் சென்றே எரிபொருளை நிரப்ப முடியும் பெற முடியும் என்ற நிலை உள்ளது. இதில் மின்பிறப்பாக் கிகள் (ஜெனறேற்றர்கள், படகுகள் போன்றவற்றை எப்படி எடுத்துச் செல்ல முடியும்? ஆகவே அவற்றுக் கான எரிபொருள் விநியோகமும் நடைபெற வேண்டும்.

(எ) எரிபொருள் நிரப்பு நிலையங் களில் மேலதிகமாகச் சேவையில் ஈடு படுத்துவதற்கு உரிய அனுமதியை அரசாங்கத்திடம் பெற்றுக் கொண்டு அவர்களை எரிபொருள் நிரப்பு நிலை யங்களில் பங்கீட்டு விநியோகத்தில் ஈடுபடுத்துதல். வேண்டுமானால் இதற்குப் பலமாக பொலிஸ் மற்றும் படைத்தரைப்பை இணைத்துக் கொள்ளலாம்.

இதை விடவும் வேறு மேலான ஏற்பாடுகள் பிறருடைய சிந்தனை யில் இருக்கும். அவற்றை வரவேற்று இந்தப் பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதற்குரிய செயற்றிட்டமாக மாற்றிக் கொள்ளலாம். தேசிய இடர் நிலைமையின்போது ஒவ்வொரு வரும் பொறுப்பாக எப்படி நடக்க வேண்டும் என்பதைக் குறித்து அறிவு ரைப்பது. பொறுப்பாகவும் கண்ணிய மாகவும் நடந்து கொள்வதன் மூலமே நாம் இந்த நெருக்கடிக் காலத்தையும் நெருக்கடி நிலைமையையும் கடக்க முடியும் என்ற உண்மையை அடிப்ப டையை புரிய வைக்க வேண்டும்.

2. விவசாயம் மற்றும் கடல் தொழில் (அதாவது உணவு உற்பத்தி யில் ஈடுபடுத்துதல்)

(அ) ஒவ்வொரு மாவட்டத்திலும் பிரதேசத்திலும் உள்ள விவசாயத்து றையினரை ஒருங்கிணைத்து அவர் களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு புதிய சாத்தியமான திட்டங்களை உருவாக்குதல்.

(ஆ) மாவட்டத்திலும் பிரதேசத் திலும் வெளிச் சூழலிலும் உள்ள துறைசார் நிபுணர்கள், அனுபவமு டையோரின் பங்களிப்பு, பங்கேற்பு டன் புதிய சாத்தியமான திட்டங்கங் களை நடைமுறைப்படுத்துதல்.

(இ) எரிபொருள், உரம், மருந்து வகைகள் எதுவும் எதிர்பார்க்கின்ற அளவுக்குக் கிடைக்காது. ஆகவே இதைப் புரிந்து கொண்டு மாற்றுப் பொறியமைப்பைப் பற்றிச் சிந்தித்த லும் அவற்றில் ஈடுபடுதலும்.

(04ஆம் பக்கம் பார்க்க...)

மேஷம்

நவக்கிரக நாயகர்களின் முதல்வரான சூரியன் உங்கள் ராசிக்கு மூன்றாமிடத்தில் இருக்கிறார். எந்தச் சூழ்நிலையிலும் எதற்காகவும் விட்டுக் கொடுத்து போக மாட்டீர்கள். வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படுவீர்கள். எடுத்த காரியத்தை முடிக்காமல் விட மாட்டீர்கள். சந்திரனின் சஞ்சாரமும் உங்களுக்கு சாதகமான நிலையில் இருக்கிறது. வெளிவட்டார செல்வாக்கை உயர்த்திக் கொள்வீர்கள். செவ்வாய் உங்கள் ராசியிலேயே அமர்ந்து இருக்கிறார். சொந்த வீடு என்பதால் எந்த காரியத்திலும் சாதகமான பலனையே தருவார். தேவையில்லாத காரியங்களில் தலையிட்டால் அவமானங்களைச் சந்திக்க வேண்டி வரும்.

ரிஷபம்

சூரிய பகவான் உங்கள் ராசிக்கு இரண்டாமிடத்தில் இருக்கிறார். பட்டென்று மனதில் பட்டதைப் பேசுகின்ற பழக்கம் உங்களுக்கு உண்டு. அதை கொஞ்சம் அடக்கி வைக்க வேண்டும். இல்லையென்றால் உறவுகளில் விரிசல் உண்டாகும். தொழிலாளர்களிடம் அனுசரித்துப் போக வேண்டும். வேலை இடத்தில் பக்குவமாக நடந்து கொள்ள வேண்டும். செவ்வாய் 12 ஆம் வீட்டில் இருக்கிறார். வேலை காரணமாக குடும்பத்தை விட்டு பிரிந்து செல்ல வேண்டிய நிலை உருவாகும். வாகனங்களில் போகும்போது எச்சரிக்கையாகச் செல்ல வேண்டும். புதனும் சுக்கிரனும் ராசியிலேயே இருக்கிறார்கள்.

மிதுனம்

சூரிய பகவான் உங்கள் ராசியிலேயே அமர்ந்து இருக்கிறார். உங்க பக்கம் நியாயம் இருந்தாலும் கோபப்பட்டால் பிரச்சினை வரும். குருபகவான் 10ம் இடத்தில் இருக்கிறார். பதவி உயர்வு கிடைக்கவில்லை என்ற ஏக்கம் உங்களுக்கு உண்டு. அது இந்தக் காலகட்டத்தில் நிறைவேறலாம். தொழிலை நிலைப்படுத்த வலுவாக முதலீடு செய்வீர்கள். பங்குச் சந்தை நல்ல பலனைக் கொண்டு வரும். சனி பகவான் வக்ரகதியில் எட்டாமிடத்தில் இருக்கிறார். மருத்துவச் செலவுகள் வரலாம். வாகன விபத்துகள் ஏற்படலாம். குடும்பத்தைப் பிரிந்து வெளியூர் செல்ல வேண்டிய நிலை உருவாகும்.

கடகம்

சூரிய பகவான் உங்கள் ராசிக்கு 12ம் வீட்டில் இருக்கிறார். நடக்கும் என்று எதிர்பார்த்த காரியங்கள் தடைகள் வந்து முன்னாடி நிற்கும். நீங்கள் உதவி செய்த நபர் உங்களுக்கு உதவ தயக்கம் காட்டுவார். இந்த வாரத்தில் புதிய முதலீடுகள் செய்ய வேண்டாம். செவ்வாய் பத்தாமிடத்தில் இருக்கிறார். பழைய பொருட்கள் வாங்கி விற்கும் தொழிலில் அதிக கவனம் செலுத்துங்கள். பெண்கள் சேர்த்து வைத்த பணம் தக்க சமயத்தில் உங்களுக்குக் கை கொடுக்கும். குடும்பத்தில் இருந்த மனவருத்தம் மாறி உறவினர்கள் வருகையால் வீட்டில் சந்தோஷம் நிலவும். குரு பகவான் 9ஆம் இடத்தில் இருக்கிறார். தடைப்பட்ட காரியங்கள் மளமளவென்று நடக்கும்.

சிம்மம்

உணவுப்பொருள் சம்பந்தப்பட்ட வியாபாரம் விறுவிறுப்பாக நடக்கும். விவசாயத் தொழிலில் அதிக முனைப்புடன் ஈடுபடுவீர்கள். கூட்டுத் தொழிலில் அதிக முதலீடு செய்வீர்கள். ஏற்றுமதி இறக்குமதி தொழில் நல்ல லாபத்தைக் கொடுக்கும். செவ்வாய் 9 ஆம் இடத்தில் இருக்கிறார். தடைப்பட்ட காரியங்களை சுலபமாக முடிப்பீர்கள். வியாபாரப் போட்டிகளை வெற்றிகரமாக முறியடிப்பீர்கள். புதனும் சுக்கிரனும் பத்தாம் வீட்டில் இருக்கிறார்கள். கலைத்துறையினர் பிரகாசமாக திறமையை வெளிப்படுத்துவார்கள். மாணவர்கள் அக்கறையுடன் படித்து பெற்றோர்களுக்குப் பெருமை சேர்ப்பார்கள்.

கன்னி

தொழிலில் எதிர்பார்த்ததைவிட இரண்டு மடங்கு லாபத்தைப் பெறுவீர்கள். வசீகரமான பேச்சால் வாடிக்கையாளர்களைக் கவர்ந்து இழுப்பீர்கள். புதிய தொழிலுக்கான லைசன்ஸ் பெறுவீர்கள். செவ்வாய் எட்டாமிடத்தில் இருக்கிறார். எந்த விஷயத்திலும் பஞ்சாயத்து பண்ணுகின்ற வேலை உங்களுக்கு ஆகாது. மனைவியின் வார்த்தைக்கு மறு பேச்சு பேசாதீர்கள். பெட்டி படுக்கையோடு பிறந்த வீட்டுக்குப் போய்விடுவார். புதனும் சுக்கிரனும் ஒன்பதாம் வீட்டில் இருக்கிறார்கள். தேர்வு எழுதினால் வெற்றி பெறுவீர்கள். வங்கி ஊழியர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும்.

துலாம்

உங்கள் ராசிக்கு 9 ஆம் இடத்தில் சூரியன் இருக்கிறார். தந்தையாரின் உடல் நலத்தில் அக்கறை காட்டுங்கள். கொண்டான் கொடுத்தான் வீட்டில் கை நீட்டி கடன் வாங்காதீர்கள். அடுத்தவரின் ஆலோசனையைக் கேட்டு எதிலும் முதலீடு செய்யாதீர்கள். சந்திரனின் சஞ்சாரம் வெளிவட்டார செல்வாக்கை அதிகரிக்கும். மற்றவருக்கு உதவி செய்து மரியாதையைக் கூட்டிக் கொள்வீர்கள். செவ்வாய் ஏழாமிடத்தில் இருக்கிறார். குடும்ப உறவுகளை அனுசரித்துச் செல்லுங்கள். வெளியூர்ப் பயணங்களை ஒத்தி வையுங்கள். பண வரவு மந்தமாக இருக்கும்.

விருச்சிகம்

சூரியன் மாங்கல்ய ஸ்தானத்தில் இருக்கிறார். உயர் பதவிகள் உங்களைத் தேடி வரும். தொழிலுக்குத் தேவையான உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். சாமர்த்தியமாகப் பேசி நின்றுபோன திருமணத்தை நடத்தி வைப்பீர்கள். வீட்டில் மங்கல நிகழ்ச்சிகளுக்கான நாள் குறிப்பார்கள். செவ்வாய் ஆறாம் இடத்தில் இருக்கிறார். எந்த இடத்தில் இருந்து எதிர்ப்புகள் வந்தால் என்ன... அதையெல்லாம் துணிச்சலுடன் சந்தித்து வெற்றி பெறுவீர்கள். தொழிலை மேம்படுத்த அனைத்து முயற்சிகளும் எடுப்பீர்கள். கலகலப்பாகப் பேசி குடும்பத்தை நடத்துவீர்கள். வியாபாரத்தில் கணிசமான லாபம் கிடைக்கும்.

தனுசு

மாமியார் வீட்டில் இருந்து உங்களுக்கு உரிய பங்கு கிடைக்கும். உடைந்து போன உறவுகளைத் தேடிப் போய் ஒட்ட வைப்பீர்கள். தொழிலை விரிவுபடுத்த திட்டம் போடுவீர்கள். செவ்வாய் ஐந்தாம் வீட்டில் இருக்கிறார். பங்குச்சந்தையில் பயமில்லாமல் முதலீடு செய்வீர்கள். ஆன்லைன் வர்த்தகங்கள் அதிகமான லாபத்தைக் கொடுக்கும். கணினியில் சூதாட்ட ரம்மி விளையாடுவதை கனவிலும் நினைக்காதீர்கள். கைப் பொருளை இழந்து விடுவீர்கள். சந்திரனின் சஞ்சாரம் உங்களுக்கு ஏற்றமான பலன்களையே தரும். அறிவுசார்ந்த செல்போனை அதிக நேரம் பொழுதுபோக்குக்குப் பயன்படுத்தாதீர்கள். அறிவு குருடு ஏற்படும். பண விரயம் உண்டாகும்.

மகரம்

சூரியன் ஆறாம் வீட்டில் இருக்கிறார். வழக்குகளில் உங்களுக்குச் சாதகமான போக்கு காணப்படும். எதிர்கால மங்கல நிகழ்ச்சிகளைக் கவனத்தில் வைத்து நகைகள் வாங்குவீர்கள். அலுவலகத்தில் யாரைப் பற்றியும் புறம் கூறாதீர்கள் வேலையிடத்தில் சுமத்தப்பட்ட வீண் பழியிலிருந்து மீள்வீர்கள். சந்திரனின் நகர்வுகளால் சிறப்பான காரியங்கள் நடந்தேறும். செவ்வாய் நான்காமிடத்தில் இருக்கிறார். தொழிலுக்கு தேவையான நல்ல வாய்ப்புகள் தேடி வரும். அலட்சியமாக இருந்து அவற்றைத் தவற விடாதீர்கள். என்றோ வாங்கிப்போட்ட நிலம் இன்று நல்ல விலைக்கு விற்கும்.

கும்பம்

நீண்டகாலமாக இருந்துவந்த ராஜாங்க ரீதியிலான சிரமங்களில் இருந்து விடுபடுவீர்கள். நண்பர்கள் மூலம் உதவி கிடைக்கும். வெளி வட்டாரங்களில் உங்கள் மரியாதை அதிகரிக்கும். சந்திரபகவான் அனுக்கிரகம் சிறப்பாக உள்ளது. சிலருக்கு திருமணம் கைகூடிவரும். குடும்பத்தினருடன் உல்லாசப் பயணம் செல்வீர்கள். செவ்வாய் மூன்றாம் வீட்டில் இருக்கிறார். முக்கிய நபரின் அறிமுகத்தால் தொழிலுக்குத் தேவையான உதவி கிடைக்கும். வியாபாரம் எதிர்பார்த்தபடி மிகச் சிறப்பாக நடக்கும். பழைய கடன்களை திருப்பிச் செலுத்த வேண்டிய நிலை உருவாகும். புதனும் சுக்கிரனும் நான்காம் இடத்தில் அமர்ந்திருக்கிறார்கள்.

மீனம்

சூரிய பகவான் உங்கள் ராசிக்கு 4ஆம் வீட்டில் அமர்ந்திருக்கிறார். கணவன் மனைவி இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயல்படுவது நன்மையைத் தரும். பூர்வீகச் சொத்தில் இருந்துவந்த வில்லங்கம் விலகும். பட்டா சம்பந்தப்பட்ட அரசாங்க வேலைகள் சுலபமாக முடியும். செவ்வாய் இரண்டாம் இடத்தில் இருக்கிறார். குடும்பத்தில் சின்னச் சின்னப் பிரச்சினைகள் வரலாம். ஆனால், தொழில் மிக முன்னேற்றமாக நடக்கும். வழக்குகள் உங்கள் எண்ணப்படி முடியும். புதிய கட்டுமானத்தில் இறங்குவீர்கள். சந்திரனின் நகர்வுகளும் உங்கள் மனதிற்கு இதமான சூழ்நிலையை உருவாக்கும்.

ஹல்ஃப்ட்ஸ்டொர்ப் உயர்நீதிமன்ற வளாகம்

ஹல்ஃப்ட்ஸ்டொர்ப் இன்று இலங்கையின் நீதித்துறை வலையமைப்பின் மையமாக விளங்குகிறது. போர்த்துக்கேயர் காலத்தில் உருவான இந்த ஹல்ஃப்ட்ஸ்டொர்ப் நகரம் அன்றைய இலங்கைத் தீவின் கரையோரப் ஆட்சிப் பகுதிகளின் நீதி மையமாக இருந்தது. உண்மையில் அதன் பெயரே அதன் டச்சுத் தோற்றத்திற்கு சான்றாக உள்ளது, ஏனென்றால் ஹல்ஃப்ட்ஸ்டொர்ப் என்பது ஒல்லாந்தரின் மொழியில் "ஹல்ஃப்ட்ஸ்டொர்ப் கிராமம்" ('Hulfts Village') என்று பொருள்படும். கொழும்பை முற்றுகையிடும் போது நடவடிக்கையில் கொல்லப்பட்ட டச்சு ஜெனரல் ஜெரார்ட் ஹல்ஃப்ட் என்பவரிடமிருந்து அதன் பெயரைப் பெறுகிறது.

போர்த்துக்கேயரின் வசம் இருந்த கொழும்பைக் கைப்பற்றும் பொறுப்பை டச்சு கிழக்கிந்தியக் கம்பனி ஹல்ஃப்ட்ஸ் தலைமையிலான படையணியிடம் தான் ஒப்படைத்திருந்தது. அந்த முற்றுகையின் போது கொழும்பு கோட்டையின் படை நகர்வுக்காக கவனிப்பதற்கான சிறந்த இடமாக இருந்தது தான் இந்த புதுக்கடை குன்று.

டச்சு கவர்னர் ஹல்ஃப் (General Gerard Pieterszoon Hulft) இங்கு குடியேறிய முதல் டச்சு கவர்னர், எனவே ஹல்ஃப்ட்ஸ்டோர்ப் (Hulftsdorp) என்று அழைக்கப்படுகிறது. "டார்ப்" (Dorp) என்றால் கிராமம். இரண்டாம் ராஜசிங்க மன்னரின் உதவியுடன் போர்த்துகீசிய ஆட்சியின் கீழ் இருந்த கொழும்புத் துறைமுகத்தை வெற்றிகரமாகத் தாக்கிக் கைப்பற்றிய ஹல்ஃப்ட்ஸ் (Hulft) இன் மரணத்திற்குப் பிறகு "ஹல்ஃப்ட்ஸ்" என்கிற பெயர் இப்பகுதிக்கு சூட்டப்பட்டது.

இந்தக் குன்றின் மீது ஜெனரல் ஹல்ஃப்ட்ஸ் தனது கட்டளைப் படையணியை நிலைநிறுத்தி வைத்திருந்தார். இங்கிருந்து பார்த்தால் புறக்கோட்டை வழியாக கோட்டை வரை பார்வையிடக்கூடியதாக இருந்ததால் இந்த குன்றை அவர் அன்று தெரிவு செய்திருந்தார் என்று குறிப்புகள் தெரிவிக்கின்றன. முற்றுகையைத் தொடங்குவதற்கான சிறந்த உயரமான இடமென தேர்வு செய்திருந்தார். 1656 மே மாதம் எஞ்சியிருந்த சில போர்த்துகீசியர்கள் சரணடைந்ததால் டச்சுப் படை பலமடைந்திருந்தது.

டச்சு எழுத்தாளர் பிலிப்பஸ் பால்டேயஸ் 1672இல் தனது நூலில் அந்த துரதிர்ஷ்டமான நாளைப் பற்றி இப்படிக் குறிப்பிடுகிறார். "ஹல்ஃப்ட்ஸ் தனது மார்புச் சட்டையை திறந்துகொண்டு கேலரியின் நடுவில் மும்முரமாக தனது கடமையைச் செய்வதில் இருந்தபோது, திடீரென்று 'ஓ நல்ல பிதாவே எனக்கு உதவுங்கள் என்று கூக்குரலிடுவதைக் கேட்டார்! கேப்டன் போச்சிம் ப்ளாக் (Boachim Block) அதைக் கேட்டுக் விரைத்துப் போய் நின்றார். அவர் இரத்தம் தோய்ந்தவராக இருப்பதைக் கண்டு, மேஜர் வான் டெர் லானின் (Major Van Der Laan) உதவியுடன் அவரை அங்கிருந்து ஒரு படுக்கைக்குத் தூக்கிச் சென்றார். அங்கு அதற்குமேல் ஒரு வார்த்தைகூடப் பேசாமல் அவர் இறந்துபோனார். அவர் பட்ட காயத்தை ஆராய்ந்தபோது ஒரு மாஸ்க்வெட் ரக தோட்டா அவரின் உயிரைக் குடித்திருப்பதை அவர்கள் கண்டறிந்தனர்".

1655 இல் போர்த்துகேயரிடமிருந்து கொழும்பை கைப்பற்றுவதற்கு தலைமை தாங்கிய டச்சு ஜெனரல் கெராட் ஹல்ஃப்ட்ஸ் 1656ஆம் ஆண்டு ஏப்ரல் 10 அன்று கைமன் வாசலில் வைத்து போர்த்துகேயரால் சுட்டு கொல்லப்பட்டார். அவரின் நினைவாகத் தான் அவர் முகாமிட்டிருந்த மேட்டுப் பகுதிக்கு ஹல்ஃப்ட்ஸ்டொப் (Hulftsdorp,) என்று வைக்கப்பட்டது. அங்கே தான் இன்றைய கொழும்பு உயர்நீதிமன்ற வளாகம் அமைந்திருக்கிறது.

இப்பகுதியைப் பற்றிய ஆரம்பகால பதிவுகளில் ஒன்று; யொஹான் வொல்ஃப்காங் ஹெய்ட் (Johann Wolffgang Heydt) என்பவரின் பதிவாகும். 1744 இல் வெளியான Allerneuster Geographisch Und Topographischer SchauPlatz von Africa Und Ostlndien என்கிற அவரின் நூலில்; இல் ஹல்ஃப்ட்ஸ்டார்ப் பற்றிய பல குறிப்புகளுடன் அன்றைய காட்சிகளைக் கண் முன் கொண்டுவரக்கூடிய இப்பிரதேசத்தின் கோட்டோவியங்களும் அடங்கியுள்ளன. கொழும்பில் இருந்த நீதியரசரின் இல்லத்தைப் பற்றியும் அதில் குறிப்பிட்டுள்ளார். அந்த இல்லமானது அன்றைய நீதி நிர்வாகத்தில் பங்கெடுத்த உள்ளூர் நீதிபதி, திசாவ போன்றோரின் இல்லமாக இருந்ததாக குறிப்பிடுகிறார்.

அந்த இல்லம் இரண்டு மாடிகளைக் கொண்டது, முன்னால் ஒரு சுவர் உள்ளது, அதன் அருகில் ஒரு காவலர் வீடும், முற்றத்திற்குப் பின்னால் சமையலறையும் அதற்கப்பால் அடிமைகளின் குடியிருப்புகள் போன்ற கட்டடங்களும் உள்ளன என்று அவர் கூறுகிறார். ஹல்ஃப்ட்ஸ்டார்ப்பில் இடைவிடாமல் இரவிரவாக அப்பகுதியை கண்காணித்து வருவதுடன், சுற்றி ரோந்து செல்லும் சுமார் 30 சிப்பாய்களுக்கான ஒரு பாதுகாப்பு அறையைத் தவிர விசேடமாக வேறு எதுவும் இல்லை என்று அவர் குறிப்பிடுகிறார். குறிப்பாக குடிபோதையில் அனாவசியமான தகராறுகளில் ஈடுபடும் களியாட்டக்காரரர்கள், அசாதாரண நிலைமைகளை ஏற்படுத்தி சுற்றித் திரிபவர்கள், சிறு வியாபாரங்களில் ஈடுபடும் முஸ்லிம்கள் போன்றோர் மத்தியில் ஏற்படும் தகராறுகளை கண்காணிப்பதற்கும், கையாள்வதற்கும் தான் இந்த ரோந்து அதிகம் தேவைப்பட்டிருந்தது என்கிறார்.

ஹெய்ட்டின் கருத்தின்படி டச்சு ஆட்சிக் காலத்தில் இங்கே முக்கியமான நீதிமன்றச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிடுகிறார்.

ஜோன் கெப்பர் (John Capper) 1877 இல் எழுதி வெளியிட்ட தனது Old Ceylon நூலில் ஹல்ஃப்ட்ஸ்டர்ப் பற்றிய தனியான ஒரு அத்தியாயத்தை எழுதியிருக்கிறார். பிரபல ஓவியர் வான் டோர்ட் (Van dort) வரைந்த நீதிமன்ற வளாக கோட்டோவியம் ஒன்றையும் அந்த அத்தியாயத்தில் இணைத்திருக்கிறார். நீதிமன்றத்துக்கு வெளியில் படியிலும், வாசலிலும், மர நிழலிலும் குழு குழுக்களாக கூடி நிற்கும் மக்கள் கூட்டத்தை அந்த ஓவியம் சித்திரிக்கிறது. நீதிமன்ற நடவடிக்கைகள் பற்றியும், போர்த்துக்கேய, டச்சு, தமிழ், ஆங்கில, சிங்கள மொழிகளைப் பேசும் மக்கள் தமது சட்டத் தேவைகளை அங்கே நிறைவேற்றிக்கொள்வதை பதிவு செய்திருக்கிறார்.

டச்சுக் காலத்தில் இந்த நீதிமன்றங்கள் ஹல்ஃப்ட்ஸ்டார்ப்பிற்கு மாற்றப்பட்டன என்று நம்புபவர்களும் உள்ளனர், ஆனால் அது மிக உயர்ந்த நீதிமன்றமா என்பது சந்தேகமே என்று ஜோன் கெப்பர் குறிப்பிடுகிறார். "இந்த உயர் நீதிமன்றம் கொழும்பு கோட்டையில் அரண் சுவர்களுக்குள் அமர்வுகள் நடத்தப்பட்டுக்கொண்டிருந்த போது அப்போதைய ஆளுநர் ரிப் வான்; தனிப்பட்ட ரீதியாக தான் அக்கறை கொண்டிருந்த சில வழக்குகளில் நீதிபதிகளை மிஞ்சும் வகையில் தலையீடுகளை செய்து வந்ததாக கருதப்பட்டதால் சில டச்சு உயர் அதிகாரிகள் நெதர்லாந்தின் உயர் அதிகாரிகளிடம் சுவர்கள் இல்லாமல் அமர்வுகளை நடத்தும் உரிமையைக் கோரினர் என்று கூறப்படுகிறது. பின்னர் அந்த உரிமை அவர்களுக்கு வழங்கப்பட்டது. அதன் பின்னர் தான் இங்கேயும் நீதிமன்ற வழக்குகளை ஏனையோரும் பார்வையிடும் வாய்ப்புகள் கிட்டின என்றெழுதுகிறார் ஜோன் கெப்பர்.

இலங்கையின் நீதித்துறை பாரம்பரியம்

இலங்கையில் ஒரு முறையான சட்ட அமைப்புக்கான அடித்தளம் பண்டைய மன்னராட்சிக் காலத்தில் இருந்தே ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. இவற்றில் கிடைக்கப்பெற்றது "நீதி நிகண்டுவ" என்கிற நூல் தான். அது கண்டி ராஜ்ஜிய காலத்தில் குறிப்பாக 1769 தொடக்கம் 1815ஆம் ஆண்டு இலங்கை ஆங்கிலேயர்களிடம் முற்றாக பறிபோகும் வரை நடைமுறையில் இருந்தது. கண்டியச் சட்டம் என்றும் இதை நாம் அழைக்கிறோம். இலங்கையில் இயங்கிய ராஜ்ஜியங்களில் பல்வேறு வடிவங்களில் நீதித்துறை இயங்கிய போதும் ஒழுங்குபடுத்தப்பட்ட சட்டமாக "நீதி நிகண்டு"வைத் தான் குறிப்பிடுகிறார்கள். அதேவேளை அது முழு இலங்கைத் தீவுக்குமான சட்ட நூலாக இருக்கவுமில்லை. கண்டி ராஜ்ஜியத்துக்குள் மாத்திரம் இயங்கிய சட்டமுறைமை தான் அது. அச்சட்டம் பற்றிய பல பெரிய ஆய்வு நூல்கள் வெளிவந்துள்ளன.

கண்டியில் "மகுல் மடுவ" என்கிற கட்டிடத்தில் வழக்குகளும் அதற்கான தீர்ப்புகளும் வழங்கப்பட்டதை ரொபர்ட் நொக்ஸ், ஜோன் டொயிலி போன்றோரின் குறிப்புகள் நமக்கு சாட்சி பகிர்கின்றன. இதன் பிரகாரம் அன்று அரச அவையின் நெருக்கமான அங்கமாக நீதித்துறை இயங்கியிருப்பதையும் நாம் இனங்காணலாம்.

1505 ஆம் ஆண்டில், போர்த்துக்கேயர்கள் இலங்கையக் கைப்பற்றினார்கள். ஆனால் அவர்கள் நாட்டில் போர்த்துகேய நீதிமன்ற கட்டமைப்பை நிறுவ எந்த முயற்சியும் எடுக்கவில்லை. டச்சுக்காரர்கள் 1656 இல் இலங்கையின் கரையோரங்களைக் கைப்பற்றினர், பின்னர் தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி டச்சு சட்ட அமைப்பை நீதித்துறையாக ஆக்கினர்.

அவர்கள் லான் ராத் (Lan Raad), சிவில் ராத் (Civile Raad), ராத் வான் ஜஸ்திதி (Hof Van Justitie) போன்ற நீதித்துறைப் பிரிவுகளைக் அறிமுகப்படுத்தினர். டச்சு நாட்டின் உயர் நீதிமன்றமான ராத் வான் ஜஸ்டிதி, டச்சு கவர்னரால் நியமிக்கப்பட்ட ஏழு அல்லது அதற்கு மேற்பட்ட நீதிபதிகளைக் கொண்டிருந்தது. நீதிபதிகள், வழக்கறிஞர்கள், சிவில் மற்றும் இராணுவ அதிகாரிகளைக் கொண்டிருந்தது அந்த உயர் நீதிமன்றம். காணி நீதிமன்றம் (Lan Raad), சிவில் நீதிமன்றம் (Civile Raad) ஆகியன காலி, மாத்தறை மற்றும் யாழ்ப்பாணத்தில் அமைந்திருந்தன. உயர் நீதிமன்றம் கொழும்பில் இயங்கியது. இது மற்ற நீதிமன்றங்களின் இறுதி மேல்முறையீட்டு அதிகார வரம்பையும் அத்துடன் மிக உயர்ந்த குற்றவியல் அதிகார வரம்பையும் கொண்டிருந்தது.

1796 ஆம் ஆண்டில், பிரித்தானியர்கள் இலங்கையைக் கைப்பற்றியதும் அவர்கள் தமது சொந்த ஆங்கிலேய நீதிமன்ற முறைக்கு நிகரான நிதிமன்றத்தை நிறுவினார்கள். செப்டம்பர் 23, 1799 அன்று வெளியிடப்பட்ட ஒரு பிரகடனத்தின் மூலம் அந்த கட்டமைப்பை ஏற்படுத்தினர். அப்போது அவர்கள் இலங்கை முழுவதையும் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்திருக்கவுமில்லை. 16 ஆண்டுகள் கழித்து 1815 கண்டியைக் கைப்பற்றிய பின்னர் தான் 1801 ஆம் ஆண்டு ஏப்ரல் 18 ஆம் திகதி "மூன்றாம் ஜோர்ஜ் மன்னரின் அரச கட்டளை 1801க்கு" இணங்க உச்ச நீதிமன்றம் இலங்கையில் நிறுவப்பட்டது. பிரித்தானியா, அயர்லாந்து ஆகிய அரச முத்திரைகளின் இலட்சினைகளின் கீழ் தலைமை நீதிபதிகள் நியமிக்கப்பட்டனர். இந்த உச்ச நீதிமன்றத்தின் அமர்வுகள் பிப்ரவரி 08, 1802 அன்று தொடங்கின.

1833 பிப்ரவரி 18 அன்று வெளியிடப்பட்ட அரச சாசனத்தின் மூலம் தீவு முழுவதும் உச்ச நீதிமன்றம் அதிகாரபூர்வமாக இயங்கத் தொடங்கியது. உச்சநீதிமன்றமானது தலைமை ஒரு நீதிபதியையும் இரண்டு நீதிபதிகளையும் கொண்டிருந்தது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் உச்ச நீதிமன்றத்துக்கான நீதிபதிகள் வெளிநாட்டில் இருந்து வரவழைக்கப்பட்டனர். நீதிபதிகள் பெரும்பாலும் இங்கிலாந்தில் இருந்தே பணியமர்த்தப்பட்டனர். இந்த நீதிபதிகள் உயர்ந்த அதிகாரங்களைக் கொண்டிருந்தனர். பிரித்தானிய தலைமை அதிகார கட்டமைப்பு கீழ்க்கண்டவாறு அமைந்திருந்தது.

ஆளுநர் - ராஜரீக கடற்படைத் தளபதி மற்றும் இராணுவ தளபதி

தலைமை நீதிபதி - ராஜரீக கடற்படையின் கேப்டன், நிர்வாக கட்டமைப்பின் உறுப்பினர்கள் (Executive Council)

நீதிபதிகள் - தலைமை நீதிபதியும், ஏனைய நீதிபதிகளும் சிறப்பு அதிகாரத்தின் கீழ் அரச ராஜரீக சாசனத்தின் மூலம் நியமிக்கப்பட்டனர்.

1883 ஆம் ஆண்டின் கட்டளை எண். 01இன் பிரகாரம் 1884 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் தேதி முதல் சட்ட மா அதிபர் பதவியையும் நிறுவியது பிரித்தானிய அரசு.

(15 ஆம் பக்கம் பார்க்க)

வன்முறைகளை எதிர்கொள்ளும் இந்தியாவின் அக்னிபாத் திட்டம்...

இந்திய நடுவன் அரசின் "அக்னிபாத் திட்டம்" (அக்கினி வீரர், Agneepath Scheme) என்று அழைக்கப்படும் புதிய இராணுவ ஆள்சேர்ப்பு திட்டம் நாடு முழுவதும் எதிர்ப்பு, வன்முறை மற்றும் கிளர்ச்சி அலைகளைத் தூண்டி இன்றைய இந்தியாவை கலவர பூமியாக்கி உள்ளது.

இந்த திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை அங்கீகாரம் அளித்த கடந்த 14ம் திகதிக்கு மறுநாளே பல மாநிலங்களில் போராட்டங்கள் வெடித்து மக்களை கதிகலங்க வைத்துள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை 17ம் திகதி முதல் நாட்டின் ஏழுக்கும் மேற்பட்ட மாநிலங்களில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் வன்முறைகளாக மாறி பலத்த பொருட் சேதத்தை அரசுக்கும் மக்களுக்கும் ஏற்படுத்தி உள்ளன. குறிப்பாக ஹரியானா, பீகார், தெலுங்கானா மற்றும் மத்திய பிரதேச மாநிலங்களில் மொத்தம் நான்கு பயணிகள் ரயில்கள் தீயிட்டு கொளுத்தப் பட்டதுடன், 10க்கும் மேற்பட்ட ரயில்களில் பயணித்தவர்களின் உடைமைகள் யாவும் சூறையாடப்பட்டு அவர்கள் நடு வழியில் இறக்கி விடப்பட்டனர். இளைஞர்கள் முன்னெடுக்கும் இந்த போராட்டங்களுக்கு பல இராணுவ ஆர்வலர்களும் இளைஞர் அமைப்புகளும் ஆதரவு தெரிவித்து பல மாநிலங்களில் போராட்டத்தில் நேரடியாக கலந்து கொண்டன. முதல் நாள் அமைதியாக நடைபெற்ற போராட்டங்கள் மறு நாளே வன்முறையாக மாறி நாசப்படுத்துதல் மற்றும் பொது சொத்துக்கள் அழிக்கப்படுவதற்கு வழிவகுத்தது.

கூடுதலான மாநில அரசுகளது எதிர்ப்பை சம்பாதித்துள்ள இந்த அக்னிபாத் திட்டம் என்றால் என்ன...? அதன் சாதக பாதகங்கள் என்ன...? என்கிற கேள்விகளுக்கான விடையையே தற்போது இந்திய மற்றும் சில சர்வதேச ஊடகங்கள் செய்தியாகவும், வாதப்பிரதிவாதங்களாகவும் வெளியிட்டுக் கொண்டிருக்கினறன.

மேற்குலக நாடுகள் பலவற்றில் நடைமுறையில் இருப்பது போன்ற ஒரு திட்டமே தற்போது இந்திய ராணுவத்தில் அக்னி பாத் என்ற பெயரில் மோடி அரசால் புதிதாக அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் அடிப்படையில் இந்திய படையணிக்கு தெரிவாகும் ஒருவர் 4 ஆண்டுகள் மட்டுமே முப்படைகளில் ஏதாவது ஒன்றில் குறுகிய கால வீரராக பணியாற்ற முடியும்.

இந்த 4 வருட பணியில் 6 மாதம் பயிற்சி வழங்கப்படும் எனவும்,பின்னர் 4 வருடங்கள் கழித்து இந்த வீரர்களில் 25 சதவிகிதம் பேர் வரை மட்டுமே நிரந்தரமாக 15 வருட ஒப்பந்தத்தில் பணியாற்ற அனுமதிக்கப் படுவார்கள் எனவும் புதிய திட்டம் தெரிவிக்கின்றது.

4 வருடத்திற்கு பின் தொடர்ந்து பணியாற்ற விருப்பம் உள்ளவர்கள் நிரந்தரபணிக்கு விண்ணப்பிக்கலாம் எனவும் அதில் தகுதியான 25 சதவிகிதம் பேர் தவிர ஏனையவர்கள் வெளியேற வேண்டும் எனவும், நிரந்தரமாக 15 வருடம் பணியாற்ற தேர்வு செய்யப்படுவர்கள் அதிகாரிகள் ஸ்தானம் அற்ற சாதாரண படைசிப்பாய் நிலையிலேயே பணி செய்ய முடியும் எனவும் மத்திய பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ளது.

17.5 வயது முதல் 21 வயது வரையான குறைந்தது 10ம் வகுப்பு வரை படித்த இரு பாலினரும் இதில் சேர முடியும் எனவும் இந்த திட்டத்தின் மூலம் சேரும் வீரர்களுக்கு முதல் வருடம், மாதம் 30 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு மாதா மாதம் சம்பளம் சிறிதளவு உயர்த்தப்பட்டு கடைசி வருடம், அதாவது 4வது வருடம் அவர் 40 ஆயிரம் ரூபாய் மாதம் சம்பளம் பெறுவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவை அனைத்திற்கும் வருமான வரி கிடையாது எனத் தெரிவிக்கும் இந்த புதிய சட்டமூலம் இதன் கீழ் இணைத்துக் கொள்ளப் படுபவர்களுக்கு ஓய்வூதியம் (பென்சன்) எதுவும் கிடைக்காது எனவும் தெரிவிக்கின்றது.

படைகளில் பணியாற்ற விரும்பும் இளைஞர்கள் பட்டாளம் தான் இந்த சட்டமூலத்தை எதிர்த்து களம் இறங்கி. மோடி அரசுக்கு எதிரான கலவரங்களை ஏற்படுத்தி வருகின்றது, சில இடங்களில் இளைஞர்கள்

கோவை நந்தன்...

தமக்கு தாமே தீ மூட்டியும் போராட்டத்தை உணர்ச்சிப் பிழம்பாக்கி வருகின்றனர். இந்த தீமூட்டல் அனர்த்தத்தில் தெலுங்கானாவின் ஹைதராபாத்தில் ஒரு இளைஞன் இறந்த செய்தி வெளிவர,பல மாநில காவல் நிலையங்கள் தாக்கப்பட்டு தீக்கிரையாகப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியா சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்தே வழமையாக ஒவ்வொரு ஆண்டும், முப்படைகளிற்கும் 15வருட ஒப்பந்தத்தின் அடிப்படையில் நிரந்திர நியமனமாக சிப்பாய்களை இணைத்துக்கொள்ளப்படும் நடை முறையே இருந்து வருகிறது. அதே போல வெற்றிடமாகும் உயர் பணியிடங்கள் அந்த பதவித் தரவரிசையில் அடுத்ததாக இருப்பவர்களை கொண்டே நிரப்பப்பட்டு வந்தன, மேலும், படைகளில் 15 ஆண்டுகள் பணியாற்றிய வீரர் ஒருவர் அரச ஓய்வூதியம் பெற தகுதியுடையவராவாராக கணிக்கப்பட்டு ஓய்வூதியம் பெற்று வந்தனர். ஒருவர் 21 வயதில் படையணியில் சேர்ந்திருந்தால், 36 வயதில் அவர் ஓய்வூதியம் பெற தகுதியுடையவராக இருப்பார்.

ஆனால் தற்போது வந்துள்ள புதிய திட்டத்தின்படி இந்த பணிக்கான காலம் நான்கு ஆண்டுகளாக்கப் பட்டு, நான்கு ஆண்டுகளுக்கு பிறகு அந்த வீரர்களுக்கு ஓய்வூதியம் எதுவும் இல்லாத நிலையையே ஏற்படுத்துகிறது..இதுவே அக்னிபாத் திட்டத்தின் பெரும் சலசலப்புக்கு முக்கிய காரணம்.

அக்னிபாத் திட்ட எதிர்ப்பு போராட்டங்களுக்கு மத்தியில், ராணுவ ஆள்சேர்ப்பு குறித்து இந்தியாவின் பாதுகாப்புப்படைகளின் தலைமைப் படைத்தளபதியாக இருந்த, குன்னூர் விமான விபத்தில் மறைந்த ஜெனரல் பிபின் ராவத் தெரிவித்த கருத்தை வலியுறுத்து கின்றனர் சில ஆய்வாளர்கள்.

"இந்திய ராணுவத்தில் சேர, ஒருவர் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் வலுவாக இருக்க வேண்டும் என்பதற்கு மேலதிகமாக, தாய்நாட்டைக் காக்கவேண்டும் என்ற ஆர்வமும், தியாக சிந்தனையும் இருக்க வேண்டும்" என்கிற அவரின் கூற்றே இன்றைய நாட்டு மக்களுக்கும், அரசுக்கு எதிராகவும் போராடும் இளைஞர் கூட்டத்தின் கவனத்திற்கு முன் வைக்கப்படுகிறது. அக்னிபாத் திட்டத்திற்கு எதிராக போராட்டம் நடத்தி வரும் இளைஞர்கள் தேசத்திற்கு சேவை செய்ய விரும்பவில்லை, எனவும் மாறாக இந்திய ராணுவத்தில் ஓய்வு பெறும் காலம் வரை பணி புரிந்துவிட்டு பின்னர் வாழ்நாள் வரை ஓய்வூதியம் பெறவே விரும்புகிறார்கள் என வாதிடும் அந்த ஆய்வாளர்கள் இன்றைய இந்திய இளைஞர்கள் இந்திய இராணுவம் உட்பட்ட படைத் துறையை தமக்கான வேலைவாய்ப்பை உறுதி செய்யும் திட்டமாகவே பார்க்கிறார்கள் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தத் திட்டத்திற்கு எதிரான போராட்டங்கள் இப்போது 18 மாநிலங்களில் பரவி நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் படைகளுக்கான ஆட்சேர்ப்பு வயது வரம்பை 21லிருந்து 23 ஆக உயர்த்தியுள்ள அரசு. அக்னிவீரர்களின் ஆட்சேர்ப்பு வரும் 24ம் திகதி முதல் இந்திய விமானப்படைக்கான ஆட்சேர்ப்பில் இருந்து தொடங்கும் எனவும் அறிவித்துள்ளது. ராணுவத்தில் இளைஞர்களை ஆட்சேர்ப்பு செய்யும் பணியை அரசாங்கம் விரைவில் தொடங்கினாலும், பல இராணுவ ஆர்வலர்கள் திட்டத்திற்கு எதிராக உறுதியாக நிற்கின்றனர்.

'பாகிஸ்தான் சீனா என இரண்டு முனைகளிலிருந்து அச்சுறுத்தல்களை இந்தியா எதிர்கொள்ளும் போது, அக்னிபாத் திட்டம் நமது ஆயுதப் படைகளின் செயல்பாட்டுத் திறனைக் குறைக்கும் எனவும் நமது படைகளின் கண்ணியம், மரபு, வீரம், ஒழுக்கம் ஆகியவற்றில் சமரசம் செய்வதை பாஜக அரசு நிறுத்த வேண்டும்' எனவும் ராகுல் காந்தி தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை இந்த திட்டம் ராணுவத்திற்கும், நாட்டின் இளைஞர்களுக்கும் பல வழிகளில் சிறந்ததாக அமையும் என்று மத்திய அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன .

ராணுவ ஆர்வலர்களும் எதிர்க்கட்சித் தலைவர்களும் அக்னிபாத் திட்டத்தை அமூல் படுத்துவதற்கு முற்றிலும் எதிர்ப்புத் தெரிவித்து வரும் நிலையில் மோடி அரசு இந்தத் திட்டம் குறித்து மீள் பரிசீலனை செய்வதே நாட்டிற்கும் பா.ஜா.க அரசின் எதிர்காலத்திற்கும் நன்மை பயப்பதாக அமையும் என்பதே யதார்த்தம்.

என் இனிய பட்டாம் பூச்சிக்கு

கவிதை நூல் வெளியீட்டு விழா

பௌர்ணமி கலை இலக்கிய நிகழ்வுத் தொடரின் 43 வது நிகழ்வாக மகுடம் கலை இலக்கிய வட்டம் நடாத்தும் மகுடம் வி. மைக்கல் கொலினின் என் இனிய பட்டாம் பூச்சிக்கு கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழா இன்று 26ம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 3.45 மணிக்கு மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் மட்டக்களப்பு தமிழ்ச்சங்க தலைவரும், பிரபல தொழிலதிபரும், இலக்கிய ஆர்வலருமான சைவப்புரவலர் வி. றஞ்சிதமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபரும், மாவட்டச் செயலாளருமான க. மகேசன், கிழக்குப் பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து நூலை வெளியிடவுள்ளனர்.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் மாகாண பணிப்பாளர் இரா. நெடுஞ்செழியன் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளும் இந் நிகழ்வில் நூலின் முதற் பிரதியை மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளரும், "சிப்ஸ் சினிமா" நிறுவன இயக்குனருமான Dr. குணசிங்கம் சுகுணன் பெற்றுக் கொள்வார்.

கிழக்குப் பல்கலைக்கழக ஆரம்ப சுகாதார பராமரிப்பு பீட தலைவர் Dr. K. அருளானந்தம், நியூ பயனியர் வைத்தியசாலை இயக்குனர் Dr. E. ஸ்ரீநாத், கிழக்குப் பல்கலைக்கழக Dr. S. சிவச்செல்வன், சிட்டி போரம்ஷ் சென்ரர் நிறுவன இயக்குனர் ஜனாப் S. L. M. ஆரிப், திருகோணமலை மாவட்ட மக்கள் வங்கி உதவிப் பிராந்திய முகாமையாளர் S. N. மோகனதாஸ், மட்டக்களப்பு தேசிய சேமிப்பு வங்கியின் முன்னாள் முகாமையாளர் S. V. சுவேந்திரன், சண் பன்சி ஹவுஸ் நிறுவன உரிமையாளர் S. சிவபாதசுந்தரம் (அண்ணாச்சி), ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்து சிறப்பிக்கவுள்ள இந் நிகழ்வில் நூல் நயவுரையை கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக சிரேஷ்ட விரிவுரையாளர் க. மோகனதாசன் ஆற்றவுள்ளார். நூல் வெளியீட்டுரையைஎழுத்தாளரும், அதிபருமான ச. மணிசேகரனும், வரவேற்புரையை மட்டக்களப்பு மாவட்ட தமிழ் எழுத்தாளர் சங்க பொருளாளர் கதிரவன் த. இன்பராசாவும் நன்றியுரையை மகுடம். வி. மைக்கல் கொலினும் நிகழ்த்தவுள்ளனர்.

நிகழ்வை தொகுத்து வழங்குகிறார் கவிஞர் ஜி. எழில் வண்ணன்.

"முதல் சந்திப்பிலேயே என்னை சரியாக எடைபோட்டவர் ஜீவா"

இந்த நாட்டின் முக்கியமான படைப்பாளியான மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவின் 95வது பிறந்த தினம் (27.06.2022) நாளையாகும். அதனை முன்னிட்டு அண்மையில் வெளிவந்த மேமன்கவி எழுதிய "டொமினிக் ஜீவாவும் நானும்' எனும் நூலிலிருந்து ஒரு சிறுபகுதி.

மேமன்கவி

பாடசாலை கல்வியை இடைநடுவில் நிறுத்தியபின் எங்கள் குடும்பத் தொழிலான வர்த்தகத்தில் ஈடுபடவில்லை. நூலகங்களுக்குச் சென்று நூல்களை எடுத்து வாசிப்பதுதான் என் வேலையாக இருந்தது. அந்த நாட்களில். கொழும்பில் நடந்த இலக்கியக் கூட்டங்கள் பற்றி அறிந்து அக்கூட்டங்களுக்கு யாருக்கும் தெரியாத சின்னபொடியனாக ஒரு மூலையில் உட்கார்ந்து ரசித்து வந்து விடுவேன். அப்படியாக இன்றைய நாட்களில் கொழும்புத் தமிழ்ச் சங்க மண்டபத்தில் இலக்கியக் கூட்டங்கள் நடைபெறுவது போல் அந்த நாட்களில் கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள தேயிலை பிரசாரச் சபை மண்டபத்தில் தொடர்ந்து நடைபெறும். அங்கு தொடர்ந்து போவேன். அந்த மண்டபத்தின் பக்கத்து ஒழுங்கையில்தான் எனது நெருங்கிய நண்பர் ஹாஜி பாரூக்கின் வீடு இருந்தது. அவரும் தமிழ் ஆர்வமிக்கவராக இருந்தார். அவரையும் அழைத்து அக்கூட்டங்களுக்குப் போவேன்.

அந்த மண்டபத்தில்தான் பல ஈழத்து எழுத்தாள ஆளுமைகளைக் கண்டேன், பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் சிவத்தம்பி, இளங்கீரன், பிரேம்ஜி அந்தனி ஜீவா முருகையன் ஈழவாணன், இப்படியாகப் பல எழுத்தாளர்களைக் கண்டேன்.

அந்த மண்டபத்தில் நடந்த இலக்கியக் கூட்டங்களுக்கு வெறும் பார்வையாளாக மட்டுமே போகவில்லை அக்கூட்டங்களை எனது வாசிப்பைப் பரவலான வாசிப்பாக மாற்றிக் கொள்ளப் பயன்படுத்தி கொண்டேன். எப்படி என்றால், அங்கு வெளியிட்டப்பட்ட நூல்களை வாங்கி வாசித்தேன். அது மட்டுல்லாமல் அந்தப் புத்தக வெளியீடுகளின் முக்கிய ஆளுமைகளின் உரைகளில் குறிப்பிட்டப்பட்ட நூல்களைக் குறித்து வைத்து மறுநாள் நூலகத்திற்குச் சென்று அப் புத்தகங்களைத் தேடி வாசித்தேன். அது மட்டுமல்லாமல் இன்னுமொரு வழியிலும் புதிய நூல்களைப் பற்றியும் தெரிந்து கொண்டேன். அது அங்கு கூட்டங்கள் தொடங்குவற்கு முன் தனிப்பட்டமுறையில் சமீபத்தில் வாசித்த நூல்களைப் பற்றிப் பேசுவதைக் கேட்டு அந்தப் புத்தகங்களை குறித்து வைத்துக் கொள்வேன்.

அந்த மண்டபத்தில் தான் நான் முதல் முதலாக ஜீவாவைக் கண்டேன்.

பாடசாலை தொடக்கம் மல்லிகையை வாசிக்கத் தொடங்கி இருந்தேன். 73 களில் மல்லிகையை தீவிரமாக வாசிக்கத் தொடங்கியிருந்தேன். அந்த நாட்களில் 73ஆம் ஆண்டு இறுதியில் தமிழ் இலக்கியம் அளவுக்கு ஈழத்து இலக்கியம் வளர்ந்திருக்கிறது எனும் தொனியில் ஒரு கடிதமும் மல்லிகையில் எழுதி இருந்தேன். எமது வர்த்க நிலையத்திற்கான ஒரு சிறுவிளம்பரத்தையும் வழங்கி இருந்தேன். கொழும்பில் அவர் தங்கி இருந்த இடம் தேடி அவருடன் பேசப் பயமாக இருந்தது. ஜீவா லேசில் யாரையும் அங்கீகரிக்கமாட்டார் என்பதை கேள்வி பட்டிருந்தேன். எனது ஆரம்பகால இலக்கிய நடவடிக்கைகளை அவர் அவதானித்தே வந்தார். 1974ஆம் ஆண்டு வெளிவந்த மல்லிகையை வாசித்து அது சம்பந்தமான ஒரு கடிதத்தை அவருக்கு அனுப்ப அவருடன் நெருக்கமாகப் பேசும் சந்தர்ப்பம் கிடைத்தது.

நான் கொழும்புவாசி. மேமன் சமூகத்தைச்

சேர்ந்தவன். புறக்கோட்டை வியாபாரக் குடும்பம். புறக்கோட்டை முதலாம், இரண்டாம், குறுக்குத் தெருக்கள்தான் அன்றாடம் நாங்கள் உலாத்தும் தெருக்கள். அப்படித்தான் ஒரு நாள் இரண்டாம் குறுக்குத் தெருவில் நடந்து கொண்டிருந்தேன். கையில் மு.தளையசிங்கத்தின் போர்ப்பறை எனும் நூலின் முதலாம் பதிப்பு. அன்றே நான் தீவிர வாசகன்.. நம்புங்கள்,. இல்லையென்றால் அந்த வயதிலே(17) தளையசிங்கம் எனக்குப் பரிச்சயமாகி இருப்பாரா? அந்தப் புத்தகத்துடன் ஜீவாவுடன் அதே தெருவில் மிகுந்த பத்தோடு முதல் வார்த்தையை உதிர்த்தேன். அந்தப் பயத்திற்குக் காரணம் கழுத்து நரம்புகள் புடைக்க உரத்த குரலில் அவர் தேயிலை பிரசாரச் சபை மண்டபத்து மேடைகளில் பேசிய பேச்சுகள்தான். (பிற்காலத்தில் வீட்டிலும் இலக்கியக் கூட்டங்களிலும் உரத்துப் பேசும் பழக்கம் எனக்கு அவர் மூலம்தான் வந்ததோ என்னவோ) என்னைப் பற்றியும் என் இலக்கிய ஆர்வத்தைப் பற்றியும் சொன்னேன். நடந்து கொண்டிருந்த அவர் சற்று நேரம் தரித்து நின்று, ஆச்சரியத்துடன் என்னைப் பார்த்தார்.. அந்த ஆச்சரியத்திற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று தாய்மொழி தமிழ் அல்லாத மேமன் பாயான எனது தமிழ் ஆர்வம். இரண்டாவது காரணம் அந்த நேரத்தில் என் கையில் இருந்த மு.தளயசிங்கத்தின் போர்ப்பறை என்ற நூல். (அந்தக் காலகட்டத்தில் அந்த நூலில் அமைந்திருந்த கட்டுரைகளில் ஒரு கட்டுரையேனும் எனக்கு விளங்கவில்லை என்பது அவருக்குத் தெரியாத செய்தி) பேசியவாறே அந்தக் காலகட்டத்தில் மல்லிகை இதழ் ஒவ்வொன்றை முடித்துக் கொழும்புக்கு வரும்பொழுது, அவர் தங்குமிடமான புறக்கோட்டை மலிபன் வீதியில் அமைந்திருந்த ஜீவாவின் அபிமானி ஓட்டபிடாரம் ஆ, குருசாமியின் வர்த்தக நிலையத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கிருந்த குருசாமி ஐயாவுக்கு என்னைப் பற்றிச் சொல்லி அறிமுகப்படுத்தி வைத்தார்.

ஜீவாவுடனான அந்தச் சந்திப்புக்குப் பின் வந்த அடுத்த மாத 1974ஆம் ஆண்டு ஜூலை மல்லிகையில் 'இளந்தளிர் ' எனும் தலைப்பில் அன்று 17 வயதான என்னை அறிமுகப்படுத்தினார்.

1976ஆம் ஆண்டு மார்ச் மாத இதழில் மல்லிகைப் பந்தலின் கொடி கால்கள் எனும் தலைப்பில் தொடர்ந்து மல்லிகைக்குப் பங்களிப்பு செய்து கொண்டிருந்தவர்களைப் பற்றிய தொடர் குறிப்பில் என்னைப் பற்றி எழுதினார்.

அந்தச் சந்திப்புக்குப் பின் ஒவ்வொரு மாத மல்லிகை இதழ் முடித்தபின்னும் கொழும்பு வரும் பொழுதெல்லாம் அவரைத் தவறாமல் சந்திப்பேன். அக்காலகட்டத்தில் கணிசமான அளவு மல்லிகை இதழ்களைச் சேகரித்து வைத்திருந்தேன். அவரைச் சந்தித்த பின்னும் முன்னும் அவர் படைப்புகளை வாசித்து இருந்தேன்.

ஜீவா மாதந்தோறும் கொழும்பு வரும்பொழுதெலாம் மல்லிகையை மிக ஆவலுடன் எதிர்பார்ப்பேன். அவர் தங்குமிடத்திற்குத் தொலைபேசி எடுத்து அவர் வந்து விட்டாரா என விசாரித்து உடனடியாக அங்கு போய் மல்லிகையைப் பெற்று வந்து விடுவேன். இவ்வாறாக ஜீவாவுடான தொடர்பு வளர்ந்தது.

இலங்கையை நெருக்கும் கடன் கொடுத்த வெளிநாட்டு நிறுவனங்கள்

பொருளாதார அரசியல்

கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

கடந்த 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இலங்கையின் கடன் மீளச் செலுத்த முடியாத வங்குரோத்து நிலை தொடர்பில் அமெரிக்காவின் நியூயோர்க் மாவட்ட நீதிமன்றத்தில் 1:22 CV 5199 என்ற பதிவெண்ணில் சிவில் வழக்கொன்று தொடரப்பட்டுள்ளது.

ஹமில்டன் ரிசர்வ் பேங்க் லிமிடட் (Hamilton Reserve Bank Limited) என்னும் அமெரிக்க வங்கியானது பிளெச்மர் பொன்டி மற்றும் ஓல்ட் (Bleichmar Fonti and Auld) என்னும் சட்ட ஆலோசகர்களின் பரிந்துரையின் பேரில் இலங்கைக்கு எதிராக இவ்வழக்கைத் தொடுத்திருக்கிறது. இதைத் தவிர இலங்கைக்கு கடன் வழங்கியுள்ள முப்பதுக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் கூட்டாக இணைந்து ஒரு அமைப்பை உருவாக்கியுள்ளதாகவும் அந்த அமைப்பே கடனை மீளப்பெறுவது தொடர்பான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் எனவும் தகவல்கள் வந்துள்ளன.

இலங்கை IMF உடன் தற்போது ஈடுபட்டுவரும் பேச்சுவார்த்தைகளை வரவேற்பதாகவும் கடன் மீள் கட்டமைப்பு தொடர்பான பேச்சுவார்த்தைகள் முறையாகவும் வெளிப்படைத்தன்மை வாய்ந்ததாகவும் நியாயமானவையாகவும் மேற்கொள்ளப்பட வேண்டுமென அவை அறிவித்துள்ளன.

எனவே இலங்கையின் இறைமைக் கடன் மீளச்செலுத்தாமைக்கு எதிரான சட்ட ரீதியானதும் கட்டமைப்பு ரீதியானதுமான ஏற்பாடுகள் இலங்கைக்குக் கடன் கொடுத்தோரினால் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கைக்கு கடன் கொடுத்தோர் கூட்டாக அமைப்புகளை ஏற்படுத்தி சட்ட மற்றும் நிதி ஆலோசகர்களை நியமித்து விவகாரங்களைக் கையாள ஆரம்பித்துள்ளனர். அதேவேளை இந்த விவகாரங்களைக் கையாள்வதற்கு இலங்கையும் ஏற்கெனவே சட்ட ஆலோசகர் நிறுவனத்தையும் நிதி ஆலோசகர் நிறுவனத்தையும் நியமித்துள்ளது.

எனவே எதிர்வரும் மாதங்களில் இந்த சட்டப்போர்கள் அக்கப்போர்களாக இலங்கைக்கு வெளியில் தொடருமென எதிர்பார்க்கலாம். இந்நிலையில் ஹமில்டன் வங்கி ஏன் முந்திரிக் கொட்டையாக முந்திக்கொண்டு வழக்குத் தாக்கல் செய்யவேண்டும் என்ற கேள்வி எழலாம்.

இலங்கையில் உள்ள ஒருசில ஊடகங்கள் அது ஒரு வங்கியே அல்ல. வரிச் சலுகைகள் மிகுந்த சட்டக் கட்டுப்பாடுகள் அற்ற ஒரு தீவுக்கூட்டத்தில் தாபிக்கப்பட்ட ஒரு சிறிய நிறுவனம் என்று வழமை போல வசைபாட ஆரம்பித்துள்ளன. ஆனால் இந்த வழக்குத் தொடரப்பட்டுள்ளது அமெரிக்காவின் மையநகரப் பகுதியாகிய மான்ஹட்டனில் உள்ள நீதிமன்றத்திலாகும். எனவே முறைப்பாட்டாளரின் தன்மை பற்றியெல்லாம் கவனத்திற் கொள்ளாமல் வழக்கை ஏற்றுக் கொண்டிருப்பார்கள் எனக் கருத முடியாது.

தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் தமது சம்பளத்தில் ஒரு பகுதியை நிதியாக வழங்கினர். ஆனால் இலங்கை அரசியலில் பில்லியன் கணக்கில் காசுபார்த்த அரசியல் பிரபலங்களும் அவர்தம் தொண்டர் அடிப்பொடிகளும் ஒரு சதத்தையேனும் மக்களுக்காக கிள்ளிப் போட்டிருப்பார்களா?

பதவியில் இருந்த இன்னும் இருக்கின்ற பல அரசியல்வாதிகளுடைய தனிப்பட்ட சொத்துகள் எங்கெங்கு உள்ளன போன்ற தகவல்களும் இவ்வழக்கில் கூறப்பட்டுள்ளன. இவ்வழக்கு விசாரணைக்கு வரும்போது இலங்கையின் அரசியல்வாதிகள் மற்றும் உயர்மட்ட அதிகாரிகளின் சொத்துக் குவிப்புகள் பற்றிய தகவல்களும் வெளிவரக் கூடும்

இந்த வழக்கில் முன்னாள் மத்தியவங்கி ஆளுநர் கப்ரால் பெயர் குறிப்பிட்டுச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து உடனடியாகவே அவர் தனக்கும் அதற்கும் சம்பந்தமே இல்லை என முற்றாக மறுத்துள்ளார். அத்துடன் சாதாரண ஒரு நபர்தான் பெற்ற கடனை மீளச் செலுத்தாதபோது கடன் கொடுத்தவர் வழக்குகளைத் தொடுப்பது வழமைதான் என்றும் "அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா" என்ற பாணியில் பதிலளித்துள்ளமையைக் காணமுடிகிறது.

இலங்கைக்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள்ள ஹமில்டன் வங்கி என்ன குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளது என்று பார்ப்போமாயின், இலங்கையின் மிக உயர்பதவிகளில் உள்ள அதிகாரிகளின் விருப்பத்தின் பேரிலேயே சர்வதேச இறைமைக்கடன் பிணைமுறிகளுக்கான கொடுப்பனவுகள் காலவரையறையின்றி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் அதேவேளை உள்ளூர் வங்கிகளுக்கும் அவர்தம் விருப்பத்திற்குரியவர்களுக்கும் பிணைமுறிகள் மீதான கொடுப்பனவுகள் வட்டியும் முதலுமாக முழுமையாகச் செலுத்தப்படுவதாகவும் எதிர்வரும் ஜூலை மாதம் 25 ஆந் திகதி முதிர்வடையவுள்ள சர்வதேச இறைமைக்கடன் பிணைமுறிகளில் தமது நிறுவனம் முதலீடு செய்துள்ள USD 250,190,000 டொலர்களையும் அதற்குரிய வட்டியாகிய USD 7,349,331.25 அமெரிக்க டொலர்களையும் சேர்த்து மொத்தம் USD 257,539,331.25 டொலர்களை மீளச்செலுத்துமாறு உத்தரவிடக்கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் தமது முதலீடுகளில் அதிக மானவை ஓய்வூதியக்காரர்களின் நிதிகள் எனவும் இப்போது இலங்கை கடன் மீளச் செலுத்தமுடியாது அறிவித்துள்ளதால் ஓய்வூதியக்காரர்கள் தமது முதலீட்டில் 80 சதவீதத்தை இழக்க நேரிடும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தவிர பதவியில் இருந்த மற்றும் இன்னும் இருக்கின்ற பல அரசியல்வாதிகளுடைய தனிப்பட்ட சொத்துகள் எங்கெங்கு உள்ளன போன்ற தகவல்களும் இவ்வழக்கில் கூறப்பட்டுள்ளன. இவ்வழக்கு விசாரணைக்கு வரும்போது இலங்கையின் அரசியல்வாதிகள் மற்றும் உயர்மட்ட அதிகாரிகளின் சொத்துக் குவிப்புகள் பற்றிய தகவல்களும் வெளிவரக் கூடும்.

எது எவ்வாறிருப்பினும் அந்த வழக்குக்காகவும் கடன் மீள்கட்டமைப்பு நடவடிக்கைகளுக்காகவும் கடன் கொடுத்தோரும் கடன் பெற்ற இலங்கையும் மிகப் பிரபலமான சட்ட ஆலோசகர்களையும் நிதி ஆலோசகர்களையும் நியமித்துள்ளனர். அவர்களது காட்டில்தான் உண்மையான மழை பெய்யப் போகிறது. ஏனெனில் இந்த நடவடிக்கைகளுக்காக அக்குறிப்பிட்ட நிறுவனங்கள் மிகப் பெரிய கட்டணங்களை அறவிடும். அக்கட்டணங்களையும் இலங்கையில் வாழும் ஒவ்வொருவரும் செலுத்த வேண்டியிருக்கும். இத்தகைய ஒரு அந்நியச் செலாவணி நெருக்கடியும் அதன் விளைவாக எழுந்த பொருளாதார நெருக்கடியும் இயற்கையாக எழுந்த வர்த்தக சகடோட்ட பின்னடைவினால் ஏற்பட்டதல்ல மாறாக அது இலங்கை தேடிப்பெற்றுக் கொண்ட நெருக்கடியாகும்.

இந்த நெருக்கடிக்கு நேரடியாகக் காரணமானவர்களை அடையாளம் காண்பது ஒன்றும் முடியாத காரியமல்ல.

(15ஆம் பக்கம் பார்க்க)

மேற்குலக நாடுகளுக்கு எதிராக பலப்படும் பிறிக்ஸ் அமைப்பு

கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

உலக அரசியலில் நாடுகளின் ஒத்துழைப்பு பாதுகாப்பையும் பொருளாதார பலத்தையும் ஏற்படுத்திவருகிறது. முதலாம், இரண்டாம் உலகப் போர்களும் அதற்கு பின்பான சிறிய போர்களும் அத்தகைய கூட்டுப் பாதுகாப்பிற்கான அடிப்படைகளாகவே அமைந்திருந்தன. நாடுகள் பொருளாதார தேவைகளை நிறைவு செய்யவும் பாதுகாப்பினைப் பலப்படுத்தவும் அத்தகைய உத்திகளை கையாண்டுவருகின்றன. குறிப்பாக வளங்கள் சார் போட்டித் தன்மை நிலவுவதனால் அதனை எதிர்கொள்ளவும் பிராந்திய அடிப்படையில் திரட்சியாக செயல்படவும் புவிசார் அரசியல் நெருக்கடியை சரிசெய்து கொள்ளவும் அத்தகைய செய்முறையை பிரயோகித்து வருகின்றனர். இரண்டாம் உலகப் போருக்கு பிந்திய சூழலில் எழுந்த பிராந்திய அமைப்புக்களில் ஆசியான் வலுவானதாக காணப்படுகிறது. அவ்வாறே மிகப் பிந்திய சூழலில் எழுச்சி பெற்ற பிறிக்ஸ் ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளை மையப்படுத்திய ஒத்துழைப்பு அமைப்பாக விளங்குகிறது. இக்கட்டுரையும் சீனாவில் நடைபெற்ற பிறிக்ஸ் மகாநாட்டின் உரையாடல்களையும் அதன் முக்கியத்துவத்தையும் தேடுவதாக அமையவுள்ளது.

முதலாவது, 14 வது பிறிக்ஸ் மகாநாடு சீனாவின் தலைநகரில் காணொளி மூலம் சீனாவின் ஜனாதிபதி ஜி.ஜின்பிங் தலைமையில் நடைபெற்றுவருகிறது. பிறேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாபிரிக்கா போன்ற நாடுகளைக் கொண்ட அமைப்பானது 2009 யூலையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு 2010 இல் ஆரம்பிக்கப்பட்டு வளரும் நாடுகளின் அமைப்பாக விளங்குகிறது. இந்த ஆண்டுக்கான தலைமை சீனாவிடம் உள்ளதனால் இந்த ஆண்டு சீனாவின் பிறிக்ஸ் ஆண்டாக சீனா அறிவித்துள்ளது. எல்லா நாட்டின் தலைவர்களும் கலந்து கொண்டதுடன் அந்நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் சந்திப்பும் பிரதான நிகழ்வாக அமைந்துள்ளது. இவ் உச்சி மகாநாட்டில் பெய்ஜிங் பிரகடனம் ஒன்றினை சீனா முன்வைத்ததோடு சீனாவின் ஜனாதிபதி நீண்ட உரையென்றினை தலைமை என்ற அடிப்படையில் முன்வைத்திருந்தார்.

இரண்டாவது, பிறிக்ஸ் உச்சிமகாநாட்டில் உரையாற்றிய தலைவர்கள் அதிகம் பிறிக்ஸ் அமைப்பின் எதிர்காலம் பிரகாசமானதாக அமையும் எனவும் உலகத்தில் முன்னணி அமைப்பாக வளரும் எனவும் எதிர்வு கூறினர். குறிப்பாக தென்னாபிரிக்க ஜனாதிபதி சிரில் ரமபோசா தென்னாபிரிக்காவின் வளர்ச்சிக்கும் பொருளாதார விருத்திக்கும் பிறிக்ஸ் பங்காற்றுகிறது எனத் தெரிவித்தார். அவ்வாறே ஆபிரிக்காவின் பொருளாதார நிபுணர்கள் ஆபிரிக்காவின் பொருளாதார ஒருங்கிணைப்புக்கு சிறப்பான வாய்ப்புக்களை பிறிக்ஸ் வழங்கியது எனத் தெரிவித்துள்ளனர். உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்த பிறிக்ஸ் நாடுகள் ஒத்துழைக்க வேண்டும் என சீனா தெரிவித்தது. வர்த்தக ரீதியான மாற்றங்களுக்கும் வளர்ச்சிக்கும் அடிப்படையான களத்தை பிறிக்ஸ் ஏற்படுத்தியுள்ளதாக பொருளாதார நிபுணர்கள் வெளிப்படுத்தினார்கள்.

மூன்றாவது, மகாநாட்டின் தலைவரான சீன ஜனாதிபதி உரையாற்றும் போது உலகப் போக்குசார்ந்து பலவிடயங்களை கோடிகாட்டியிருந்தார். குறிப்பாக உலகம் பாரிய சவால்களை எதிர்நோக்குவதாகவும் பொருளாதாரம், பெருந்தொற்று, பாதுகாப்பு போன்ற சவால்களையும் கண்ணுக்கு புலப்படாத நெருக்கடியையும் உலகம் எதிர்கொள்வதாகவும் தெரிவித்துள்ளார். பூகோளத்தின் விருத்தியானது அதிக தடைகளுக்குள் அகப்பட்டுள்ளது. உலகத்தின் போக்கானது போர் அல்லது சமாதானம், திறந்துவிடப்படல் அல்லது தனிமைப்படுத்தப்படுதல், ஒத்துழைத்தல் அல்லது முரண்படுதல் என்ற தளத்தில் இயங்குகிறது என்றார் ஜின்பிங்.

நான்காவது, ஜின்பிங்ன் உரையில் அதிகம் முதன்மைப்படுத்தப்பட்டதாக அமைந்திருந்த விடயம் அமெரிக்கா அடங்கிய மேற்குலகத்தின் நகர்வுகள் மீதான குற்றச்சாட்டாக அமைந்திருந்தது. அதனை விரிவாக நோக்குவது அவசியமானது.

பொருளாதாரத் தடைகள் பூமராங் போன்றவை. இருபுறமும் கூர்மையான வாளுக்கு ஒப்பானவை. சர்வதேச நிதி அமைப்புக்கள் ஆதிக்கம் செலுத்துவதன் மூலம் உலகப் பொருளாதாரத்தை அரசியலாக்குபவர்கள் மற்றும் வேண்டுமென்றே பொருளாதாரத் தடைகளை வதிப்பவர்கள் இறுதியில் மற்றவர்களுக்கும் தங்களுக்கும் தீங்கு விளைவிப்பார்கள். அத்துடன் உலக மக்களுக்கும் பேரழிவை ஏற்படுத்துவார்கள். சர்வதேச மேலாதிக்கம் குழு அரசியல் மற்றும் கூட்டு மோதல்கள் அனைத்தும் அமைதியையோ நிலைதிருக்கும் தன்மையையோ தரப்போவதில்லை மாறாக போரையும் வன்முறையையும் ஏற்படுத்துவதை உலக வரலாறு முழுவதும் காட்டுவதாகத் உள்ளது என பிங் தெரிவித்தார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் உரையாற்றுகின்ற போது மூலோபாய ஒத்துழைப்புக்கான அமைப்பாக இந்த ஆண்டு பிறிக்ஸ் அமைப்பு விளங்குகிறது. பிராந்திய மட்டத்திலும் பூகோள மட்டத்திலும் ஒத்துழைப்பினை உருவாக்குவதை இலக்காகக் கொண்டுள்ளது. பிறிக்ஸ் படிப்படியாக அதன் அந்தஸ்தும் செல்வாக்கும் உலகளாவிய ரீதியில் வளர்ச்சியடைகிறது. உலகளாவிய பாதுகாப்பினை வலுப்படுத்தும் அதே நேரம் நிலைத்திருக்கும் வளர்ச்சியை ஏற்படுத்துவது அவசியமானது எனவும் காலநிலை மாற்றத்திற்கும் மற்றும் பயங்கரவாதத்துக்கும் எதிராகவும் ஒன்று சேர்வதுடன் சர்வதேச மட்டத்தில் நிகழும் எல்லை ஆக்கிரமிப்பினையும் தடுத்து நிறுத்த போராடுவதும் அவசியமானது என்றார் ரஷ்ய ஜனாதிபதி. மேலும் அவர் தெரிவிக்கும் போது உலகத்தின் அமைதியை குலைக்கும் விதத்தில் சில நாடுகள் தமது நலனுக்காக பொருளாதார ஆக்கிரமிப்பையும் நிதி நிறுவனங்களது ஆக்கிரமிப்பையும் மேற்கொண்டுவருகின்றன. இவற்றுக்கு எதிராக பிறிக்ஸ் நாடுகள் ஒத்துழைப்பை பலப்படுத்தியுள்ளன. ரஷ்யா உலகளாவிய தளத்தில் பிறிக்ஸ் அமைப்பின் உயர்வான பங்களிப்பை சர்வதேச விவகாரங்களில் ஈடுபடத் தயாராக உள்ளது எனவும் குறிப்பிட்டார்.

இவற்றைவிட இந்தியா, பிறேசில், மற்றும் தென் ஆபிரிக்கத் தலைவர்கள் பிறிக்ஸ் அமைப்பின் ஒத்துழைப்பினையும் வளர்ச்சிக்கான வாய்ப்புக்களையும் முதன்மைப்படுத்தியிருந்தனர். பொருளாதார ஒத்துழைப்புக்களை பலப்படுத்துவதுடன் பரஸ்பரம் நாடுகளுக்கிடையிலான புரிந்துணர்வை ஏற்படுத்துவது தொடர்பிலும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தினார்.

உக்ரையின் ரஷ்ய போருக்கு பின்னரான பிறிக்ஸ் நாடுகளின் சந்திப்பு என்ற வகையில் முக்கியத்துவம் பெற்றதாக காணப்பட்டது. குறிப்பாக ரஷ்யா மீதான பொருளாதாரத் தடைக்கு எதிரான உரையாடல்கள் சீனாவாலும் ஏனைய நாடுகளாலும் முதன்மைப்படுத்தப்பட்டிருந்தன. அமெரிக்காவும் ஏனைய மேற்கு நாடுகளும் பொருளாதார மற்றும் நிதி நிறுவனங்களை தமது கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு மேற்கொள்ளும் ஆக்கிரமிப்பு நகர்வுகளை மநாடு அதீதமாக கண்டித்ததுடன் இந்தியா ரஷ்யா என்பன பிறிக்ஸ் வங்கிக் கட்டமைப்பின் வலிமையை அதிகரிப்பது தொடர்பிலும் கருத்துத் தெரிவித்திருந்தன.

மேற்குலகத்தின் பொருளாதாரத் தடை தொடர்பில் அதிக கண்டனங்களை வெளிப்படுத்திய மகாநாடு எதிர்கால சவீட்சத்திற்கான பொருளாதார வாய்ப்புக்களை பலப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளது. இது ஒரு பொருளாதார வர்த்தக கட்டமைப்பாக அமைந்திருந்தாலும் உலகளாவிய பாதுகாப்பைப் பொறுத்து அதிக கவனத்தை ஏற்படுத்தியுள்ளது. சர்வதேச சட்டங்களையும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் விதிகளையும் மீறுகின்ற செய்முறைகள் தொடர்பிலும் அதிக உரையாடல்களை பிறிக்ஸ் அமைப்பு ஏற்படுத்தியுள்ளது.

எனவே பிறிக்ஸ் மகாநாடும் அதன் உரையாடல்களும் மேற்குலக நாடுகளுக்கு எதிரானதாகவே அமைந்திருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. அதே நேரம் ரஷ்யாவுக்கான ஆதரவையும் உலகளாவிய பாதுகாப்பினையும் வலியுறுத்தியதுடன் உலக மக்களது நிலைத்திருப்பையும் அவர்களது உணவுப் பாதுகாப்பினையும் முதன்மைப்படுத்தும் உரையாடலாகவும் அமைந்திருந்தது. எதுவானாலும் ரஷ்யா மீதான பொருளாதாரத் தடைகளும் மேற்கு நாடுகளுக்கு எதிரான நகர்வையுமே பிறிக்ஸ் அமைப்பு கொண்டுள்ளது என்ற எண்ணத்தை மீள ஒருதடவை உறுதிப்படுத்தியுள்ளது. பாரியளவான சந்தையையும் பொருளாதார வளங்களையும் நிதி வலுவையும் கொண்ட நாடுகளான பிறிக்ஸ் அமைப்பு மேற்குலகத்திற்கு சவாலானதாக மாறிவருவதைக் காணமுடிகிறது.

வாழ்வாதாரமா சேதாரமா 228

இன்றைக்கும் விடியாத எமது அகதி வாழ்க்கை

'அரிவாளும் ஆடக் குடுவையும் ஆடும் அரிவாளும் நிக்க குடுவையும் நிக்கும்' இது எங்கள் கிராமத்துப் பழமொழி.

'அதெல்லாம் முந்தியொரு காலம் மூத்தண்ணன் இருந்த காலம் இப்ப ஆர் உதுகளை கவனத்தில வச்சிருக்கினம்.' என்று எனது பூட்டியாச்சி விசனப்படுவா. அதாவது, ஒவ்வொரு விவசாயிக்கும் இருந்த நிலம் ஏக்கர் கணக்கில் அளவு செய்யப்படாமல் அதன் விதைப்புக்கான நெல்லை வைத்தே அளவு செய்த காலம். எனது பாட்டிக்கு (பூட்டியல்ல) பாட்டிக்கு ஆறு மரக்கால் தரை இருந்ததாம். அவர் தனது மூத்த மகனுக்கு இரு மரக்காத்தரையும், பெண் பிள்ளைகள் இருவருக்கும் தலா இரண்டு மரக்காத்தரையும், கொடுத்தார் அதையும் தனக்கு சீவிய உரித்து வைத்துத்தான் எழுதினார்.

இந்த மரக்கால் என்பது புசல் எனப்படும் மரத்தால் செய்யப்படும் அளவுப் பெட்டி. ஒரு புசல் பெட்டி அரைப்புசல் பெட்டி காப்புசல் பெட்டி அதற்கும் குறைய கொத்து அதிலும் அரைக்கொத்தும் இருக்கும். 'முகத்தலளவை' எனப்படும் அளவைகள் இவை. பதினாலு கொத்து அரைப்புசல். இருபத்தெட்டுக் கொத்து ஒரு புசல். ஒரு புசல் நெல் விதைக்கும் நிலமே ஒரு மரக்கால் தரை எனப்படும். ஏறக்குறைய அது கால் ஏக்கர் நிலம்தான் அதற்கு மேலும் நிலம் இருக்கும் அதில் சிறிதளவாக குரக்கன், சாமை தினை என்பனவும் புத்துகளை வாட்டமாக சரித்து அதில் பூசணி, சுரை பாகல் வெள்ளரி எனவும் பயிரிடுவர். மானாவாரிப் பயிர்கள்தான். மானா என்பது மருவிய சொல் வானாமாரி என்பதே சரி அதாவது வானத்தைப் பார்த்து அந்த மழையில் விளையும் நிலம் மானாவாரி.

ஒவ்வொருவருடைய நிலத்திலும் விளையும் இத்தானியங்கள் அவர்கள் வீட்டிலேயே இருக்கும் உணவுக்காக அவை கவனமாக சேர்த்து வைக்கப்படும். விதைக்காகவும் தனியாக சேமிப்பர். எல்லாம் வெள்ளைக்காரர்களின் வருகையின் பின் மாற்றமடைந்தன.

மன்னர்கள் வெட்டிவைத்து விவசாயத்துக்கு வழங்கிய நிலங்களை கைவிட்டுவிட்டு மக்கள் வெள்ளையர்கள் கொடுக்கும் கூலிக்கு வேலைக்குப் போனார்கள். கூலியாக கிடைத்த கோதுமை மாவும், றேசன் பொருட்களும் உணவுப் பழக்கத்தை மாற்றின. மன்னர்கள் கட்டிய குளங்கள் முறிந்தும் சேதமடைந்தும் நிலங்கள் காடுகளாகியும் மறைந்தன.

என் தந்தை சொல்வார் 'காணி பூமிக்க மினைக்கெட்டா சாப்பாடு ஆர் தாற? ஒரு சோடி மாடும் வண்டிலும் இருந்தது. அதைக்கொண்டு விமானத்தளத்துக்கு கல்லு ஏத்திப்பறிக்கப் போறதுதான். காசு தருவங்கள். அப்பிடியே பருப்பு, டின்னில அடைச்ச இறைச்சி எண்டு சந்தோசமா தருவாங்கள். என்ன ருசி.' இந்த ருசியானது வேலை முடிந்த பிறகும் அவற்றை கடைகளில் விலை கொடுத்து வாங்க வைத்தது.

'வேணிச்சங்கரர் தொண்டர்கள் என்று
வீடு தோறும் சென்று இரப்பவர்க்கெல்லாம்
மாணிக்கமள்ளி பிச்சை கொடுத்திடும்
மாவலிகங்கை நாடெங்கள் நாடே.'

அந்தப்புலவனுக்கு அப்படிப் பாடுமளவுக்கு எமது மண் வளமாக மாறியகாலம், ஒன்றிருந்தது. அதுவும் அந்நியர் ஆட்சிக்காலம்.

பிரித்தானியர்களின் ஆட்சிக்காலத்தில் எமது மக்களை வளப்படுத்தி அதன்மூலம் நாட்டை வளமாக்க நினைத்த ஒரு ஆள்பதி றிச்வேயால் முதன்முதலில் நீர்பாசனங்களை கவனிக்க நீர்ப்பாசன திணைக்களம் என ஒரு காரியாலயம் உருவானது. இந்த திட்டத்தின்கீழ் ஏராளமான குளங்கள் புனரமைக்கப்பட்டன. ஹென்றிபாக்கர் என்ற திணைக்கள உத்தியோகத்தரின் கடின முயற்சியால் ஆயிரத்து தொளாயிரமாம் (1900) ஆண்டு வடபகுதிக்காக (50000) ஐம்பதாயிரம் ரூபாக்கள் ஒதுக்கப்பட்டன. தொடந்து வந்த ஆள்பதி பிளாக். வடபகுதியின் குளங்களை புனரமைப்பதில் அதிக கவனம் செலுத்தியதாக தெரிகிறது. 'யயன் ஸ்ராங்க்' எனப்படும் மன்னார் கட்டுக்கரைக்குள வேலைகள் உடனடியாக முன்னெடுக்கப்பட்டு அதன் நீர் கொள்ளவு நூற்றிநாலு கோடியே அறுபது லட்சம் கனஅடி (1,04,60,00,000) நீர் தாங்கும் அளவுக்கு கட்டப்பட்டது. இதேபோல கரைச்சி நீர்பாசனக்குளமான இரணைமடுத் தேக்கமும் இருபதாயிரம் ஏக்கர் விவசாய நிலத்தை இலக்கு வைத்து முடிக்கப்பட்டது.

இப்போது அவ்வளவு நிலம் பயிரிடப்பட்டாலும், நெல் என்னவோ வெளி மாவட்டங்களுக்கு போய்விடுகிறது. உள்ளூரில் பசித்திருப்போர் அதிகமாகிக் கொண்டிருக்கிறார்கள். கரைச்சிப்பிரதேச குளங்களில் பெரும்பாலும் குடியேற்றங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அவர்களால் அவர்களது வீடுகளை காப்பாற்ற அதாவது குளத்து நீர் தமது வீடுகளுக்குள் பாயாமல் இருக்க டிப்பர்களில் கொண்டு வந்து கொட்டப்படும் மண்ணால் குளங்கள் மூடப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அபிவிருத்தி என்பது தனிமனிதனின் செயல்களில் தங்கியிருப்பதல்ல அது ஒட்டு மொத்த சமுதாயத்தின் செயற்பாடாக வளர்த்தெடுக்கப்பட வேண்டும். நான் மட்டும் வாழ்ந்தால் போதும் என நினைப்பவர்களே இன்று அதிகம். அவர்கள் தமது சந்ததியினரைக் கூட நினைக்கவில்லை. இவர்களை இந்த மண்ணிலிருந்து வெளியேற்றி வெளிநாடுகளில் அகதியாக வாழ நிர்ப்பந்திக்கின்றனர். ஒரேயொரு பிள்ளையைப் பெற்றவர்கூட அவனை வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டு அவன் அனுப்பும் பணத்தில் குளங்களையும் புறம்போக்கு நிலங்களையும் ஆக்கிரமித்து வாழ்கின்றனர். சிறு நிலத்துண்டுகளில் பயிரிட்டு வருடம் முழுதும் வாழ்ந்த குடும்பங்கள் இன்று பல ஏக்கர் நிலத்தில் விதைத்து பெருமளவு விளைச்சலை பெற்றாலும், அவை வீட்டுக்கே வராமல் அறுவடை செய்த நிலத்திலேயே வைத்து விற்கப்படுகிறது. விவசாய விஞ்ஞானி நம்மாழ்வார் ஒரு கதை சொல்வார். ' மாடு பால் தருகிறது. அது நீராகத்தான் தரும் அதைநாம் டிப்போவுக்கு விற்றால் அவன் அதை பால் பவுடராக்குகிறான் பின்னர் பைக்கற்றில் அடைத்து மீண்டும் எங்களிடமே தந்து காசாக்கி விடுகிறான். நாம் அந்தப்பாலை மீண்டும் நீரை சுடவைத்து அதில் கரைத்து பாலாக குடிக்கிறோம். எங்களுடைய மாட்டுப்பாலை உடனே குடித்தால் பிடிக்கவில்லை இப்படி எதாவது திருகுதாளம் பண்ணி கொண்டுவந்தால் வாங்கிக் கொள்கிறோம்.'

சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன், இந்த மாதங்களில் எமது ஏநைன் வீதியில் தலை நிறைந்த வெங்காய மூடைகள், செத்தல்மிளகாய் மூடைகள், வாழைக்குலைகள் புகையிலைகட்டுகள் எனபவற்றுடன் தலைநகர் நோக்கிச் செல்லும் பாரஊர்திகள் இடையறாது ஓடிக் கொண்டிருக்கும். மாலைமுதல் விடிந்து வெயிலேற முன்னம் இவை கொழும்பை சென்றடையும். இன்றும் அதேபோல பார மேற்றிய டிப்பர்கள் பயணிக்கின்றன. அவற்றில் எந்த விளைபொருளும் இல்லை மணல், மண் கல் மரம் என்பவற்றையே ஏற்றிச் செல்கின்றன. அன்றாடம் நீதிமன்றின் முன் வரிசைகட்டி நிற்கும் வாகனங்கள் (பிடிக்கப்பட்டவையாம்) காணப்பட்டாலும் அதேவாகனங்கள் ஓரிரு வாரத்தின்பின் அந்த பொருட்களை மீளவும் ஏற்றிச் செல்கின்றன.

இதே உள்ளூரில் விடியுமுன் வயலுக்கு சென்று வெயிலேறுமுன் வைக்கோல் ஏற்றிவரும் வாகனங்களையும் தென்னைமட்டை ஏற்றும் வண்டிகளையும் காணவில்லை . மாடுகளுக்கு உணவாகும் வைக்கோல், வீடுகளை வேய உதவும் வைக்கோல் இப்போது இல்லை. அவை கைவிடப்பட்டுவிட்டன கிடுகுகளாக மாறிய ஓலைகள் தீயிட்டுக் கொழுத்தப்படுகின்றன. அழகான நெற்கதிரை எமக்கு எடுத்துக் கொண்டு வைக்கோலை மாட்டுக்கு கொடுப்போம். நெல்லைக் குத்தி அரிசியை எடுத்துக் கொண்டு தவிட்டை மாட்டுக்கு கொடுப்போம். மாடுகள் அதை சாப்பிட்டுவிட்டு பால் கொடுக்கும் சாணம் போடும் சாணம் சிறந்த பசளையாக நிலத்துக்குப் போகும். எல்லாம் அழிந்தன. எமது மண்ணின் வளங்களையெல்லாம் கோப்ரேட் கம்பனிகளிடம் அடகு வைத்துவிட்டு இன்று தெருவில் நிற்கிறோம் இரசாயனப்பசளைகள் எமது மண்ணுக்கு இனக்கலவரம் நடந்த போது 1958 தான் முதலில் வந்தது. விவசாயிகள் அதை மிக கவனமாகத்தான் கையாண்டார்கள். இன்று அதில்லாமல் எதுவுமே இல்லை என்றளவுக்கு மண்ணை பழக்கியிருக்கிறோம். இந்த நிலை என்று மாறுமோ? அன்றுவரை நாம் எமது அகதி வாழ்க்கையை முடிக்கவில்லை என்பதுதான் அர்த்தம்.

இலண்டனில் மலையக இலக்கிய மாநாடு

இலண்டன் விம்பம் அமைப்பின் ஆதரவுடன் மலையக இலக்கிய மாநாடு மிகச் சிறப்பாக, கடந்த சனிக்கிழமை, ஆனி மாதம் 11ம் திகதியன்று (11.6.2022), நடைபெற்றது. இந்நிகழ்வில் பல நாடுகளிலிருந்து இலக்கிய ஆளுமைகள் கலந்து கொண்டதோடு, ஒரு முழு நாள் நடந்தேறிய நிகழ்வுகளின் ஏழு அமர்வுகளில், ஆய்வுக் கட்டுரைகள், சிறுகதைத் தொகுப்புகள், கவிதைத் தொகுப்புகள் உள்ளிட்ட பல மலையக இலக்கியங்களை பல எழுத்தாளர்களும், இலக்கிய ஆளுமைகளும், சமூக ஆர்வலர்களும் இங்கு அறிமுகமும் விமர்சனமும் செய்தனர்.

முதலாவது அமர்வை காத்தாயி முத்துசாமி நினைவாக மு நித்தியானந்தன் தலைமை தாங்கி, காத்தாயி முத்துசாமி பற்றி அறியப்படாத விபரங்களை எடுத்துரைத்து இவ்வரங்கை ஆரம்பித்து வைத்தார். அத்தோடு அவர் பி பெரியசாமியின் தோட்டத் தொழிலாளரின் வீரப்போராட்டம் குறித்தும் அறிமுகமும் சுருக்கமாக விமர்சனமும் செய்திருந்தார். இவ்வரங்கில் நோர்வேயிலிருந்து சமூகமளித்திருந்த ந சரவணன் மல்லியப்புசந்தி திலகரின் மலைகளைப் பேச விடுங்கள் உரை பற்றியும், வரதன் கிருஷ்ணாவின் வெந்து தணியாத பூமி குறித்து எம் பௌசரும் சிறப்பான விமர்சனம் செய்திருந்தனர்.

இந்த முதலாவது அரங்கின் நாயகி, காத்தாயி முத்துசாமியை நினைவு கூறும் வகையில் காத்தாயி முத்துசாமியின் துயர் படிந்த வரலாற்றை சாம் பிரதீபனின்,நெறியாள்கை, எழுத்துருவில் ரஜித்தா பிரதீபன், மற்றும் பல கலைஞர்களும் இணைந்து ' காத்தாயி காதை' எனும் குறு நாடகத்தின் வாயிலாக பார்வையாளர்கள் அத்தனை பேரின் மனங்களிலும் படியும்படி வெளிப்படுத்தியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதைத் தொடர்ந்து வந்த இர சிவலிங்கம் அரங்கிற்கு செல்லத்தம்பி சிறிக்கந்தராசாவும், கோகிலம் சுப்பையா அரங்கிற்கு மீனாள் நித்தியானந்தனும், சோ சந்திரசேகரம் அரங்கிற்கு க ஆதவனும், சி. வி. வேலுப்பிள்ளை அரங்கிற்கு வி சிவலிங்கமும், தமிழோவியன் அரங்கிற்கு மாதவி சிவலீலனும், சாரல் நாடன் அரங்கிற்கு நா சபேசனும் தலைமை தாங்கி, இங்கு கலந்து கொண்ட எழுத்தாளர்கள் இலக்கிய ஆர்வலர்கள் வாயிலாக 26 மலையக நூல்களையும் ஆய்வுக்கட்டுரைகளையும் அறிமுகமும் விமர்சனமும் செய்வதற்கு உதவி புரிந்தனர்.

நவரட்ணராணியின் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பும் இம்மாநாட்டில் எடுத்துக் கொள்ளப்பட்ட சிறுகதைத் தொகுப்பு, நாவல், கவிதை, கூத்து, அரசியல், பொருளாதார சட்டவியல் சார்ந்த பல்துறைகளை அடிப்படையாகக் கொண்ட இலக்கியங்களை அழகுபடுத்தின.

இந்த மாநாட்டில் பேசப்பட்ட அனைத்து மலையக படைப்பிலக்கியங்கள் குறித்த விமர்சனங்களும் உரைகளும் கூடிய விரைவில் நூல் வடிவம் பெற இருப்பதும் இம்மாநாட்டின் தனிச்சிறப்பாக இருக்கிறது எனலாம். இந்நூல்களும் அதன் ஆசிரியர்கள் குறித்த விபரங்களும் புகைப்படங்களோடு இணைக்கப்பட்டிருக்கின்றன.

மலையக இலக்கியம் பற்றி இன்னமும் பரவலாக அறிந்து கொள்ளப்படாத ஒரு காலகட்டத்தில் இவ்வாறான முன்னெடுப்புகள் இவ்வகை அரிய படைப்புகளை பல வாசகர் மட்டத்திற்கும் எடுத்துச் செல்லும் என்பது முக்கியமாக கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவேண்டும். ஒடுக்கப்பட்ட மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் வலிகளும், அவர்கள் அரசியல், சமூக, பொருளாதார , குடியியல் சார்ந்த தளங்களில் எதிர் நோக்குகின்ற சவால்களும் இந்நூல்களின் வழியாக பலதரப்பட்ட மக்களையும் சென்றடைய வேண்டும், அவர்கள் மத்தியில் மலையக மக்களின் சிக்கல்கள் குறித்த விழிப்புணர்வொன்று ஏற்பட வேண்டும் என்பதே இங்கு கலந்து கொண்ட அனைவரினதும் ஏகோபித்த குறிக்கோளாக, குரலாக இருந்ததை அவர்கள் உரையிலிருந்து கணிப்பிடக் கூடியதாய் இருந்தது.

இத்தனை நிகழ்வுகளோடு இன்னொரு மிக முக்கியமான விடயமாக இங்கு பார்வைக்கு வைக்கப்பட்டிருந்த மலையகச் சிறார்களின் அற்புதமான 132 ஓவியங்களையும், 200க்கும் மேற்பட்ட மலையகத்தின் அரிய படைப்பிலக்கியங்களையும் கூறலாம்.

இம்மாநாட்டில் இத்தனை நூல்களின் அறிமுகத்தையும் விமர்சனத்தையும் ஒரு முழு நாள் நிகழ்வாக எடுத்துக்கொண்டதும் அவற்றைத் திறம்பட ஒருங்கிணைத்து, நெறிப்படுத்தி சமூக ஆர்வலர்கள், வாசகர்களை அன்போடு வரவேற்று உணவுகள், சிற்றுண்டிகள், தேனீரோடு உபசரித்ததும் கனதியான இந்நாளை ஒரு மிக மகிழ்ச்சிக்குரிய மறக்க முடியாத இலக்கிய நிகழ்வாக மாற்றியிருந்தது,

இந் நிகழ்வின் ஏற்பாட்டாளர்களின் விம்பம் அமைப்பின் பலம் என்று தான் கூற வேண்டும்.

விம்பம் தொடர்ந்தும் இவ்வாறான காத்திரமான இலக்கிய நிகழ்வுகளை முன்னெடுக்க வேண்டும், உச்சம் தொட வேண்டும் என்று நெஞ்சம் நிறைந்து வாழ்த்துகிறோம்.

பூங்கோதை ...✍

இந்திய பிரபல எழுத்தாளர்

கு. சின்னப்பபாரதி நினைவலைகள்...!

இலங்கை மக்கள் நன்கறிந்த இந்திய எழுத்தாளர் கு. சின்னப்பபாரதி கடந்த 13 ம் திகதி திங்கட்கிழமை மாலை (13 06 2022) சிந்திப்பதை நிறுத்திக்கொண்டார். இலங்கைப் படைப்பாளிகளையும் வாசகர்களையும் மிகவும் கவர்ந்தவர் சின்னப்பபாரதி. தமிழ் வாசகர்களை மாத்திரமன்றி சிங்கள வாசகர்களையும் கவர்ந்தவர். எழுத்தாளர் மொழிபெயர்ப்பாளர் காலஞ்சென்ற உபாலி லீலாரத்தினாவின் மொழிபெயர்ப்பில் சிங்கள மொழியில் சின்னப்பபாரதியின் நாவல்கள் சில சிங்கள வாசகர்களுக்கு அறிமுகமாகின.

அதிக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுச் சாதனை படைத்தவை சின்னப்பாரதியின் நாவல்களாகும். 1935 ம் ஆண்டு நாமக்கல் மாவட்டம் வாழவந்தி பொன்னேரிப்பட்டிக் கிராமத்தில் குப்பண்ணக் கவுண்டர் பெருமாயி அம்மாள் விவசாயத் தம்பதிகளின் மகனாகப் பிறந்தவர் சின்னப்பபாரதி. ஆரம்பக் கல்வியை முடித்தபின் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் உயர்கல்வியைத் தொடர்ந்தார். கல்லூரியி;ல் டாக்டர் மு. வரதராசனின் மாணவராகப் பயின்றதனால் தமிழ்ப்பற்று மிகப்பெற்று எழுதத் தொடங்கினார். ஆரம்பத்தில் கவிதை எழுதத் தொடங்கியவர் பின்னர் சிறுகதை நாவல் எழுதும் ஆவல்கொண்டார்.

ரஷ்ய எழுத்தாளர்கள் பாரதி ஆகியோரின் படைப்புகளால் ஈர்க்கப்பட்டவர். பாரதிமீது கொண்ட பற்றினால் சின்னப்பன் என்ற பெயரைச் சின்னப்பபாரதி என மாற்றிக்கொண்டார்.

கல்லூரிக் காலத்தில் மாணவர் போராட்டங்களில் கலந்துகொண்டவர் மார்க்சிஸப் பாதையை வரித்துக்கொண்டார். கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து செயற்படத் தொடங்கினார். கட்சியில் பல பொறுப்புகளை ஏற்றுச் செயற்பட்டார்.

நில உச்சவரம்புப் போராட்டத்தில் பங்கெடுத்து 650 கி. மீற்றர் நடைப்பயணம் போனார். இந்திரா பிரதமராக இருந்தவேளை கொண்டு வரப்பட்ட அவசரநிலைப் பிரகடனத்தின்போது கைதுசெய்யப்பட்ட எழுத்தாளர் இவரெனக் கூறுவர்.

கட்சியின் வேண்டுகோளை ஏற்று மலைவாழ் மக்கள் மத்தியில் வேலைசெய்தார். விவசாயிகளை ஒருங்கிணைத்து அவர்கள் உரிமைகளுக்கான போராட்டங்களை முன்னெடுத்தார். பல சந்தர்ப்பங்களில் உயிராபத்தையும் சந்திக்க நேர்ந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

உயிர்; உணர்வு சார்ந்த படைப்பே நாவலாக உருவெடுப்பதாகக் குறிப்பிட்டவர். திருவாரூர் மாவட்டத்தில் நிலச்சுவாந்தர்கள் பண்ணையாளர்களிடம் சிக்கித் தவிக்கும் மக்களின் நிலையை அங்கு சென்று தங்கியிருந்து கவனத்திலெடுத்துகொண்டார். அந்த மக்களின் அவல நிலையை உணர்வு பூர்வமாகச் சித்தரித்து 'தாகம்" என்ற தனது முதல் நாவலை வெளிக்கொணர்ந்தார். இந்நாவல் விமர்சகர்களின் கவனத்தை ஈர்த்துப் பாராட்டுப் பெற்றது.





யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தின் முதல் தலைவராகப் பேராசிரியர் கைலாசபதி கடமையாற்றியபோது 1976 ம் ஆண்டு தமிழ் நாவல் நூற்றாண்டு விழாவை நடாத்தினார்.

இந்நிகழ்வில் தமிழில் சிறந்த பத்து நாவல்கள் குறித்துக் கருத்தரங்கு நடந்தது. கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டு உரைகள் இடம்பெற்றன. அதிலொன்றாகச் சிறந்த நாவலான 'தாகம்" குறித்தும் உரை இடம்பெற்றது ஞாபகத்திலுண்டு. கம்யூனிஸ்ட் கட்சி பிளவுபட்டபோது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் செயற்பட்டார்.

முழுநேரச் செயற்பாட்டாளராக விவசாயிகள் தொழிலாளர்கள் ஐக்கியத்தை கட்டி வளர்த்தார். உரிமைப் போராட்டங்களை முன்னெடுத்தார். கொல்லிமலை வாழ் விவசாயிகள் அனுபவிக்கும் துன்ப துயரங்களை கண்டறிந்தார். அந்த மக்களுக்கான போராட்டங்களை முன்னெடுத்தார். கந்துவட்டிக் காரர் வியாபாரிகளது எதிர்ப்புகளைச் சமாளித்துத் துணிச்சலுடன் களத்தில் பணியாற்றினார். இந்த அனுபவங்களுடன் 'சங்கம்" நாவலைப் படைத்தார். கரும்பு ஆலைத் தொழிலாளர்கள் விவசாயிகளின் வாழ்வியலைக் குறிக்கும் 'சர்க்கரை" நாவலைப் படைத்தார்.

விதவைப் பெண்ணின் வாழ்க்கைப் போராட்டத்தைச் சொல்வது 'பவளாயி" நாவல். மேற்கு வங்க மாநிலத்திலுள்ள அசன்சால் பத்துவான் சுரங்கங்களுக்குச் சென்றார். சுரங்கத் தொழிலாளர்களுடன் சில மாதங்கள் தங்கியிருந்து சுரங்கத்துள் இறங்கியும் அவர்களது கடின உழைப்பைக் கவனித்துக்கொண்டார்.

சுரங்கத்துள் 55 வயதுக்கு மேற்பட்டவர்களை அனுமதிக்கமாட்டார்கள். ஆனால் 77 வயதில் சுரங்கத்துள் இறங்க விசேட அனுமதி பெற்று பூமிக்குள் பல அடி ஆழத்திற்குள் சென்று பார்த்ததாகச் சொல்லியுள்ளார். அதற்குள் 'மாஸ்க்" அணிந்துதான் சென்றதாகச் சொன்னார். அந்தச் சுரங்கத் தொழிலாளர்களின் வாழ்நிலையைக் கவனத்திலெடுத்து 'சுரங்கம்" நாவலைப் படைத்தார். சுரங்கத் தொழிலாளர் வாழ்வு குறித்து இந்தியாவில் வெளிவந்த முதல் நாவல் இதுதானென விமர்சகர்கள் குறிப்பிட்டுள்ளனர். தாகம் சங்கம் சர்க்கரை சுரங்கம் பவளாயி தலைமுறை மாற்றம் பாலைநில ரோஜா என ஏழு நாவல்களை எழுதியவர். இறுதிக் காலத்தில் எழுதிய நாவல் வெளிவந்ததாகத் தெரியவி;ல்லை. 'தெய்வமாய் நின்றாள்" என்ற காவியத்தையும் 'கிணற்றோரம்" என்ற குறுங்காவியத்தையும் படைத்துள்ளார். 'கௌரவம்" என்ற சிறுகதைத் தொகுதியையும் கவிதைத் தொகுதி ஒன்றையும் வெளியிட்டுள்ளார். இவரது தாகம் சங்கம் சர்க்கரை பவளாயி ஆகிய நான்கு நாவல்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

சங்கம் நாவல் பிரெஞ்சு ஆங்கிலம் இந்தி வங்காளம் குஜராத்தி மராட்டி மலையாளம் தெலுங்கு கன்னடம் என ஒன்பது மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியாகியுள்ளன.

தாகம் நாவல் ஏழு மொழிகளிலும் பவளாயி சுரங்கம் நாவல்கள் ஆறு மொழிகளிலும் ஆறு நாவல்கள் இந்தி மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்துள்ளன. ஸ்பானிஷ் உஸ்பெக் சிங்களம் உட்பட 13 மொழிகளில் இவரது நாவல்கள் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சிறந்த இலக்கியப் பணிக்காகப் பல விருதுகளைப் பெற்று அவ்விருதுகளைச் சிறப்பித்தவர்.

பிரான்ஸ் மலேசியா சிங்கப்பூர் இலங்கை சீனா உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளிலுள்ள இலக்கிய அமைப்புகளின் கௌரவத்தைப் பெற்றவர்.

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர் சங்கத்தை ஆரம்பித்த முன்னோடிகளில் ஒருவர். 'செம்மலர்" இலக்கிய சஞ்சிகையின் ஆரம்ப ஆசிரியர். 2009 முதல் தனது பெயரில் இலக்கிய அறக்கட்டளையை நிறுவிப் படைப்பாளிகளை ஊக்குவிக்கும் பொருட்டு விருதும் பணமுடிப்பும் வழங்கிக் கௌரவித்து வந்தவர். (15 ஆம் பக்கம் பார்க்க)

வி.ரி. இளங்கோவன் ...✍
(பிரான்ஸ்)

கண்ணிலே அன்பிருந்தால்

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்

கண்ணிலே அன்பிருந்தால்
கதைகளோ மிருதுவாகும்
கருணையின் புரிதலிலே
காயங்களும் ஆறிவிடும்

கல்லான இதயமும்
கரைந்தே போகும்
கரையில்லாக் கடலாய்
களிப்போ பெருகிடும்

சொல்லின் அழகில்
சொர்க்கம் தெரிந்திடும்
சோதியாய் வளர்ந்து
சோகங்கள் துரத்திடும்

தரணியில் வழிந்திடும்
தாட்சண்யம் வாழ்கவே
தண்மையில் குளிர்ந்திடு
தயாளகுணம் வளர்கவே

நிந்தவூர் நுஸ்ரத்

தாயோடு ஒரு பாதி
தந்தையின் உருவகம்
நம்பிக்கையின் சரித்திரம் தந்தையே!

வியர்வைத்துளியால்
நமக்கு வாழ்வளித்த உழைப்பாளி
உயிர் கொண்டு செதுக்கிய ஊனமற்ற படைப்பாளி

உறவுகளின் விழிப்பு களை உருவாக்கிய கண்ணொளி

முத்து முத்தாய் நம் சிறு செவ்வாயில்
உதிருகின்ற வார்த்தைகளை
கோர்க் கின்ற முதல் வாத்தியார்

தெருக்கடையில் பட்டினியாக நம் உண்டி
நிரப்பும் கொடையாளி

சேற்றினிலே கால்வைத்து எம்மை
கால் சட்டை அணிய வைக்கும் கலைஞன்

பசுமையாக எம் வாழ்க்கை தந்தை எனும் கிரீடத்தால்

அது இல்லாத பிள்ளைகளுக்கு மனதளவில்
தந்தையாகி பிஞ்சுகளின் கைகளிலே
பாசத்தை பரிசளியுங்கள்

தந்தையை இழந்தவர்கள்
என்றும் மீளாத நஷ்டவாளி

துயருறும் மனங்களில்
புதையுண்டு போகும் வரை என்றுமே
மீளாத ஆத்மா தந்தையே!!!!...

தாய்

அக்கரைப்பற்று நஜ்மு

ஆயிரம் முறை அழைத்தாலும்
அலுக்காத ஒரு சொல்,
தாய்!
அழுது என்ற சொல்
அம்மா ஆகியதா?
அம்மா எனும் வார்த்தை
அழுது ஆகியதா?

ஆறறிவு மனிதனுக்கு
மட்டுமல்ல,
அனைத்துயிர்களதும் உயர்
மந்திரச் சொல் தாய்!
சுவர்க்கத்தை விடவும்
சுகமானது தாய் மடி!

உயிரின் உணர்வாகி,
உள்மூச்சில் தாங்குவதால்,
தாய்மடியே எமது
சந்திதானமாகவுமிருக்கிறது

பட்டினியால் உருகினாலும்
பக்குவமாய் அமுதூட்டும் தாய்,
கருணையில் வடிவமென்பதாலா
கடவுள்
தாயன்பின் சத்தியத்தை தன்
தத்துவத்தில் வரவு வைத்தான்!
தாய்,
ஒரு சத்தியம்!
தரணிக்கு விருட்சமான தத்துவம்!!
தாய்மை ஒரு தவமென்பதால்,
தாயின் மலரடிகள் எம்
தலைகளுக்கு மகுடமாகட்டும்!

புதியதோர் தேசத்தைத் தேடி...

முஸம்மில் கமர்தீன்

புதியதோர் தேசத்தைத் தேடி
செல்கின்றேன்...
அறிந்தவர்கள் சொல்லுங்கள்..

காதலின் மயக்கத்தில் புணர்ந்து
காதலர்கள் தேடும்
காணாத தேசத்தையும் தேடி
நான் பயணிக்கவில்லை...

பிஞ்சுகளை வேட்டையாடி
காமத்திற்கு இறையாக்கும்
நஞ்சுக்கொண்ட மனித மிருகங்கள்
வாழும் தேசமில்லையது...

இதயத்தில் போலி வேஷங்களோடு
பாசம் காட்டும் உறவுகளும்
வாழுகின்ற தேசமில்லை அது...

மனதிற்கு முக்காடு போட்டு
மனதினைக் குழப்புகிற கூட்டமும்,
பணமிருந்தால்
பாசம் காட்டும் உறவுகளும்,
வாழும் தேசமில்லையது...

மதங்களினாலும்,
நிறம், சாதிவெறிகளினாலும்
துவேஷம் வளர்த்த மானிடர்கள்
வாழும் தேசமில்லையது...

கண் மூடிய நீதிகளும்
விழி திறக்கப்படாத மனசாட்சியில்லாத
பூமியல்ல அது...

ஆயுதங்களால் இரத்தம் சிந்தி
உயிர்கள் மடிந்துப்போகும்
யுத்தங்கள் இல்லாத பூமியென்றும்
அடையாளப் படுத்திய தேசமுமில்லை...

இதயங்களில் அன்பை வளர்த்து,
உறவுகள் துரத்தாத,
மானுட உணர்வுகளை மதிக்கும்
மானிடர்கள் வாழும்
புதியதோர் தேசத்தை தேடி
நான் பயணிக்கின்றேன்...!!
அறிந்தவர்கள் சொல்லுங்கள்...!!

மானிடா எங்களைப்பார்!

கலாபூசணம் மொழிவரதன்,
கொட்டகலை

உயர்ந்த மலையினிலே எழிலாய்
ஓங்கி நிற்கும் சவுக்கு மரத்தினிலே
அமர்ந்தே மனநிம்மதியுடன்
ஆடி மகிழும் காக்கையைப் பார்

சில்லென்னும் இளந்தென்றல் தன்
சிறகுகளில் பட்டிடவே
துள்ளி எழுந்து பின் அமர்ந்து தன்
தோழர்களோ டுறவாடுவதைப் பார்

சங்கமில்லை சமாச்சாரமில்லை
சாதியில்லை பேதமில்லை
எங்களிடையே என்றே அவை
எமக்குரைத் திடும் பாடத்தைப் பார்

பரந்த நீலவானம் எங்கள்
பரந்த எண்ணங்களின் சின்னமென
சிறந்து வாழ்கிறோ மென்றே
சீரிய நெறியைக் காட்டுது பார்!

ஏக்கத்துடன் என் தந்தைக்கு

பயாஸா பின்த் பரீத், ஏறாவூர்

என் பந்தத்தின் ஆரம்ப உறவே
என் அடையாளத்தை உயர்த்த வந்த என் தந்தையே!

நீ என்னால் உலகில் அப்பா
என்ற அந்தஸ்தை அடைந்தாய்
இத்தரத்தை தந்த என்னை
ஏன் மறுத்தாய்!

கை பிடித்து உன் நிழல் பின்
செல்ல ஆர்வமாய் இருக்கையில்
என் கை இரண்டும் விழ ஏன்
என்னைத் தவமாய் தவிக்கவிட்டாய்

நீயின்றிப் பயணிக்கிறேன் வாழ்க்கையில்
என் பயணத்தை தடம் புரள வைக்கிறது நீ என்னை
மறந்த விடயம்

நான் எந்நிலையிலும்
உன்னை மறக்கமாட்டேன்
ஏனெனில் கனவிலும்
நினைவிலும் என்னை அதிகம்
இழக்க வைத்தாய் உன்
பாசத்திற்காக

செவிலியர்கள்!

கலாபூஷணம், கீழ்கரவை குலசேகரன்,
அப்புத்தளை

மண்ணின் தேவதைகள்! மருத்துவ சேவைகாய்
வெண்மை உடையினிலே விளங்கும் செவிலியர்கள்!
கண்ணுக்கு இமைபோலும் எம்மைக் காப்பவர்கள்!
கருத்தோடு என்றும் கடமைகளைச் செய்பவர்கள்!

நேரத்தைக், காலத்தைப் பார்க்காது உழைப்பவர்கள்!
நித்தமுமே பிறருக்கு உதவிட நினைப்பவர்கள்!
வேராய், விழுதாய் எமை வீழாது காப்பவர்கள்!
வேண்டும் மருந்துகளால் நோய்களைத் தீர்ப்பவர்கள்!

அன்பான சேவையால் அனைவரையும் ஈர்ப்பவர்கள்!
ஆதரவு தந்து அரவணைக்கும் பண்பினர்கள்!
துன்பத்தின் மத்தியிலே துவரும் நோயாளர்கட்கு
துணையாகவே நின்று தொழிலைப் புரிபவர்கள்!

பேதங்கள் இல்லாத மனங்களினையே கொண்டு
பிரிய முடன் அனைவர்க்கும் உதவியுமே நிற்பவர்கள்!
வேதனையில் துடிப்போர்க்கு விரைந்து உதவியுமே
விழிப்போடு இருந்து கடமைகள் புரிபவர்கள்

இரவின் தனிமை

ரதிதேவி, மானிப்பாய்

ஓர் இரவின் தனிமையும்
பேர் உலகின் வெறுமையும்
ஓர் சேரும் ஒரு கணம்
நீர் மீறும் மீன் இனம்

ததும்பும் அலைகள்
தவறிழைத்த மண்
வெதும்பும் வெயில்
வேடிக்கை பார்க்கும்
பாதமோ நடுங்கும்
சுவடுகள் ஒடுங்கும்
உயிர் தொடங்கும்

நின்று நிமிர்ந்து பார்த்தால்
நிலவின் சுந்தரம் விழுங்கும்
எனை விழுங்கும்
கன்று ஒளிந்து போனால்
பசுவின் ஓலம்
ஒலி தீயாய்
நிலை மாறும்

புழுதி மறந்த பூமி

"ஏரூர்க்கவி"
எச்.எம்.எம்.றசீம்,
கிழக்குப்பல்கலைக்கழகம்

மண்வாசம் வீசியே
மனத்திரையில் வருகிறது
பரம்பரையாய் ஆண்டதொரு
பாட்டன் பூமியின் நினைவுகள்

ஊருக்கே உணவளித்த
உழவனின் வயல்களதுவும்,
விளைந்திட்ட தானியங்களின்
விற்பனையும் கண்களிலே,

ஒற்றையடிப் பாதைகளும்,
ஒற்றை வண்டிப் பயணங்களும்,
நிழல்தரும் சோலைகளும்
நிசியிலென்னகத்தில்...

சுவை புதிதெனப் பல
சுத்தமான உணவுகளும்
சத்தாய்ப் புசித்த காலம்
சரித்திரமாய் நாவினிலின்றும்

தெவிட்டாத களிப்புக்கள்,
தேனமுதக் கனிகள்,
மாறாத வாழ்வியல்கள்
மனக்கண்களின் வழியே;

தோட்டத்துக் காய் கறிகள்
தோரணமாய்க் கொடிகள்
பார்த்தபடி நிற்கும் செடிகள்
பாருக்கே மருந்தாகும்

அழகெழும் மங்கைகள்
அரிய நற்பண்புகளில்,
மதியழகில் பிள்ளைகள்
மாண்புக் குணங்களில்

மருத்துவச் சித்தர்கள்
மக்கள் மனங்களில்,
குருத்துவ வாதிகளெனக்
குறைவிலாத காலமது,

விண்ணின் மழைத்துளிகளை
விருந்தாய்ப் பெற்ற
தனிமரத் தோப்புக்கள்
தனில் வாழ்ந்திருந்தோம்

ஓலைவேய்ந்த குடிசைகளும்,
ஒருமித்த எண்ணங்களும்,
சாலையோர நட்புக்களும்
சடுதியாய்க் காணாமல்
போனதேன்?

துளியளவும் எங்களில்
துயர் தரிக்காது
இயற்கைக் கலப்பில்
இன்பம் கூடிச் செழித்தது

புதுமைகளின் கலப்பால்
பூமிப் புழுதிகள் மறந்தது
இடை இடையே கனவுகள்
இன்னும் மறக்காத காட்சிகள்.

கருகிடும் கல்வி

குப்பிளான் குமரன்

கலாசாரத்தை பாதுகாக்கிறது கல்வி
கலைகளை வளர்கிறது கல்வி
கண்டுபிடிப்புகளுக்கு துணையாகிறது கல்வி
கலைஞர்களை உருவாக்குகிறது கல்வி

எத்தனை எத்தனை பெருமை கொண்டது
ஏணிப்படியாய் அமைந்து வாழ வைக்கிறது
எல்லோராலும் ஏற்றிப்போற்றப்படுகிறது
எம்மை உலகில் அமைதியாய் வாழ வைக்கிறது

இத்தகைய உயர்ந்த கண் போன்ற கல்வி
இன்று உலகில் எங்கும் கருகி வருகிறது
காரணம் யாது கண்டு கொள்ளுங்கள்
காலமதை பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்

கல்வி வளர்ச்சி மேம்பட்டு இருந்து
என்ன பயன் சொல்லி அழுவதால் எங்கள்
சுமை தீர்ந்துவிடுமா உள்நாட்டு
யுத்தங்கள் உலக யுத்தங்கள் மட்டுமல்ல
பொருளாதார அழிவும் கருகச்செய்கிறது கல்வியை...

ஷெல்லிதாசன்.....
திருகோணமலை....

பருவத்தின் பந்தாட்டம்...!

உருகி எரியும் மெழுகுதிரியின்
மெல்லிய ஒளியில் அவளது முகம்
இளமைப் பூரிப்பை கௌவி விழுங்கியபடி
ஒரு பயத்தின் சாயல்
குடிசையின் சிறிய யன்னல் கதவை
இறுக மூடியபடி பதற்றத்துடன்
அவளது நாடித் துடிப்புக்கள்

போனவனைக் காணவில்லை
பொழுது படமுதலே வெளியே காலடி
எடுத்துவைத்தவன் இத்தனை
மணி நேரமும் எங்கே தொலைந்தான்

காதலித்தான்
கைபிடித்தான்
கவனமாக பார்ப்பேனெனவும்
சத்தியமும் செய்தான்
பதினாறு வருட பந்தபாசங்களையெல்லாம்
பந்தாடிவிட்டு
பறந்துவந்தாள் கூட்டை விட்டு

சத்தியங்களை சல்லடைபோட்டது காலம்
கூட்டுப்பறவை ஆகிவிட்டவளுக்கு
குஞ்சும் அவள் கையில்
நிசி கடந்து வருவதே வாடிக்கையாகிவிட
பசியோடு அவள் வாழவுப் பயணம்

நித்தம் நெருப்புச் சுவாலையே
அவளது மூச்சுக் காற்றாக...?
ஏக்கத்தின் வடுவால்
இதயம் ரணமாகி.....

கண்கள் சிவப்பேற கால்கள் தள்ளாட
வந்தானவன்
சிறங்கை அரிசியில் செய்த சிறுசமையல்
உவப்பாக இல்லையென ஒரு உதை
வயிற்றைக் கைகளால் பொத்தி
வலிக்கு மருந்திட்டு வகையறியாது
அவள்..!

பசியாறியவனுக்கு மீண்டும் பசியெடுக்க
பார்த்தான் அவளது முந்தானையை
உடுட்டும் அவனது விழிகளில்
ஒரு முனியின் நிழல்
பதற்றத்துடன் பாயை விரித்தாள்
பரவினான் அவன்
குடிசையின் கூரையூடாக
தேய்பிறைச் சந்திரன் அவளின்
நீர் தேம்பி வழிந்த கண்களில்.....!

அடுத்த மாதத்திற்குள்.....

(05 ஆம் பக்கத் தொடர்)

கேள்வி: நெருக்கடிக்கு அதன்பதிலின் ஒரு பகுதியாக, சக்தி போன்ற பல்வேறு முக்கியமான துறைகளில் வெளிநாட்டு நேரடி முதலீட்டை இலங்கை நாடுகிறது. அதானி குழுமம் இந்தத் துறையில் நுழைவது சர்ச்சைக்குரியதாக மாறியுள்ளது, சர்வதேச கேள்விமனுக்கோரல் முறை இல்லாத நிலையில், அவர்கள் எப்படி உள்ளே நுழைந்தார்கள் என்று இலங்கையில் பலர்கேட்கிறார்கள். இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இது நாட்டைப் பாதிக்காதா?

பதில்: அதானி குழுமம் தற்போது எ மக்கு தேவையான 500 மில்லியன் டொ லர்களை கொண்டு வந்துள்ளது. முதலீட்டாளர்கள் வருவதற்கு இது ஒரு நல்ல அறிகுறியாகும். மீளப் புதுப்பிக்கத்தக்க சக்தி, காற்றாலை மின்சாரம் ஆகியவற்றுக்கான இலங்கையின் சாத்தியபாடு பாரியது. இங்கு வரும் அனைத்து பெரிய நிறுவனங்களும் அதை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள முடியாது என்று நினைக்கிறேன். இது நாட்டின் பல பகுதிகளில் இது உள்ளது. மன்னாரின் நன்மை என்னவென்றால், நீங்கள் இந்தியாவிற்கும் வழங்கலாம். எனவே, அதானி வருவதில் எங்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லை.

கேள்வி: யாழ் குடாநாட்டில் மூன்று தீவுகளில் இடம்பெறவிருக்கும் மீளப் புதுப்பிக்கத்தக்க சக்தி திட்டங்கள் பற்றி?

பதில்: முன்னர், ஆசிய அபிவிருத்தி வங்கி ஆதரவு மூலம் சீனா ஒப்பந்தத்தை வென்றது, ஆனால் இந்தியாவின் தெற்கு கடற்கரைக்கு அண்மித்ததாக சீன திட்டம் இருப்பது குறித்து கவலைகள் எழுந்ததையடுத்து, அதே திட்டத்தை செயற் படுத்த இலங்கை அரசாங்கம் இப்போது இந்தியாவுடன் இணைந்துள்ளது.

கேள்வி: சீனா தனது திட்டம் கைவிடப்பட்டதற்கு ஏமாற்றம் தெரிவித்துள்ளது. எனவே இந்த முதலீடுகளுக்கு ஒரு புவிசார் அரசியல் பரிமாணம் இருக்கிறது, இல்லையா?

பதில்: அது சர்ச்சைக்குரியதாக இருந்தது, ஆனால் அரசாங்கம் இப்போது இந்திய அரசாங்கத்துடன் [திட்டம்] இது குறித்து முன்னேற்றம் கண்டுள்ளது. நான் அங்கு இல்லாததால் அதைப் பற்றி பேச முடியாது. இவை உணர்திறன் வாய்ந்தவை என்பதுடன் கவனமாகக் கையாள வேண்டிய பிரச்சினைகள்.

கேள்வி: அச்சுறுத்தும் பொருளாதார நெருக்கடியைத் தவிர, அரசாங்கம் நம்பகத்தன்மை தொடர்பாக கடுமையான நெருக்கடியை எதிர்கொள்கிறது, ஜனாதிபதி, நீங்கள், மற்றும் இந்த அரசாங்கத்திற்கு எதிராக பொது மக்களின் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நெருக்கடியைச் சமாளிக்க கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருக்கும் போது, பொது மக்கள் மத்தியில் அரசாங்கம் எப்படி நம்பிக்கையை மீட்டெடுக்கும்?

பதில்: முதலாவதாக, 21வது திருத்தம் அனைத்துக் கட்சிகளாலும், அரசாங்கத்தாலும், வெளியிலும் விவாதிக்கப்பட்டு, அமைச்சரவையில் நிறைவேற்றப்பட்டது.

கேள்வி: பொது மக்களின் பார்வையில் அரசியல் நம்பகத்தன்மை எப்படியிருக்கிறது?

பதில்: அதுவே அரசியல் நம்பகத்தன்மையை கட்டியெழுப்புவதற்கான முதல் படியாக இருக்கும். இரண்டாவதாக, பாராளுமன்றத்தில் குழு முறைமைகள் குறித்து சில முன்மொழிவுகளை முன்வைத்துள்ளேன். அவற்றை முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் கையளித்துள்ளேன். அந்த அறிக்கை வந்தவுடன் பாராளுமன்றத்தில் விவாதித்து திருத்தங்களைச் செய்வோம். எனவே இது ஒருபடிப்படியான செயற்பாடு, ஆனால் இவை இரண்டும் பெரியதாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். மேலும் அவர்கள் செய்யும் செயல்களில் வெளிப்படைத்தன்மையுடன் இருக்குமாறு அனைவரையும் கேட்டுக் கொண்டுள்ளோம்.

கேள்வி: பொருளாதாரத்தை ஒழுங்கமைக்க முக்கியமான தருணத்தில் நீங்கள் கொண்டு வரப்பட்டீர்கள். ஜனாதிபதி மற்றும் ஆளும் கட்சியின் அரசியல் ஆதரவு உங்களுக்கு உள்ளதா? உதாரணமாக, பாராளுமன்றத்தில் துணை சபாநாயகர் தேர்ந்தெடுக்கப்பட்டபோது உங்கள் முன்மொழிவுக்கு கட்சியின் ஆதரவு இல்லை.

பதில்: என்னைப் பொறுத்தமட்டில், மே மாதம் 9ஆம் திகதி, பின்வரிசை எம்.பி.க்கள் சிலர் நான் பிரதமராக வேண்டும் என்று விரும்பினர் [மகிந்த ராஜபக்ச ராஜினாமா செய்த பின்னர்]. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததால் வேண்டாம் என்று கூறினேன். இதனையடுத்து, ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என நிபந்தனை விதித்த போது, ஜனாதிபதி சரத் பொன்சேகாவை (எதிர்க்கட்சி எம்.பி.) அழைத்தார். பின்னர் ஆளு ங்கட்சி எம்.பி.க்கள் சென்று என்னை ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்திருந்தனர். ஜனாதிபதி உங்களை அழைத்தால், அங்கு செல்லுங்கள், வேண்டாம் என்று சொல்லாதீர்கள் என்று என்னிடம் சொன்னார்கள்.

பின்னர் ஜனாதிபதி என்னை அழைத்தார், நான் சென்று அவரை சந்தித்தேன். நிலைமை தீவிரமாக இருந்தது, யாராவது பொறுப்பேற்க வேண்டும் என்று நினைத்தேன். அதனால் நான் உள்ளே வரும்போது சில பின்வரிசை உறுப்பினர்களின் ஆதரவு எனக்கு இருந்தது.

அதன்பிறகு, ஆதரவு பெருகி, ஜனாதிபதியும் கட்சியும் எனக்கு ஆதரவளித்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடையேயும், ஐக்கியமக்கள் சக்தியில் உள்ள சிலரிடமும் கூட, மீண்டும் போராடத் தொடங்குவதற்கு முன், குழப்பத்தில் இருந்து நாட்டை மீட்டெடுக்க ஒன்றிணைய வேண்டும் என்பதற்கு அங்கீகாரம் உள்ளது.

மேலும் பிரதி சபாநாயகரின் விடயத்தில் ஆளும் கட்சி எம்.பி.க்களுக்கு எனது பிரேரணை பற்றி தெரியாது தெரிந்திருந்தால் ஆதரவாக இருந்திருப்பார்கள்

கேள்வி: எனவே, உங்களுக்கு போதுமான அரசியல் ஆதரவு இருப்பதாக நீங்கள் உறுதியாக நம்புகிறீர்கள்.

பதில்: சரி, நான் எப்படியாவது சமாளிப்பேன் [சிரிக்கிறார்]. வேறு யாரும் இல்லாததால் நான் இங்கு வந்தேன். வேறு யாரும் [வேலைக்காக] வர முடியாத அளவுக்கு நிலைமை தற்போது மோசமாக உள்ளது.

கேள்வி: இந்த எதிர்பாராத பணி உங்கள் அரசியல் வாய்ப்புகளை மாற்றிவிட்டதா? 2020 பொதுத் தேர்தலில் உங்கள் கட்சி அழிக்கப்பட்டது, நீங்கள் தோல்வியடைந்து ஐக்கிய தேசியக் கட்சியின் தனி பாராளுமன்ற உறுப்பினராக தேசியப்பட்டியல் மூலம் வந்தீர்கள். உங்கள் அரசியல் வாழ்க்கை முடிந்துவிட்டதாகத் தோன்றியது.

பதில்: நான் ஒரு சவாலை ஏற்றுக்கொண்டேன், அது எங்கு முடிகிறது என்று பார்ப்போம். எனது கட்சியில் நான் மட்டுமே உறுப்பினராக இருப்பது பலவீனம் அல்ல என்றும் நினைத்தேன். எதிர்க்கட்சி அல்லது அரசாங்கத்தில் இருக்கும் யாருடனும் இணங்கிப் போகலாம் [சிரிக்கிறார்]. நீங்கள் யாருக்கும் அச்சுறுத்தலாக இருக்க மாட்டீர்கள். உங்களிடம் ஐந்து பேர் இருந்தால், நீங்கள் ஒருவருக்கு அச்சுறுத்தலாக இருந்திருப்பீர்கள், ஆனால் நீங்கள் ஒரு உறுப்பினராக இருக்கும்போது, நீங்கள் யாருக்கும் அச்சுறுத்தலாக இல்லை, உங்களால் பணிகளைத் தொடர முடியும்.

பாராளுமன்ற விசேட குழுவின்...

(06ஆம் பக்கத் தொடர்)

தேர்தலில் பெண்கள் மற்றும் சிறுவர்களின் முக்கியத்துவம் குறித்த பரிந்துரைகளும் இதில் உள்ளடங்கியுள்ளன. பெண்களுக்கும் இளைஞர்களுக்கும் கணிசமானளவு ஒதுக்கீட்டை வழங்குவது பற்றி குழு பரிந்துரைகளை முன்வைத்துள்ளது.உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் தற்பொழுது காணப்படும் பெண்களுக்கான 25 வீத ஒதுக்கீட்டைக் குழு தொடர்வதற்கு வலிறுத்தியிருப்பதுடன், பரிந்துரைப் பட்டியலில் பெண்களுக்கு 25 வீதம் ஒதுக்கீடு வழங்கப்படுவதும் அவசியமானது என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசியப்பட்டியலில் உறுப்பினர்கள் நியமிக்கப்படும் போது ஒவ்வொரு மூன்று பேருக்கு ஒரு பெண் உறுப்பினர் உள்ளடக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் காலத்தின் போது ஊடகங்கள் நடந்து கொள்ள வேண்டிய முறைமைகள் மற்றும் வழிகாட்டல்கள் குறித்தும் இங்கு பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஊடகங்களின் மூலம் முன்னெடுக்கப்படும் தவறான பிரசாரங்களைக் கட்டுப்படுத்துவதற்குத் தற்பொழுது நடைமுறையில் காணப்படும் சட்டங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது இவ்விதமிருக்க, தேர்தல்களுக்கு அதிக பணம் செலவுசெய்யப்படும் விடயம் குறித்தும் இக்குழுவில் பரந்துபட்ட கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன. தற்பொழுது நடைமுறையில் காணப்படும் நிலைமைக்கு ஏற்ப பணம் படைத்த வேட்பாளர்கள் அல்லது அதிக பணத்தை தேர்தல் பிரசாரங்களுக்குப் பயன்படுத்தக் கூடியவர்கள் ஊடகங்களில் அதிக இடத்தைப் பெற்றுக் கொள்வதாகவும், இது போன்ற விடயங்கள் கட்டுப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றியும் இக்குழுவின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவின் அறிக்கை தற்பொழுது சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால் இது பற்றி பாராளுமன்றம் விவாதித்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இலங்கையை நெருக்கும் கடன்...

(12ஆம் பக்கத் தொடர்)

உண்மையில் ஜனநாயக பாரம்பரியமிக்க ஒரு நாட்டில் இதுபோன்ற மிகப்பெரும் நெருக்கடிகள் ஏற்படும்போது அதற்கு தார்மீக ரீதியில் பொறுப்பேற்று அதற்குக் காரணமானவர்கள் பதவி விலக வேண்டும். அந்நாட்டின் நிதித் துறை பக்கச் சார்பின்றிச் செயற்பட்டு பொறுப்புக் கூற வேண்டியவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதன் மூலம் மேலும் ஒரு தடவை அத்தகைய குற்றங்கள் எற்படாதவாறு தடுக்க வேண்டும்.

உலகின் ஜனநாக பாரம்பரியங்களைப் பின்பற்றும் முன்னணி நாடுகளில் இது தான் வழக்கில் உள்ள நடைமுறையாகும். 1970களில் அமெரிக்க ஜனாதிபதி ரிச்சர்ட் நிக்சன் வோட்டர்கேட் ஊழலில் சிக்கி பதவி துறக்க நேரிட்டதும் அங்குள்ள ஜனநாயக நிறுவனங்கள் சரியாகச் செயற்பட்டமையால் தான். அந்த நாடுகளில் பொறுப்புக் கூறல் இல்லாமல் அரசாங்கப் பதவிகள் இல்லை. செய்யத்தகாததைச் செய்தமைக்கு மட்டுமன்றி சரியாகச் செய்ய வேண்டியதைத் செய்யாமல் தவறவிட்டமைக்கும் சேர்த்து பொறுப்புக் கூற வேண்டும். இலங்கை போன்ற நாடுகளில் பொறுப்புக் கூறலை அவமானமாகக் கருதும் போக்கே தொடர்கிறது.

இன்று இலங்கை எதிர்நோக்கியுள்ள மிகக் கேவலமான இந்த நிலைக்கு எவராவது பொறுப்புக் கூற முன்வருவார்களா? மக்களும் இந்த நிலைக்கு காரணம் என்று ஒருசில நாட்களுக்கு முன்னர் அரசியல் வட்டாரங்களில் இருந்து குரல்கள் ஒலித்தமையையும் கேட்க முடிந்தது. பசி பட்டினி நீண்ட வரிசைகள் கையறு நிலை என்று அல்லலுறும் இலங்கை மக்களுக்கு அவர்களது துயர்கண்டு அயலில் உள்ள தமிழ் நாட்டில் ஒரு குழந்தை தனது உண்டியலை உடைத்து நிதி தந்தது. ஒரு பிச்சைக்காரர் தன்னால் முடிந்த தொகையை உதவியாக வழங்கினார்.

தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் தமது சம்பளத்தில் ஒரு பகுதியை நிதியாக வழங்கினர். ஆனால் இலங்கை அரசியலில் பில்லியன் கணக்கில் காசுபார்த்த அரசியல் பிரபலங்களும் அவர்தம் தொண்டர் அடிப்பொடிகளும் ஒரு சதத்தையேனும் மக்களுக்காக கிள்ளிப் போட்டிருப்பார்களா? மாறாக இந்த நெருக்கடியிலும் எவ்வாறு காசு பார்ப்பது என்பதே அவர்களது குறிக்கோளாக உள்ளது. தங்களது வயிறு வளர்ப்பதே அவர்களது குறிக்கோளாக உள்ளதே தவிர மக்களை எவ்வாறு இந்த நெருக்கடியிலிருந்து மீட்பது என்பது பற்றி சிந்தித்துச் செயல்படுவதாகத் தெரியவில்லை. கடந்த சிலவாரங்களாக இலங்கைப் பாராளுமன்ற அமர்வுகளை அவதானித்து வருபவர்களுக்கு இதைத்தவிர வேறெந்த முடிவுக்கும் வருவதற்கான வாய்ப்புகள் இல்லை.

21 ஆவது திருத்தத்தை...

(03ஆம் பக்கத் தொடர்)

இதைப் பற்றி பாராளுமன்றத்தில் விவாதிக்க சட்டப் பேரவைக்கு அவகாசம் வேண்டும் என்று நான் கூறுகிறேன்.

மூன்றில் இரண்டு பங்கு இருந்தால் நிறைவேற்றப்படும், இல்லை என்றால் நிராகரிக்கப்படும். எனவே, இந்தத் திருத்தத்தை யார் நிறைவேற்ற விரும்பினார்கள், யார் அதை நிறைவேற்ற விரும்பவில்லை என்பதை நாடு அறியும்.

21 ஆவது திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களிக்கவோ அல்லது எதிர்க்கவோ ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் சுதந்திரம் உள்ளது.

அதுதான் தற்போது அவர்களுக்கு இருக்கும் ஜனநாயக உரிமை. எனவே, அந்த உரிமையை உறுப்பினர்கள் பயன்படுத்துவதற்கு நாம் ஏன் அனுமதிக்கக் கூடாது? பாராளுமன்றம் என்று வரும் போது அதை ஏற்பதும் அல்லது நிராகரிப்பதும் உறுப்பினர்களின் கையில் உள்ளது.

கே: நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை விட பாராளுமன்றத்திற்கு அதிக அதிகாரங்கள் இருக்க வேண்டும் என்ற கோரிக்கை தற்போது எழுந்துள்ளது. நீங்களும் அதே பார்வையில் இருக்கிறீர்களா?

பதில்: அது அவ்வளவு எளிதல்ல. 21 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் சில நிறைவேற்று அதிகாரங்கள் பாராளுமன்றத்திற்கு மாற்றப்படும். அனைத்து நிறைவேற்று அதிகாரங்களையும் பாராளுமன்றத்திற்கு கொண்டு செல்ல வேண்டுமாயின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிக்க வேண்டும். செல்ல வேண்டிய தூரம் அதுதான். முதலாவதாக, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்குவதற்கு அரசியலமைப்பு அல்லது திருத்தம் எதுவாக இருந்தாலும் நிறைவேற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை. அதன் பிறகு, வாக்கெடுப்பு நடத்த வேண்டும்.

மூன்றில் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் இதனை ஏற்றுக் கொண்டு, சர்வஜன வாக்கெடுப்பு மூலம் ஒப்புதல் வழங்கினால் இதனை நிறைவேற்ற முடியும். எனவே, நாம் அந்த செயல்முறைக்குச் செல்ல வேண்டும். அவ்வாறு செய்யாமல், பொதுவாக்கெடுப்பில் மக்களின் விருப்பத்தை கேள்விக்குட்படுத்த வேண்டுமா, பாராளுமன்ற உறுப்பினர்களின் விருப்பத்தை பாராளுமன்றத்தில் திணிக்க வேவண்டுமா என்று தெரியவில்லை. வெவ்வேறு நபர்களுக்கு மாறுபட்ட கருத்துக்கள் இருக்கலாம். இறுதியில், இந்த விவகாரம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை மற்றும் ஒரு தரப்புக்கு வாக்கெடுப்பில் வாக்களிக்கும் 51 சதவீத மக்களால் முடிவு செய்யப்படும்.

ஹல்ஃப்ட்ஸ்டொர்ப்...

(10 ஆம் பக்கத் தொடர்)

இலங்கையின் உச்ச நீதிமன்றம் 1804 இல் கொழும்பு கோட்டையிலிருந்து புதுக்கடைக்கு கொண்டு வரப்பட்டது. உச்ச நீதிமன்றம் இருந்த இடம் அப்போது டச்சு ஆளுநர்களின் வசிப்பிடமாக இருந்தது.

பழைய உச்ச நீதிமன்ற கட்டிடமானது 17 ஆம் நூற்றாண்டின் மத்தியில் கட்டப்பட்ட ஒரு வரலாற்று பெருமை வாய்ந்த கட்டிடமாகும்.

1656 முதல் 1796 வரை இந்த கட்டிடம் நாட்டின் டச்சு கவர்னர்களின் உத்தியோகபூர்வ இல்லமாக மாறியிருந்தது. இலங்கையின் முதல் ஆளுநரான ஃபிரடெரிக் நோர்த், 1805 ஆம் ஆண்டு வரை இந்த மாளிகையை தனது உத்தியோகபூர்வ இல்லமாகப் பயன்படுத்தினார். அந்தக் காலப்பகுதியில் தான் இலங்கையின் உச்ச நீதிமன்றம் மேலே குறிப்பிட்டபடி அதிகாரப் பத்திரத்தின் மூலம் நிறுவப்பட்டது. இலங்கையின் முதலாவது பிரதம நீதியரசர் சேர் கொட்ரிங்டன் எட்மண்ட் கெரிங்டன் (Sir Codrington Edmund Carrington), ஈ.எச்.லுஷிங்டன் (E. H. Lushington) ஆகியோர் அடங்கிய இலங்கையின் முதலாவது உச்ச நீதிமன்றம் கோர்ட்ன் பூங்காவிற்கு எதிரே உள்ள கட்டிடத்தில் கூடியது. இந்த கட்டிடம் இன்று கோட்டை புனித பீட்டர் சர்ச் (St. Peter Church) என்று அழைக்கப்படுகிறது. 1680 இல் கட்டப்பட்ட இந்த இல்லம், டச்சு ஆளுநர்களால் தங்களுடைய வசிப்பிடமாகவும் பயன்படுத்தப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன.

இந்த இல்லத்தில் அமைக்கப்பட்டிருந்த மண்டபத்தில் உச்ச நீதிமன்ற அமர்வுகளை அப்போது நடத்தினர். 1804 இல் இது புதுப்பிக்கப்பட்டு முற்றிலும் தேவாலயமாக மாற்றப்பட்டது. இந்த தேவாலயத்திற்கு ஆங்கிலிகன் புனிதரான பீட்டரின் பெயர் சூட்டப்பட்டது.

கவர்னர் நோர்த் 1805 இல் ஹல்ஃப்ட்ஸ்டோர்பில்ல் உள்ள தனது உத்தியோகபூர்வ இல்லத்தைக் கைவிட்டு வேறிடத்தில் குடியேறினார். அன்றிலிருந்து அந்தப் பெருமை வாய்ந்த கட்டிடம் உத்தியோகபூர்வமாக இலங்கையின் உச்ச நீதிமன்றத்திற்காக ஒதுக்கப்பட்டது.

தற்போதைய உச்ச நீதிமன்றமும் மேன்முறையீட்டு நீதிமன்றமும் அமைந்துள்ள புதிய கட்டடம் அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவினால் திறந்து வைக்கப்பட்டது. சீன அரசின் நிதி உதவியுடன் அது கட்டப்பட்டது. ஆர். 1988 செப்டெம்பர் 17 ஆம் திகதி பிரதம நீதியரசர் பாரிந்த ரணசிங்க தலைமையில் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவினால் திறந்து வைக்கப்பட்டது. தற்போது நீதித்துறை நூலகமும் வழக்கறிஞர்களுக்கான அறைகளும் உள்ள கட்டடம் 1958 இல் திறக்கப்பட்டது.

மூன்று மாடிகளைக் கொண்ட இக்கட்டிடம் முன்னாள் நீதி அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கவினால் திறக்கப்பட்டது. சீன அரசின் நிதியுதவியுடன் கட்டப்பட்டதால் அக்கட்டடமும் வளாகமும் சீன கட்டட அமைப்பின் சாயலைக் கொண்டே வடிவமைக்கப்பட்டிருப்பதையும் காணலாம். சீன அரசு அக்கட்டிடத்தின் மீது தொடர் அக்கறை காட்டி வருவதால் கடந்த 2021 ஆம் ஆண்டு இந்த உயர் நீதிமன்ற கட்டிடத்தை மேலும் விஸ்தரிக்கவும், அதனை சரிபார்த்து திருத்துவதற்கும் மேலும் நிதிகளை இலங்கைக்கு ஒதுக்கியது. **(தொடரும்)**

கு. சின்னப்பபாரதி நினைவலைகள்...!

(13ஆம் பக்கத் தொடர்)

தன் வாழ்க்கை வரலாற்றை 'என் பணியும் போராட்டமும்" என்ற நூலாக எழுதியுள்ளார்.

'இந்திய இலக்கியத்திற்கு கு. சின்னப்பபாரதியின் பங்களிப்பு" என்ற நூலில் இந்தியாவிலுள்ள சிறந்த எழுத்தாளர்கள் பேராசிரியர்கள் அரசியல் தலைவர்கள் இதழாசிரியர்கள் விமர்சகர்கள் பலர் கட்டுரைகள் எழுதியுள்ளனர்.

2011 ம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற சர்வதேசத் தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் பங்குபற்றிச் சிறப்பித்தவர். இம்மாநாடு குறித்து தமிழகத்தி;ல் சிலர் மேற்கொண்ட பொய்ப் பிரசாரங்களைப் புறந்தள்ளி வாக்களித்தபடி இலங்கை வந்து மாநாட்டினைச் சிறப்பித்த பெருமைக்குரியவர். பின்னரும் இலங்கை வந்து பல இலக்கியச் சந்திப்புகளில் கலந்துகொண்டவர். இலக்கிய அமைப்புகளால் கௌரவிக்கப்பட்டவர்.

2012 ம் ஆண்டு பிரான்சில் வாழும் பாண்டிச்சேரியைப் பூர்வீகமாகக்கொண்ட மக்களால் சர்வதேசத் தமிழ் எழுத்தாளர் மாநாடொன்று நடாத்தப்பட்டது. இம்மாட்டில் மலேசியா சிங்கப்பூர் கனடா அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த எழுத்தாளர்களுடன் இந்திய எழுத்தாளர்களும் கலந்துகொண்டனர். புதுடில்லியிலிருந்து பேராசிரியர் பாலசுப்பிரமணியன் தமிழகத்திலிருந்து கவிஞர் இந்திரன் சின்னப்பபாரதி கார்த்திக் ஆகியோர் வந்து கலந்துகொண்டு கட்டுரை சமர்ப்பித்து உரையாற்றினர். சின்னப்பபாரதியின் சங்கம் நாவலின் பிரெஞ்சு மொழிபெயர்ப்பு நூல் இம்மாநாட்டில் வெளியிடப்பட்டது.

சின்னப்பபாரதியின் பிரான்;ஸ் வருகை குறித்து பிரான்ஸ் கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தெரிவித்து கலந்துரையாடலுக்கு ஒழுங்குசெய்யுமாறு இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சீத்தாராம் யெச்சூரி எனது ஈமெயில் முகவரிக்குக் கடிதம் அனுப்பியிருந்தார். சின்னப்பபாரதி கேட்டுக்கொண்டபடிதான் அவர் எனது ஈமெயில் முகவரிக்குக் கடிதம் அனுப்பியிருந்தார்.

அதன்படி பிரான்ஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் வெளியுறவுச் செயலாளர் தோழர் ஜக்பத் அவர்களுடன் கலந்துரையாடல் இடம்பெற்றது. இக்கலந்துரையாடல் விபரங்கள் பின்னர் தோழர் சீத்தாராம் ஜெச்சூரிக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

எமது பாரிஸ் 'முன்னோடிகள்" இலக்கிய வட்டத்தின் 'இலக்கியமாலை" நிகழ்வில் சின்னப்பபாரதியின் சங்கம் நாவலின் பிரெஞ்சு மொழிபெயர்ப்பு நூல் வெளியிடப்பட்டது.

இந்நூல் குறித்து பிரெஞ்சுக் கம்யூனிஸ்ட் கட்சியின் இலக்கியத்துறைச் செயலாளர் பியர் மார்சி சிறப்பான உரையை வழங்கினார். கவிஞர் இந்திரனும் உரையாற்றினார். இந்நிகழ்வு குறித்த செய்தி இலங்கைப் பத்திரிகைளிலும் தமிழகத்தில் 'செம்மலர்" இலக்கியச் சஞ்சிகையிலும் வெளியிடப்பட்டது. பத்து நாட்கள்வரை எமது வீட்டில் தங்கியிருந்து பாரிஸ் மாநகரின் பல இடங்களுக்கும் சென்று படைப்பாளிகள் பலரைச் சந்தித்து உரையாடினார்.

2012 ம் ஆண்டு சின்னப்பபாரதி இலக்கிய அறக்கட்டளையின் சிறுவர் இலக்கிய விருது பத்மா இளங்கோவனுக்குக் கிடைத்தது. 2014 ம் ஆண்டு அறக்கட்டளையின் சிறுகதைக்கான விருது எனக்கு வழங்கப்பட்டது.

ஈழத்தவர் பலருக்கு அறக்கட்டளை விருதுகளை வழங்கிக் கௌரவித்தவர். இலக்கியவாதிகள் சிலருக்குப் பிற படைப்பாளிகளைப் பாராட்டவே மனமிருக்காது. அடுத்தவர்களின்; திறமைகளை அங்கீகரிக்கமாட்டார்கள். எதிலும் குறை கண்டுபிடிப்பார்கள். ஆனால் படைப்பாளிகளைக் கௌரவிப்பதிலும் பாராட்டி ஊக்கப்படுத்துவதிலும் அக்கறைகொண்ட சிலர் இருந்தார்கள். அவர்களில் குறிப்பிடத்தக்க பண்பாளர் கு. சின்னப்பபாரதி..!

அன்று தோழர் ஜெயகாந்தனின் ஆரம்ப காலச் சிறுகதையொன்றை வாசித்த சின்னப்பபாரதி 50 ரூபா பரிசிளித்துத் தொடர்ந்து எழுதுமாறு ஊக்கப்படுத்தினாராம். 'எத்தனையோ விருதுகள் பரிசுகள் பின்னர் எனக்குக் கிடைத்தாலும் அன்று சின்னப்பபாரதி தந்த பணப்பரிசு எனக்கு மகத்தானதாக இருந்தது" என்று ஜெயகாந்தன் தெரிவித்துள்ளார் எனக் கூறுவர்.

இந்தி மொழியில் எனது சிறுகதைத் தொகுதி இலண்டன் உதயணனின் நாவல் டென்மார்க் ஜீவகுமாரனின் நாவல் திருமதி கலாநிதி ஜீவகுமாரன் கவிதை ஆகியன வெளிவர ஒழுங்குசெய்த பெருந்தகை அவர்..! 'நெஞ்சில் நிலைத்தவர்கள்" என்ற தனது நூலில் 'தோழமை நட்பில் சிறந்த பாரிஸ் இளங்கோவன்" என அவர் எழுதியுள்ளமை அவர் பண்பினை உணர்த்தி நின்றது. தமிழகம் செல்லும் போதெல்லாம் நாமக்கல் சென்று அவரைச் சந்தித்து உரையாடி வருவது வழமை. கொரோனாக் கொடுமையினால் கடந்த இரண்டு வருடங்களாகத் தமிழகம் செல்லமுடியவில்லை. அவ்வப்போது தொலைபேசியில் பேசிக்கொள்வோம். எங்கள் இருவரையும் எழுதுங்கள்... எழுதுங்கள.;.. என்றே கேட்டுக்கொள்வார். சோம்பல் கொள்ளாமல் எழுதுங்கள் என்றே உற்சாகம் தருவார்.

கடைசியாக இரண்டு மாதங்களுக்கு முன்னர் பேசியபோது வழமைபோல உற்சாகமாகத்தான் பேசினார். உடல்நலக் குறைவினால் மருத்துவமனை போய்வந்ததாகவும் சொன்னார். கடந்த சில நாட்களுக்கு முன்பு அவரது உடல்நிலை அறிந்து வீட்டாருடன் தொடர்புகொண்டு இருமுறை பேச முடிந்தது.

அந்தச் சிந்தனையாளன் மகத்தான படைப்பாளி பண்பாளர் சிந்திப்பதை நிறுத்திக்கொண்டமை அவரை அறிந்த நேசித்த மக்களுக்கும் தோழர்களுக்கும் மிகுந்த கவலையை அளிக்கும்..! அவரது இலக்கிய படைப்புகளாலும் பணிகளாலும் அவர் நாமம் மக்கள் மனங்களில் என்றும் நிலைத்திருக்கும்..!

இலங்கைக்கு இலாபத்தைத் தராத...

(06ஆம் பக்கத் தொடர்)

இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொண்ட சீனா, இலங்கையில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டத் தொடங்கியது. இருப்பினும், புதிய நண்பன் உதவ மாட்டான்; பழயை நண்பனே சிறந்தவன் என்ற அடிப்படையில் இந்த பொருளாதார நெருக்கடியில் இலங்கைக்கு இந்தியாவே பிரதிபலனற்ற உதவிகளை வழங்கி வருகின்றது.

ஆனால் மறுபுறத்தில் சீனாவின் கடன் வலையில் சிக்கியுள்ள 12 இற்கும் அதிகமான ஆசியா மற்றும் ஆபிரிக்க நாடுகள் பெரும் அச்சத்தில் உள்ளன. கடனை மீளச் செலுத்துவது எவ்வாறென்பதே அந்த அச்சம் ஆகும்.

சீனா தனது 'பெல்ட் மற்றும் ரோ" திட்டத்தின் வாயிலாக வர்த்தகத்தை விரிவாக்கம் செய்வதாகக் கூறினாலும் ஏழ்மையில் இருக்கும் பல நாடுகளைக் கடன் வாயிலாகத் தனது கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வந்துள்ளது என்பதுதான் உண்மை.

இலங்கை நிலைமையை எடுத்துக் கொண்டால் அரசு சீனாவிடம் கடன் வாங்கிக் கட்டமைத்த திட்டங்கள் மூலம் மிகவும் குறைவான இலாபம் மட்டுமே அரசுக்குக் கிடைத்துள்ளது. மேலும் இத்திட்டங்களைத் தொடர்ந்து நிர்வாகம் செய்வதற்கும் அதிகப்படியான செலவுகள் ஆகும். இதன் காரணத்தால் இலங்கைக்குப் பெரும் நஷ்டம் ஏற்பட்டு உள்ளது. இலங்கையின் மொத்த கடனில் 10 சதவீதம் சீனா உடையதாகும்.

இதனால் தற்போது சீனாவின் கடன் வலையில் சிக்கியதைத் தவிர இலங்கைக்கு வேறு பயன் இல்லை என்பதுதான் உண்மை. தற்போது இலங்கைக்கு எரிபொருள் முதல் உணவு பொருட்கள் வரையில் இந்தியா அனுப்பி வருகிறது. புதிய கடனுக்காக IMF அமைப்பிடம் தற்போது இலங்கை பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

ஆனால் இலங்கையின் நெருக்கடியான இத்தருணத்தில் சீனாவின் உதவிகள் குறிப்பிடும்படியாக இல்லை.

இலங்கையில் சீன

தொலைந்த தோழமை...

காலை எட்டு மணிக்கு வழமை போன்ற எழுந்து கொண்டான் ராபி. வீட்டில் யாருமே அவனைப் பற்றி அலட்டிக் கொள்வதில்லை. ஏழு ஆண்டுகளாக அவன் சித்த சுவாதீனமற்றுப் போயிருந்தான். யாருடனும் பேசுவதில்லை. அழகாகப் பேசக்கூடியவன்தான். ஆனால் ஏழு ஆண்டுகளுக்கு முன்பு நடந்த சம்பவத்தையடுத்து ஊமையாகிப்போனான். அவளது தாய் மைமூனா மட்டும் தன் பிள்ளையின் நிலைகண்டு பெரும் கவலையில் மூழ்கிப் போயிருந்தாள்.

மேசையில் இருந்த ஆறிப்போன தேநீரை ஒரே மூச்சில் குடித்து விட்டு ஒரு வாரமாகக் கழுவப்படாத சேர்ட்டைப் போட்டுக்கொண்டு வெளியே கிளம்பினார் ராபி. அவன் வெளியே போகும் போது யாரும் எங்கே போகிறாய் என்று கேட்பதில்லை. அவன் போவது ஆற்றங்கரைக்குத்தான் என்பதை ஊரே அறிந்துவைத்துள்ளது வீட்டுக்குப் பின்புறவேலியை கடந்து வயலில் இறங்கி கல்பொத்த கல்லுக்கு வந்து சிறிது நேரம் இருந்து விட்டு நேரே ஆற்றங்கரையை அடைந்து அங்கிருக்கும் ஆலமரத்தடியில் உட்கார்ந்து ஆற்றையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஏழு ஆண்டுகளுக்கு முன்பு நடந்த அந்தச் சம்பவம் அவனது மனக்கண்களில் நிழலாடும். தனது உற்ற தோழன் ஷபீக்குடன் ஆற்றில் நீச்சலடித்து குளித்து விளையாடும் போது நடந்த அந்தச் சம்பவத்தின் பின்னரே ராபி இந்த நிலைக்கு ஆளானான். நல்ல மழைக்காலம் அது. ஆற்றில் வெள்ளம் கரை புரண்டோடிக்கொண்டிருந்தது. கரையிலிருந்து ஆற்றின் மையம் வரை நீந்திச்சென்ற ராபி சுழியொன்றில் சிக்கி அள்ளுப்பட்டுப்போனான். ஆற்றில் வெள்ளம் கூடியிருந்ததால் யாரும் ஆற்றின் மையைத்துக்குப்போக மாட்டார்கள். மூழ்கிப்போன ஷாபி நீண்ட நேரமாக வெளியே வராததால் ராபி கலவரமடைந்து அங்கு நீராடிக் கொண்டிருந்தவர்களிடம் விஷயத்தை சொல்லி கூச்சலிட்டான். நீந்தத் தெரிந்த சில இளைஞர்கள் தேடிப்பார்த்துவிட்டு வெறுங்கையுடன் கரைக்கு வந்தனர்.

பகலானது நீராடவந்தவர்கள் வீடுகளுக்குத் திரும்பிய வண்ணமிருந்தனர். ராபி மட்டும் அங்கிருந்து விலகாமல் ஆற்றையே பார்த்துக் கொண்டிருந்தான் நண்பன் ஷாபிக்காக. மாலையான போது ஏதோ கரையொங்குவதைக் கண்டு பாய்ந்தோடிச் சென்று பார்த்தான். அது தனது தோழனின் உயிரற்ற உடல்தான். உடலை கட்டிப்பிடித்து .... கதறி அழுதான் ராபி. ஆற்றங்கரையில் புரண்டு புரண்டு அழுதான் கரையில் நின்றவர்கள் உடலைக்கொண்டுவந்து விசாரணைகளுக்குப் பினனர் அதனை அடக்கம் செய்தனர். மையவாடியிலும் இரவு நீண்ட நேரம் தோழனின் கபுரடியில் நின்று அழுதான். பலரதும் வேண்டுகோளுக்குப்பின்னர் வீட்டுக்குவந்து படுக்கையில் விழுந்தவன் அன்று முதல் பேச்சை மறந்தான். யாருடனும் பேச அவன் விரும்பவில்லை. அதன் பின்னர் ராபி நடைப்பிணமானான்.

அன்று முதல் ஆற்றுக்கு நீராடச் செல்வதை அவன் மறந்து போனான். ஆனால் தினந்தோறும் ஆற்றங்கரைக்குச் சென்று தன் தோழனின் வருகைக்காக காத்து நின்றான். ராபிக்கு இப்போது உலகமே வெறுத்தது உறறைார் உறவினர்களுடனும் பேசுவதில்லை. சில நாட்களாக படுக்கை அறையிலிருந்து வெளியேவராமல் வேதனையில் உழன்றான். நீர்ச்சுழி என்ற பெயரில் வந்த காலனை வெறுத்தான். இப்போது அவன் ஊமையாகிப்போனான். சித்த சுவாதீனமற்று கண்கண்டபோக்கில் திரியத் தொடங்கினான். இப்படியே காலம் கடந்து போனது வாரம் ஒரு நாள் பள்ளிவாசல் மையவாடிக்குச் சென்று நண்பனுக்காக பிரார்த்தித்தான். மையவாடிக்கு அருகில் உள்ள அந்த மரத்தில் சாய்ந்த வண்ணம் நீண்ட நேரம் வானத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். பின்னர் தர்ஹாவுக்கு வந்து கையிலுள்ள சில்லறைகளை எடுத்து காணிக்கையாக உண்டியலில் போட்டுவிட்டு வீட்டுக்கு வருவான்.

கடந்த சில நாட்களாக மகன் ராபியின் போக்கினைப் பார்த்து தாய் மைமூனாவுக்கு ஒரு அச்சம் உருவானது. அதனை அவள் வீட்டில் யாரிடமும் கூறவில்லை. பெற்ற தாயல்லவா? ஒவ்வொரு இரவிலும் மகனுக்காக இறைவனிடம் பிரார்த்திக்கத் தவறவில்லை. யா அல்லாஹ் என் மகனின் நிலையை மாற்று வாயாக! அவனை நல்லதொரு நிலைக்கு மீட்டுத் தருவாயாக' என்று பிரார்த்தித்த வண்ணமே இருந்தாள். ஒரு நாள் பிரார்த்தித்த நிலையிலே அந்தத்தாய் சற்றே கண்ணயர்ந்து விட்டாள். அதன்போது அவள் கண்ட கனவு அவளுக்குப் பெரும் கிலியை ஏற்படுத்திவிட்டது. விடிகாலைப் பொழுதில் தொழுத கையோடு யாருக்கும் தெரியாமல் தர்ஹாவுக்கு விரைந்து வந்து அங்கு அடங்கப்பட்டிருக்கும் நாதாக்களிடம் மன்றாடி அழுது பிரார்த்தித்தாள்.

மைமூனா கண்ட கனவு வீட்டில் கல்யாண நிகழ்வு இடம்பெறுவதாகவும் தனது மகன் ராபிக்கே திருமணம் நடப்பதாகவும் கண்டாள். இது கெட்ட சகுமாகவே அவள் நினைத்து அச்சமடைந்தாள்.

அன்று காலையில் வீட்டை விட்டு வெளியேறிய ராபி மாலையானபோதும் வீட்டுக்குத் திரும்பவில்லை, இதனால் கலவரமடைந்த தாய் மைமூனாவுக்கு பெரும் கலக்கம் ஏற்பட்டது. யாரிடமும் சொல்லவும் முடியாது. சொன்னாலும் அலட்டிக் கொள்ளப் போவதில்லை என்பதை அவள் நன்கறிவாள். அதனால் அவள் மனதளவில் அழுது வெம்பினாள்.

மாலையில் மஃரிப் தொழுத பின்னர் தர்ஹாபக்கம் வந்த பள்ளி மோதினார் காசிம் லெப்பை கோங்காய் மரத்தடியில் யாரோ சாய்ந்து படுத்திருப்பதைக் கண்டார். அங்கு போய்ப் பார்த்தபோது அந்த மரத்தின் வேரடியில் ராபி சாய்ந்திருப்பதைக் கண்டு சப்தமிட்டு தொழுகைக்காக வந்திருந்தவர்களை அழைத்தார். சப்தம் கேட்டுஓடி வந்தவர்கள் ராபியை பிடித்துத் தூக்கினர். அங்கு ராபி உணர் விழந்த நிலையிலேயே காணப்பட்டான். முதியவர் ஒருவர் அவனை நாடி பிடித்துப் பார்த்தபோது ராபியின் ரூஹ் (உயிர்) பிரிந்து விட்டதாக செய்கையால் காட்டினார்.

உடனடியாக ராபியின் வீட்டுக்குத் தகவல் பறந்தது வீட்டார் ஓடோடிவந்து பார்த்து செய்வதறியாது நின்றனர். தாய் மைமூனாவுக்கு தான் கண்ட கனவு பலித்து விட்டதை உணர்ந்து. தனது மகனின் உயிரற்ற உடலை அனைத்து முத்தமிட்டுப் புலம்பினாள். தர்ஹாவின் பக்கம் கைநீட்டி மகனுக்காக இறைவனிடம் பிழைபொறுக்க வேண்டி பிரார்த்தித்தாள்.

தன் தோழமை பிரிந்த துயரில் ஏழாண்டுகளாக மௌனித்து வாழ்ந்த ராபி என்ற அந்த ஆத்மா தனது தொலைந்த தோழமையை காண புறப்பட்டுச் சென்றிருந்தது. மையத்தின் முகம் புன்முறுவல் பூத்திருந்தது. தன் தோழமையை கண்ட மகிழ்ச்சியையே அது உணர்த்தியது.

கலாபூஷணம் எழுத்து நூன் ...✍

அன்பு அறிவிப்பாளர் அப்துல் ஹமீதின் நூல் அமெரிக்காவில் வெளியாகிறது..!

'வானலைகளில் ஒரு வழிப்போக்கன்' என்ற தலைப்பில் அப்துல் ஹமீத் எழுதிய ஊடக வாழ்க்கை அனுபவ நூல் அமெரிக்காவில் வெளியிடப்படவுள்ளது.

இலங்கை வானொலியில் மிக இளவயதிலேயே அறிவிப்பாளராகி, வானொலியின் பல்வேறு துறைகளிலும் அளப்பரிய பங்களிப்புகளை நல்கி, ஒலிபரப்புத் துறையில் மட்டுமன்றி, தொலைக்காட்சித்துறை, திரைப்படத்துறை எனப் பல்வேறு தளங்களிலும் 54 ஆண்டுகளுக்குமேல் அழுத்தமான தடம் பதித்த அன்பு அறிவிப்பாளர் பி. எச். அப்துல் ஹமீத் தனது அரை நூற்றாண்டு கடந்த வாழ்க்கை அனுபவங்களை ஒரு நூலாக எழுதியுள்ளார்.

'வானலைகளில் ஒரு வழிப்போக்கன்' என்ற தலைப்பில் அமைந்த இந்த நூல், அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் எதிர்வரும் ஜூலை 1 முதல் 4ஆம் திகதி வரை நடைபெறவுள்ள 'வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கங்களின் பேரவை' முத்தமிழ் விழாவில் வெளியிடப்படவுள்ளது.

சுமார் 5000 பேர்வரை கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படும் இப்பெருவிழாவில் இம்முறை பிரதான மேடையில் வெளியிடப்படுவதற்கு இந்நூல் மட்டுமே தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எமது நாட்டு வானொலி ஒலிபரப்புத் துறையில் முன்சென்றவர்கள் யார் அவர்களது ஆளுமை என்ன என்பதை யாவரும் அறிந்திருப்பது நல்லது. இன்று இந்தத் துறை சார்ந்தவர்கள் இவற்றை அறிந்துவைத்திருப்பது அவர்களின் வளர்ச்சிக்கு உதவும் என்பதில் ஐயமில்லை.

தென்கிழக்காசியாவில் முதல் வானொலி நிலையத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் என்ற பெருமையும் புகழும் பெற்றவர்கள் என்ற போதிலும் இந்த விடயங்கள் தொடர்பாக தேடுதல்கள் ஆய்வுகள் அவசியமானவை. பதிவுசெய்யப்பட வேண்டியவை..!

'இலங்கை வானொலிக் கலைக்கூடத்திலிருந்து எத்தனை எத்தனை கலைஞர்கள் உருவாகியிருக்கிறார்கள்...

எத்தனை இலக்கிய ஆளுமைகள் தங்கள் படைப்புகளை வானொலி ஒலிபரப்பினூடாக வெளிக்கொணர்ந்திருக்கிறார்கள்...

எத்தனை பெரிய ஆளுமைகள் இந்த நிலையம் வழியாக அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்...'

இவற்றையெல்லாம் பதிவுசெய்திடல் எமது இனத்திற்கும் மொழிக்கும் ஆற்றும் பெரும்பணியாகும்.

அந்த வகையில், உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் வானொலி நேயர்கள் இதயங்களில், அரை நூற்றாண்டு காலத்திற்கு மேலாக இனிய தமிழ்க் குரலால், படைப்பாற்றல் திறனால் இடம்பிடித்திருக்கும் கலைஞர் அன்பு அறிவிப்பாளர்' அப்துல் ஹமீத் தனது பங்களிப்பை நூலாகவும் வெளிக்கொணர்ந்துள்ளார்.

அவரது எழுத்தில் உருவான இந்நூல் அமெரிக்கா வாழ் தமிழ் மக்கள் மத்தியில் வெளியிடப்படுவது சிறப்புக்குரியது.

ஓர் ஊடகவியலாளரது வாழ்க்கை அனுபவமாக மட்டுமன்றி, இலங்கை வானொலி வரலாறு குறித்த ஒரு சிறந்த ஆவணப் பதிவாகவும் இந்நூல் விளங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது..!

இளஞ்சேரன் ...✍

மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 29

திரு/திருமதி.செல்வி .....
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி .....
.....
.....
....
திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 29
த.பெ.இல.834. கொழும்பு

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 29

இடமிருந்து வலம்

(1) நீண்ட ஆயுள். அழியாப் புகழையும் குறிக்கும்.
(5) பச்சிளங்குழந்தை.
(7) களங்கம். (திரும்பியுள்ளது)
(8) ஒரு தமிழ் மாதம்.
(9) விதம், ரகம். (திரும்பியுள்ளது)
(10) ஒருவகை விலங்கு. (குழம்பியுள்ளது)
(14) மழை காலம். (திரும்பியுள்ளது)
(16) அகம்பாவம்.
(18) இறைச்சிக்காக வேட்டையாடப்படும் ஒருவகைப் பறவை.
(20) தேர்.
(21) தர்க்கம். ஒருவகை நோயையும் குறிக்கும்.
(22) உணவு முதலான பொருட்கள் கிடைக்காத நிலை.
(24) வானத்தில் மட்டுமல்ல, அறிவிலும் காணலாம். (திரும்பியுள்ளது)
(25) குளிர்காலத்தில் இது வரும். (திரும்பியுள்ளது)

மேலிருந்து கீழ்

(1) தண்டனை பெற்ற குற்றவாளியை காவலில் வைத்திருக்கும் இடம்.
(2) கலாட்டா.
(3) உயர்நிலை செல்வந்தர்.
(4) பனையோலையால் செய்யப்பட்டது. செயற்கையான காற்றைத் தரும் சாதனம்.
(5) தலைமுடி.
(6) காலடிப் பதிவு.
(11) ஒருவரின் நலனில் அக்கறையும் அனுதாபமும் காட்டுவது.
(12) உறுதித்தன்மை.
(13) நியாயத்துக்குப் புறம்பானது. (குழம்பியுள்ளது)
(15) தாய்.
(17) நிதானப் போக்குள்ளவர்.
(18) குளிரைத் தடுக்கக்கூடியது.
(19) மணமகன் வீட்டார் மணமகளுக்கு வழங்கும் நகை, பணம் முதலியன. (குழம்பியுள்ளது)
(23) வாரத்தில் ஒருநாள்.

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 28

விடைகள்

இடமிருந்து வலம்

01. விலைவாசி 04. புளுகு 06. லிகிதம்
07. பரி 08. கிருபை 09. யாசகம்
13. பார் 14. சந்தனம் 17. கதலி
19. தலைப்பு 20. வல்லவன் 21. புது

மேலிருந்து கீழ்

01. விபத்து 02. வாலிபம் 03. சிகிரியா
04. கரும்பு 05. குப்பை 10. வசந்தம்
11. தேர்தல் 12. வனப்பு 13. பாகன்
15. தலை 16. தும்பு 18. வலி

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 27

பரிசு பெறுவோர்

முதலாம் பரிசு
எஸ். நிரோஸன்,
இல. 24/2,
உடுப்பிட்டிய,
உக்குவலை.

இரண்டாம் பரிசு
எஸ். ஜனஹாஷினி,
இல. 361/1,
கொட்டாஞ்சேனை வீதி,
கொழும்பு 13.

மூன்றாம் பரிசு
எப்.ஆர்.ஏ. ஷகூர்,
இல. 145,
குன்னேப்பான மடிகே,
மடவள பஸார்.

பாராட்டு பெறுவோர்

1. ஆர். ஞானச்சந்திரன்,
இல. 40, முதலியார் வீதி,
மட்டக்களப்பு.

2. எஸ்.ஏ.எம். லெப்பை,
இல. 11/26A,
விதுஹல்பட்டுமக, பதுளை.

3. என்.ஏ. நஜுமுதீன்,
155, அம்பாறை வீதி,
அக்கரைப்பற்று 19.

4. எஸ். கனகரத்தினம்,
975, அன்புவழிபுரம்,
திருகோணமலை.

5. எம்.என். பாத்திமா ஹயா,
337, மங்கெதர,
துல்ஹறிய.

6. எம்.வி.எப். பஸீனா,
இல. 71 மரிக்கார் வீதி,
களுத்துறை தெற்கு.

7. ஜி. துவாரகன்,
33ஏ, சர்வோதய வீதி,
பெரியநீலாவணை 01A.

8. திருமதி மணிமலர்,
நோர்வூட் மேற்பிரிவு,
நோர்வூட்.

★ ★ ★

ஈழத்து நவீன இலக்கிய முன்னோடிகள் 11

மூத்த எழுத்தாளர் தி. ஞானசேகரன்

முற்போக்கு எழுத்தாளர்களின் முன்னோடியாக விளங்கிய அ.ந. கந்தசாமி

ஈழத்து இலக்கிய வளர்ச்சி பற்றிய முதலாவது வரலாற்று நூலினை எழுதிய கனக செந்திநாதன் தனது நூலில் அ. ந. கந்தசாமி பற்றி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

'தற்காலத்திலே தங்களை முற்போக்கு எழுத்தாளர்கள் என்று சொல்லிக் கொண்டிருப்பவர்களுக்கு முன்னோடியாக அ. ந. கந்தசாமி விளங்கினார். ரத்த உறவு என்னும் கதை அவரது அரசியற் போக்கினைக் காட்டும் வகையில் அமைந்திருக்கிறது. கவிதை எழுதும் ஆற்றல் அவரிடமுண்டு. கவீந்திரன் என்ற புனைபெயரில் துறவியும் குஷ்டரோகியும் போன்ற சில நல்ல கவிதைகளை எழுதியுள்ளார்.'

அ.ந கந்தசாமி, சிறுகதை ஆசிரியர், புதின ஆசிரியர், கவிஞர், சிறுவர் இலக்கியப் படைப்பாளி, கட்டுரையாளர், நாடகாசிரியர், இலக்கியத் திறனாய்வாளர், இதழாசிரியர், மொழிபெயர்ப்பாளர் எனப் பன்முகங்கள் கொண்டு இயங்கியவர்.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் நடராஜா கௌரியம்மா தம்பதியருக்கு மகனாக 08.08. 1924 அன்று அ. ந. கந்தசாமி பிறந்தார். இவருக்கு ஐந்து வயதாக இருந்தபோதே தந்தை நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டார். தாய் கௌரியம்மாவும் தந்தை இறந்து 41ஆம் நாள் இறந்துவிட்டார்.

தனது ஆரம்பக் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கற்ற கந்தசாமி சிறிதுகாலம் அளவெட்டி சென்று பாட்டியுடன் வாழ்ந்து வந்தார். அங்கு தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்தார். பின்னர் மீண்டும் யாழ். இந்துக் கல்லூரியில் 10ஆம் வகுப்புவரை கல்வி கற்றார்.

அளவெட்டியில் வாழ்ந்ததால் தன் பெயரில் முன்னொட்டாக 'அ' என்பதையும், தந்தையின் பெயரின் முதலெழுத்தான 'ந' என்பதையும் இணைத்து அ. ந. கந்தசாமி என்று தன்னை அழைத்துக் கொண்டார். இவர் பதினான்கு வயது முதலே எழுதத் தொடங்கினார். ஈழகேசரி நடத்திய பேச்சு, கதை, கட்டுரைப் போட்டிகளில் பங்குபற்றி கதைப் போட்டியில் முதற் பரிசும் பெற்றார்.

அ.ந.கந்தசாமியின் சிறுகதைப் பிரவேசம் ஈழகேசரி மூலம் நிகழ்ந்தது. ஈழகேசரியில் அவரது முதலாவது சிறுகதை குருட்டு வாழ்க்கை (1941) வெளிவந்தபோது இவருக்கு வயது பதினேழு. இவர், பல்வேறு இதழ்களிலும் நாற்பது சிறுகதைகள்வரை எழுதியுள்ளார்.

இரத்த உறவு, ஐந்தாவது சந்திப்பு, நாயிலும் கடையர், ஆகிய கதைகள் இவருக்குப் பெரும் புகழீட்டிக் கொடுத்தன. முதலிரு கதைகளும் சிங்களமொழியில் பெயர்க்கப்பட்டு புகழ்பெற்றவை. தேயிலைத் தோட்டவாழ்வு பற்றிய 'நாயிலும் கடையர்' மிகச் சிறந்த தமிழ்ச் சிறுகதை என பல்வேறு ஈழத்து விமர்சகர்களால் பாராட்டப்பட்டதொன்று.

சிறுகதையைப் போலவே, கவிதைத் துறையிலும் ,வர் வெற்றியீட்டினார். எதிர்காலச் சித்தன் பாட்டு, துறவியும் குஷ்டரோகியும், சத்திய தரிசனம் எனபன சிறந்தவை. 1966ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலம் நடத்திய பாவோதல் நிகழ்ச்சியில் அ. ந. கந்தசாமி பாடிய 'கடவுள் என்சோர நாயகன்| என்ற கவிதை பார்வையாளர்களின் பாராட்டைப் பெற்றது. அந்தக் கூட்டத்தில் குறிப்புரை ஆற்றிய, தென்புலோலியூர் மு. கணபதிப்பிள்ளை 'ஒரு நூற்றாண்டிற்கு ஒருமுறைதான் இப்படிப்பட்ட நல்ல கவிதை தோன்றும்' என்று பாராட்டினார்.

'தினகரன் வாரமஞ்சரியில் மனக்கண் என்ற நாவலை அ.ந. கந்தசாமி தொடராக எழுதினார். அந்நாவல் வெளிவந்தபோது ஆயிரக்கணக்கான வாசகர்கள் விரும்பிப் படித்தார்கள். தொடர்கதை மூலம் வாராவாரம் வாசகர்களைத் திருப்திப்படுத்த வேண்டும் என்ற நோக்குடன் அ.ந.க இந்த நாவலை எழுதவில்லை. யதார்த்தமாக இருக்கவேண்டும் என்ற நோக்குடன் எழுதினார். மனக்கண் நாவல் இலக்கியத்திற்குக் கிடைத்த அரிய பொக்கிஷம்' எனக் குறிப்பிட்டுள்ளார் அந்தனி ஜீவா, அ.ந.க. ஒரு சகாப்தம் என்ற தனது நூலில்.

மறுமலர்ச்சிக் குழுவின் உருவாக்கத்துக்கு காரணமானவர்களில் ,வரும் ஒருவராவார். ,லங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தோற்றத்துக்கு முக்கியமானவர்களில் ஒருவராக விளங்கிய இவர், அச்சங்கத்தின் சங்ககீதத்தையும் இயற்றினார்.

ஆரம்பகாலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் பத்திரிகையான தேசாபிமானியில் இவர் பணியாற்றினார். பின்னர் சுதந்திரன் இதழில் சேர்ந்து 1949முதல் 1952 வரை பணியாற்றினார். 1953 இலிருந்து 1963வரை இலங்கைத் தகவற் திணைக்களத்தில் மொழிபெயர்ப்பாளராகப் பணிபுரிந்தார்.

தகவற்துறையில் பணிபுரிந்த காலகட்டத்தில் தகவற்துறையினால் வெளியிடப்பட்ட 'ஸ்ரீலங்கா' இதழாசிரியராகவும் விளங்கினார். அக்காலத்தில் சிங்களச் சட்டத்தின் காரணமாக சிங்களப் பரீட்சை எடுக்காமல் வெளியேறிய இவர், 'டிறிபியூன்| என்ற ஆங்கிலப் பத்திரிகையில் கடமையாற்றினார். அச்சமயம் திருக்குறள் பற்றிய ஆங்கில ஆய்வுக் கட்டுரைகளை எழுதினார். எமிலி சோலாவின் 'நாநா' (புதினம்), பெர்ட்ராண்ட் ரசலின் 'யூத அராபிய உறவுகள்', 'பொம்மை மாநகர்' என்னும் சீனப் புதினம், ஓ ஹென்றியின் சிறுகதைகள் மற்றும் பல படைப்புகளை மொழிபெயர்த்தார்.

அதன் பின்னர் தோட்டத் தொழிலாளர் சங்கத்தில் முழுநேர ஊழியராகப் பணியாற்றினார். ஒப்சேர்வர் பத்திரிகையில் உரை திருத்துபவராகவும் சிலகாலம் வேலை பார்த்துள்ளார். பின்னர், வீரகேசரி ஆசிரியர் குழுவில் சிலகாலம் பணியாற்றியுள்ளார். வீரகேசரியில் பணி ஆற்றிய காலத்தில் அங்குள்ள அச்சுத் தொழிலாளருக்காக தொழிற்சங்கம் அமைத்துப் போராடினார்.

முற்போக்கு எழுத்தாளர் சங்கம் வெளியிட்ட மாத ஏடான புதுமை இலக்கியம் நவம்பர் 1971 இதழில் இவர் எழுதிய நான் ஏன் எழுதுகிறேன் என்ற கட்டுரையின் ஒரு பகுதி பின்வருமாறு அமைந்துள்ளது.

'எழுத்தாளன் வாழ்க்கையை விமர்சிப்பதுடன் நின்று விடக்கூடாது. அந்த விமர்சனத்தின் அடிப்படையில் வாசகர்களுக்கு எதிர்காலத்தில் நம்பிக்கை ஊட்டவேண்டும். அவ்வித நம்பிக்கையில்லாவிட்டால் முன்னேற்றமில்லை. வாழ்வே இல்லை. இவ்வித பிரக்ஞையில் பிறக்காமல் வெறுமனே யதார்த்தத்தை ஒரு சுத்த இலட்சியமாகக் கொண்டு எழுதும்போது நம்பிக்கைக்குப் பதில் அவநம்பிக்கையின் தொனிகளே கேட்க ஆரம்பிக்கலாம். நைந்த உள்ளத்தின் சோகக் குரலாகக் கேட்கும் எழுத்தால் பயனில்லை. நொந்த உள்ளத்தின் செயல் துணிவு கொண்ட வேகக்குரலாக அது ஒலிக்க வேண்டும். வாழ்வதற்கு நேரடியாகவோ, குறிப்பாகவோ, மௌனமாகவோ வழிகாட்டும் எழுத்தே எழுத்து. இந்தக் கருத்துகள் என்னை உந்துகின்றன. அவற்றுக்காகவே நான் எழுதுகின்றேன்.



மனிதன் சமுதாயத்தின் ஒரு அங்கம். அவனுக்கு சமுதாயப் பொறுப்பொன்று உண்டு. வெறுமனே உண்ணுவதும், உறங்குவதும், புலனுகர்ச்சிகளில் ஈடுபடுவதும் வாழ்க்கையாகாது. அறிவு வளர்ச்சி பெற்ற மனிதன் ,வற்றோடு வேறு சில காரியங்களையும் செய்ய விரும்புவான். மற்றவர் முகத்தின் புன்னகை, தோட்டத்தில் பூத்துக் குலுங்கும் முல்லை மலர் போல் அவனுக்கு இன்பத்தையூட்டும். இன்று நாம் வாழும் சமுதாயத்தில் நாம் புன்னகையைக் காணவில்லை. துன்பமும், துயரமும், அழுகையும், ஏக்கமும், கண்ணீரும், கம்பலையுமாக நாம் வாழுமுலகம் இருக்கிறது. ஏழ்மைக்கும், செல்வத்துக்கும் நடக்கும் போரும், அடிமைக்கும், ஆண்டானுக்கும் நடக்கும் போரும், உயர் சாதியானுக்கும் தாழ்ந்த சாதியானுக்கும் நடக்கும் போரும், அசுர சக்திகளுக்கும், மனித சக்திகளுக்கும் நடக்கும் போரும் இன்று உலகையே கலங்க வைத்துக் கொண்டிருக்கின்றன. இப்போர்களினால் வாழ்வே ஒரு சோகக்கீதமாகிவிட்டது. இப்போர்களை எவ்வளவு விரைவில் ஒழிக்க முடியுமோ அவ்வளவு விரைவில் ஒழித்துவிட வேண்டும். அதன் பின்தான் போரொழிந்த சமத்துவ சமுதாயம் பூக்கும். அதைப் பூக்க வைக்கும் பணியில் எழுத்தாளன் முன்னோடியாகத் திகழ வேண்டும் என்ற கருத்தை உலகின் புகழ்பெற்ற பேனா மன்னர்கள் என் மனதில் தோற்றுவித்தனர்'

ஈழத்து சிறுகதை மணிகள் என்ற நூலில் செம்பியன் செல்வன், அ. ந. கந்தசாமி பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: இவரின் எழுத்துக்கள், மானிட வர்க்கத்தின் முன்னேற்றத்தைத் தடைசெய்யும் சாதி, சமய வேறுபாடுகள், ஆண்டான் அடிமை அமைப்பு, வர்க்க வேறுபாடுகள் போன்ற கைவிலங்குகளை அறுத்தெறிந்து சுதந்திரமானதும், சகோதரத்துவமானதும், சமத்துவமானதுமான சகவாழ்வினை வேண்டி நின்றதனாலேயே கலாநிதி க. கைலாசபதி 'கட்டறுத்த புரோமத்தியஸ் என்று கருதப்படும் வகையில் முற்போக்கை முழுமூச்சாகத் தழுவிக் கொண்டவரும் முற்போக்கு இலக்கிய அணியின் மூத்த பிள்ளைகளுள் ஒருவருமான அ.ந.கந்தசாமி| என்று குறிப்பிடுவதும் கருத்தில் கொள்ளத்தக்கது'

அ.ந. கந்தசாமியின் 'மதமாற்றம்' என்ற நாடகத்தைப் பற்றி பேராசிரியர். க. கைலாசபதி.இதுவே தமிழில் இதுவரை எழுதப்பட்ட நாடகங்களில் ஆகச் சிறந்தது'என்று குறிப்பிட்டுள்ளார்.

பாரதியார் வரலாற்றை ஆராய்ந்து, பாரதியார் கூறிய யாழ்ப்பாணத்துச் சாமியார் அல்வாயூர் அருளம்பல தேசிகர் என நிலை நாட்டியவர் அ.ந. கந்தசாமி.

வெற்றியின் இரகசியங்கள் (உளவியல் கட்டுரைகள்) மதமாற்றம் (நாடகம்) என்பன அ.ந. கந்தசாமியின் நூல்களாக வெளிவந்துள்ளன.

அ.ந. கந்தசாமி 14.02.1968 அன்று அமரரானார்.

இனிவரப் போவதெல்லாம் சுவாரஸ்யமான சாட்சிகள் இதுவரை சொன்னதெல்லாம் பொய்சாட்சிகள்!

33

பிரியதர்ஷினி இப்படிச் சொன்னதும், வியப்புடன் அவளையே பார்த்துக் கொண்டிருந்த சரண்யா,

"நீங்களுமா?" என்று கேட்டாள்.

"ஆனாலும் நான் அதை தீபனிடம் சொல்லவில்லை. தீபிகா அதிர்ஷ்டசாலி. தீபன் அவளைத்தான் விரும்பினான். இதனால் இருவருக்கும் அதிகமாகிக் கொண்டே போனது. இதனால் தற்கொலை செய்து கொண்டால் கூட பரவாயில்லை என்று தீபிகா அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பாள். நானும் அவ்வப்போது அவளுக்கு ஆலோசனை சொல்லிக் கொண்டே இருந்தேன். ஆனாலும் இந்த பிரச்சினைக்கெல்லாம் விரைவில் ஒரு முடிவு இருக்கும் என்று அவள் உறுதியாக சொன்னாள். சரி அதற்காக என்ன செய்யப்போவதாக நான் கேட்டேன்.

"அதற்கு அவள் என்ன சொன்னாள்?"

"புதுமையான பதில் ஒன்றைத் தான் அவள் சொன்னாள்!"

"அப்படி என்ன பதிலைச் சொன்னாள்""

"வட்டவல வளைவில் இருக்கும் பாதாளத்தில் பாய்ந்து தற்கொலை செய்து கொள்ளப்போவதாக கடிதம் எழுதி அண்ணாவுக்கு அனுப்ப போவதாகச் சொன்னாள்!"

"அதைக் கேட்டுட்டு நீங்க என்ன சொன்னிங்கள்...?"

"அது ஒரு பைத்தியக்காரத்தனமான யோசனை என்று நான் சொன்னேன். அதுவுமில்லாமல் அந்த வட்டவல வளைவு எங்கே இருக்கிறது என்று கூட எனக்குத் தெரியாதென்று சொன்னேன். அதன் பிறகு அது எங்கே இருக்கிறது என்பதைப் பற்றிய விபரங்களைச் சொன்னாள். அப்போதுதான் அவள் சொன்னது உண்மைதான் என்று நாம் நம்பினேன்!"

"எந்த மாதிரியான விபரங்களை அவள் உங்களிடம் சொன்னாள்!"

"அவள் எழுதியது கொஞ்சம் பெரிய கடிதம். அதில் என்ன இருந்தது என்று சுருக்கமாகச் சொல்வதாக இருந்தால், எங்கள் இருவரின் மரணத்தைப் பற்றி எவரும் சந்தேகம் கொள்ளத்தேவை இல்லை.

எங்கள் காதலுக்கு இருவீட்டாரும் எதிர்ப்பு தெரிவித்ததினால் நாங்கள் இருவரும் வட்டவல வளைவில் இருக்கும் பாதாளத்தில் பாய்ந்து தற்கொலை செய்து கொள்கிறோம் என்றுதான் அதில் இருந்தது."

"சரி கடிதத்தை தபாலில் போட்டார்களா?"

"தபாலில் எங்கே போடுவது...? அதில் இருந்தது போல் அன்றே வட்டவல பாதாளத்தில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார்கள்!"

"எ....எ... என்ன தீபிகா தீபன் என்றவர்களா?"

"இல்ல பிரசன்னா... அவர்கள் இருவரும் முட்டாள்கள் அல்ல... ஆனால் அந்தக் கடிதத்தைப் பயன்படுத்தி யாரோ அவர்கள் இருவரையும் அன்று அந்த பாதாளத்தில் தள்ளிவிட்டிருக்கிறார்கள்."

இதைக்கேட்டுவிட்டு,

பிரசன்னா,

இன்னும் பரபரப்படைந்தான். கடந்த சில தினங்களுக்கு முன்பு இந்த மரணத்தைப் பற்றிய தகவலை பத்திரிகையில் படித்த ஞாபகம் அவனுக்கு வந்தாலும்,

அதில் குறிப்பிடப்பட்டிருந்த பல் கலைக்கழக மாணவர்கள் இந்த தீபாவும் தீபனும் என்பது அவனுக்குத் தெரியாது!

"இவர்கள் இருவரைப் பற்றியும் பத்திரிகையில் வந்த செய்தியை நானும் படித்தேன். ஆனால் அவர்கள் இருவரும் உங்கள் நெருங்கிய நண்பர்கள் என்று எனக்குத் தெரியாது. ம்... அது சரி... அவர்கள் இருவரையும் பாதாளத்தில் தள்ளிவிட்டார்கள் என்று நீங்கள் எப்படி உறுதியாகச் சொல்றீங்க....?"

"அந்தக் கதையை நீங்கள் கேட்டாள் ஆச்சரியப்படுவீர்கள் பிரசன்னா. அதனால்தான் இந்த விஷயத்தில் என்னால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. என்னால் தான் பிரசன்னா இந்த சம்பவம் நடந்தது!"

சொல்லிவிட்டு,

முகத்தை,

இருகைகளாலும் மூடிக்கொண்டு அழுதாள் மதுமிதா!

"எ....என்ன சொன்னீங்க மது மீண்டும் ஒரு முறை அதை சொல்லுங்களேன் பார்ப்போம்... எனக்கு சரியாகத் தெரியவில்லை!'

மதுமிதா எதுவுமே பேசாமல், முகத்தை மூடிக் கொண்டு அழுது கொண்டே இருந்தாள்.

"அப்படியானால் அவர்கள் இருவரையும் தள்ளிவிட்டது நீங்கள்தான் என்று சொல்றீங்களா... அந்த நேரத்தில் நீங்கள் அங்கே இருந்தது போல் அல்லவா சொல்றீங்க...?"

மதுமிதா சிந்தனையில் மூழ்கினாள்.

அவள் விழிகளில் இருந்து, வடிந்த நீர்த்துளிகளை துடைத்து விட்டுக் கொண்டாள். நேரடியாகவே அவள் முகத்தைப் பார்த்தபடியே,

பிரசன்னா பேசினான்.

"எனக்கு புரிகிறது மது... இந்த விஷயத்தில் நிறையவே பயமிருக்கிறது. நான் அன்றும் சொன்னேன். நீங்கள் தப்பு ஏதும் செய்யவில்லையென்றால் நீங்கள் எதற்கும் பயப்படத் தேவையில்லை. இது சம்பந்தமாக உங்களுக்குத் தெரிந்த எல்லா விஷயங்களையும் பயப்படாமல் என்னிடம் சொல்லுங்கள். அதைக் கேட்டு விட்டு என்ன செய்யலாம் என்று உங்களுக்கு நான் ஆலோசனை வழங்குகிறேன்!"

பிரசன்னா ஆறுதலான இந்த வார்த்தைகள்,

மதுமிதாவின் இதயத்தில் பாலை வார்த்தது,

"இந்த சம்பவம் நடக்கும் போது நான் அந்த இடத்தில் இருந்தேன் பிரசன்னா. அதனால் தான் என்னால் இந்த விஷயத்தை தாங்கிக் கொள்ள முடியாமல் இருக்கிறது.!

"என்னது...! நீங்கள் அந்த இடத்தில் இருந்தீங்களா? இது எப்படி நடந்தது?"

"அது கொஞ்சம் பெரிய கதை பிரசன்னா. அதை முழுமையாக நான் உங்களுக்கு சொல்லுகிறேன்... அப்போதுதான் உங்களுக்கு அது புரியும். தீபிகா எனக்கு தினமும் கோல் பண்ணுவாள். நானும் அவளுக்கு கோல் பண்ணுவேன். அந்த சமயத்தில் இந்தக் கடிதத்தைப் பற்றியும் அவள் என்னிடம் சொல்லியிருக்கிறாள். இந்த மாதிரியான பைத்தியக்காரத்தனமான காரியங்களை எல்லாம் செய்ய வேண்டாம் என்று நான் சொன்னேன். ஆனாலும் அவள் கேட்கவில்லை! இந்த பிரச்சினையில் இருந்து விடுபடுவதற்கு நீ எனக்கு உதவி செய்ய மாட்டாயா என்று அவள் இறுதியில் என்னிடம் கேட்டாள். சரி நான் உதவி செய்கிறேன் என்று சொல்லி விட்டு ஒருநாள் நான் அவளை சந்திக்கச் சென்றேன்!"

"அவளை சந்திக்க எங்கே கெம்ப சுக்கா போனீங்க?"

"இல்லை பிரசன்னா அவள் அந்த நேரத்தில் பாணந்துறை பகுதியில் போட்டாகி இருந்தாள். அந்த வீட்டுக்குத்தான் நான் போனேன். அங்கேபோய் இது சம்பந்தமாகப் பேசினேன். இந்த பயணத்திற்கு அவள் திட்டமொன்று போட்டிருந்தாள். அந்த திட்டம் இதுதான் அதாவது 2013ஆம் ஆண்டு ஜுன் மாதம் 12ஆம் திகதி அதிகாலையில் நானும் தீபிகாவும் தீபனும் வட்டவல வளைவுக்கு அருகில் செல்லவேண்டும். இடம் மிகவும் தூரம் என்பதால் அதன் அருகில் இருந்த ஓர் இடத்தை தெரிவு செய்திருந்தாள். அதாவது வட்டவலைக்கு முன்பாக உள்ள இடத்திற்குப் பெயர் வட்டகொட இங்கே தீபிகாவுடைய உறவினர் ஒருவர் இருக்கிறார். சில தினங்களுக்கு முன்பு அங்கே போவதற்கு முன்பு என்னையும் அழைத்தாள், நெருங்கிய தோழி என்பதால் என்னால் அதற்கு மறுப்பு கூட முடியவில்லை. அதனால் வருகிறேன் என்று சொன்னேன். தீபனும் அதற்கு பக்கத்தில் இருந்த அவனுடைய நண்பர் ஒருவரின் வீட்டில் தங்கி இருந்தான் நானும் ஒருகாரில் போயிருந்தேன். தீபிகாவும் இரவு அங்கு வந்த சேர்ந்தாள்!" "கொஞ்சம் இருங்கள்.. நீங்கள் இப்படி ஒரு பயணம் போவதாக உங்கள் வீட்டிற்குச் சொன்னீர்களா? வீட்டில் இவ்வளவு தூரத்திற்குச் செல்வதற்கு உங்களை அனுமதித்தார்களா?"

(இளமை வளரும்)

புலமைப்பரிசில்கள் வழங்கும் International School of Western Australia

The International School of Western Australia இலங்கையில் புதிய கல்விமுறையை அறிமுகப்படுத்தியுள்ளதுடன் புதிய மாணவ, மாணவியருக்கு புலமைப்பரிசில்கள் வழங்கும் வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

இதன் பிரகாரம் முதலாவது குழுவிற்கு முதலில் இணையும் மாணவர்களுக்கு பாடநெறிக் கட்டணத்தில் 50வீத கழிவை வழங்கும் புலமைப்பரிசில் திட்டமொன்று அறிமு கப்படுத்தப்பட்டுள்ளது. WACE கல்வி நிறுவனத்தில் இணையும் மாணவர்களுக்கு மேலதிக வகுப்புகளுக்கு செலவு செய்யவேண்டிய தேவை இருக்காது. WACE இன் கீழ் உயர்கல்வியைப் பூர்த்திசெய்யும் மாணவர்களுக்கு உலகில் பல்வேறு பல்கலைக்கழகங்களில் முழு பாடநெறிக் கட்டண்த்தில் 25வீத கழிவுடன் கூடிய புலமைப்பரிசிலை பெறமுடியும்.

அவுஸ்திரேலிய குடியுரிமையை பெறுவதற்கும் மேற்படி WACE கல்விமுறை பெரிதும் உதவுவதோடு, IIHS நிறுவனத்துடன் இணைந்த International School of Western Australia (ISWA) இலங்கைக்கு முதல் தடவையாக மேற்படி கல்விமுறையை அறிமுகப்படுத்தியது. உயர் தரத்திலான WACE முறையின் கீழ் தமது கல்விக் கனவை நனவாக்குவதற்கு இலங்கை மாணவர் சந்ததியினருக்கு கிடைக்கும் பெரும் வாய்ப்பாக இந்த புலமைப்பரிசில் திட்டம் அமையும். தற்போதைய பொருளாதார நெருக்கடி காலத்தில் தமது பிள்ளைகளுக்கு சர்வதேச மட்டத்திலான கல்வியை வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ள பெற்றோருக்கும் இது ஆறுதல் தரும்

விடயமாக அமையுமென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

கல்வித் துறையில் இரண்டு தசாப்தங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தையும் புகழ்மிகு வரலாற்றையும் கொண்டுள்ள IIHS நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள ISWA கல்லூரியில் தமது பிள்ளைகளை சேர்ப்பதன் மூலம் நியாயமான கட்டணத்தின் கீழ் மேற்படி புலமைப்பரிசில் அனுகூலத்தையும் பெற்று பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு வலுசேர்ப்பதே இந்நேரத்தில் பெற்றோர்கள் எடுக்கக்கூடிய ஆகச் சிறந்த தீர்மானமாக இருக்குமென IIHS நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி டாக்டர் கித்சிறி எதிரிசிங்க தெரிவித்தார்.

Google Assistant மூலம் டிஜிட்டல் வாடிக்கையாளர் சேவை அனுபவத்தை வழங்கும் Dialog

டிஜிட்டல் வாடிக்கையாளர் சேவையின் புதிய சகாப்தத்தை உருவாக்கும் வகையில், இலங்கையின் முன்னணி இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, இலங்கையில் முதன்முறையாக Google Assistant அடிப்படையிலான வாடிக்கையாளர் சேவையை அறிமுகப்படுத்துவதாக அண்மையில் அறிவித்தது.

Android smartphone மற்றும் Google Home Device பாவனையாளர்கள் இப்போது Google Assistant மூலம் டயலொக் மொபைல், டெலிவிஷன் மற்றும் ஹோம் பிராட்பேண்ட் தொடர்பான கேள்விகளுக்கு உடனடித் தீர்வுகளை பெற்றுக்கொள்ள முடியும். எதிர்வரும் மாதங்களில் மேலதிக அம்சங்கள் மற்றும் சேவைகள் சேர்க்கப்படவுள்ள நிலையில், Google Assistant மூலம் டயலொக் வாடிக்கையாளர்கள் தங்களின் முற்கொடுப்பனவு அல்லது பிற்கொடுப்பனவு இணைப்புகளின் செயற்படும் நிலையினை அறிந்து கொள்ளல், நிலுவை தொகைகளை சரிபார்த்தல், டயலொக் இணைப்புகளை தற்காலிகமாக மீள் செயற்படுத்தல், போன்றவற்றை பெற்றுக்கொள்ள முடியும். இந்த சேவையைப் பயன்படுத்த வாடிக்கையாளர்கள் தங்கள் தொலைபேசியில்

Google Assistant ஐ Open செய்து "Talk to Dialog" எனக் கூறி, படிகளைப் பின்பற்றுவதன் மூலம் அவர்களின் Google கணக்கை டயலொக் கணக்குடன் இணைத்துக்கொள்ளலாம். பதிவுசெய்ததும், எந்தவொரு Android மொபைல் மற்றும் Google Home Device களையும் Google Assistant ஆதரிக்கும், மேலும் எந்தவொரு நேரத்திலும், எந்தவொரு இடத்தில் இருந்தும் வாடிக்கையாளர்களுக்கு தனிப்பயனாக்கப்பட்ட உதவியை வழங்கும்.

எதிர்காலத்தை இன்றே வழங்கும் போது, 17 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர்களை டிஜிட்டல் முறையில் மேம்படுத்துவதற்கு வசதியான மற்றும் புதுமையான தீர்வுகளை எளிதாக்கும் டயலொக்கின் பயணத்தில் மற்றொரு மைல்கல்லைக் குறிக்கிறது.

2022 உலக சுற்றாடல் தினத்தில் Coca–Cola – Eco Spindles இணைந்து பிளாஸ்டிக் மீள்சுழற்சி வசதி அறிமுகம்

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு, CocaCola Beverages Sri Lanka Ltd (CCBSL) மற்றும் Eco Spindles Pvt Ltd ஆகியன இணைந்து, புதிய Eko Plasco மூலப்பொருட்களை மீட்டெடுக்கும் ஆலையான, Material Recovery Facility (MRF) இனை அண்மையில் (08) வாதுவையில் ஆரம்பித்து வைத்துள்ளது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக கலந்து கொண்ட சுற்றாடல் அமைச்சின் செயலாளர் வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தலைமையில் இந்த அறிமுக நிகழ்வு இடம்பெற்றது.

கழிவு முகாமைத்துவத்திற்கு ஆதரவளித்தல், மறுசுழற்சி மூலம் பிளாஸ்டிக் கழிவுகளுக்கு அர்த்தமுள்ள மறுவாழ்வை வழங்குதல், பொறுப்பான வகையில் சூழலிலிருந்து பிளாஸ்டிக்கை அகற்றுவது குறித்தான விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த MRF திட்டம்அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

MRF என்பது ஒரு திண்மக்கழிவு முகாமைத்துவ வசதியாகும். இது PET பிளாஸ்டிக் போன்ற மீள்சுழற்சி செய்யக்கூடிய பொருட்களை பயன்படுத்துவதோடு, அவற்றை மீண்டும் புதிய தயாரிப்புகளை உருவாக்குவதற்கான மூலப்பொருட்களாக உற்பத்தி யாளர்களுக்கு விற்பனை செய்கிறது.

மாதவிடாய் வறுமைக்கு எதிராக போராட 'Unsanitary Tales'இனை அறிமுகப்படுத்தும் Arka

Arka முன்னெடுப்பானது இலங்கையில் பாலியல் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியம் தொடர்பான பிரச்சினைகளில் உறுதியான மற்றும் நடைமுறை ஆதரவினை வழங்கிடும் ஒரு அடித்தளநிலை வகிக்கும் நிறுவனமாகும். உலக மாதவிடாய் சுகாதார தினத்தினையொட்டி யுசமய ஆனது இலங்கையில் நாடு முழுவதும் உள்ள பெண்களுக்கு உதவிடும் வகையில் மாதவிடாய் வறுமை ஒழிப்பதற்கான அந்த அமைப்பின் ஒரு பகுதியாக 'Unsanitary Tales' எனும் பெயரில் பிரச்சாரத்தினை ஆரம்பித்தது.

இலங்கையில் மாதவிடாய் மில்லியன் கணக்கான மக்களை சுதந்திரமான, நிறைவான, மனரீதியான மற்றும் உடல் ரீதியான ஆரோக்கியமான வாழ்க்கையை வாழத்தடுக்கிறது. பெண் சுகாதாரத்தைப் பேணும் வர்த்தகநாமங்கள் எளிமையான தகவல் தொடர்பாடல்களின் போது 'period' எனும் மாதவிடாய் என்ற வார்த்தையை நீக்கிவிட்டதால் ,து ஒரு போதும் பேசப்படாத, தடைப்பட்ட தலைப்பாகவே கருதப்படுகிறது. ஒரு மாற்றத்தினை ஏற்படுத்திடும் வகையில்

Publicis Groupe Sri Lanka இக்கலையை தகவல் தொர்பாடல் கருவியாக பயன்படுத்தி, யுசமய முன்னெடுப்புடன் இணைந்து மக்கள் வெளிப்படையாக பேசுவதற்கு வெட்கப்படும் விடயங்களைப் பற்றி பேச தனித்துவமானதொரு பிரச்சாரத்தினை உருவாக்கியது.

இந்த பிரச்சாரம் தொடர்பாக கருத்து தெரிவித்த யுசமய முன்னெடுப்பின் வழிநடத்துனர் தலைவரான ரஷ்மிரா பாலசூரிய,

'Arka முன்னெடுப்பில் நாம், இலங்கையில் மாதவிடாய் ஏற்படுவோரது ,ரத்தம் கண்ணியத்துடன் கசிந்திடுவதற்காக, துல்லியமான அறிவுடன் அதற்காக போராட, களங்களை உடைத்து சுகாதார பொருட்களுக்கான பரந்த அணுகலை உறுதி செய்திட நாம் தினமும் போராடுகின்றோம்.' எனத் தெரிவித்தார்.

ரஷ்மிரா பாலசூரிய மேலும் தெரிவிக்கையில், கண்கவரும் பிரசாரத்தை உருவாக்குவதன் மூலம் இந்த உலக மாதவிடாய் சுகாதார தினம் 2022, ல் குறிப்பிடத்தக்க அடையாளத்தை ஏற்படுத்த எங்களுக்கு உதவிய Publicis Groupe உடன் இணைந்து பணியாற்றுவதில் மகிழ்ச்சியடைகின்றோம். .' எனத் தெரிவித்தார்.

சர்வதேச சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு எம்ஜே – பென்குயினின் சமூக நலத்திட்டங்கள்

எம்ஜே பென்குயின் ஆடைக் கைத்தொழிற்சாலை, சர்வதேச சுற்றுச்சூழல் தினத்தினை கொண்டாடும் முகமாக 4,500 சேவையாளர்களுக்கு மரக்கன்று மற்றும் பேனை வழங்கப்பட்டது.

நிறுவனம் அனைத்திலும் மரம்நடும் திட்டம் தொடங்கப்பட்டது. புஉகோள வெப்பத்தை குறைப்பதற்கும் மற்றும் தற்போதைய நாட்டின் பொருளாதார வீழ்ச்சி காரணமாக ஏற்படும் உணவுத் தட்டுபாட்டிற்கு முகம் கொடுப்பதற்கும் 'மிஹிலிய' நிலைத்தன்மை திட்டம் மற்றும் 'அத்வெல' சமூக வேலைத்திட்டம் இன்னொரு சிறப்புப் படியாகும். அதுமட்டுமன்றி, எமது அனைத்து நிறுவனங்களின் சுற்றுச் சூழலிலும் மருத்துவ செடிகள் வளர்ப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எம்ஜே பென்குயின் குழுவின்,

குருநாகல், கண்டி மாவட்டங்களில் அமைந்துள்ள நிறுவனங்கள், ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்புக்களை உருவாக்கிக்கொடுக்கும் சேவையாகும். அவர்களுக்கு உதவும் விதமாக மருத்துவ முகாம்கள், இரத்ததான முகாம்கள், பள்ளி மாணவர்களுக்கான புத்தக நன்கொடைகள், மரம் நடும் பிரச்சாரங்கள் மற்றும் பாடசாலைகளுக்கும், மருத்துவ மனைகளுக்கும் நன்கொடைகள், தொழில் வழிகாட்டுதல் திட்டங்கள் மற்றும் சுற்றுச்சூழலை சுத்தம் செய்யும் திட்டங்கள் ஆகியவை 'மிஹிலிய' மற்றும் 'அத்வெல' மூலம் பல சமூக சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அதில் பாடசாலை மாணவர்கள் நலன் கருதி அவர்களின் பாடசாலை, தண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கு பங்களிக்கிறது.

ஒரே குடும்பமாக எம்ஜே பென்குயின் குழு, தனது ஊழியர்கள் தமது வாழ்க்கை சவால்களை தொடர்ந்து சமாளிக்க அவர்களுக்கு ஊக்கமளித்து வலுவூட்டல் மற்றும் வழிகாட்டுவதோடு, ஆடைத்துறையிலுள்ள அனைத்து சேவையாளர்களுக்கும் பாதுகாப்பான பணிச்சூழலை அமைத்து கொடுப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுத்து வருகின்றது.

வேகமாக வளர்ந்து வரும் முதல் 10 வர்த்தக நாமங்களில் உள்ள ஒரே காப்பீட்டு நிறுவனம் ஜனசக்தி லைஃப்

ஜனசக்தி இன்சூரன்ஸ் பிஎல்சி நிறுவனம், Brand Finance இன் முதல் 10 வர்த்தக நாமங்களின் தரவரிசையில் இடம் பிடித்துள்ளதுடன், 2022 ஆம் ஆண்டில் போற்றத்தக்க வர்த்தகநாம மதிப்பு வளர்ச்சியையும் பதிவு செய்துள்ளது. 'முதல்; 10 வேகமாக வளர்ந்து வரும் இலங்கை வர்த்தக நாமங்களில்' ஒன்றாக பட்டியலிடப்பட்டுள்ளதுடன், யூ தரப்படுத்தல் மற்றும் 569 புள்ளிகள் வர்த்தகநாம வலுச் சுட்டெண்ணுடன் (Brand Strength Index BSI) முதல் 10 கௌரவப் பட்டியலில் இடம்பெற்றுள்ள ஒரேயொரு காப்புறுதி வர்த்தகநாமம் என்பது குறிப்பிடத்தக்கது. வர்த்தகநாம மதிப்பைப் பொறுத்தவரையில், சந்தையிலுள்ள ஒட்டுமொத்த ஆயுள் காப்புறுதி வர்த்தகநாமங்களும் வெறுமனே 9% என்ற ஆண்டு வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளதுடன் அவற்றுடன் ஒப்பிடுகையில், இந்த முன்னணி காப்புறுதி நிறுவனம் 2022 ஆம் ஆண்டில் 22% என்ற மிகவும் போற்றத்தக்க வளர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளது. 2021 ஆம் ஆண்டில் புதிய வியாபாரத்தில் போட்டியாளர்களுக்கு எதிராக சந்தையில் ஒரு ஸ்தானம் முன்னேறி, வலுவான சந்தைப் பங்கு வளர்ச்சியை எட்டிய அதே வேளையில், ஜனசக்தி லைஃப்பின் தொடர்ச்சியான இரண்டு பில்லியன் சாதனை இலக்குகளைத் தாண்டியமைக்கு மத்தியில் இந்த வர்த்தகநாம மதிப்பு அதிகரிப்பு இடம்பெற்றுள்ளது. அனைத்து முக்கிய பெறுபேற்றுத்திறன் குறிகாட்டிகளும் மிகச் சிறப்பாக அடையப்பெற்றுள்ளதுடன், நிர்ணயிக்கப்பட்ட வியாபார இலக்குகளையும் கடந்து, வழக்கமான கட்டுப்பணத்தின், முதலாவது வருட கட்டுப்பண வளர்ச்சி 115% இற்கும் மேலாக குறிப்பிடத்தக்க அளவில் பதிவாக்கப்பட்டு, வலுவான வருமான மற்றும் இலாப மட்டங்களும் பதிவாக்கப்பட்டுள்ளன.

மீட்சியுடன் நிதியாண்டை ஆரம்பித்துள்ள SDB வங்கி

ஆண்டின் முதல் காலாண்டில் SDB வங்கி உறுதியான நிதிப் பெறுபேறுகளைப் பதிவு செய்துள்ளது. 2022 மார்ச் 31ஆம் திகதியுடன் நிறைவடைந்த முதல் காலாண்டில் வங்கி ரூ. 181 மில்லியனை இலாபமாகப் பதிவு செய்திருந்தது.

இக்காலப்பகுதியில் வங்கியின் தேறிய வட்டி வருமானம் ரூ. 1968 மில்லியனாக உயர்ந்திருந்தது. 2021 முதல் காலாண்டுடன் ஒப்பிடுகையில் இது 21% வளர்ச்சியாகும். மொத்த தொழிற்படு வருமானம் 19% இனால் அதிகரித்து ரூ. 2.17 பில்லியனாக பதிவாகியிருந்தது. முதல் காலாண்டு நிறைவில் காணப்பட்ட பொருளாதார சூழலில் மிகவும் உறுதியான மற்றும் சிறந்த நிலையில் காணப்படும் வங்கிகள் நிலைக்கு SDB வங்கி உயர்ந்துள்ளது. 2022 மார்ச் 31ஆம் திகதியன்று, வங்கியின் மூலதன போதுமை விகிதம் மற்றும் இதர திரள்வு விகிதங்கள் போன்றன ஆகக்குறைந்த ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுக்கு மேற்பட்டதாக அமைந்திருந்தன.

முதல் காலாண்டு நிதிப்பெறுபேறுகள் தொடர்பில் SDB வங்கியின் இடைக்காலப் பிரதம நிறைவேற்று அதிகாரி நிரஞ்ஜன் தங்கராஜா கருத்துத் தெரிவிக்கையில், "முதல்

காலாண்டில் எமது நிதிப்பெறுபேறுகள் SDB வங்கியின் மீட்சி, வலிமை மற்றும் தொலைநோக்கு ஆகியவற்றை பிரதிபலித்துள்ளதாக குறிப்பிட்டார்.

வரலாற்றில் ஒருபோதும் இல்லாத வகையிலான அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கு இலங்கை முகங்கொடுத்துள்ளது. இதன் தாக்கம் நாட்டின் பொருளாதாரத்திலும் அதிக பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. எவ்வாறாயினும், எமது தந்திரோபாயமான நிலைப்படுத்தல், ஒதுக்கீடுகள் மற்றும் நோக்கங்கள் போன்றவற்றினூடாக, எமது பங்காளர்களுக்கு சிறந்த பெறுமதி மற்றும் வினைத்திறனை எம்மால் தொடர்ச்சியாக ஏற்படுத்திக்கொடுக்க முடிந்துள்ளது." என்றார்.

Great Place to Work® பெயர் பெற்ற றைனோ

இவ்வருடம் வணிக உலகத்தில் 60 ஆண்டுகளைக் கொண்டாடும் தேசத்தின் கூரைத் தகடுகள் முன்னோடியாகத் திகழும் றைனோ, தனது ஊழியர்களின் நம்பிக்கையை வென்று Great Place to Work என்ற கூடுதல் ஒப்புதலையும் பெற்றுள்ளது. சிறந்த பெருநிறுவன குடிமகனாக உயர்ந்து திகழும் நிறுவனம், இப்போது சிறந்த பணி கலாச்சாரத்துடன் மதிப்பு சார்ந்த நிறுவனமாக மேலும் அங்கீகரிக்கப்பட்டது.

அண்மையில் இடம்பெற்ற 24ஆவது ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகள் 2020/21 இல் பெறுமதி சேர்க்கப்பட்ட தாதுப்பொருட்கள் பிரிவில் சிறந்த ஏற்றுமதியாளராக பாராட்டுக்கள் பெற்ற றைனோ, ஆறு தசாப்தங்களில் பொருளாதாரத்திற்கு முக்கிய பங்களிப்பாளராக நாட்டில் தனது நிலையை உறுதிப்படுத்தியுள்ளது. இந்த மே மாதத்தில் 60வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் 100% இலங்கை நிறுவனமானது பல தசாப்தங்களாக சந்தையில் சிறந்த தரமான தயாரிப்புகளை வழங்குவதில் கவனம் செலுத்தியது. மேலும், தரமான கூரை தயாரிப்புகளுக்கான தேவையை உருவாக்குவதன் மூலம் உலகளாவிய நிறுவனங்களுக்கு எதிராக போட்டியிடுவதற்கு மூலோபாய ரீதியாக தன்னை நிலைநிறுத்தியுள்ளது.

ஜூன் 2022 இல், 60வது ஆண்டு கொண்டாட்டங்களுடன் இணைந்து, றைனோவுக்கு Great Place to Work பட்டம் வழங்கப்பட்டது. Great Place to Work நிறுவனம், ஊழியர்களுக்கான பணியிட அனுபவத்தின் அனைத்து அம்சங்களையும் ஆய்வு செய்யும் வலுவான மதிப்பாய்வு முறையைப் பின்பற்றி, அவர்கள் செயல்படும் சந்தையில் சிறந்த தொழில்வழங்குநர்களை அங்கீகரிக்கிறது. அதன் அடிப்படையில், இலங்கையில் தொழில் புரிவதற்கு சிறந்த இடமாக இருப்பதற்கு தேவையான உலகளாவிய மதிப்பீட்டு தரங்களை றைனோ பூர்த்தி செய்துள்ளது.

படித்ததும் பகர்வதும் 100

சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

நல்லதை சொல்கிறோம்

போதைப் பொருள் பயங்கரம்!

இன்றைய தினம் (2022.06.26) உலக போதைப்பொருள் ஒழிப்பு தினமாகும். இலங்கையை மட்டுமன்றி அதிகமான சர்வதேச நாடுகளையும் பெருமளவில் ஆட்கொண்டிருக்கும் போதைப்பொருள் பாவனை, தனி மனிதனின் வாழ்வையும் நாசமாக்கி, சமுதாயத்தையும் சீரழித்து சின்னாபின்னமாக்கும் கொடூரமான ஒன்றாக உள்ளது.

போதைப் பொருட்களின் பாவனை பண்டைய காலத்திலிருந்து நடைமுறையில் இருந்து வந்துள்ளதை அவதானிக்கலாம். அபின், கஞ்சா, கல், சாராயம், கசிப்பு என பல்வேறு வகையான போதைப்பொருட்களுக்கு மத்தியில் பீடி, சுருட்டு, சிகரட் என்பனவும் போதைப் பொருட்களாகவே தாக்கம் செலுத்துகின்றன.

இத்தகைய போதைப்பொருட்கள் காலப்போக்கில் பல்வேறு வடிவங்களில் தோற்றம் பெற்று. இப்போது

ஹெரோயின், கொக்கைன், மர்ஜுவானா, அசீஸ், ஐஸ் என புதிய வடிவங்களில் விஸ்வரூபமெடுத்து மக்களை, குறிப்பாக இளைஞர்களை ஆக்கிரமித்து அழித்து வருவதை காணக்கூடியதாக உள்ளது. இவற்றுக்கு மேலதிகமாக எல்,எஸ்,பி போன்ற மாத்திரை வடிவங்களிலும், ஊசி மூலம் செலுத்தும் வகையிலும் போதைப் பொருட்கள் இன்று பரவலாகி உள்ளன. இரண்டு கிராம் ஹெரோயினை சுமார் ஐநூறு பேர் அளவில் பாவித்து போதையை ஏற்றிக்கொள்ள முடியும் என கூறப்படுவதன் மூலம் இவற்றின் பாதிப்பின் எந்த அளவு பயங்கரமானது என்பதை புரிந்து கொள்ளலாம்.

போதைப்பொருள் தடுப்புக்கென பலவித சட்ட ஏற்பாடுகள் இருப்பினும், அவற்றுக்கு மத்தியிலும் போதைப்பொருள் பாவனை, கடத்தல், விற்பனை, பரவல்என்பன சர்வதேச நாடுகள் எங்கும் பாரிய அளவில் நடைபெற்றுக் கொண்டேயிருக்கின்றன. இத்தகைய சட்ட விரோத செயற்பாடுகளுக்கு சில உயர் அதிகாரிகளும், அரசியல்வாதிகளும், முன்னணி வியாபாரிகளும் உறுதுணையாக இருப்பதனாலேயே இவற்றை ஒழிப்பது கடினமாக உள்ளது எனதையும் மறுக்க முடியாதுள்ளது.

போதைப் பொருள் பாவனை இன்றைய நாட்களில் பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரை மாணவர்களை ஆட்கொண்டு வருவது மிகவும் துரதிஷ்டமான நிலைமையாகும். சில பெண்களும், குடும்பத் தலைவர்களும் கூட போதைப் பொருட்களுக்கு அடிமையாகி இருப்பது பற்றி ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டியது அவசியமாகும்.

போதைப் பொருள் பாவனையால் ஒருவர் தன் வாழ்வை இழந்து சீரழிவதோடு தம்மை சார்ந்திருகின்ற தமது குடும்பமும் சீரழிவதற்கு காரணமாக இருக்கிறார். இதன் மூலம் ஒழுக்கம் சீர்கெட்டு, களவு, கொள்ளை, கொலை, தற்கொலை என பயங்கர தீமைகளும், அழிவுகளும் நாளாந்தம் அதிகரித்துச் செல்கின்றன. இதனால் தனி மனிதன், சமுதாயம், கிராமம், நகரம், நாடு என அனைத்துமே பாரிய பாதிப்புகளுக்கு ஆட்படுவதை தவிர்க்க முடியாது. இத்தகைய பயங்கர போதைப்பொருள் பாவனைக்கு தம் பிள்ளைகளோ, குடும்பத்தவரோ, சமூதாயத்தவரோ, வேறு எவருமோ அடிமையாவதை விட்டும் பாதுகாத்துக்கொள்ள ஒவ்வொருவரும் மிக எச்சரிக்கையுடன் பொறுப்புணர்ந்து நடந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

நெஞ்சோடு நெஞ்சம்

'படித்ததும் பகர்வதும்' 100வது பத்திக்கு வாழ்த்து தெரிவித்து, இந்தியா, தமிழ் நாடு, சென்னையில் இயங்கும் இஸ்லாமிய இலக்கிய கழகத்தின் செயலாளர் பேராசிரியர், முனைவர் மு.இ. அகமது மரைக்காயர் அன்புடன் அனுப்பி வைத்துள்ள வாழ்த்துக் கவிதை.

கலையணி இம்தியாஸ் காலமும் நிற்பார்!

காதல் சிறப்பு! காதலின் சிறப்பு
காதலர் இணைந்து கடிமணம் புரிதல்!
ஈதல் சிறப்பு! ஈதலின் சிறப்பு
ஏழையர் கேளா தெடுத்துக் கொடுத்தல்!
ஊதல் சிறப்பு! ஊதலின் சிறப்பு
உடலொடு மனமும் உவக்கும் தென்றல்!
ஓதல் சிறப்பு! ஓதலின் சிறப்பு
ஓதியே உணர்ந்ததை ஊரார்க் குரைத்தல் !

எத்தனை சஞ்சிகை இலங்கையில் இயங்கினும்
எல்லா வாசகர் விரும்பிடும் தினகரன்!
அத்தகு நாளிதழ் அனைவரும் மனங்கொள
அளிக்கும் இணைப்பது வார மஞ்சரி!
வித்தகர் இம்தியாஸ் விரல்வழி விரிந்திடும்
விவரப் பத்தி படித்ததும் பகர்வதும்!
அத்தனை பத்தியும் அறிவொளி பாய்ச்சிடும்!
அறியாச் செய்திகள் அறிந்திட ஓச்சிடும்!

இனித்திடும் இலக்கியம், இயங்கிடும் அரசியல்,
இயற்கைக் காப்பியல், எழுந்திடும் அறிவியல்
தணித்திடும் மருத்துவம், தளர்ந்திடும் பொருளியல்,
தகைகொள் சரித்திரம், தழைத்திடும் கலையியல்
தனித்தனித் தத்துவம், பண்பாடு, மரபெனத்
தகும்பிற பல்துறை ஆக்கங்கள் ஒருநூறு
கனித்தமிழ் நடையினில் கவினுறத் தந்திட்ட
கலையணி இம்தியாஸ் காலமும் நிற்பார்!

பேராசிரியர், முனைவர் மு.இ. அகமது மரைக்காயர்

நெஞ்சுக்கு நீதி

நன்மை செய்வதை கொள்கையாய் வை
நானிலத்தில் சிறப்பாய் நம்பிக்கை வை
உண்மை உரைப்பதில் நீ உறுதியாய் நில்
உலகம் உனை மதிக்கும் உளமதில் கொள்

பிரிந்தார் பெருமை

பேராதனை ஷர்புன்னிசா

இலங்கையின் முதல் முஸ்லிம் பெண் பண்டிதர் என்ற பெருமை பெற்ற சிரேஸ்ட பெண் ஆளுமை பேராதனை ஷர்புன்னிசா கடந்த மார்ச் மாதம் 03ம் திகதி (2022.03.03) தனது 89வது அகவையில் கண்டியில் காலமானார். சித்தி ஸர்தாபீ என்பது இவரது இயற்பெயர். ஐந்து தசாப்தங்களுக்கும் மேலாக எழுதி வந்த மூத்த முஸ்லிம் பெண் எழுத்தாளரான இவர் "பேராதனை ஷர்புன்னிசா" "பேசாமடந்தை" எனும் புனைப் பெயர்களில் எழுதி புகழ் பெற்றார்.

இலங்கையின் பிரபல மூத்த முஸ்லிம் எழுத்தாளரும், கல்வியியலாளரும், பன்நூலாசிரியருமான கலாபூசணம் எஸ். எம்.ஏ. ஹஸன் அவர்களின் வாழ்க்கைத் துணைவியாரான இவர், நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள் என எழுதிக் குவித்துள்ளார். இவரது ஆக்கங்கள் இந்திய இலங்கை வெளியீடுகளான தினகரன், வீரகேசரி, சுதந்திரன், தினபதி, சிந்தாமணி, லங்கா முரசு, மலை முரசு, மலைநாடு, இஸ்லாமிய தாரகை, புதுமைக்குரல், ஷரிஹான், மணிச்சுடர் ஆகியவற்றில் பிரசுரமாகியுள்ளன.

நிந்தவூரின் முதல் முஸ்லிம் பெண் அதிபர் என்ற பெருமையைப் பெற்ற இவருடைய இலக்கிய படைப்புகளிலே நாட்டாரியல் எனும் கிராமிய இலக்கியம் முக்கியமானது. கிராமிய இலக்கிய பாடல்கள், கதைகள், நொடிகள், பழமொழிகள் என்பனவும், நாட்டுப்புற மக்களின் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், சடங்கு சம்பிரதாயங்கள் என்பனவும் உள்ளடங்கிய ஆய்வுத் துறையாக இவை காணப்படுகின்றன.

"கிராமிய மணம்" என்ற நூலையும் வெளியிட்டுள்ள பேராதனை ஷர்புன்னிசா, இந்து கலாசார அமைச்சின் "தமிழ் ஒளி" விருது, மலையக கலை கலாசாரப் பேரவையின் "இரத்தின தீபம்" விருது, இலங்கை அரசின் உயர் விருதான "கலாபூஷணம்" விருது என பல விருதுகளால் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இலங்கையின் மிகப் பிரபலமான மூத்த பெண் ஆளுமையான பேராதனை ஷர்புன்னிசா ஹஸன் அவர்களின் இழப்பு, இலகுவில் நிரப்ப முடியாத இடைவெளியை முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

அபூர்வ கணக்கு!

சிறப்பு எண் '100'

எந்தவொரு இலக்கத்துக்கும் இல்லாத சிறப்பு 100 எனும் இலக்கத்துக்கு இருப்பதைக் காணலாம். 100 என்பது மூன்றிலக்க எண்களின் முதல் எண். பல துறைகளிலும் இலக்காக நிர்ணயிக்கப்படும் தனித்துவ எண் நூறுதான்.

'நூற்றுக்கு நூறு' மதிப்பெண் என்பதே பரீட்சைகளில் மாணவர்களின் இலக்காகும். பெரும்பாலான விளையாட்டுகளில் 100 என்ற எண்தான் முக்கிய பங்கு வகிக்கின்றது.

ஓட்டப் பந்தயத்தில் 100 மீற்றர் என்பதில் துவங்கி அதனுடைய பெருக்கமாகவே 200, 400, 800, 1000 மீற்றர் ஓட்டம் என போட்டிகளுக்கான தூரங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன. 100 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் உலக சாதனை நிகழ்த்தும் வீரரே 'உலகின் அதிவேக மனிதன்' என போற்றப்படுகின்றான்.

கிரிக்கெட்டில், போட்டியொன்றில் துடுப்பாட்ட வீரர், 100 ஓட்டம் எடுப்பது சாதனையாகப் பதியப்படுகிறது. ஒரு கிரிக்கட் வீரர் தனது வாழ்நாளில் வெவ்வேறு வகையான கிரிக்கெட் போட்டிகளில் எத்தனை 100கள் (Centuries) பெற்றார் என்பதே அவரது வாழ்நாள் சாதனையாகக் கொண்டாடப்படுகிறது.

வரலாற்றில் ஆண்டுகள், 100ன் அடிப்படையிலேயே நூற்றாண்டுகளாகக் கணக்கிடப் படுகின்றன. ஒரு நூற்றாண்டில் உள்ள ஆண்டுகளின் எண்ணிக்கை 100 என்பதால் வரலாற்றுக் காலக்கணிப்பில் இது சிறப்பிடம் பெறுகிறது.

இந்தியா, இஸ்ரேல், நேபாளம், கிரீஸ் நாடுகளில் 100 என்பது காவல்துறையினரின் தொலைபேசி அவசர எண். பெல்ஜியத்தில், 100 தீயணைப்பு, ஆம்புலன்சு என்பவற்றை அவசரமாக தொடர்பு கொள்ள பயன்படும் தொலைபேசி எண்ணாகும். ஐக்கிய இராச்சிய நாடுகளில், 100 தொலைபேசி இணைப்பகத்தின் எண்.

கலைத்துறையில் ஒரு திரைப்படம் அல்லது மேடை நாடகம் நூறாவது நாளைக் கடந்து நடந்தால், அது மிகப் பெரிய வெற்றி பெற்றதாக கொள்ளப்படுகிறது. பத்திரிகை, சஞ்சிகை, தின, வார, மாத வெளியீடுகளிலும் நூறாவது வெளியீடுகள் விசேடமாகக் கருதப்பட்டு, சிறப்பு மலர்களாக வெளிவருகின்றன.

'உங்களுக்கு ஆயுசு நூறு' என வாழ்த்துவதிலும் முன்னுரிமை பெரும் '100' எனும் எண், "நூறு பேர்களின் வாய்களை மூட முயற்சிப்பதைவிட நம் காதுகளை மூடிக்கொள்வது சிறந்தது" என்றும், "ஆறிலும் சாவு, நூறிலும் சாவு" எனவும் பலமொழிகளிலும் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

பாடம் தரும் பாடல்

நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி

நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி
இந்த நாடே இருக்குது தம்பி
சின்னஞ்சிறு கைகளை நம்பி
ஒரு சரித்திரம் இருக்குது தம்பி

தவறு என்பது தவறிச் செய்வது
தப்பு என்பது தெரிந்து செய்வது
தவறு செய்தவன் திருந்த பார்க்கணும்
தப்புச் செய்தவன் வருந்தி ஆகணும்

அன்னையிடம் நீ அன்பை வாங்கலாம்
தந்தையிடம் நீ அறிவை வாங்கலாம்
இரண்டும் இருந்தால் பேரை வாங்கலாம்
பேரை வாங்கினால் ஊரை வாங்கலாம்

கருணை இருந்தால் வள்ளல் ஆகலாம்
கடமை இருந்தால் வீரன் ஆகலாம்
பொறுமை இருந்தால் மனிதன் ஆகலாம்
மூன்றும் இருந்தால் தலைவன் ஆகலாம்
இந்த மூன்றும் இருந்தால் தலைவன் ஆகலாம்

பாடலாசிரியர்: **கவிஞர் வாலி,** பாடியவர்கள் : **சீர்காழி எஸ் கோவிந்தராஜன், பீ சுசீலா** , படம்: **பெற்றால் தான் பிள்ளையா (1966)**, இசை: **எம். எஸ். விஸ்வநாதன்,**

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207

திருவள்ளுவத்தில் இலக்கு நிர்ணயம் (Goal Setting)

திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர்

கே. பத்மானந்தன் 12

நிறுவனமொன்றில் ஒரு செயலை செய்வதற்கு அல்லது ஒரு தொழிலை ஆரம்பிப்பதற்குத் திட்டமிடும் போது அந்தச் செயலினால் அல்லது தொழிலினால் அடைய வேண்டிய இலக்கை நிர்ணயிப்பது மிக முக்கியமாகும்.அடைய வேண்டிய இலக்கை நிர்ணயிக்காமல் ஒரு செயலை அல்லது தொழிலைத் தொடங்குவதென்பது விளக்கில்லாமல் இருட்டில் நடப்பது போன்றது . கீழ்வரும் ஈரடியில் திருவள்ளுவர் இக்கருத்துகளை தெளிவாக விளக்குகின்றார்.

அழிவதூஉம் ஆவதூஉம்
ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்.

(குறள் 461)

ஒருவர் ஒரு செயலைத் தொடங்குமுன் அச்செயல் காரணமாக ஏற்படக்கூடிய அழிவையும், அழிந்தபின் அதனால் ஆகும் விளைவுகளையும், பின்பு உண்டாகும் இலாபத்தையும் ஆராய்ந்து தொடங்க வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். அதாவது ஒரு செயலைச் செய்வதனால் அந்த நிறுவனத்திற்கு எந்த அளவுக்கு நன்மை அல்லது தீமை ஏற்படும்,ஏற்படக்கூடிய இலாப நட்டங்கள் என்ன என்று பின் விளைவுகளை நன்கு ஆராய்ந்து கணக்குப் பார்த்த பின்பே அச் செயலில் ஈடுபட வேண்டும்.

எனவே ஒரு நிறுவனத்தின் முகாமைத்துவமானது ஒரு செயலில் அல்லது தொழில் ஈடுபடுவதற்கு முன் அச்செயலால் அல்லது தொழிலினால் ஏற்படக் கூடிய சாதக பாதகங்களை நன்கு ஆராய்ந்த பின்பே முடிவு எடுக்கவேண்டும். அத தொழிலினை அல்லது செயலினைச் செய்யத் தேவைப்படும் முதலின் அளவு மற்றும் அத்தொழிலில் இருந்து பெறப்படக்கூடிய இலாபம் என்பனவற்றை கருத்தில் கொள்ள வேண்டும். இவற்றின் அடிப்படையில் அடைய வேண்டிய நிறுவன இலக்குகளைத் தீர்மானிக்க வேண்டும் என்பது திருவள்ளுவரின் கருத்தாகும்.

எனவே புதிதாக ஒரு வேலையைத் தொடங்க முன்போ அல்லது ஒரு உற்பத்தியை தொடங்க முன்போ அல்லது ஒரு பொருளை அறிமுகம் செய்ய முன்போ முறையான திட்டமிடல் அவசியமாகிறது. முறையான திட்டமிடல் என்பது ஒரு நிறுவனத்தின் முதல் நடவடிக்கையாக அமைந்து அந்நிறுவனத்தின் நோக்கம் அல்லது இலக்கு என்பவற்றை தீர்மானிப்பதற்கு உதவுகின்றது. உதாரணமாக ஒரு வர்த்தக நிறுவனமானது ஒரு குறிப்பிட்ட ஆண்டில் எத்தனை மில்லியன் ரூபாய்களுக்கு வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று ஒரு இலக்கை நிர்ணயிக்குமாக இருந்தால்தான் அக்குறித்த இலக்கை நோக்கி தமது வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். இல்லாவிட்டால் நிறுவனத்தைச் சரியான பாதையில் கொண்டு செல்ல முடியாது.

இவ்வாறு இலக்குகளைத் தெரிவு செய்தபின் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களைச் சரியான முறையில் பயன்படுத்தி இலக்குகளை அடைய முகாமையாளர் முயல வேண்டும். கிடைக்கும் சந்தர்ப்பம் சிறியதோ பெரியதோ எதுவாக இருந்தாலும் அதனைப் பயன்படுத்த வேண்டும். சந்தர்ப்பங்கள் எமக்காக ஒரு

போதும் காத்திருக்காது ஆனால் நாங்கள்தான் சந்தர்ப்பங்களுக்காகக் காத்தி ருந்து அதனைப் பயன்படுத்த வேண்டும் என்ற உண்மையை முகாமையாளர்கள் உணர்ந்து கொண்டு இலக்குகளை அடைய வேண்டும். இக்கருத்துக்களைத் திருவள்ளுவர் கீழ் வரும் ஈரடிகளில் பிரதிபலிக்கின்றார்.

எய்தற் கரியது இயைந்தக்கால்
அந்நிலையே
செய்தற் கரிய செயல். (குறள் 489)

அதாவது கிடைத்தற்கு அரிய வாய்ப்புகள் வந்து வாய்க்குமானால் அந்த வாய்ப்புகளைச் சரியான முறையில் பயன்படுத்தி செய்வதற்கு அரிய செயல்களைச் செய்து எமது இலக்குகளை அடைய வேண்டும் என்கிறார் திருவள்ளுவர்.

இலக்கில் தெளிவு (Clear Goal)

ஒரு நிறுவனத்தின் முகாமையாளர் தாம் நிர்ணயித்த இலக்கில் தெளிவாக இருக்க வேண்டும். இலக்கென்பது அடிக்கடி மாறுகின்ற ஒன்றாக இருக்க முடியாது அதேபோன்று அடையக்கூடிய ஒன்றாகவும் இருக்க வேண்டும் . அப்போது தான் முகாமைத்துவத்தினால் அந்த இலக்கை நோக்கி அந்நிறுவனத்தை வெற்றிகரமாக இயக்க முடியும். உதாரணமாக வர்த்தக நிறுவனமொன்று தனது ஆண்டொன்றிற்கான விற்பனை இலக்குகளை அடிக்கடி மாற்றிக் கொண்டு இருந்தால் அந்நிறுவனத்தின் முகாமையாள ரினாலும் ஊழியர்களினாலும் தமது வேலைகளை ஒழுங்காகத் திட்டமிட்டுச் செய்ய முடியாது. இதனால் எதிர்பார்த்த இலக்குகளை அடைவதில் தோல்வி ஏற்படக்கூடும். இக்கருத்தினை கீழ்வரும் ஈரடியில் திருவள்ளுவர் சிறப்பாக விளக்குகின்றார்.

தெளிவி லதனைத்
தொடங்கார்
இளிவென்னும்
ஏதப்பாடு அஞ்சுபவர்.

(குறள் 464)

இழிவு தருவதாகிய குற்றத்திற்கு அஞ்சுகின்ற ஒருவர் அத்தகைய இழிவைத் தரக்கூடிய எந்த ஒரு வேலையையும் செய்யமாட்டார் அதாவது இன்ன ஊதியம் கிடைக்கும் அல்லது இன்ன இலாபம் கிடைக்கும் அல்லது இன்னவிதமான பலன்கள் கிடைக்கும் என்னும் தெளிவு இல்லாத செயலை ஒருவர் செய்யத் தொடங்கமாட்டார் என்கிறார் திருவள்ளுவர். இன்னும் கூறப்போனால் களங்கத்துக்குப் பயப்படக்கூடியவர்கள் களங்கங்களினால் உண்டாகும் விளைவுகளை எண்ணிப் பார்த்து அந்தக் களங்கங்கள் தரும் காரியத்தில் இறங்காமல் இருப்பார்கள்.

இவ்வீரடியில் திருவள்ளுவர் செய்யும் செயலின் நோக்கம் அல்லது இலக்கில் தெளிவு வேண்டும் என்ற முகாமைத்துவ உண்மையை வலியுறுத்தி நிற்கின்றார். ஒரு சிறந்த முகாமைத்துவமென்பது இலக்குத் தெளிவற்ற வேலையைத் தொடங்காமல் இருப்பதாகும். இலக்குத் தெளிவற்ற வேலையைத் தொடங்கினால் இழப்பேற்படும் என்ற உண்மையை முகாமைத்துவம் உணர வேண்டும். நிறுவனமொன்றின் இலக்குகளும் நோக்கங்களும் எப்போதும் சிறந்த கொள்கைகளாலும் வழிகாட்டிகளாலும் செயல்முறைகளாலும் வழிப்படுத்தப்படும் போது மட்டுமே சரியான பாதையில் நிறுவனத்தை முகாமைத்துவத்தால் வழிப்படுத்த முடியும்.

அதேபோன்று இலக்குகள்,எதிர்பார்க்கும் விளைவுகள் (Expected ResultsOutput /Outcome), கால எல்லைகளுடன் கூடிய செய்யப்பட வேண்டிய முக்கிய வேலைகள் அல்லது நடவடிக்கைகள் (Important activities to be accomplished with time frame), அக்குறித்த வேலைகளை நடைமுறைப்படுத்தத் தேவையான வளங்கள் (Resources Needed) உள்ளடங்கிய வேலைத்திட்டம் (Work Plan) மற்றும் நிகழ்ச்சித் திட்டம் (Program Plan) என்பன குறித்தகாலப் பகுதியில் செய்யப் படவேண்டிய வேலைகளை வெற்றிகரமாகச் செய்து நிறுவனத்தின் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைய உதவுகின்றது. அதே போன்று குறித்த வேலைத் திட்டத்தை அல்லது நிகழ்ச்சித்திட்டத்தைச் செய்து முடிக்கத் தேவையான தெளிவான நிதித் திட்டமும் (Budget) முகாமைத்துவத்திடம் இருப்பது மிக அவசியமாகும்.

அதே போன்று தமது நிறுவனத்தின் அடையப் படவேண்டிய இலக்குகளையும் நோக்கங்களையும் பற்றி முகாமைத்துவம் சிந்திக்க வேண்டும் .அதாவது தமது நிறுவனத்தால் நிர்ணயிக்கப்படும் இலக்குகள் அல்லது நோக்கங்கள் நடைமுறையில் அடையத்தக்க ஒன்றாகவும் இருக்க வேண்டும் என்பதை முகாமைத்துவம் உறுதி செய்ய வேண்டும் . அந்த இலக்குகளை அடைவதற்குச் செய்யப்பட வேண்டியவை எவை செய்யப்படக்கூடாதவை எவை என்ற தெளிவும் முகாமையாளரிடம் இருக்க வேண்டும். கீழ்வரும் ஈரடியில் இவ்வுண்மைகளைத் திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார்.

செய்தக்க அல்ல
செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்.

(குறள் 466)

அதாவது ஒருவர் செய்யத்தகாத செயல்களைச் செய்வதனாலும் கெடுவார்.அதே போல செய்யத்தக்க செயல்களைச் செய்யாமல் விடுவதனாலும் கெடுவார் என்கிறார் திருவள்ளுவர் . அதாவது ஒருவர் செய்யக்கூடிய வேலைகளை செய்யாது விடுவதனாலும் கேடு ஏற்படும். அதே நேரத்தில் செய்யக் கூடாத வேலைகளை செய்வதனாலும் கேடு ஏற்படும் என்பது இதன் மூலம் விளங்குகிறது எனவே ஒரு நிறுவனத்தின் முகாமைமையாளர் தனது நிறுவனத்தின் இலக்குகளை அடைய உதவி செய்யக்கூடிய வேலைகளை மட்டும் செய்ய வேண்டுமே தவிர அந்த இலக்குகளை அடைய உதவி செய்யாத வேலைகளைச் செய்ய முயற்சிக்கக் கூடாது. அதே போன்று தனது நிறுவனத்தின் இலக்குகளை அடைவதற்காகச் செய்யக்கூடிய எந்தவொரு வேலையையும் செய்யாமல் விடுவதும் ஒரு முகாமைத்துவ தவறாக அமையும் என்ற தெளிவு அந்த முகாமையாளருக்கு இருக்க வேண்டும்..

(தொடரும்)

AUTOWHEEL
FAMILY RESTAURANT IS NOW OPEN

AA CEYLON Estd. 1904
FOR TASTY SRI LANKAN FOOD
RS. 350/- PER PACK
VISIT -
Automobile Association of Ceylon
40, Sir Mohomed Macan Marker Mawatha, Colombo 03
Tele. No: 0774369013 (Krishon)

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams

இலங்கை வங்கி

விலைமதிப்புள்ள சொத்துக்களின் விற்பனை

ஆதன இலக்கம்	நகரம்	ஆதனம் காணப்படும் இடம்	ஆதன வகை	பரப்பளவு
Tri Star E	கல்கமுவ	முன்னதாக "ஸ்ரீ ஸ்டார் ஸ்பரல்" வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் கல்கமுவ, பாலுகஹவத்த, வெல்லொரொடபாயில் அமைந்துள்ள "வடுகமாய"	காணியும், தொழிற்சாலை கட்டடமும் (1998.06.01 இலிருந்து 99 வருடங்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது) (ஏலதாரரைத் தேர்ந்தெடுப்பது நீதிமன்ற அங்கீகாரத்துக்கு உட்பட்டது)	1 ஏ - 35.4 பேர்
Tri Star F	புத்தளம்	முன்னதாக "ஸ்ரீ ஸ்டார் ஸ்பரல்" வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் மீகாமுவெல, புத்தளம்	காணியும், தொழிற்சாலை கட்டடமும் (1991.12.01 இலிருந்து 99 வருடங்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது) (ஏலதாரரைத் தேர்ந்தெடுப்பது நீதிமன்ற அங்கீகாரத்துக்கு உட்பட்டது)	2 ஏ - 2 றூட் 33.315 பேர்

மேற்குறிப்பிட்ட சொத்துக்களுக்கான விலைக்கூறல்களை முன்வைக்க ஆர்வமுடையோருக்கு (பிரதான தரப்பினருக்கு மட்டும்) அழைப்பு விடுக்கின்றோம்.

விண்ணப்பங்கள் 2022.07.11 ஆம் திகதி வரை மட்டுமே விநியோகிக்கப்படும். அத்தோடு மீளளிக்கப்படாத 2,000.00 ரூபாவுக்கான வைப்பொன்றையும் மீளளிக்கப்படும் 50,000.00 ரூபாவுக்கான வைப்பொன்றையும் எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் வைப்பிலிடலாம்.

முறையாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை, குறித்த சொத்துக்கள் தொடர்பான இலக்கத்தோடு (PROP/03/2022) எனப் பெயரிட்டு நன்கு முத்திரையிட்டு ஒட்டப்பட்ட உறையிலிட்டு 2022.07.12 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு முன் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு விலைக்கூறல்கள் திறக்கப்படும் 2022.07.12 ஆம் திகதியில் இவ்வலுவலகத்திற்கு சமுகமளிக்குமாறும் அழைப்பு விடுக்கின்றோம்.

விண்ணப்பதாரிகளின் ஒவ்வொரு விலைக்கூறல்களை தளர்த்தி விடுவது அல்லது முற்றாக நிராகரிப்பது இலங்கை வங்கிக்குரிய உரிமையாகும். மேலதிக விபரங்களை வேலை நாட்களில் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுக்கு அழைத்து பெற்றுக் கொள்ளலாம்.

முகவரி: இலங்கை வங்கி, கையகப்படுத்தப்பட்ட சொத்துப் பிரிவு, 3 ஆம் மாடி, தலைமையகம், "இலங்கை வங்கிச் சதுக்கம்", இல: 01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.

தொலைபேசி: உதவிப் பொது முகாமையாளர்,
அறவிடு நிறுவனப் பிரிவு - 0112 386081/0112 203410
சிரேஷ்ட முகாமையாளர் - 0112 321170/0112 203429/076 962 7068
உதவி முகாமையாளர் - 0112 203470/071 841 8890
மின்னஞ்சல் முகவரி - mgrforeclosed@boc.lk

* தயவுசெய்து www.boc.lk என்ற இணையதளத்தில் பிரவேசித்து அங்கிருக்கும் Special Notices என்பதன் கீழுள்ள Foreclosed Properties for sale என்பதைப் பார்வையிடவும்.

1975 BOC www.boc.lk
இலங்கை வங்கி BOC நேர்த்தியான வங்கியாளர்

தினகரன் வாரமஞ்சரி சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 I E-mail - classified@lakehouse.lk

வர்த்தகம்

207

வியாபார ஸ்தலம் விற்பனைக்கு

0777 438169 அபிவிருத்தி செய்யப்பட்ட பல தோட்டங்கள் A9 வீதி தம்புள்ள மாத்தளை, மத்தளபிட்டிய வீதி, தெங்கு, சித்துல், இடைப்பயிர் 12 மில்லியன், பதம்பிட்டிய 6 1/2 ஏக்கர், தெங்கு, மா, வயல், குடியிருப்புக்கு வீடு. 25 மில்லியன், பொக்காவல 20 ஏக்கர் பலா, தெங்கு, இடைப்பயிர் ஓர்கல் (2 ஏக்கர்) 35 மில்லியன் உல்பத் மடவல 16 ஏக்கர் தேக்கு 4000 மிளகு கொடிகள் 2000, வயலுடன் வீடு 80 மில்லியன், கலகெதர காபட் பாதைக்கு முகப்பாக 350 மீட்டர் 16 ஏக்கர் இறப்பர் தோட்டம் 1400 மில். 077 7 282147. 036041

வேலைவாய்ப்பு

318

வெற்றிடங்கள் டிரைவர்கள்

டிலிவரி செல்வதற்கு மேல் மாகாணத்தில் வீதிகளை நன்கு தெரிந்த அனுபவமுள்ள இளம் சாரதி தேவை. தங்குமிடம் வழங்கப்படும் (காலை 09 முதல் மாலை 6 வரை அழையுங்கள்). 0757777699, 031 2233216. 038164

30 வருட நம்பிக்கையைவென்றுள்ள எமது நெஸ்கோ நிறுவனத்திற்கு வயது 20 60 இரத்மலானை, களுத்துறை, பாணந்துறை, தெஹிவளை, நீர்கொழும்பு மற்றும் வென்னப்பு வ பிரதேசங்களிலிருந்து கனரக மற்றும் இலகுரக வாகன சாரதிகள் தேவை. சம்பளம் ரூபா 40, 000/ இற்கு மேல் அழைக்கவும். 077 7 263954, 076 7 639155 விண்ணப்பிக்க வேண்டிய முகவரி 29/ 5, 4ஆம் ஒழுங்கை, இரத்மலானை. 036744

319

வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

தெஹிவளை வீடு ஒன்றிற்கு தங்கி வேலை செய்வதற்கு வீட்டுப்பணிப்பெண் தேவை. வயது 40க்கு கீழ் மாத சம்பளம் 25,000/ 077 6776620. 038283

மாலபே வீட்டில் தங்கி வேலை செய்ய சிங்களம் பேசக் கூடிய 60 வயதிற்கு குறைந்த பெண் தேவை. 077 3912303, 077 0780975. 038017

321

வெற்றிடங்கள் தோட்டத்துறை

தோட்ட வேலைக்கு குடும்பம் தேவை. சம்பளம் பேசித் தீர்க்கலாம். 076 7299070. 038114

சொந்த விடயம்

501

பழங்காலப் பொருட்கள் சேகரிப்புகள்

உங்கள் வீட்டில் ஆடம்பரத்தைக் காட்டும் தளபாடங்களின் சேர்க்கைக்கு இலகுவாக தேட முடியாத புராதனப் பொருட்களின் சேர்க்கை எம்மிடம் பரிசு வழங்கவும் சிறந்தது. நேரில் வாருங்கள் கடந்த கால ஆடம்பரத்தையும் அழகையும் காணுங்கள். ஜயசங்க என்டிக், சம்பத் வங்கி அருகில். ராகம இசுரு ADZ. 038271

524

முத்திரைகள், நாணயங்கள்

பாவித்த இலங்கை தாள் காசுகள் தேவை. (சில்லறை காசு வேண்டாம்) தொடர்பு 077 3818186. 038284

528

தங்குமிட வசதிகள்

கொழும்பு 6, வெள்ளவத்த, பெண்களுக்கான தளபாடங்களுடனான அறைகள் இணைந்த குளியலறைகள், ஓய்வு அறை, சமையலறை, குக்கர், வொஷர், குளிர்சாதனம். 75/ 1, W. A. சில்வா மாவத்தை, தொ.பே. 011 2 591 169, 075 5 0 913 79, 077 7 4 524 47 037140

காணி/தோட்டம்

641

வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

இரண்டு பாரிய படுக்கை அறைகள், மண்டபம் சுத்திகரிப்பு கழுவும் அறை, சமையலறை, வாகனத்தரிப்பிடம் உடன் தெஹிவளை அண்டர்ஸன் வீதி, விஷ்ணு கோயிலுக்கு எதிரில் மாடி வீடு வாடகைக்கு. மாதம் 40,000/ 6 மாதகால முற்பணம். 2722494, 076 9768870. 037406

தெஹிவளை 176/ 1, ஹில் வீதி கரகம்பிட்டி கார்கில்ஸ் புட் சிட்டிக்கு அருகில் 2 படுக்கையறை மாடி வீடு வாடகைக்கு. 076 8424067, 077 9106348. 038215

திருமண சேவைகள்

மணமகன்

கொழும்பில் உள்ள கௌரவமான குடும்பத்து சோனகப் பெற்றோர் தமது 29 வருடம் 6'0'' வெள்ளை நிற தோற்றம் தற்போது வெளிநாட்டில் கடமையாற்றும் தொழில்சார் தகைமையுடைய மகனுக்கு பொருத்தமான மார்க்கப்பற்றுள்ள நல்லொழுக்கமுடைய படித்த வெள்ளை நிற குடும்பப்பாங்கான மணமகளைத் தேடுகின்றனர். தயவு செய்து உங்கள் முழுமையான விபரங்களை கீழ்க்காணும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள். nikkah.674@gmail.com G182723

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

தினகரன் வாரமஞ்சரி
சிறு விளம்பரங்கள்
சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்
முதல் 15 சொற்களுக்கு 150/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383 கயனி - 011 2 429 342/343

தினகரன் வாரமஞ்சரி
BUDGET
ADZ
It suits your budget
Hot Line - 011 2 429 369 I 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845

LAND FOR SALE
IN BATTARAMULLA
22p Residential land, 30 lakhs per perch, 20ft Access Road, 500m to Pelawatte junction, Peaceful Location, Clear Title

0777 258 280

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
- ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
-ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 / பியுமி - 011 2 429 383 /
ரமணி - 011 2 129 347 / கயனி - 011 2 429 342

தேசிய உப்பு லிமிட்டட்

(அரசாங்கத்திற்கு உரிமையான கம்பனி)

விலைமனுவிற்கான அழைப்பு

உண்ணக்கூடிய உப்பு படிகங்களை பொதி செய்வதற்காக கீழேயுள்ள அம்சங்களை கொள்வனவு செய்வதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கம்பனியானது அழைக்கின்றது. உங்களின் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை 2022.07.08ஆம் திகதியன்று பி.ப. 3.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக வந்தடையும் வகையில் அனுப்புதல் வேண்டும் அல்லது கீழே குறிப்பிட்டுள்ள முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

Bid – 1	**Inner Liner** Size Material Gauge Quantity Delivery	 Height 500 mm and width 900 mm (for 1 kg) LDPE 120 50,000 Numbers To Mannar Saltern, Mannar
Bid – 2	**Outer Liner** Size Material Gauge Quantity Delivery	 Width (Mouth) 18” x height 30” HDPE clear pouch 200 100,000 Numbers To Mannar Saltern, Mannar
Bid – 3	**Laminated Pouches** Product Size Quantity Delivery Artwork Cylinder	 Both sides 5 color LLDPE pouch (Centre sealed pouch) 12 pet/45 LLDPE Height 250 mm and width 150 mm (for 1 kg) 2,000,000 Numbers To Mannar Saltern, Mannar Will be provided by National Salt Limited To be borne by the supplier

ஒவ்வொரு விலைமனுவும் தனித்தனியாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனு ஆவணத்தை பெற்றுக் கொள்ளல்: ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத பணக்கொடுப்பனவாக 1,000.00 ரூபாவைச் செலுத்திய பின்னர், கீழேயுள்ள முகவரியில் வார நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனு ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். விலைமனுக்கோரல் தரவுத் தாளில் குறிப்பிட்டுள்ளவாறு மீளளிக்கப்படும் விலைமனு பிணையானது விலைமனு ஆவணத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் பொருட்களுக்கான உணவு தர சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுக்கோரல் தலைப்பை தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் தயவு செய்து எழுதிய பின்னர், அதனை கீழேயுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
தேசிய உப்பு லிமிட்டட்
இல.: 561/3, எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு-05.

தொலைபேசி: 011 2368964
தொலைநகல்: 011 2368974

Repeat Your Ad For Better Offers

வேலை வாய்ப்பு

KOLEGA engineering (Pvt) Ltd என்பது நீர் வழங்கல் மற்றும் வடிகால், நீர்ப்பாசனம், சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகள் ஆகியவற்றில் CIDA-C2 தரப்படுத்தப்பட்ட நிறுவனமாகும். உலக வங்கியின் நிதியுதவி திட்டங்களான அம்பாறை மாவட்டத்தில் திட்டமிடப்பட்ட நீர் தேக்கங்களை புனரமைப்பதற்காக பின்வரும் வெற்றிடங்களுக்கு திறமை மிக்க அனுபவம் வாய்ந்த நபர்களை நாங்கள் தேடுகின்றோம்.

தொழில்நுட்ப அதிகாரி (Technical Officer)

- NDT/NCT/அதற்கு சமமான Civil/Irrigation Engineering தகுதி
- நீர்ப்பாசனத் திட்டங்களில் 10 ஆண்டுகள் இதேபோன்ற அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்

மேற்பார்வையாளர் (Supervisor)

- மேற்பார்வை தகுதி
- நீர்ப்பாசனத் திட்டங்களில் 10 ஆண்டுகள் இதே போன்ற அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

Email: kolegaengineering@gmail.com அல்லது whasapp மூலம் +94 762275296 மூலம் உங்கள் CVயை அனுப்பவும்.

பிரீதிபுர சமூகத்தில் வேலைவாய்ப்பு: பிரீதிபுர சிறுவர் இல்லம், அசோகபுர, ஆனந்தபுர பண்ணைகள்

மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தினை ஏற்படுத்தக்கூடிய உன்னதமான சேவையில் நீங்கள் பணியாற்ற விரும்புகிறீர்களா!

50 வருடங்களுக்கு முன் நிறுவப்பட்ட பிரீதிபுர சமூகமானது இலங்கையில் வேறுபட்ட 4 இடங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான பராமரிப்பு, புனர்வாழ்வு, கல்வி மற்றும் வேலைவாய்ப்பு வசதிகளை வழங்கும் முன்னணி நிறுவனமாக திகழ்ந்து வருகின்றது.

தற்போது எமது நிறுவனத்தில் சேவை புரிந்துவரும் பராமரிப்பாளர்கள் மற்றும் பண்ணை தொழிலாளிகளுடன் இணைந்து சேவைபுரிய புதிய பராமரிப்பாளர்களை எமது நிறுவனத்தில் இணைத்துக்கொள்ள உத்தேசித்துள்ளோம்.

ஏனைய வேலைகளுடன் ஒப்பிடும் போது இவ்வேலை வேறுபட்டது மற்றும் வெகுமதிமிக்கது. ஒரு பராமரிப்பாளராக நீங்கள் மாற்றுத்திறனுடைய குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கு தனிப்பட்ட பராமரிப்பினை வழங்குவதோடு அவர்களுக்கு தேவையான கல்வி மற்றும் சிகிச்சைகளையும் வழங்குவீர்கள்.

நாம் தேடுவது:

- மக்களுக்கு உதவுவதிலும் பராமரிப்பு வழங்குவதிலும் ஆர்வம் கொண்டவர்கள்
- எமது அனுபவமிக்க பராமரிப்பு குழாத்திடமிருந்து கற்றுக்கொள்ள தயாராக இருப்பவர்கள்.
- எங்களுடன் வசிப்பவர்களுக்கு சிறந்த பராமரிப்பு மற்றும் ஆதரவை வழங்குவதற்காக பல்வேறு பணிகளை மேற்கொள்ளத் தயாராக உள்ளவர்கள்.

தங்களது சேவைக்கு நாம் வழங்குவது

- கவர்ச்சிகரமான மாத சம்பளம்
- இலவச உணவு மற்றும் தங்குமிட வசதி
- தேவையேற்படின் மருத்துவ செலவுக்கான உதவி

மேற்கூறிய பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்காக, உங்களது தனி விபர கோவையுடன் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவிக்காக நீங்கள் எவ்வகையில் தகுதியுடையவர் என்பதனை விளக்கும் கடிதத்தினையும் இணைத்து கீழ்காணும் முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பி வைக்க வேண்டும்.

தபால் முகவரி : Director, Prithipura Infants Home, Beach Road, Hendala, wattala.-11300

மின்னஞ்சல் முகவரி : info@prithipura.org

விண்ணப்பங்கள் தமிழ், சிங்களம், ஆங்கிலம் இவற்றில் எம்மொழியானாலும் ஏற்றுக்கொள்ளப்படும்.

முடிவு திகதி 15.07.2022

இலங்கை முதலீட்டுச் சபை (BOI)

பெறுகை அறிவித்தல்

2022 ஜூன் 26ம் திகதி ‘சன்டே ஒப்சர்வர்’ மற்றும் BIO இன் உத்தியோகபூர்வ இணைய தளம் (www.investsrilanka.com) என்பவற்றில் கீழே குறிப்பிடப்படும் பெறுகைக்கான அழைப்பு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

INVITATION TO SUBMIT PROPOSALS FOR SELECTION OF A PRODUCTION COMPANY FOR CORPORATE VIDEO OF THE BOARD OF INVESTMENT OF SRI LANKA

ஒப்பந்த இல. BOI/ADMN/Q/Q/81/2022

இப்பெறுகையுடன் இணைந்த விலைமனு ஆவணங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஆர்வமுள்ள விலை மனுதாரர்கள் ‘சன்டே ஒப்சவர்’ இல் பிரசுரமான மற்றும் BIO இன் உத்தியோகபூர்வ இணையதளத்தில் (www.investsrilanka.com இடம்பெற்ற விளம்பரத்தின் பிரகாரம் செயற்படுங்கள்.

விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பணிப்பாளர் (ஊடகம் மற்றும் பிரசாரம்) இடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்,
இலங்கை முதலீட்டுச் சபை.

Replies to Classifieds & Casual Advertisements published C/o the **Daily News** should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

කෘෂි නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK
IBRD • IDA | WORLD BANK GROUP

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டம் - கமத்தொழில் அமைச்சு

IDA Credit No.: 5873 LK

பெறுகை அறிவித்தல்

மத்திய மற்றும் ஊவா மாகாணங்களுக்கு கொய்யா நாற்று Avocado Budwood and Tissue Culture அன்னாசி தாவரங்கள் (MD2-கட்டம் 04 வகை) வழங்குதல் மற்றும் விநியோகித்தல்

1. கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட (ASMP) கிரயச் செலவிற்காக 58.63 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு நிகரான தொகையை பலவிதமான பணத்தொகைகளில் கடனொன்றை சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடனின் பெறுகைகளின் பகுதியொன்றை மத்திய மற்றும் ஊவா மாகாணங்களுக்கு கொய்யா நாற்று Avocado Budwood and Tissue Culture அன்னாசி தாவரங்கள் (MD2 - கட்டம் 04 வகை) வழங்குதல் மற்றும் விநியோகித்தல் எனும் ஒப்பந்தத்தின் கீழுள்ள தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிடுவதற்கு உத்தேசித்துள்ளது.

2. மத்திய மற்றும் ஊவா மாகாணங்களுக்கு கொய்யா நாற்று Avocado Budwood and Tissue Culture அன்னாசி தாவரங்கள் (MD2 - கட்டம் 04 வகை) வழங்குதல் மற்றும் விநியோகித்தல் எனும் பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின், செயற்றிட்ட பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கிறார்.

விபரங்கள்	ஒப்பந்த இலக்கம்	எண்ணிக்கை	விலைமனுப் பிணை முறியின் பெறுமதி (ரூபா)	மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா)
மத்திய மாகாணத்திற்கு கொய்யா நாற்றுக்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்	LK-MOA- PMU-277421-GO-RFB	110,000	132,000.00	2,500.00
மத்திய மற்றும் ஊவா மாகாணங்களுக்கு (Avocado Budwood)களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்	LK-MOA- PMU-277537-GO-RFB	40,000	192,000.00	2,500.00
Tissue Culture அன்னாசி தாவரங்கள் (MD2 - கட்டம் 04 வகை)	LK-MOA- PMU-283068-GO-RFB	70,000	585,000.00	7,500.00
ஊவா மாகாணம் மொனராகலை மாவட்டத்திற்கு Tissue Culture வாழைக் கன்றுகள் (கெவின்டிஷ்) வழங்குதல் மற்றும் விநியோகித்தல்	LK-MOA- PMU-277612-GO-RFB	250,000	300,000.00	5,000.00
கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டத்திற்கு Soursop கன்றுகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்	LK-MOA- PMU-273639-GO-RFB	60,000	145,000.00	5,000.00

3. விலைமனுக்கோரலானது உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கமத்தொழில் அமைச்சு, விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, பெறுகை திணைக்களத்தின் பெறுகைப் பிரிவிலிருந்து 0777419521 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக்கொள்ளலாம் மற்றும் 2022.06.27ஆம் திகதியிலிருந்து 2022.07.18ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

5. மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், பின்வரும் முகவரிக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவானது செயற்றிட்டத்தின் நிதியிடல் முகாமையாளருக்கு ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

6. 2022.07.18ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கள் அனுமதிக்கப்படமாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. 2022.07.18ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியில் தாமாக வருகை தந்துள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி என்பன தனித்தனியான உறைகளில் இடப்பட்டு ‘மூலப்பிரதி’ மற்றும் ‘நகல்பிரதி’ என தபாலுறைகளில் குறிக்கப்படல் வேண்டும். அதன் பின்னர் இவ்விரண்டு தபாலுறைகளும் வேறொரு தபாலுறையில் இட்டு முத்திரைக்குறி பொறித்து அதன் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கம் மற்றும் கொய்யா நாற்று Avocado Budwood and Tissne Culture அன்னாசி தாவரங்கள் (MD2 - கட்டம் 04 வகை) மற்றும் Soursop கன்றுகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்” எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

8. மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது:

தலைவர்,
செயற்றிட்ட பெறுகைக்குழு,
விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,
இல. 123/2, பன்னிபிட்டிய வீதி, பத்தரமுல்ல.
தொலைபேசி: 0112696086 அல்லது 0777419521

திகதி: 2022.06.26.

සතොස பெறுகை அறிவித்தல்

வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு

லங்கா சதொச லிமிடட் நிறுவனத்தின் இறாக்கைகளை பழுதுபார்த்தல்

விலைமனு இலக்கம் : LSL/PRO/05/94/Repair Super Market Rack- Maligawatta WH/2022

தேசிய போட்டிரீதியான விலைமனு கோரல்

லங்கா சதொச லிமிடட் (LSL) மாளிகாவத்தை **மொத்த களஞ்சியத்தின் இறாக்கைகளை (Supermarket Racks) பழுதுபார்ப்பதற்காக** தகுதியுடைய வழங்குனர்களிடம் இருந்து **லங்கா சதொச லிமிடட், திணைக்கள பெறுகைக் குழு தலைவர்** மூலம் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

தேவை: விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ளவாறு

விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்கள் மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட கடிதம் ஒன்றை சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலான குறித்த விலைமனு ஆவணத்தின் இரண்டாம் பாகத்தை **3,000.00 ரூபா மீளளிக்கப்படாத கேள்விமனுக் கட்டணம்** ஒன்றை செலுத்தி **2022 ஜூன் 27ஆம் திகதி தொடக்கம் 2022 ஜூலை 18ஆம் திகதி வரையான காலத்தில், இலக்கம் 27, சதொச பொதுச் செயலாளர் அலுவலகக் கட்டிடம், வொக்ஷோல் வீதி, கொழும்பு 02** இல் அமைந்துள்ள லங்கா சதொச தலைமை அலுவலகத்தில், பெறுகைப் பிரிவில் இருந்து (3ஆவது மாடி) பெற்றுக்கொள்ள வேண்டும்.

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு **2022 ஜூலை 08ஆம் திகதி பி.ப. 02.00க்கு** மாளிகாவத்தை மொத்த களஞ்சிய நிலையத்தில் இடம்பெறும்.

சமர்ப்பிக்கப்படும் விலைமனு **2022 ஜூலை 18ஆம் திகதி பி.ப. 01.00க்கு அல்லது அதற்கு முன்னர்**, லங்கா சதொச லிமிடட், இலக்கம் 27, சதொச பொதுச் செயலாளர் அலுவலக கட்டிடம், வொக்ஷோல் வீதி, கொழும்பு 02 என்ற முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். இல்லையேல் அந்த முகவரியில் பெறுகைப் பிரிவில் (3ஆவது மாடி) வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதற்கு வேண்டும். விலைமனுக்களை இடுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **“லங்கா சதொச லிமிடட் மாளிகாவத்தை மொத்த களஞ்சியத்தின் இறாக்கைகளை பழுதுபார்த்தல்”** என்று குறிப்பிடுதல் வேண்டும்.

அனைத்து விலைமனுதாரர்கள் மூலமும் இலங்கைக்குள் செயற்படும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட **நிபந்தனையற்ற விலைமனு பிணை ஒன்றை (மீளளிக்கப்படும்)** விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும். குறித்த பெறுமதி விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு இல்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

விலைமனுக்களை ஏற்பது **2022 ஜூலை 18ஆம் திகதி பி.ப. 01.00க்கு** முடிவுறுவதோடு விலைமனுக்களை திறப்பது, விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற உடன் விலைமனுதாரர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. **வெற்றிகரமான விலைமனுதாரர்** மூலம் **பதிவுக் கட்டணமாக 5,000.00 ரூபா பணம் மற்றும் 12% வெட் தொகை ஒன்றை (மீளளிக்கப்படாதது)** செலுத்த வேண்டும் என்பதோடு (தற்போது பதிவு செய்யப்பட்டிருக்கும் விலைமனுதாரர்கள் இந்த கட்டணத்தில் இருந்து விடுவிக்கப்படுவர்.) **ஒப்பந்தப் பெறுமதியில் 5% தொகை செயல்திறன் பிணை ஒன்றாக (மீளளிக்கப்படும்)** நிறுத்தி வைக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்.
பிரதி பொது முகாமையாளர், பொறியியல் (எஷான்) - 070 410 0594 (தொழில்நுட்ப பிரச்சினைகளுக்காக)
சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி, பெறுகை (திலினி) - 070 1560428 (நிர்வாக சிக்கல்களுக்காக)

கேள்விமனு/ ஒப்பந்தம் வழங்கும் இறுதி முடிவு, **தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு, லங்கா சதொச லிமிடட்** வசமானதாகும்.

தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, லங்கா சதொச லிமிடட்
இல.27, சதொச பொதுச் செயலகக் கட்டிடம்,
வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.

BE BETTER INFORMED! News you can trust now free on your mobile phone.

Dinamina · Daily News · Thinakaran

AVAILABLE AT



Visit - apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!

LAKE HOUSE

LUXURY HOUSE FOR SALE IN WATTALA

Located in highly respectable neighbourhood in Wattala Averiwatte Road, walking distance to all major schools, hospitals, supermarkets, 15 perch 3 storied super luxury house 20 feet wide Roads all bedrooms Air-Conditioned with wash rooms with hot water, bar with rooftop view, two granite top pantries, servant room with servants washroom. Fully tiled with Nadun Staircase, all doors and windows finished with Jackwood, Architecturally designed, wooden roof, CCTV, 110 Million. Deal can be done in Foreign currency in Sri Lanka, Singapore, Dubai or US.

Contact : 070 5031726

Business Opportunity

Currently operating all licensed Sand Washing Machines in the Northern Province for sale as the owner travels abroad.

0718881625

ரோயல் கல்லூரி - கொழும்பு 07
பெறுகை அறிவித்தல்
பிரதான உணவகம்

கல்லூரியின் பிரதான உணவகத்திற்கு அனுபவமுள்ள நிறுவன உரிமையாளர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்வி விண்ணப்பங்கள் பாடசாலை அபிவிருத்தி சங்க அலுவலகத்திலிருந்து 2022 ஜூன் 27 முதல் ஜூலை 10 வரை வார நாட்களில் மு.ப. 8.30 முதல் பி.ப. 2.00 வரை மீளளிக்கப்படாத ரூபா ஆயிரம் (ரூ. 1000.00) தொகையை செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

பொறியிடப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் 2022 ஜூலை 11 மு.ப. 9.00 வரை ஏற்கப்படுவதுடன் அன்றே மு.ப. 10.30 இற்கு கேள்வி விண்ணப்பதாரிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

கேள்வி பத்திரங்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த சேவையைக் குறிப்பிடுதல் வேண்டும்.

அதிபர்.

இலங்கை உலகளாவிய நிதியத்தின் உள்நாட்டு ஒருங்கிணைப்புக் குழுவின் நிறைவேற்றுச் செயலாளர் / கண்காணிப்பாளர் பதவி வெற்றிடம் (ஒப்பந்த அடிப்படை)

இலங்கையின் உள்நாட்டு ஒருங்கிணைப்புக் குழுவின் நிறைவேற்றுச் செயலாளர்/கண்காணிப்பு அதிகாரி பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் விண்ணப்பங்களை இலங்கை நாட்டின் ஒருங்கிணைப்பு பொறிமுறையின் (CCM) தலைவர் அழைக்கிறார். இலங்கையில் மலேரியா, காசநோய் மற்றும் எச்.ஐ.வி/எய்ட்ஸ் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த எய்ட்ஸ், காசநோய் மற்றும் மலேரியா (GFATM) ஆகியவற்றை எதிர்த்துப் போராடுவதற்கான உலகளாவிய நிதியத்திலிருந்து நாட்டின் ஒருங்கிணைப்பு பொறிமுறை நிதியுதவியைப் பெறுகின்றது.

கடமைகள்:

நிறைவேற்றுச் செயலாளர்/கண்காணிப்பு அதிகாரி உள்நாட்டு ஒருங்கிணைப்பு குழுச் செயலாளர் அலுவலகத்திற்கு தலைமைத்துவம் வழங்கும் அதேவேளை உள்நாட்டு ஒருங்கிணைப்புக் குழுவிற்கும் அதன் தலைமைத்துவத்திற்கும் பொறுப்புக் கூற வேண்டும். தொற்றுநோயாகவுள்ள இந்த நோயை 2030ஆம் ஆண்டிற்குள் முடிவுக்குக் கொண்டுவரும் இலக்கை நோக்கிச் செல்லும் தேசிய நோய் உத்தியைத் திறம்பட செயற்படுத்துவதற்கு நிறைவேற்றுச் செயலாளர்/கண்காணிப்பு அதிகாரி உள்நாட்டு ஒருங்கிணைப்புக் குழுவிற்கு மேலான ஆதரவை காட்டுவார். அதேபோல் இலங்கையின் உள்நாட்டு ஒருங்கிணைப்புக் குழுவின் நிறைவேற்றுச் செயலாளர்/கண்காணிப்பு அதிகாரி மிகவுத் திறமையான அரசியல் மற்றும் தொழில்நுட்ப திறன்கள் சகிதம் பயனுள்ள நிர்வாகப் பொறிமுறையைப் பயன்படுத்தி உள்நாட்டு ஒருங்கிணைப்புக் குழுவின் பணிகளுக்கு வசதிகளை வழங்கும். இந்த நிலை உள்நாட்டு ஒருங்கிணைப்புக் குழுவின் ஆவணக் களஞ்சியத்தைப் பராமரிக்கின்றது. உறுப்பினர்களிடையே சர்ச்சைக்குரிய பகுதிகளில் மத்தியஸ்தம் செய்வதோடு தேசிய பங்குதாரர்களுக்கும் உலகளாவிய நிதிச் செயலகத்திற்கும் இடையே ஒரு பாலமாக செயற்படுகின்றது.

கண்காணிப்புச் செயற்பாட்டிற்கான ஆதரவைப் பொறுத்தவரை, பதவியின் விசேட நோக்கமானது:

1. பரிணாம வரம்பு (Evolution threshold) மதிப்பீட்டில் அடையாளம் காணப்பட்ட கண்காணிப்புச் செயற்பாட்டின் சிக்கல்களைத் தீர்க்க உள்நாட்டு ஒருங்கிணைப்புக் குழுவுக்கு உதவுதல்.
2. பகுப்பாய்வு தரவுகளை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடல்களை நடாத்தி முடிவெடுப்பதை எளிதாக்குதல் மற்றும் ஆதரவை வழங்குதல்
3. கண்காணிப்புத் திட்டமிடல் மற்றும் செயல்படுத்தலுக்கு ஆதரவை வழங்குதல்.
4. உள்நாட்டு ஒருங்கிணைப்புக் குழுவின் கண்காணிப்புக் குழுவிற்கு தொழில்நுட்ப மற்றும் நிர்வாக ஆதரவை வழங்குதல்.

பொறுப்புகளின் பிரதான துறைகள்:

முக்கிய செயற்பாடு 1: செயற்பாடுகள் - உள்நாட்டு ஒருங்கிணைப்புக் குழு செயலாளர் அலுவலகத்திற்கு வழிகாட்டுதல் மற்றும் அதன் செயற்பாட்டு கட்டமைப்புகளுக்கு உதவிகளை வழங்குதல்

முக்கிய செயற்பாடு 2: பரிணாம வரம்பு (Evolution threshold) மதிப்பீட்டில் அடையாளம் காணப்பட்ட பலவீனங்களை நிவர்த்தி செய்யும் நோக்கில் மேற்பார்வை நடைமுறைகளின் செயற்றிறனை மேம்படுத்துதல்

முக்கிய செயற்பாடு 3: அரசியல் கலந்துரையாடல்களுக்கான வசதிகளை திட்டமிடுதல் மற்றும் நிலையான முயற்சிகளை வலுப்படுத்துதல்

முக்கிய செயற்பாடு 4: நிலைப்படுத்துதல் - பரிணாம வரம்பு (நுஎழடரவழைெ வாசநளாழடன) மதிப்பீட்டில் அடையாளம் காணப்பட்ட பலவீனங்களை நிவர்த்தி செய்யும் நோக்கில் பிரதான தரப்பினரின் அர்த்தமுள்ள, உள்ளடக்கிய மற்றும் செயலில் பங்கேற்பதை ஊக்குவித்தல்

தகுதிகள்:

பொதுச் சுகாதாரம், நிதி, பொது நிர்வாகம் அல்லது வியாபார நிர்வாகம் அல்லது தொடர்புடைய துறைகளில் முதுமாணி பட்டத் தகுதிகளுடன் மருத்துவப் பட்டதாரி (அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்தில் இருந்து) விரும்பத்தக்கது.

அனுபவம்:

1. மனிதாபிமானத் துறையில் திட்டமிடல் மற்றும் நிர்வாகத்தில் பணியாற்றிய குறைந்தபட்சம் 7 ஆண்டுகள் தொழில்முறை அனுபவம் (சர்வதேசம் அல்லது உள்நாடு).
2. அரசியல் சூழல்களில் கூட்டாண்மைகளை வளர்ப்பதில் உறுதியான அனுபவம் மற்றும் நாடு, பிராந்திய மற்றும் சர்வதேச அளவில் சிக்கலான சிக்கல்கள் மற்றும் வழங்குதல்களை மத்தியஸ்தம் செய்தல்.
3. மூலோபாயம் மற்றும் கொள்கை பகுப்பாய்வு, நிரல் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம் மற்றும்/அல்லது அதற்கு சமமான அனுபவம் ஆகியவற்றில் பணியாற்றிய சாதனைப் பதிவு உட்பட மேலான தொழில்முறை அனுபவம்.
4. மூலோபாய, நிறுவன, நிதி மற்றும் முகாமைத்துவ சிக்கல்களின் திடமான புரிதல் மற்றும் அனுபவம்.
5. உலகளாவிய நிதியச் செயல்முறைகள் மற்றும் அதன் நிதி மாதிரி பற்றிய திடமான புரிந்துணர்வு.
6. முக்கிய மக்கள் தொகை / நோய்களுடன் வாழ்பவர்களின் மூலோபாய மதிப்பின் திடமான புரிந்துணர்வு மற்றும் அது ஒரு அர்த்தமுள்ள வழியில் செயல்பட தேவையான குறிப்பிடத்தக்க முயற்சிகள்.
7. எச்ஐவி/எய்ட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவை மையமாகக் கொண்டு பொதுச் சுகாதாரம் மற்றும் நோய் திட்ட முகாமைத்துவத்தில் அனுபவம்.
8. சிறந்த கணினி கல்வியறிவு, சிங்களம் மற்றும்/அல்லது தமிழ் மொழியில் சரளமாகவும் ஆங்கிலத்தில் அதிக புலமையையும் வெளிப்படுத்தப்பட்ட வலுவான தகவல் தொடர்பு திறன் (எழுத்து மற்றும் வாய்மொழி) தேவை.
9. ஒரு குழுவை நிர்வகிப்பதற்கான ஆவணப்படுத்தப்பட்ட அனுபவம்

வயதெல்லை மற்றும் சம்பளம்

- வயது - திறந்தநிலை
- சம்பளம் - மாதாந்தம் 250,000.00 + போக்குவரத்துக் கொடுப்பனவு

பொது நிபந்தனைகள்

- அரச துறையில் அல்லது அரச நிறுவனங்களில் சேவையாற்றும் அதிகாரிகள் தமது விண்ணப்பங்களை தமது நிறுவனத்தின் தலைமையின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.
- இந்தப் பதவி கொழும்பில் உள்ள உள்நாட்டு ஒருங்கிணைப்புக் குழு செயலகத்தில் இருக்கும்.
- 6 மாத தகுதிகாண் காலத்துடன் ஆரம்ப ஒப்பந்த காலம் ஒரு வருடமாகும் என்பதுடன் ஒப்பந்தத்தை புதுப்பித்துக் கொள்வதற்கான ஏற்பாடுகள் உண்டு. வருடாந்த செயல்திறன் மதிப்பீடு, நிதி இருந்தால் ஒப்பந்தத்தை மூன்று ஆண்டுகள் வரை நீடிப்பதற்கு தீர்மானிக்கப்படும்.
- குறும் பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் 2022 செப்டெம்பர் 01ஆம் திகதியில் நியமனத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருக்கும்.

விண்ணப்பதாரர்கள் தங்களின் அனுபவம் மற்றும் கல்வித் தகுதிகளின் சுருக்கமான விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன் பதவிக்கு பொருத்தமானவர் என்பதற்கான காரணங்களை தெரிவிக்க வேண்டும். மேலதிக விவரங்களுக்கு பின்வரும் இணைப்பைப் பார்வையிடவும். http://www.malariacampaign.gov.lk/en/public-notices/vacancies

விண்ணப்பங்களை ccmsrilanka@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் என்பதுடன் "Application for the Post of Executive Secretary/Oversight Officer, CCM Sri Lanka" எனக் குறிப்பிட்டு 2022 ஜூலை 10ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

எஸ். ஜனக ஸ்ரீ சந்திரகுப்த,
தலைவர்/இலங்கை உள்நாட்டு ஒருங்கிணைப்புக் குழு,
செயலாளர்/சுகாதார அமைச்சு,
385, வண. பத்தேகம விமலவன்ச மாவத்தை,
கொழும்பு 10.

தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

நலம்பேணல் ஊழியர் பயிற்சிப் போதனாசிரியர்களை ஒப்படைத்தல் விதிமுறை அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்காக விண்ணப்பங்கள் கோரல்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் செயற்படுத்தப்படும் நலம்பேணல் பயிற்சிக் கற்கை நெறிக்கு இயைபாக பயிற்சிப் போதனாசிரியர்கள் ஆட்சேர்க்கப்படுகின்றனர் என்பதுடன் இதற்காக பின்வரும் தகைமைகளுடன் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அடிப்படைத் தகைமைகள்:

- குறைந்தபட்சம் க.பொ.த. (சா/ தர) பரீட்சையில் மொழி மற்றும் கணிதப் பாடங்கள் சகிதம் சித்தியடைந்திருத்தல்
- தாதியர் சேவை, நலம்பேணல் சேவை தொடர்பிலான சான்றிதழ் / டிப்ளோமா கற்றை நெறியைக் கற்றிருத்தல்
- நலம்பேணல் சேவைத் துறையில் குறைந்தபட்சம் 02 வருட கால அனுபவம் மற்றும் பயிற்சியளித்தல் தொடர்பான அனுபவம்

மொழி ஆற்றல்

- தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் கற்பிக்கும் ஆற்றல்

ஏனைய தகைமைகள்

- கற்பித்தல் தொடர்பான ஆற்றல் (ஆசிரியர் ஆளுமை)
- சிறந்த தேகாரோக்கிய நிலைமை

வேறு தகைமைகள்

- கற்பித்தல் தொடர்பிலான ஆற்றல் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- 25 வயதிற்கு மேற்பட்டவர்களாகவிருத்தல் வேண்டும் (தகைமை வாய்ந்த ஓய்வு பெற்றவர்களும் கவனத்திற் கொள்ளப்படுவர்)

ஆட்சேர்க்கும் முறை:

நேர்முகப் பரீட்சையில் கற்பித்தல் தொடர்பான ஆற்றலைக் கண்டுகொள்வதற்காக செயல்முறைப் பரீட்சையொன்று நடாத்தப்படும்.

நியமனத்தின் தன்மை மற்றும் சம்பளம் வழங்குதல்:

- சேவை ஒப்படைத்தல் முறையில் கடமைகள் ஒப்படைக்கப்படும்.
- மணித்தியால அடிப்படையில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்.
- சேவைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் நாடு முழுவதிலும் அமைந்துள்ள பணியகத்தின் பயிற்சி நிலையங்களில் சேவை செய்வதற்கான இயலுமை இருத்தல் வேண்டும்.
- உங்களது விண்ணப்பப்படிவங்களை 2022-07-15ஆம் திகதிக்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது மின்னஞ்சலூடாக (mgr_adhr@slbfe.lk) அனுப்புதல் வேண்டும்.
- உங்களது விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "நலன்பேணல் ஊழியர் பயிற்சிப் போதனாசிரியர்களை ஆட்சேர்த்தல்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

பிரதிப் பொது முகாமையாளர் (நிர்வாகம் மற்றும் மனித வளங்கள்),
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்,
இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
கொஸ்வத்த, பத்தரமுல்ல.

தொலைபேசி இல. 011-2887594
தொலைநகல் இல. 011-2887594

குறுக்கெழுத்துப் போட்டி இல. 17

01	02	03	04	05	06
	07		08		09
10		11	12	13	14
15			16		17
18	19	20		21	22
23	24		25	26	

பெயர் .....
வகுப்பு .....
தொலைபேசி இல .....
பாடசாலை பெயர் .....
வதிவிட முகவரி .....
.....
....
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

இடமிருந்து வலம்

(01) உலகில் வாழும் உயிரினங்களில் (விலங்கினம்) உருவத்தில் மிகப் பெரியது இதுதான்.
(11) புவியில் ஏராளமான உலோகங்கள் கலந்து கிடக்கின்றன. இரும்பு, அலுமினியம், நாகம், வெள்ளி என்றெல்லாம் ஏராளம். ஆனால் இந்த உலோகத்துக்கு மாத்திரம் மதிப்பும், பெறுமதியும் அதிகம்.
(18) பாதங்களில் கல், முள், அழுக்கு எதுவும் படாதவாறு பாதுகாப்புக்காக அணிந்து கொள்வது. (தலைகீழான சொல்)
(21) பெருவிருப்பம் என்ற அர்த்தம் தரும் சொல். அளவுடன் இது இருக்க வேண்டும். இல்லையேல் துன்பத்துக்கே வழிவகுக்கும். (தலைகீழான சொல்)
(23) உயிரினங்களின் மிகச் சிறிய கூறான கலங்களுக்கு உள்ளே இருப்பது.
(25) துடுப்பின் உதவியுடன் பயணம் செய்யக்கூடிய நீர்ப்போக்குவரத்துச் சாதனம். (தலைகீழான சொல்)

மேலிருந்து கீழ்

(02) நெல், கோதுமை போன்ற தானியங்களின் வெளிக்கவசம். (தலைகீழான சொல்)
(04) மரவள்ளி போன்ற சில வகைத் தாவரங்களின் வேர்ச்சேமிப்பு இது. நாம் உணவுக்கும் பயன்படுத்துகின்றோம்.
(06) தொடக்கம் என்றும் கூறலாம். (தலைகீழான சொல்)
(10) மாணவர்களாகிய உங்களுக்குரிய பிரதான பாடங்களில் இதுவும் ஒன்று. (தலைகீழான சொல்)
(19) மரத்தின் ஒத்தபொருள் சொல்.
(21) உழுந்து கொண்டு தயாரிக்கப்படும் உணவுப்பண்டம். சட்னி, சாம்பார் சேர்ந்தால் சுவையான ஆகாரம். (தலைகீழான சொல்)

குறுக்கெழுத்துப் போட்டி இல. 16

விடைகள்

இடமிருந்து வலம்

(01) மயில் (04) திரு (07) கைகேயி
(10) மிளகு (14) முதுமை (17) மரவள்ளி
(24) தேர்

மேலிருந்து கீழ்

(01) மம்மி (03) குயில் (04) கைதி
(13) ஆமை (14) முள் (15) துளிர்
(17) மனை (19) வடு

குறுக்கெழுத்துப் போட்டி இல: 15

பரிசு பெறுவோர்

முதலாம் பரிசு
பி. ருஷானி,
தரம் 9, விஷ்ணு மகா வித்தியாலயம்,
பெரியநீலாவணை 01.

இரண்டாம் பரிசு
சு. யகஸ்வினி,
தி/கலைமகள் மகா வித்தியாலயம்,
975, அன்புவழிபுரம்,
திருகோணமலை.

மூன்றாம் பரிசு
ஆர். அப்துல்லாஹ்,
தரம் 05 பி, அக்/டி.பி. ஜாயா வித்தியாலயம்,
அட்டாளைச்சேனை.

பாராட்டு பெறுவோர்

1. எம். சுஹைப்,
தரம் 07, மா/ அஜ்மீர் தேசிய பாடசாலை,
190, மாருகொண,
ஜனபதய,
உக்குவளை.

2. இப்திகார் ஸைத்,
தரம் 05, கே/மா/சாஹிரா தேசியக் கல்லூரி,
மாவனல்ல.

3. சாஹிட் நூரி,
தரம் 04, தாருஸ்ஸலாம் மகா வித்தியாலயம்,
திஹாரிய.

4. பிரனுகா பிரசாந்த்,
தரம் 03S,
மட்/வின்சன் மகளிர் உயர்தர தேசிய பாடசாலை,
43/1, புகையிரத நிலைய வீதி,
மட்டக்களப்பு.

5. ர. மேவர்ஷா,
தரம் 03,
மட்/அரசடிப்பிள்ளையார் க. வித்தியாலயம்,
கடற்கரை வீதி, குருக்கள்மடம்,
மட்டக்களப்பு.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 17
சிறுவர் உலகம்
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.
தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெல்அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

தெளிவுரை :
பிறர்க்கு உதவி செய்து வாழும் ஒப்புரவைப்போல நல்லனவாகிய வேறு அறப்பகுதிகளைத் தேவருலகத்திலும் இவ்வுலகத்திலும் பெறுதல் இயலாது.

கன்னியா வெந்நீரூற்று

கன்னியா வெந்நீரூற்றுக்கள் சமய நம்பிக்கையிலும், விஞ்ஞான ரீதியிலும் பல சிறப்புகளைப் பெற்று இன்று வரை தனித்துவமாக மிளிர்கின்றன.

கிழக்கு மாகாண திருகோணமலையில் இந்த வெந்நீரூற்றுக்கள் அமைந்துள்ளன. திருகோணமலை நகரில் இருந்து 3.9 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள வெந்நீரூற்று இக்கிணறுகள் 90 தொடக்கம் 120 சென்ரி மீற்றர் ஆழமுடையவையாகும்.

சுற்றுலாப் பயணிகளை அதிகமாகக் கவரும் இடங்களில் இவையும் பிரதான இடத்தை பிடித்துள்ளன. இவற்றின் சிறப்பம்சம் யாதெனில், ஒவ்வொரு கிணறும் வெவ்வேறு வெப்பநிலையுடன் விளங்குவதோடு எப்பொழுதுமே இவற்றில் நீர் வற்றுவதே இல்லை.

இத்தகைய சிறப்புக்களைக் கொண்டு விளங்குவதால், இப்பகுதியை உள்ளூர் மற்றும் வெளியூர் சுற்றுலாப் பயணிகள் சென்று பார்வையிடுகின்றனர். இந்த வெந்நீரூற்றுக்களை பார்வையிடவும் மற்றும் இவற்றில் நீராடுவதற்கும் கட்டணமுறைப்படி அனுமதிகள் வழங்கப்படுகின்றன. மேலும் இந்த ஏழு கிணறுகளிலும் நீராடுவதினால், தோல் சம்பந்தப்பட்ட நோய்கள் நீங்கிவிடும் என்ற நம்பிக்கையும் உள்ளூர்வாசி மக்களிடையே நிலவி வருகின்றது. ஒவ்வொரு கிணறுகளும் 3 மற்றும் 4 அடி ஆழம் உடையவையாகும். அத்துடன் இப்பகுதியை சூழ விகாரையும் கோயிலும் காணப்படுவதால், இங்கு அமைதி கட்டாயமாகப் பேணப்படுகின்றது. ஒவ்வொருவரும் நிச்சயமாக சென்று பார்வையிட வேண்டிய இடங்களில் இந்த ஏழு வெந்நீர் கிணறுகளும் முக்கியமானவையாகும்.

வினோ மதிவதனி,
லுனுகலை.

ஆமைகள்

ஆமைகள் ஊர்வன இனத்தைச் சேர்ந்தவையாகும். இவை நீரிலும் நிலத்திலும் வாழ வல்ல இரு வாழ்விகள் ஆகும்.

நிலத்தில் வாழும் ஆமைக்கு கால்களில் நகங்கள் அமைந்திருக்கின்றன. ஆமை தரையில் நடக்கும் வேகம் மணிக்கு சுமார் 70 மீட்டர். கடலில் வாழும் ஆமை வகைகளின் கால்களே துடுப்பு போன்று அமைந்திருக்கும். கடல் ஆமை ஒரே சமயத்தில் 200 முட்டைகளிடும்.

இதன் உடல் ஓட்டினால் மூடப்பட்டதாக இருக்கும். உலகில் ஏறத்தாழ 300 வகையான ஆமையினங்கள் உள்ளன.

இவற்றில் சில இனங்கள் அழியும் அபாயத்தை எதிர்கொள்கின்றன.கடலாமைகள் ஒப்பீட்டளவில் பெரியவை. தோல்முதுகுக் கடலாமை என்ற ஆமையினம் 900 கிலோகிராம் நிறை வரை வளர்கிறது.

பொதுவாக உயிரினங்களில் ஆமைகளுக்கு நீண்ட ஆயுள் உள்ளது. இதன் இதயம் மிகவும் நிதானமாகத் துடிப்பதே நீண்ட ஆயுளுக்குக் காரணமாக அமைகிறது.

ஆமைகள் முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும் இனத்தைச் சேர்ந்தது. கடலில் வாழும் பெண் ஆமைகள், கருத்தரித்ததும், கடற்கரையை நோக்கி கூட்டமாகச் சென்று கரையை அடைந்ததும் மண்ணில் குழி தோண்டி முட்டைகளை இட்டுவிட்டு சென்றுவிடுகின்றன. ஒவ்வொரு கடல் ஆமையும் 200 முட்டைகளை ஒரே சமயத்தில் கூட இட்டுவிடும். கடல் ஆமைகளில் ஆறு வகையானவை மிகவும் பிரசித்தி பெற்றவை.

மிகச்சிறிய ஆமையாக கருதப்படும் 110 மி.மீ., கொண்ட 'ஸ்டிங்காட்' ஆமையானது வடகிழக்கு அமெரிக்காவில் உள்ளன. மற்ற ஐந்து வகை ஆமைகள் இந்திய கடற்பகுதியில் வாழ்கின்றன. பேராமை, சித்தாமை, அழுங்காமை, தோணி ஆமை, பெருந்தலை ஆமை என்பவை அவற்றின் பெயராகும்.

பெருந்தலை ஆமையை தவிர மற்ற வகை ஆமைகள் மட்டுமே இந்திய கடற்கரை பகுதியில் முட்டையிடும். நவம்பர் ஏப்ரல் இவை முட்டையிட ஏற்ற காலமாகும். இதில், சித்தாமைகள் அதிக அளவில் முட்டையிடும். இவை, இந்திய கிழக்கு கடற்கரை பகுதியான ஒரிசாவின் கஹிர்மாதா, ருசிகுல்யா, தேவி ஆற்று முகத்துவாரத்தில் தான் முட்டையிடுகின்றன. இதற்காக ஆண்டுக்கு ஆறு லட்சம் சித்தாமைகள் தமிழகம், ஆந்திர கடலோரப் பகுதியை கடந்து செல்கின்றன. பயணத்தின் வழியிலும் முட்டையிடும் பழக்கம் கடல் ஆமைகளுக்கு உண்டு.

ஆர். ராஹினி,
வெளிமடை.

உலக அறிஞர்களின் பொன்மொழிகள்

கண்ணாடியில் புன்னகை செய்யுங்கள்.. ஒவ்வொரு காலையும் இதை செய்யும் போது.. நீங்கள் உங்கள் வாழ்வில் ஒரு பெரிய வித்தியாசத்தை உணரத் தொடங்குவீர்கள்..!

வெற்றி எனும் உணவில் சேர்க்கப்படும் மிகச்சிறந்த சுவையூட்டி தோல்வி..!

விளையாட்டில் பங்கெடுத்துக் கொள்ளாமல் வெற்றி பெறுவது என்பது சாத்தியமே இல்லாத ஒன்று என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்..!

முழுக்க முழுக்க சக்கரையாக இருந்து விடாதே.. உலகம் உன்னை விழுங்கி விடும்..!

வாழ்க்கை என்பது உங்களை நீங்களே தேடுவதில்லை.. உங்களை நீங்களே உருவாக்குவது..!

வாழ்வில் பலர் தோற்கின்றனர்.. அதற்கு காரணம்.. மிகப் பெரிய இலக்குகளில் தோல்வியடைவதல்ல.. மிகச் சிறிய இலக்குகளில் வெற்றியடைவதே..!

இங்கிரிய, றைகம், கீழ்ப்பிரிவு, விக்னேஷ்வரா அறநெறி பாடசாலையின் கலை நிகழ்ச்சி மற்றும் அறநெறி மாணவர்களுடனான சிறப்பு கலந்துரையாடல் அண்மையில், றைகம், கீழ்ப்பிரிவு முத்துமாரி அம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள். அவுஸ்திரேலியா வன்னி வோப் மற்றும் வறக்காப்பொல காளிகாம்பாள் அறநெறி பாடசாலை உள்ளிட்ட அமைப்புகளின் அனுசரணையுடன் நடைபெற்ற இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன், மாணவ மாணவிகளின் கைவண்ணத்தில் உருவான ஓவியங்களில் சிறப்பானதை தெரிவுசெய்து, நிகழ்வுக்கு வருகை தந்திருந்த அதிதிகள் மாணவர்களைப் பாராட்டிப் பேசியமை குறிப்பிடத்தக்கது.

தகவலும் படங்களும்: மணி ஸ்ரீகாந்தன்

இவ்வார மழலை

ர. ரஷ்மித்தா

மா.ரமேஷ்/கோ. தர்ஷிகா,
இல. 328/31, அளுத்மாவத்தை வீதி,
கொழும்பு -15.

தேவராசா லஷானிக்கா,
தரம் 05,
மட்/அரசடி பிள்ளையார் கனிஷ்ட வித்தியாலயம்,
மட்டக்களப்பு.

க. கிஷாலன்,
தரம் 07, லசாலி ஆங்கில பாடசாலை,
கொட்டாஞ்சேனை, கொழும்பு 13.



பி சதுர்ஷன்,
தரம் 07, மொ/ஸ்ரீசண்முகா தமிழ் மகா வித்தியாலயம்,
மொனறாகலை.

எஸ். டிலான்குமாரி,
தரம் 07, மொ/ஸ்ரீசண்முகா தமிழ் மகா வித்தியாலயம்,
மொனறாகலை.

விளையாட்டு

தேசிய கனிஷ்ட மெய்வல்லுநரில் சாதித்த தமிழ் வீரர்கள்

இலங்கை மெய்வல்லுநர் சங்க நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தின் ஓர் அங்கமாக ஏற்பாடு செய்திருந்த கனிஷ்ட தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் போட்டித் தொடர் கடந்த 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை வெற்றிகரமாக நிறைவுக்கு வந்தது.

ஜூன் 7ஆம் திகதி ஆரம்பமாகிய கனிஷ்ட தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப்பில் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தைச் சேர்ந்த தமிழ் வீரர்களும் தங்களது திறமைகளை வெளிப்படுத்தியிருந்தனர்.

அதிலும் குறிப்பாக நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு உள்ளிட்ட பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு இந்த வீரர்கள் கொழும்புக்கு வந்து பதக்கங்களை வென்றமை பாராட்டத்தக்கது.

இம்முறை கனிஷ்ட மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரில் 15 போட்டி சாதனைகள் நிலைநாட்டப்பட்டன. இதில் வடக்கைச் சேர்ந்த நான்கு வீரர்கள் புதிய கனிஷ்ட தேசிய சாதனைகளை நிலைநாட்டியிருந்தமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

இம்முறை கனிஷ்ட மெய்வல்லுநரில் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் சார்பில் பங்குகொண்ட 21 தமிழ் வீரர்கள் பதக்கங்களை வென்றெடுத்தனர். இதில் சிறப்பம்சம் என்னவெனில் வடக்கைச் சேர்ந்த பெரும்பாலான வீரர்கள் தங்களது சிறந்த திறமைகளை வெளிப்படுத்தி பதக்கங்களை சுவீகரித்தனர்.

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெற்ற இம்முறை கனிஷ்ட மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரில் சாதனைகள் மற்றும் பதக்கங்களை வென்ற வீரர்கள் குறித்த ஓர் அலசலை இந்தக் கட்டுரையில் பார்ப்போம்.

மைதான நிகழ்ச்சிகளில் முன்னணி பாடசாலைகளில் ஒன்றாக வலம் வருகின்ற யாழ். பருத்தித்துறை ஹார்ட்லி கல்லூரியைப் பிரிதிநிதித்துவப்படுத்தி இம்முறை கனிஷ்ட தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் போட்டித் தொடரில் பங்குகொண்ட சசிந்திரகுமார் மிதுன்ராஜ் 3 தங்கப் பதக்கங்களை வென்று சாதனை படைத்தார்.

மைதான நிகழ்ச்சிகளான குண்டு எறிதல், தட்டெறிதல் மற்றும் சம்மெட்டி எறிதல் ஆகிய போட்டி நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய சசிந்திரகுமார் மிதுன்ராஜ், கடந்த 8ஆம் திகதி நடைபெற்ற 20 வயதின்கீழ் ஆண்களுக்கான குண்டு எறிதலில் 15.13 மீற்றர் தூரம் எறிந்து தங்கப் பதக்கம் வென்றார்.

அதனைத் தொடர்ந்து 20 வயதின்கீழ் ஆண்களுக்கான சம்மெட்டி எறிதலில் பங்குகொண்ட அவர், 40.45 மீற்றர் தூரம் எறிந்து புதிய கனிஷ்ட தேசிய சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்றார்.

அதே பாடசாலையின் முன்னாள் வீரரான எஸ். பிரகாஷ்ராஜினால் கடந்த 2018ஆம் ஆண்டு நிலைநாட்டிய கனிஷ்ட தேசிய சாதனையை (39.73 மீற்றர்) அவர் இவ்வாறு முறியடித்து கனிஷ்ட பிரிவில் இலங்கை சாதனைக்கு சொந்தக்காரராக மாறியுள்ளார்.

இதனையடுத்து போட்டியின் கடைசி நாளான 10ஆம் திகதி நடைபெற்ற 20 வயதின்கீழ் ஆண்களுக்கான தட்டெறிதலில் பங்குகொண்ட மிதுன்ராஜ், 45.30 மீற்றர் தூரம் எறிந்து தங்கப் பதக்கம் வென்றார். இதன்மூலம் இம்முறை கனிஷ்ட தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப்பில் ஹெட்ரிக் தங்கம் வென்று மிதுன்ராஜ் அரிய சாதனையொன்றை நிகழ்த்தினார்.

கனிஷ்ட மெய்வல்லுநரில் ஹெட்ரிக் தங்கம் வென்ற மிதுன்ராஜ்

கடந்த சில ஆண்டுகளாக தேசிய மட்டப் போட்டிகளில் பங்குகொண்டு திறமைகளை வெளிப்படுத்தி வருகின்ற 19 வயதான மிதுன்ராஜ், குண்டு எறிதல், ஈட்டி எறிதல், சம்மெட்டி எறிதல் மற்றும் தட்டெறிதல் என நான்கு வகையான மைதான நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றி பதக்கங்களை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவருக்கு பருத்தித்துறை ஹார்ட்லி கல்லூரியின் மைதான நிகழ்ச்சிக்கான பயிற்சியாளரான ஹரிஹரன் பயிற்சி அளித்து வருகின்றார்.

23 வயதின்கீழ் ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் பங்குகொண்ட யாழ். சாவகச்சேரி இந்து கல்லூரியின் முன்னாள் வீரர் அருந்தவராசா புவிதரன் 5 மீற்றர் உயரம் தாவி புதிய கனிஷ்ட தேசிய சாதனையுடன் தங்கப் பதக்கத்தை சுவீரித்தார்.

பாடசாலையைக் கல்வியை முடித்த பிறகு தற்போது இலங்கை இராணுவ மெய்வல்லுனர் குழாத்தில் இணைந்து கொண்டுள்ள புவிதரன், விமானப்படை வீரர் இஷார சந்தருவன் 2015ஆம் ஆண்டு நிலைநாட்டிய 4.70 மீற்றர் என்ற கனிஷ்ட தேசிய சாதனையை புவிதரன் 6 ஆண்டுகளுக்குப் பிறகு முறியடித்தார்.

இஷார சந்தருவன் 2017ஆம் ஆண்டு 5.11 மீற்றர் உயரத்தைத் தாவி நிலைநாட்டிய இலங்கை சாதனையை முறியடிக்கும் நோக்குடன் 5.11 மீற்றர் உயரத்தை தாவுவதற்கு புவிதரன் எடுத்த 3 முயற்சிகளும் கைகூடாமல் போயின.

இறுதியாக கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற ஆசிய விளையாட்டு விழாவுக்கான 2ஆவது தகுதிகாண் போட்டியில் 5.10 மீற்றர் உயரத்தைத் தாவி முதலிடத்தைப் பிடித்த புவிதரன், இலங்கை சாதனையை முறியடிக்கும் வாய்ப்பை ஒரு சென்றிமீற்றரினால் துரதிஷ்டவசமாக தவறவிட்டமை குறிப்பிடத்தக்கது.

புவிதரனுக்கு யாழ். சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பயிற்சியாளர் கணாதீபன் தொடர்ந்து பயிற்சி அளித்துவருகின்றமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

கடந்த 9ஆம் திகதி நடைபெற்ற 18 வயதின்கீழ் பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் யாழ். சாவகச்சேரி இந்து கல்லூரி வீராங்கனை பரந்தாமன் அபிஷாலினி 3.15 மீற்றர் உயரம் தாவி புதிய கனிஷ்ட தேசிய சாதனையுடன் தங்கப் பதக்கத்தை சுவீரித்தார்.

தேசிய மட்டப் போட்டியில் முதல் தடவையாக பங்குகொண்ட 15 வயதான அபிலாஷினி, அதே பாடசாலையின் முன்னாள் வீராங்கனையான என். டக்சிதாவினால் கடந்த 2019ஆம் ஆண்டு நிலைநாட்டிய தேசிய சாதனையை இவ்வாறு முறியடித்தமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

அவருடன் குறித்த போட்டியில் பங்குகொண்ட அதே பாடசாலையின் மதிவாணன் ஷாலினி 2.80 மீற்றர் உயரம் தாவி வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.

23 வயதின்கீழ் பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் யாழ். மெய்வல்லுநர் சங்கம் சார்பில் பங்குகொண்ட என். டக்சிதா தங்கப் பதக்கம் வென்றார். குறித்த போட்டியில் அவர் 3.40 மீற்றர் உயரத்தை பதிவு செய்தார்.

யாழ். தெல்லிப்பழை மகாஜனா கல்லூரியின் முன்னணி வீராங்கனைகளில் ஒருவரான சந்திரகுமார் ஹெரினா, இம்முறை கனிஷ்ட மெய்வல்லுநரில் இரண்டு பதக்கங்களை வென்று அசத்தினார்.

23 வயதின்கீழ் பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் 2.80 மீற்றர் உயரம் தாவி வெண்கலப் பதக்கம் வென்ற அவர், அதன் பிறகு நடைபெற்ற 23 வயதின்கீழ் பெண்களுக்கான உயரம் பாய்தலில் 1.58 மீற்றர் உயரம் தாவி வெள்ளிப் பதக்கம் சுவீகரித்தார்.

இம்முறை கனிஷ்ட தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷப்பில் 2 பதக்கங்களை வென்ற ஹெரினாவுக்கு சுபாஷ்கரன் பயிற்சி அளித்துவருகின்றார்.

உயர்தரப் பரீட்சைக்கு தோற்றியதன் காரணமாகவும் கொரோனா தொற்றுநோய் காரணமாகவும் கடந்த 3 ஆண்டுகளாக எவ்வித பயிற்சியும் இன்றி காணப்பட்ட ஹெரினா, இம்முறை கனிஷ்ட மெய்வல்லுநரில் பங்குபற்றி பதக்கம் வென்றமை பாராட்டத்தக்க விடயமாகும்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பை ஆரம்பிக்கவுள்ளதால் அங்கு சென்று தொடர்ந்து உயரம் பாய்தலில் மாத்திரம் கவனம் செலுத்தி பயிற்சியில் ஈடுபடவுள்ளதாக ஹெரினா தெரிவித்தார்.

இலங்கை இராணுவத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி 23 வயதின்கீழ் ஆண்களுக்கான நீளம் பாய்தலில் பங்குகொண்ட கமல்ராஜ் இரோய் வெள்ளிப் பதக்கத்தை சுவீகரித்தார். போட்டியில் அவர் 7.27 மீட்டர் தூரம் பாய்ந்தார்.

இறுதியாக கடந்த 2019இல் நடைபெற்ற கனிஷ்ட தேசிய மெய்வல்லுநரில் 20 வயதின்கீழ் ஆண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் 7.36 மீற்றர் தூரத்தைப் பாய்ந்து அவர் தங்கப் பதக்கம் வென்றிருந்தார்.

குறித்த தொடரில் ஆண்டின் அதிசிறந்த கனிஷ்ட மெய்வல்லுனராக தெரிவாகிய அவர், 20 வயதுக் குட்பட்ட ஆண்கள் பிரிவிலும் அதிசிறந்த மெய்வல்லுனருக்கான விருதையும் தட்டிச் சென்றார்.

கமல்ராஜ் இரோய் வத்தளை லைசியம் சர்வதேச பாடசாலையின் பழைய மாணவர் ஆவார்.

3000 மீற்றர் தடை தாண்டல் ஓட்டப் போட்டிக்கான பயிற்சிகளை கடந்த மாதம் ஆரம்பித்த மலையக வீரர் தர்மராஜ் வினோகரன், தனது முதல் முயற்சியிலேயே பதக்கம் வென்று அசத்தியுள்ளார்.

23 வயதின்கீழ் ஆண்களுக்கான 3000 மீற்றர் தடை தாண்டல் ஓட்டத்தில் பங்குகொண்ட அவர், 10 நிமிடங்கள் 24.15 செக்கன்களில் போட்டியை நிறைவு செய்து வெண்கலப் பதக்கம் வென்றார். இவர் புஸ்ஸல்லாவ சரஸ்வதி மத்திய கல்லூரியின் பழைய மாணவர் ஆவார்.

23 வயதின்கீழ் ஆண்களுக்கான 1500 மீற்றர் இறுதிப்போட்டியில் பங்குகொண்ட வினோகரன் 7ஆவது இடத்தைப் பிடித்தார். போட்டியை நிறைவு செய்ய 4 நிமிடங்கள் 25.30 செக்கன்களை அவர் எடுத்துக்கொண்டார்.

23 வயதின்கீழ் ஆண்களுக்கான 5,000 மீற்றர் ஓட்டப் போட்டியிலும் பங்குகொண்ட வினோகரனுக்கு 8ஆவது இடத்தையே பெற்றுக்கொள்ள முடிந்தது.

2004 முதல் 2010 வரையான காலப்பகுதியில் 10,000 மீற்றர், 5,000 மீற்றர், மரதன் உள்ளிட்ட நீண்ட தூர ஓட்டப் போட்டிகளில் பங்குகொண்டு தேசிய மட்டத்தில் திறமைகளை வெளிப்படுத்தி மலையகத்துக்கு பெருமை சேர்த்த முன்னாள் மெய்வல்லுனரும், பயிற்சியாளருமான அஜந்தனிடம் வினோகரன் பயிற்சிகளை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இம்முறை தேசிய கனிஷ்ட மெய்வல்லுநரில் ஹெரினாவைத் தவிர யாழ். தெல்லிப்பழை மகாஜனா கல்லூரியைச் சேர்ந்த ஒருசில வீரர்கள் பதக்கங்களை வென்று அசத்தினர்.

20 வயதின்கீழ் பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி வீராங்கனை விஜயகுமார் ஜதுஸ்டிகா, 3.10 மீற்றர் உயரம் தாவி தங்கப் பதக்கம் வென்றார்.

அவருடன் குறித்த போட்டியில் பங்குகொண்ட அதே பாடசாலையைச் சேர்ந்த சந்திரகுமார் தீபிகா, அதே உயரத்தைத் தாவி (3.10 மீற்றர்) வெள்ளிப் பதக்கத்தை சுவீகரித்தார்.

18 வயதின்கீழ் பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் சிவபாதம் சுவர்ணா வெண்கலப் பதக்கம் வென்றார். போட்டியில் அவர் 2.70 மீற்றர் உயரத்தை தாவியிருந்தார்.

18 வயதின்கீழ் ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் பங்குகொண்ட சந்திரகுமார் துஷாந்தன் 3.80 மீற்றர் உயரம் தாவி வெண்கலப் பதக்கத்தையும் வென்றெடுத்தார்.

இலங்கை இராணுவ மெய்வல்லுநர் குழாத்தில் இணைந்து கொண்டுள்ள மகாஜனா கல்லூரியின் பழைய மாணவர்களில் ஒருவரான சுரேஷ்குமார் கசிகேரதன் 23 வயதின்கீழ் ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் 4.40 மீற்றர் உயரம் தாவி வெண்கலப் பதக்கத்தை வென்றார்.

20 வயதின்கீழ் ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் அளவெட்டி அருணோதயா கல்லூரி வீரர் இடியமீன் அபிநயன் 4.10 மீற்றர் உயரம் தாவி தங்கப் பதக்கத்தை வென்றார். தேசிய மட்டப் போட்டியொன்றில் முதல் முறையாக பங்குகொண்ட அவர் முதல் முயற்சியிலேயே தங்கப் பதக்கம் வென்று அசத்தியுள்ளார்.

23 வயதின்கீழ் கோலூன்றிப் பாய்தலில் 4.40 மீற்றர் உயரம் தாவிய அருணோதயா கல்லூரியின் சுக்குமார் திஷாந்த் வெள்ளிப் பதக்கத்தை சுவீகரித்தார்.

அளவெட்டி அருணோதயா கல்லூரியின் முன்னாள் வீரரான ஹங்கய் ரொஷான், தற்போது அந்தக் கல்லூரியின் பயிற்சியாளராக செயல்பட்டு வருகின்றமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

20 வயதின்கீழ் ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் பங்குகொண்ட யாழ். இந்துக் கல்லூரி வீரர் கதிர்காமலிங்கம் சோபிதன் 3ஆம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தை வென்றார். அவர் 4.00 மீற்றர் உயரத்தைத் தாவினார்.

16 வயதின்கீழ் ஆண்களுக்கான 100 மீற்றர் தடைதாண்டல் ஓட்டப் போட்டியை 14.69 செக்கன்களில் நிறைவு செய்த நாவலப்பிட்டிய கதிரேசன் கல்லூரி வீரர் டி. சுஜீவன் வெண்கலப் பதக்கம் வென்றார்.

23 வயதின்கீழ் ஆண்களுக்கான 5,000 மீற்றர் ஓட்டப் போட்டியில் கண்டி மெய்வல்லுனர் சங்கம் சார்பில் பங்குகொண்ட மொஹமட் அஸீம் வெண்கலப் பதக்கம் சுவீகரித்தார். இப் போட்டியை 16 நிமிடங்கள் 04.63 செக்கன்களில் அவர் நிறைவு செய்தார்.

20 வயதின்கீழ் ஆண்களுக்கான சம்மட்டி எறிதலில் பங்குகொண்ட திருகோணமலை புனித ஜோசப் கல்லூரி வீரர் கே. தேவமதுமிதன் வெண்கலப் பதக்கம் வென்றார். போட்டியில் அவர் 36.24 மீற்றர் தூரத்தைப் பதிவு செய்தார்.

ஒலிம்பிக் தின கொண்டாட்டம்

தேசிய ஒலிம்பிக் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒலிம்பிக் தின கொண்டாட்டங்கள், டொரிங்டன் பிளேஸில் உள்ள சுதந்திர சதுக்கத்தில் தொடங்கி, ஒலிம்பிக் இல்லத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றது. கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இந்த கொண்டாட்டங்களை இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் எரிக் லாவெர்ட் ஆரம்பித்து வைத்தார்.

தேசிய ஒலிம்பிக் சங்கத்தின் தலைவர் சுரேஷ் சுப்ரமணியம் மற்றும் செயலாளர் நாயகம் மெக்ஸ்வெல் டி சில்வா ஆகியோரின் அழைப்பின் பேரில் குறைந்த எண்ணிக்கையிலான நபர்களின் பங்களிப்புடன் ஒலிம்பிக் தின கொண்டாட்டங்கள் இடம்பெற்றன.

வருடாந்த நிகழ்வில் ஒலிம்பிக் தினத்தின் தொனிப்பொருளில் விசேட சொற்பொழிவு, சுற்றுச்சூழலைக் குறிக்கும் நாடக நிகழ்ச்சியும், அதனைத் தொடர்ந்து தேசபக்தி பாடல்களும் இடம்பெற்றன. தேசிய ஒலிம்பிக் சங்க புதிய விளையாட்டுகள் சிலவற்றைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வீடியோ விளக்கக்காட்சியையும் ஏற்பாடு செய்தது.

கடந்த ஆண்டு, ஒலிம்பிக் சங்கம், பாடசாலை மாணவர்களின் பங்கேற்புடன், பொல்ஹேன கடற்கரையை சுத்தப்படுத்தவும், அழிந்து வரும் பவளப்பாறைகளை பாதுகாக்கவும் நிரந்தர வேலைத்திட்டத்தை ஆரம்பித்தது. சுதந்திர சதுக்கத்தில் விளையாட்டு வீரர்கள் மற்றும் பள்ளி மாணவர்கள் கலந்து கொண்ட ஒலிம்பிக் சுடர் முன் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றது.

பாடசாலைகளுக்கிடையிலான டயலொக் ரக்பி லீக் போட்டிகள் ஆரம்பம்

கொவிட் 19 பெருந்தொற்றின் காரணமாக கடந்த இரண்டு வருடகால இடைவெளியின் பின்னர், இலங்கையின் 'ப்ளூரிப்பன்' போட்டியான 'டயலொக் ஸ்கூல்ஸ் ரக்பி லீக் 2022' போட்டிகள் கடந்த 23 ஆம் திகதி ஆரம்பமாகின. அதன்படி கொழும்பு புனித ஜோசப் கல்லூரி, கண்டி கிங்ஸ்வுட் கல்லூரி ஆகிய கல்லூரிகள் ஹெவ்லொக் விளையாட்டுக் கழகத்தில் நடைபெற்ற பிரிவு1 இல் ஏ பிரிவிற்கான தொடக்க ஆட்டத்தில் போட்டியிட்டன.

டயலொக் 'பாடசாலை ரக்பி லீக்கின் 2020' ஆம் வருடத்திற்கான போட்டிகள் கொவிட் 19 பெருந்தொற்றின் காரணமாக மூன்று வார காலத்திற்கு குறைக்கப்பட்டிருந்த அதேவேளை, சுகாதாரத்துறை அமைச்சு விதித்திருந்த கொவிட் சட்ட திட்டங்களின் காரணமாக 2021 ஆம் ஆண்டுக்கான போட்டிகள் இரத்துச் செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

டயலொக் 'ஸ்கூல்ஸ் ரக்பி லீக் 2022' தொடரில் மிகவும் எதிர்பார்க்கப்படுகின்ற பிரிவு 1இன் ஏ பிரிவு போட்டிகள், நடைபெறவுள்ள உயர்தர பரீட்சைகளின் காரணமாக குறுகிய காலத்திற்கு வரையறுக்கப்பட்டுள்ளமைக்கு ஏற்ப முதல் 12 அணிகள் 34 போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளன. இதனையடுத்து, எட்டு வாரங்களின் பின்னர் டயலொக் ஸ்கூல்ஸ் ரக்பி நொக்கவுட் போட்டிகள் இலங்கை பாடசாலைகள் ரக்பி கால்பந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டின் கீழ் மீண்டும் தொடர்ந்து நடைபெறும்.

டயலொக் பாடசாலை ரக்பி லீக் 2022 இன் பிரிவு 1 இன் ஏ போட்டிகளில் கொழும்பு ரோயல் கல்லூரி, கொழும்பு புனித பீட்டர்ஸ் கல்லூரி, கொழும்பு புனித ஜோசப் கல்லூரி, கொழும்பு வெஸ்லி கல்லூரி, கல்கிசை புனித தோமஸ் கல்லாரி, கொழும்பு இஸிப்பத்தான கல்லூரி, கண்டி டிரினிட்டி கல்லூரி, கல்கிசை விஞ்ஞானக் கல்லூரி, கண்டி, கிங்ஸ்வுட் கல்லூரி, கண்டி வித்யார்த்த கல்லூரி, கட்டுகஸ்தோட்டை புனித அந்தோனியார் கல்லூரி மற்றும் கண்டி தர்மராஜா கல்லூரி ஆகியன கலந்து கொள்ளவுள்ளதுடன், மேலும் 24 க்கும் அதிகளவான பாடசாலைகள் பிரிவு 1 இல் பிரிவு பி மற்றும் சி பிரிவுகளின் கீழ் போட்டியிடவுள்ள அதேவேளை, மேலும் 40 பாடசாலைகள் பிரிவு 2 மற்றும் பிரிவு 3 ஆகியவற்றில் போட்டியிடவுள்ளன.

2019ம் வருடம் உட்பட கடந்த மூன்று பருவங்களில் செம்பியனாகிய கொழும்பு றோயல் கல்லூரி, கொழும்பு புனித பீற்றஸ் கல்லூரி, கல்கிசை புனித தோமஸ் கல்லூரி மற்றும் கண்டி டிரினிட்டி கல்லூரியுடன் இணைந்து சிறந்த போட்டியாளர்களுள் ஓர் அணியாக திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

"பாடசாலை விளையாட்டுக்களுக்கான கால அட்டவணையில் அதிகம் எதிர்பார்க்கப்படுகின்ற நிகழ்வுகளில் ஒன்றாகிய டயலொக் ஸ்கூல்ஸ் ரக்பி லீக் மற்றும் நொக்கவுட் போட்டிகளின் 2022 வருடத்திற்கான போட்டிகளை நடத்துவதற்கு இலங்கை பாடசாலைகள் ரக்பி கால்பந்தாட்ட சம்மேளனம் மேற்கொண்டுள்ள தீர்மானத்தையிட்டு நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம்" என டயலொக் ஆசி ஆட்டா நிறுவனத்தின் வர்த்தக மற்றும் ஊடக பிரிவின் சிரேஷ்ட பொது முகாமையாளர் ஹர்ஷ சமரநாயக்க தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில், "நமது தாய்நாட்டிற்கு பெருமை சேர்க்கக்கூடிய நாளைய செம்பியன்களை உருவாக்குகின்ற டயலொக்கின் நெறிமுறைகளுக்கு ஒப்பானதாக மேற்படி பாடசாலைகளுக்கிடையிலான சுற்றுப் போட்டிகள் இதயத்திற்கு மிகவும் நெருக்கம் மிக்கதாக அமைந்துள்ளன. எனவே, இப்போட்டிகள் வெற்றிகரமானதாக அமைய மனப்பூர்வமாக வாழ்த்துகின்றேன்" என்றார்.

இலங்கைப் பாடசாலைகளின் ரக்பி கால்பந்து சம்மேளனத்தின் தலைவர் பி.ஏ. அபேரத்தன கருத்து தெரிவிக்கையில், "சுமார் இரண்டு வருட கால இடைவெளியின் பின்னர் இலங்கையின் ரக்பி ரசிகர்களுக்கு பாடசாலைகளுக்கிடையிலான சிறப்புமிகு ரக்பி விளையாட்டை களத்தில் நேரில் கண்டுகளிப்பதற்கான வாய்ப்பு கிட்டியுள்ளது" என்றார். "முன்னெப்போதும் இல்லாதவாறான இன்றைய சூழலில், பாடசாலைகளுக்கிடையிலான ரக்பி தொடருக்கு தமது முழு ஆதரவையும், அனுசரணை பங்களிப்பினையும் தொடர்ந்து வழங்குவதாக டயலொக் ஆசி ஆட்டா உறுதியளித்ததையிட்டு நான் உண்மையிலேயே நன்றியுள்ளவனாக இருக்கின்றேன். மேலும், இந்த 2022 பருவ கால போட்டிகள் அனைத்து அணிகளுக்கும் சிறப்புடையதாக அமைய வாழ்த்துகின்றேன்" எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜூன் மாதம் 26ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
செந்தூரம்

2022 ஜூன் 26 ஞாயிற்றுக்கிழமை

இரண்டு மாதங்கள் இரவா?

அமெரிக்காவின் அலஸ்கா மாநிலத்தில் உள்ள பர்ரோ என்ற நகரம் உலகின் வட துருவத்தில் இருக்கும் நகரம் அல்லது சிறு நகரங்களில் ஒன்று. எனவே, இங்கே இரவு, பகல் பழகிப்போன மக்களுக்கு சாதாரணமாக வாழ்ந்துவிட முடியாது.

அதாவது குளிர்காலத்தில் நீண்ட இரவு இருக்கும். கோடை காலத்தில் சூரியன் மறையாது. நவம்பர் 18 ஆம் திகதி சூரியன் மறைந்தால் அது ஜனவரி 22 ஆம் திகதி தான் மீண்டும் உதிக்கும். மே 11 தொடக்கம் ஜூலை 31 வரை கிட்டத்தட்ட 82 நாட்களுக்கு சூரியன் முழுமையாக மறையாது.

தலைகீழாக ஒரு வீடு

ருமேனியா நாட்டில் வீட்டைத் தலைகீழாகக் கட்டி அதை அதிகாரபூர்வமாகத் திறந்துள்ளனர்.

உள்ளே செல்வோர் எந்த அளவுக்கு உறுதியாக இருக்கிறார்கள் என்பதில் சவால் விடுப்பது நோக்கம். அத்தோடு உலகை ஒரு புதிய கண்ணோட்டத்தில் பார்க்கவும் வகைசெய்கிறது.

இந்த வீட்டை வெளியிலிருந்து பார்த்தால் மேற்கூரை தரையை நோக்கியும் வீட்டின் தரைப்பகுதி மேல்நோக்கியும் இருக்கிறது.

ஏதோ பலத்த காற்றில் வீடு அடித்துச்செல்லப்பட்டு தலைகீழாகக் கவிழ்ந்து நிற்பது போன்ற உணர்வு பார்ப்பவர்களுக்கு.

அவ்ரிக் நகரில் புதிதாக இந்தத் தலைகீழ் வீடு திறக்கப்பட்டிருக்கிறது.

வீட்டினுள் நடந்தால் மேசை, நாற்காலிகள், உணவு ஆகியவை தலைக்குமேல் இருக்கும். அங்கு செல்லும் பார்வையாளர்களுக்கு புவி ஈர்ப்பு விசைக்கு எதிராக நிற்பது போன்ற ஓர் அற்புதமான உணர்வை வழங்குகிறது.

வீட்டுக்குள் செல்பவர்கள் நிலைதடுமாறி, தலை சுற்றுவது போல இருக்கும் வித்தியாசமான உணர்வைப் பெறுவார்கள் என்று வீட்டின் வடிவமைப்பாளர் கூறுகிறார்.

உணவகங்களும் பொழுதுபோக்கிற்கான இதர அம்சங்களும் இந்த வீட்டில் இடம்பெற்றுள்ளன.

குழந்தைகளும் பெரியவர்களும் ஒன்றாகச் சாப்பிட்டு ஓய்வெடுக்க இது ஒரு சிறந்த இடம் என்று பார்வையாளர்களில் ஒருவர் கூறினார்.

யார் இந்த சிறுமி?

1939 நூற்றாண்டுக்கு முன்னர் புகைப்படம் எடுப்பது என்பது ஆடம்பரமான ஒன்று. பணக்காரர்கள் தான் புகைப்படம் எடுத்துக் கொள்வார்கள். ரஷ்யாவிலும் அதே கதை தான். ரஷ்ய பேரரசு இருந்த காலம் அது.

சைபீரியாவின் கிரஸ்னொயார்ஸ் நகரத்தின் முக்கிய இடங்களின் கறுப்பு வெள்ளை புகைப்படங்கள் அந்தக் காலத்தின் கட்டங்கள், பாலங்கள், அரண்மனைகளை காட்டுகின்றன. பிரபலமான அந்தப் புகைப்படங்கள் தபால் அட்டை, புத்தகங்கள், பத்திரிகைகள் என்று எல்லாவற்றிலும் பிரசுரிக்கப்பட்டன. ஆனால் அந்தப் புகைப்படங்களில் இருக்கும் மர்மம் அண்மைக் காலத்தில் தான் தெரியவந்தது. 8 முதல் 10 வயது இருக்கும் ஆடம்பர ஆடை அணிந்த சிறுமி ஒருவர் எல்லாப் புகைப்படங்களிலும் சின்னதாகத் தெரிகிறார். கவனமாகப் பார்த்தால் தான் அது தெரியும்.

இன்று பலரையும் துளைத்தெடுக்கும் கேள்வி, யார் அந்த சிறுமி என்பது தான். எல்லா புகைப்படங்களிலும் ஒரே ஆடை ஒரே பாவணையில் இருக்கிறார்.

அந்தப் புகைப்படங்கள் எல்லாம் ஒரே இடத்தில், ஒரே மூலத்தில் இருந்து கிடைக்கப்பெற்றவை அல்ல. ஒரே காலத்தில் பிடிக்கப்பட்டதற்கான ஆதாரங்களும் இல்லை. அப்படி இருக்க அந்த சிறுமி ஒரே மாதிரியாக எல்லா படங்களிலும் தோன்றுவது எப்படி என்ற கேள்விக்கு இன்றும் யாரிடமும் பதிலில்லை.

யாரால் அதிகம் சத்தம் போட முடியும்?

யாருக்கு அதிகம் கூச்சலிட முடியும்; இல்லாவிட்டால் சத்தம் போட முடியும். ஆசிரியருக்குத் தான் என்று நான் அடித்துச் சொல்வேன். அதிலும் ஆரம்ப பாடசாலை ஆசிரியர் என்றால் சொல்லவே தேவையில்லை.

அயர்லாந்து நாட்டு பாலர் பாடசாலை ஆசிரியை அனலிசா பிலனகன் உரத்து சத்தம் போடுவதில் கின்னஸ் சாதனையே படைத்திருக்கிறார்.

வகுப்பில் பிள்ளைகளை சத்தம் போடாமல் அமைதியாக இருக்கும்படி கூறுவது ஆசிரியர்களின் வேதவாக்கு. அதன் ஆங்கிலச் சொல்லை அவர் மிக உரத்துச் சொன்னார்.

அதுதான் மனிதனால் கூறப்பட்ட மிக சத்தமான ஒலியாக சாதனை படைத்திருக்கிறது. அது 121 டெசிபில் அளவு சத்தம் கொண்டது. இது ஜெட் விமானத்தின் எஞ்சின் எழுப்பும் சத்தத்திற்கு நிகரானது. அந்த ஆசிரியையின் அருகில் யாராவது இருந்திருந்தால் காது கிழிந்திருக்கும்.

ஒட்டுமொத்தத்தில் கூச்சலிடுவதில் பெண்களை விஞ்ச யாரும் இல்லை!

பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

918 பேர் கூட்டாக தற்கொலை!

ஒருவர் இருவர் இல்லை 918 பேர் கூட்டாகத் தற்கொலை செய்த சம்பவத்தை எப்படி கிரகிப்பது என்பது புரியவில்லை. அதனை பொத்தாம் பொதுவாக தற்கொலை என்று சொல்லி விடவும் முடியாது. ஏனென்றால் உயிரிழந்தவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் சிறுவர்கள். அமெரிக்காவைச் சேர்ந்த ஜிம் ஜோன்ஸ் என்ற மதப் போதகரை குருட்டுத் தனமாக பின்பற்றியதன் காரணமாகத் தான் ஒரு கிராமமே இப்படி கூட்டாக தற்கொலை செய்து கொண்டது. ஜிம் ஜோன்ஸ் கம்யூனிச சித்தாந்தம் கொண்டவர். அமெரிக்க அரசுடன் முரண்பட்ட அவர் தமது சீடர்களை அழைத்துக் கொண்டு கயான காடுகளுக்குச் சென்று கிராமம் ஒன்றை அமைத்தார். அவரை கடவுளாக நம்பிய பக்தர்கள் அவர் கூறுவதையெல்லாம் செய்தார்கள். அந்த குருட்டு நம்பிக்கையின் உச்ச சம்பவம் 1978 நவம்பர் 18 ஆம் திகதி இடம்பெற்றது. ஒரு பெரிய தொட்டியில் குளிர்பானத்தை தயாரித்து அதில் விசத்தை கலந்து பக்தர்களை அழைத்தார். கூட்டாக தற்கொலை செய்து கொள்ளும் அறிவிப்பை விடுத்து அனைவருக்கும் அந்த பானத்தை குடிக்கக் கொடுத்தார். அதனை வேதவாக்காக நம்பியவர்கள் மறு பேச்சு இல்லாமல் குடித்தார்கள். சிலரோ எதிர்க்க அவர்களுக்கு வலுக்கட்டாயமாகக் குடிக்க வைக்கப்பட்டது. ஒட்டுமொத்த கிராமமே உயிரை மாய்த்துக் கொண்டது. 2001 செப்டெம்பர் தாக்குதல் வரை அமெரிக்க வரலாற்றில் அதிகம் பேர் உயிரிழந்த சம்பவமாக இது இருந்தது.

தீர்க்கதரிசனமும் செயல்திறனும் நிறைந்த தலைவர்

பதியுதீன் மஹ்மூத்

இலங்கையின் அரசியல் வரலாற்றில் தீர்க்கதரிசனமும் செயல்திறனும் மிக்க சுயலாபம் கருதாத முஸ்லிம் தலைவர்களில் ஒருவர் கலாநிதி அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் ஆவார். எஸ்.எல்.எம். நெய்னாமுஹம்மத் பாத்துமாநாச்சியார் தம்பதிகளின் புதல்வராக பதியுதீன் மஹ்மூத் வெலிகமையில் 1904 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23 ஆம் திகதி பிறந்தார். ஆரம்பக் கல்வியை மாத்தறையில் உள்ளபுனித ஜோசப் கல்லூரியிலும் அடுத்து கொழும்பு வெஸ்லி கல்லூரி, மருதானை ஸாஹிராக் கல்லூரி என்பவற்றிலும் பயின்றுஉயர் கல்வியை இந்திய அலிகார் சர்வகலாசாலையில் பயின்றுமுதுமானிப் பட்டத்தையும் பெற்றார். பன்மொழிகளிலும் அவர் பாண்டித்தியம் பெற்றார்.

பதியுதீன் மஹ்மூத் அலிகார் சர்வகலாசாலையில் கல்விகற்ற காலத்தில் இந்தியாவின் இரு பெரும் சுதந்திர இயக்க தலைவர்களான ஜவஹர்லால் நேரு, முஹம்மத் அலி ஜின்னா ஆகியோர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு கிடைத்தது. அத்தோடு பதியுதீன் மஹ்மூதீன் செயற்திறனும் பேச்சுவன்மையும் அவரை தமது சக மாணவர்களிடையே புகழும் மதிப்பும் உடையவராக ஆக்கியது. எனவே, லக்னோ நகரில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட அகில இந்திய மாணவர் சம்மேளனத்தின் தலைவராக அவர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். அதன் ஆரம்ப கூட்டத்தின் போது மேடையில் பதியுதீன் மஹ்மூத் தலைமை வகிக்க அவரது இரு புறங்களிலும் இரு பெரும் தேசிய தலைவர்களான ஜவஹர்லால் நேருவும் முஹம்மது அலி ஜின்னாவும் அமர்ந்திருந்தது குறிப்பிடத்தக்கது. அக்காலத்தில் பதியுதீன் மஹ்மூத் அவர்கள் ஆப்கானிஸ்தான் மன்னரின் விருந்தினராக அந்நாட்டிற்கு விஜயம் செய்தார். அத்தோடு மலேஷியா, பர்மா (மியன்மார்) ஆகிய நாடுகளிலும் சொற்பொழிவாற்றுவதற்காக அழைக்கப் பட்டார். அவரது பேச்சினால் ஆத்திரமுற்ற அக்கால பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் அவரை மலேஷியாவில் இருந்தும் பர்மாவில் இருந்தும் உடனடியாக வெளியேறுமாறு உத்தரவிட்டது குறிப்பிடத்தக்கது.

இலங்கை திரும்பியதும் அவர் கம்பளை ஸாஹிரா கல்லூரியின் அதிபராக பதவியேற்றார். நான்கு வகுப்பறைகளை கொண்ட ஒரு கொட்டிலாக ஆரம்பிக்கப்பட்டிருந்த அப்பாடசாலை ஓர் உன்னத கலைக்கூடமாக மாற்றியமைத்த பெருமை பதியுதீன் மஹ்மூத் அவர்களையே சாரும். தனது இறுதி மூச்சுவரை கம்பளை ஸாஹிரா கல்லூரியின் மீது அளவிலா பற்றும் கரிசனையும் உடையவராகவே அவர் விளங்கினார்.

கொழும்பு ஸாஹிரா கல்லூரியில் கல்விகற்கும் காலத்திலேயே எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கவுடன் தொடர்பு ஏற்பட்டது. அத்தொடர்பானது பிற்காலத்தில் மிகநெருங்கிய நட்பாக மாறியது. பண்டாரநாயக்காவின் அரசியல் வாழ்க்கையில் மிக விசுவாசத்திற்குரிய தோழராகவும் ஆலோசகராகவும் பிரச்சினை தீர்ப்பவராகவும் ஆற்றல் மிக்க பிரச்சாரகராகவும் பதியுதீன் மஹ்மூத் விளங்கினார்.

1956 இல் பண்டாரநாயக்க ஏனைய கட்சிகளுடன் கூட்டணி அமைத்து தேர்தலில் அமோக வெற்றி பெறுவதற்கு பின்னனியில் நின்று உழைத்தவர்களுள் பதியுதீன் மஹ்மூத் மிகவும் பிரதானமானவர். எனவேதான் பண்டாரநாயக்க தனது அமைச்சரவையை தெரிவு செய்த போது பதியுதீன் மஹ்மூதை மாத்திரமே தன் அருகில் ஆலோசகராக இருத்திக் கொண்டார். அச்சந்தர்ப்பத்தில் உருவான அரசாங்கத்தில் கல்வி அமைச்சர் பதவியை ஏற்றுக்கொள்ளு மாறு பண்டாரநாயக்க பலமுறை வற்புறுத்தியும் கூட பதியுதீன் மஹ்மூத் எவ்வித பதவிகளையும் ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டார். பின்னர் ஐ.நா சபைக்கான இலங்கை தூதுக் குழுவின் உறுப்பினராக பணியாற்ற ஒப்புக்கொண்டார். 1959இல் பண்டாரநாயக்க கொலை செய்யப்பட்டதன் பின்னர் இலங்கை திரும்பிய பதியுதீன் மஹ்மூத். ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அம்மையாரின் அரசியல் பிரவேசத்திற்கு மிக முக்கிய காரணகர்த்தாகவும் உறுதுணையாகவும் இருந்தார். 1960 இல் ஸ்ரீமாவோ அம்மையார் அமைத்த அரசாங்கத்தில் கல்வி, ஒலிபரப்புத் துறை அமைச்சராக பதியுதீன் மஹ்மூத் நியமிக்கப்பட்டார். சுகாதார, வீடமைப்பு அமைச்சராகவும் சிறிதுகாலம் பணியாற்றினார்.

யாழ்ப்பாணம் சோனகத்தெருவில் ஆரம்பகாலங்களில் யாழ் மஸ்ற உத்தீன் பாடசாலை (புதுப்பள்ளி) முஹம்மதியா கலவன் பாடசாலை (அல்லாபிச்சை பள்ளி) வண்மேற்கு முஸ்லிம் பாடசாலை (மண்ப உல் உலூம் மத்ராஸா) ஆகிய மூன்று கனிஷ்ட பாடசாலைகளிலும் கல்;வி கற்ற மாணவர்கள் மேற்படிப்பை தொடர்வதற்காக யாழ். வைத்தீஸ்வரா, யாழ் மத்திய கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி போன்ற பாடசாலைக்கு சென்றனர்.

எனினும் அக்காலத்தில் வசதி குறைந்தவர்கள் கனிஷ்ட பாடசாலைகளிலிருந்து மேற்படிப்பை தொடர முடியாமல் படிப்பை இடை நடுவில் விட்டுவிட்டு வேறு தொழில்களை நாடுபவர்களாக இருந்தனர். இது கவலைக்குரிய விடயமாக இருந்தது.

இக்காலகட்டத்தில் இலங்கையின் தேசிய வீரரும் சிறந்த கல்விமானும் கொழும்பு ஸாஹிரா கல்லூரி அதிபருமாகிய அல்ஹாஜ் ரி.பி.ஜாயா அவர்களின் தலைமையிலான குழு 1938 இலும் 1942 இலும் விஜயம் செய்தது. யாழ் முஸ்லிம் மாணவர்கள்; கல்வியில் தலை சிறந்து விளங்க வேண்டுமென்பதே குறிக்கோளாக இருந்தது. அதனால் யாழ்ப்பாணத்திலும் கொழும்பு ஸாஹிரா கல்லூரியின் கிளையொன்று நிறுவப்பட வேண்டும் என்பதில் அக்கறை செலுத்தினர். எதிர்காலத்தில் முஸ்லிம் சமுதாயம் கல்வியில் மேலோங்கி காணப்பட வேண்டும் என்றும் அதற்கான அடித்தளத்தை காலதாமதமின்றி ஆரம்பிக்குமாறு எடுத்து கூறிவிட்டு சென்றார்.

யாழ் முஸ்லிம் முக்கியஸ்தர்களின் முயற்சியால் கல்லூரியின் கட்டிடம் மேலெழத் தொடங்கியது. ஸாஹிரா கல்லூரி என்ற பெயரிலேயே இருந்தது. 1962 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலேயே 6ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட மாணவர்களை ஸாஹிரா கல்லூரியில் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

அக்கட்டத்தில் அமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் அவர்களுக்கு கல்வி அமைச்சர் பதவியும் கிடைத்தது. ஆரம்பத்தில் கல்லூரியின் கட்டிடவேலைகளுக்கு ஆலோசனைகளையும் உற்சாக மொழிகளையும் வழங்கிய அவருக்கு கல்வி அமைச்சர் பதவி கிடைத்ததும் கல்லூரி மீதிருந்த அக்கறை பன்மடங்காக பெருகியது.

கல்லூரியை அபிவிருத்தி செய்வதில் பெரும்பங்கு வகித்தார். அவர் கல்லூரிக்கு செய்த உதவிகளை மறைக்கவோ மறக்கவோ முடியாது.

1963 ஆம் ஆண்டு கட்டிடம் கல்லூரியாக மாறியது. 1963 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5 ஆம் திகதி யாழ் முஸ்லிம் சமூகத்திற்கு ஒரு நன்னாள். அந்த நாள் அன்றுதான் டாக்டர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் அவர்கள் ஸாஹிரா கல்லூரி என்று நாமம் கொண்டிருந்த இக்கல்லூரியை உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார். யாழ்ப்பாண மேயர் திரு.அல்பிரட் துரையப்பாவும் கலந்து சிறப்பித்தார்.

ஸாஹிரா கல்லூரி என்ற பெயரளவில் தீர்மானிக்கப்பட்டிருந்தும் அத்திறப்பு விழாவின் போது டாக்டர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் அவர்கள் இஸ்லாத்தின் மூன்றாம் கலீபாவாகிய உஸ்மான் (ரழி) அவர்களை நினைவுபடுத்துமுகமாக ஒஸ்மானியா கல்லூரி என்ற நாமத்தை சூட்டினார். அன்றிலிருந்து இன்று வரை ஒஸ்மானியா கல்லூரி என்ற பெயருடனேயே தலை நிமிர்ந்து நிற்கிறது.

இவரது காலத்தில் இலங்கையின் கல்வித் துறையில் பல புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்பட்டன. தனியார் பாடசாலைகள் பல அரசுடையமையாக்கப்பட்டன. இவற்றில் முக்கியமானது இவரது காலத்திலேதான் இலங்கை வானொலி முஸ்லிம் சேவை பகுதியொன்று உருவாக்கப்பட்டது. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை பிரதானமாகக் கொண்ட ஐக்கிய முன்னணி அரசாங்கம் 1970இல் பதவிக்கு வந்தபோது கலாநிதி பதியுதீன் மஹ்மூத் மீண்டும் கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்டார். 1977 வரை நீடித்தபதவிக் காலத்தில் இலங்கையின் கல்வி, உயர் கல்வித் துறைகளில் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. கட்டுபெத்த தொழில்நுட்பக் கல்லூரி பல்கலைக்கழகமாக தரமுயர்த்தப்படல், யாழ்ப்பாண பரமேஸ்வரா கல்லூரி பல்கலைக்கழகமாக மாற்றப்படல், 1972 இல்கல்விச் சீர்த்திருத்தம் என்பன அவற்றில் சிலவாகும்.

அதுவரை காலமும் நியமன எம்.பி. ஆக நாடாளுமன்றத்தில் இடம் பிடித்து வந்த பதியுதீன் மஹ்மூத், 1977 இல் மட்டக்களப்பு தேர்தல் தொகுதியில் போட்டியிட்ட போது தோற்கடிக்கப் பட்டார். அதன் பின்னர் தீவீர அரசியலில் இருந்து ஒதுங்கி வாழ்ந்த போதிலும் இலங்கையின் இனப் பிரச்சினையை தீர்ப்பது தொடர்பான ஆரம்பகாலப் பேச்சுவார்த்தைகளில் உற்சாகமாகக் கலந்து கொண்டார்.இறுதிக் காலத்தில் நோயினால் அவதிப்பட்டபோதிலும், இறக்கும்வரை தனது கடமைகளை நிறைவேற்றினார். பதியுதீன் மஹ்மூத் 1997 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16 ஆம் திகதி இறையடி சேர்ந்தார். இவரைப் போன்று தீர்க்க தரிசனமும் செயல் திறனும் நிறைந்தவர்கள் எம்மத்தியில் பலர் தோன்றவேண்டும்.

கலாபூஷணம்
பரீட் இக்பால்...
யாழ்ப்பாணம்

முடி உதிர்வை தடுக்க உதவும் வைத்தியம்

நீண்ட கூந்தலை விரும்பும் பெண்களுக்கு முடி உதிர்வு பிரச்சினை முட்டுக்கட்டையாக அமையும். முடிகள் வலிமையை இழந்து, மெலிந்து பலவீனமடைவதுதான் முடி உதிர்வுக்கான ஆரம்பக்கட்ட அறிகுறிகளாகும்.

முடிக்கு வண்ணம் தீட்டுதல், முடியை நேராக்குதல், முடியை உலர வைப்பதற்கு ஹேர் டிரையர் பயன்படுத்துதல், நெருக்கமான பற்களைக் கொண்ட சீப்புகளை பயன்படுத்துதல் உள்ளிட்டவையும் முடி உதிர்வுக்கு வித்திடுகின்றன. இத்தகைய பழக்கவழக்கங்களுடன் ஆரோக்கியமற்ற உணவுகளை உட்கொள்ளுதல், மிகவும் குறைவான கலோரிகளை கொண்ட உணவுப் பொருட்களை உட்கொள்ளுதல், நாளமில்லா சுரப்பிகளின் செயல்பாடுகளில் கோளாறு ஏற்படுதல் போன்றவையும் முடி உதிர்வுக்கு முக்கிய காரணங்களாக அமைந்திருக்கின்றன. பலவீனமான முடியை சரி செய்து முடி உதிர்வை கட்டுப்படுத்த சில வீட்டு வைத்தியங்களை கடைப்பிடித்தாலே போதுமானது.

அப்பிள் சிடேர் வினிகர்

ஒரு தேக்கரண்டி அப்பிள் சிடேர் வினிகர், இரண்டு மேசைக் கரண்டி ஒலிவ் எண்ணெய் ஆகியவற்றுடன் மூன்று முட்டைகளின் வெள்ளைக்கரு கலந்து தலை முடியில் தேய்க்கவும். பின்பு 'பிளாஸ்டிக் ராப்' அல்லது 'ஷவர் கேப்'பை கொண்டு தலையை மூடி அரை மணி நேரம் ஊறவிடவும். பின்பு ஷாம்போ போட்டு தலைமுடியை அலசி விடலாம். பலவீனமான முடியை சீர்படுத்த இது சிறந்த வீட்டு வைத்தியமாக கருதப்படுகிறது.

முட்டை

முட்டையில் கலந்திருக்கும் புரதம் முடியை வலுப்படுத்த உதவும். இரண்டு மேசைக்கரண்டி ஒலிவ் எண்ணெய்யில் ஒரு முட்டையை உடைத்து ஊற்றி கிளறவும். தலையில் எண்ணெய் தேய்ப்பது போல் தண்ணீரை லேசாக தடவவும். பின்பு முட்டை கலவையை கூந்தலில் தடவிவிட்டு, 20 நிமிடங்கள் கழித்து குளித்துவிடலாம். முட்டையில் இருக்கும் புரதம் தலைமுடியை கடினமாக்கும் தன்மை கொண்டது என்பதால் மாதம் ஒருமுறை மட்டும் பயன்படுத்துவது நல்லது.

அவகோடா

நன்கு பழுத்த அவகோடா பழத்துடன் முட்டையின் வெள்ளைக் கருவை கலந்து ஈரமான தலைமுடியில் தடவவும். 20 நிமிடங்கள் கழித்து தலைமுடியை தண்ணீரில் அலசிவிட அவகோடா பழத்தில் வைட்டமின்கள், கொழுப்பு அமிலங்கள் மற்றும் தாதுக்கள் நிறைந்துள்ளன. அவை தலைமுடிக்கு பொலிவு சேர்க்கக் கூடியவை. முடி உதிர்வு பிரச்சினையை எதிர்கொள்பவர்கள் இந்த கலவையை வாரம் ஒருமுறை பயன்படுத்தலாம். ஆரோக்கியமான கூந்தல் கொண்டவர்கள் மாதம் ஒரு முறை உபயோகிக்கலாம்.

ஒலிவ் எண்ணெய்

வறண்ட தலை முடியில் மீண்டும் ஈரப்பதத்தை தக்க வைக்கும் தன்மை ஒலிவ் எண்ணெய்க்கு உண்டு. ஒலிவ் எண்ணெய்யை லேசாக சூடாக்கி தலையில் தடவி விடவும். பின்பு 'ஷவர் கெப்' கொண்டு தலையை மூடிவிடவும்.

முக்கால் மணி நேரம் கழித்து ஷாம்போ போட்டு தலைமுடியை அலசி விடலாம். வறண்ட கூந்தல் கொண்டவர்கள் ஒலிவ் எண்ணெய் பயன்படுத்துவது சிறப்பானது.

கற்றாழை சாறு:

75 ஊட்டச்சத்துக்கள், 20 தாதுக்கள், 12 வைட்டமின்கள் மற்றும் 18 அமினோ அமிலங்களைக் கொண்ட நம்பமுடியாத கண்டிஷனிங் ஏஜெண்டாக கற்றாழை செயல்படுகிறது. முடி வளர்ச்சியை ஊக்குவிக்கும் தன்மையும் கொண்டது. கற்றாழையில் இருந்து ஜெல் எடுத்து அதனுடன் சிறிதளவு தேன் மற்றும் ஒலிவ் எண்ணெய் கலக்கவும். இந்தக் கலவையை கூந்தலில் தடவிவிட்டு 30 நிமிடங்கள் கழித்து குளிர்ந்த நீரில் அலசி விடலாம்.

சந்தன எண்ணெய்:

ஒலிவ் எண்ணெய், சந்தன எண்ணெய் இரண்டையும் சிறிதளவு எடுத்து உள்ளங்கையில் நன்றாக தேய்க்கவும். பின்பு தலைமுடியின் நுனியில் லேசாக தடவவும். தலைமுடி சேதம் அடைவதை தடுப்பதற்கு சந்தன எண்ணெய் உதவும்.

வாழைப்பழம்:

2 வாழைப்பழங்கள், 2 மேசைக்கரண்டி தேன் மற்றும் 4 மேசைக்கரண்டி ஒலிவ் எண்ணெய் ஆகியவற்றை ஒன்றாக கலந்து தலை முடியில் தடவவும். அரை மணி நேரம் கழித்து கூந்தலை அலசி விடலாம். வாழைப்பழத்தில் உள்ளடங்கி இருக்கும் சிலிகா முடி வளர்ச்சியை தூண்டிவிடும்.

செந்தூரம் பிறந்தநாள் வாழ்த்து

நி.கிருத்தியன்
சிறுபிட்டி, நீர்வேலி, யாழ்ப்பாணம்
july 07th,

P. SUDHANTHIRA
june 19th, Age: 5 years

தொண்டர் 1 : நாம் நினைப்பெதெல்லாம் நடந்தால் என்ன ஆகும்?
தொண்டர் 1 :நடந்ததை நினைத்தாலே சிரிப்புதான் வருது. நினைப்பெதெல்லாம் நடந்தால் மேலும் சிரிப்புதான் வரும்..!

நண்பி 1: ஹோட்டலில் சாப்பிட்டுட்டுப் பார்க்கிறேன், கையில் பணம் இல்லை..... ?
நண்பி 2 : அய்யய்யோ... அப்புறம் என்ன பண்ணுனீங்க?
நண்பி 1 : அப்புறம் பக்கெட்'ல இருந்து எடுத்துக் கொடுத்துட்டேன்.

நண்பன் 1: டாக்டர் படத்திற்கு போர வரியாடா?..?
நண்பன் 2: நா டாக்டர்க்கு படிக்கல டா என்ஜினீயர் தான் படிச்ச ..?

அரசியல்வாதி : என்னட மேடையில ஓடா வந்து விழுது?
தொண்டர் : தலைவா நீங்க ஓட்டை அள்ளி வீசுங்கன்னு சொன்னதை தப்பா புரிஞ்சிக்கிட்டாங்க..

ஆசிரியர்: நான் தினமும் ஏழு கிலோ மீட்டர் நடந்து சென்று படித்து வந்தேன்.
மாணவன்: அப்பவே உங்களுக்கும் படிப்புக்கும் ரொம்ப தூரமா டீச்சர்

நண்பன் 1 : அதிக பணம் கொடுத்து இந்த கார வாங்கறாரு. ஆனா அவருக்கு ஒண்ணுமே தெரிலபோல.
நண்பன் 2 : எத வச்சு சொல்ற?
நண்பன் 1 : வண்டில ஸ்பீட் ப்ரேக் எங்கன்னு கேக்கறார்.

ஆசிரியர் : நீ இந்த பரீட்சையில 90 மார்க் வாங்கனும்.
மாணவன் : 100 மார்க் வாங்குவேன் டீச்சர்.

ராமு: ஏன் தரைல உக்காரிங்க ..?
விருந்தினர்: சாப்பாட்டு இலை தாரைல தான் இருக்கு. அதுதான்

நண்பன் 1: நாளைக்கு சினிமாக்கு போறேன்.. வரியாடா?
நண்பன் 2: முடிஞ்சா வரேன்..
நண்பன் 1: முடிஞ்ச பின்னாடி எதுக்குடா வர? ஆரம்பிக்கும் போதே வந்துடு..

நண்பர் 1 : நேத்து ஒரே "அட" மழை .
நண்பர் 2 : "குடை" மழை தான் கேள்விப்பட்டிருக்கேன். இது என்ன "அட" மழை ...?

நண்பர் 1: நீ எப்படா வருவ...?
நண்பர் 2: மழை நின்னதும் வாறேன்டா
நண்பர் 1: அப்படினா நீ வரவே முடியாது டா
நண்பர் 2: ஏன்டா
நண்பர் 1: மழை எந்த ஊர்களையாவது நிக்குமா டா மழை விழ தான் செய்யும்

கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், கட்டுரை என

இலக்கியத்தின் பல வடிவங்களையும் தொட்டுள்ள கவிஞர் மைக்கல் கொலின்

உங்களைப் பற்றிய அறிமுகத்தை எமது வாசகர்களுக்காகக் கூறுங்கள்?

முதற்கண் எனது வணக்கங்களும் வாழ்த்துக்களும். என்னைப் பற்றிய அறிமுகம் கேட்கிறீர்கள். தமிழகத்தில் அண்மையில் வெளிவந்த "காக்கைவன கவிஞர்கள்' தொகுப்பில் என்னைப் பற்றி வெளிவந்துள்ள சிறு குறிப்பையே எனது அறிமுகமாகத் தருகிறேன்.

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்ட கவிஞர் வி. மைக்கல் கொலின் தனது மாணவப் பருவத்தில் (14 வயது) இருந்தே படைப்பாக்க முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார். கவிதை, சிறுகதை, நாவல், விமர்சனம், குறும்படம், பத்திரிகைத் துறை, சஞ்சிகை வெளியீடு, நூல் வெளியீடு என பல்துறை ஈடுபாடுடைய இவரது முதல் புதுக்கவிதைத்தொகுப்பு

'என் பிரிய ராஜகுமாரிக்கு' 1992 இல் வெளிவந்தது. 2018 இல் இவரது 'பரசுராம பூமி' என்ற சிறுகதைத் தொகுப்பும் 2019 இல் 'சிலுவைகளே சிறகுகளாய்' என்ற கவிதை நூலும் 2021 இல் 'வீணையடி நீ எனக்கு' என்ற நாவலும் மூன்றாவது கவிதை நூலான 'இவனைச் சிலுவையில் அறையுங்கள்' என்ற நூலும் நான்காவது கவிதை நூலான' எழுதித் தீரா பிரியங்களும' வெளிவந்துள்ளது.

1985 1995 வரை திருகோணமலையில் 'தாகம்' என்ற கலை இலக்கிய இதழை வெளியிட்டு வந்த இவர், 1995 இல் மட்டக்களப்பபில் 'ஃபீனிக்ஸ்' நவீன தமிழ் கவிதா இதழையும் வெளியிட்டார். இவர் 2012 தொடக்கம் மட்டக்களப்பில் 'மகுடம்' என்ற கலை இலக்கிய சமூக பண்பாட்டு காலாண்டிதழின் ஆசிரியராகவிருந்து வெளியிட்டு வருகிறார்.

இவர் 1998 இலும் 2000 இலும் மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த முதல் வாரப் பத்திரிகையான 'தினக்கதிர்' வாரமலர், 'தினக்கதிர்' நாளிதழ் ஆகியவற்றின் பிரதம, இணை ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளார்.

இவரது 'பரசுராம பூமி' சிறுகதை நூல் 1998 ம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண சாகித்திய விருது பெற்றது குறிப்பிடத்தக்கது. இவர் மகுடம் பதிப்பகத்தின் மூலம் இதுவரை 60 நூல்களையும், தாகம் பதிப்பகத்தின் மூலம் 06 நூல்களையும் பதிப்பித்துள்ளார். இவர் கிழக்குப் பல்கலைக் கழக வியாபார நிர்வாகமாணி (டீடீயு) பட்டதாரி என்பதும் குறிப்பிடத்தக்கது.

உங்கள் பாடசாலை வாழ்க்கை, தொழில் அனுபவம் பற்றியும் கூறுங்கள்?

நான் திருகோணமலையை பிறப்பிடமாகக் கொண்டவன். எனது முதலாம் வகுப்பு தொடக்கம் உயர் தரம் வரை திருமலையின் புகழ் பூத்த பழம் பெரும் வரலாற்றைக் கொண்ட புனித சூசையப்பர் கல்லூரியில்தான் கல்வி கற்றேன். உயர் தரத்தில் வர்த்தக பிரிவில் கல்வி கற்ற நான், முகாமைத்துவ கற்கைக்கு தெரிவு செய்யப்பட்டு கிழக்குப் பல்கலையில் எனது உயர் கல்வியைக் கற்றேன்.

எனது தொழில் அனுபவம் மூன்று வகையானது. எனது பல்கலைக் கழகக் கல்வி முடிந்து வெளியேறியதும் மட்டக்களப்பின் முதல் வார வெளியீடாக வெளிவந்த தினக்கதிர் ஆசிரிய பீடத்தில் வேலை கிடைத்தது. அதன்பின்னர் 2004 ல் மட்டக்களப்பில் இயங்கிய நோர்வே நாட்டு நிதியில் இயங்கிய வேலைத் திட்டத்தில் சமூக உணர்வூட்டலாளராக ஒரு வருடம் கடமையாற்றினேன். 2005 இல் பட்டதாரிகளுக்கான அரச சேவையில் இணைந்து இன்றுவரை மனித வள அபிவிருத்தி உத்தியோகத்தராகப் பணிபுரிகிறேன்.

கலை இலக்கியத் துறைக்குள் எவ்வாறு ஈர்க்கப்பட்டீர்கள்? இத்துறையில் உங்களை ஊக்குவித்தவர்கள் பற்றி?

எனது பாடசாலை காலங்களிலேயே நான் எழுதத் தொடங்கி விட்டேன். எனது எட்டாம் வகுப்பில் எமது தமிழ்ப் பாட ஆசிரியை திருமதி. கந்தையா அவர்களின் தூண்டுதலால் சிறுவர் வைரம் எனும் கை எழுத்துச் சஞ்சிகையை வெளியிட்டேன். அதன் தொடர்ச்சியாக தாகம் என்ற பெயரில் ஒரு இலக்கிய இதழை ரோணியோ அச்சில் வெளிக்கொணர்ந்தேன். பின்னர் தாகம் அச்சிதழாக வெளிவந்தது. இக் காலங்களில் எனது இலக்கிய ஆர்வத்தை எனது தமிழ் ஆசிரியர் திருமலை நவம் அவர்களும் தூண்டிவிட்டார்.

இற்றை வரைக்கும் எவ்வாறான ஆக்கங்களை எழுதியுள்ளீர்கள்?

கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், கட்டுரை என இலக்கியத்தின் பல வடிவங்களையும் தொட்டுள்ளேன்.

முதன் முதலாகக் கவிதை எழுதிய தருணம் எது?

ஆரம்ப காலங்களில் நான் கட்டுரையும், சிறுகதைகளும் எழுதிய காலத்தில் எனது தமிழ் ஆசிரியை திருமதி கந்தையா அவர்களின் தூண்டுதலால் கவிதை எழுதினேன். எனது முதல் கவிதை ஈழத்தில் இன்று மிக முக்கியமான பெண் கவிஞராக அறியப்படும் பாலையூற்று அஷ்ரபா நூர்டீன் அவர்களின் தினகரன் கவிதைச் சோலைப் பகுதியில் 1984.07.26 இல் வெளிவந்த ஷமஜ்னூக்கள்| என்ற கவிதைக்கு பதில் கவிதையாக ஷலைலாக்கள்| என்ற தலைப்பில் எழுதினேன். இந்தக் கவிதையே நான் எழுதிய முதலாவது கவிதை. இது தினகரன் பத்திரிகையின் கவிதைச் சோலைப் பகுதியில் 1984.08.09 இல் வெளியாகியிருந்தது. அத்துடன் இதுவே எனது முதல் கவிதைப் பிரசுரமாகவும் அமைந்தது.

இதுவரை வெளிவந்த உங்களது நூல் அறுவடைகள் பற்றிக் குறிப்பிடுங்கள்?

இதுவரை வெளியிட்ட நூல்களாக பின்வரும் 06 நூல்களையும் குறிப்பிடலாம்.

01. என் பிரிய ராஜகுமாரிக்கு கவிதை (1992)
02. பரசுராம பூமி சிறுகதை (1998)
03. சிலுவைகளே சிறகுகளாய் கவிதை (2019)
04. வீணையடி நீ எனக்கு நாவல் (2021)
05. இவனைச் சிலுவையில் அறையுங்கள் கவிதை (2021)
06. எழுதித் தீரா பிரியங்கள் கவிதை (2021)

எனது முதலாவது நூல் வெளியீடும் கவிதை நூலுமான ஷஷஎன் பிரிய ராஜகுமாரிக்கு' என்ற நூல் 1992 இல் வெளிவந்தது. அக்காலத்தில்தான் தமிழில் கணனி எழுத்துக்கள் அறிமுகமாகி, வீரகேசரி பத்திரிகையின் வார வெளியீடு கணனி மயப்படுத்தலோடு வெளிவந்தது. எனது கவிதை நூலின் அட்டையும் கணனி மூலமான வடிவமைப்பில் வெளிவந்தது குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் இது கணனி மூலமான அச்சில் வெளிவந்த முதல் கவிதை நூலானது. இதன் முன் பின் அட்டைப் படத்தினை நண்பர் கவிஞர் ஜபார் வடிவமைத்திருந்தார். பின் அட்டையில் என்னைப் பற்றிய குறிப்பினை நண்பரும் கலைஞருமான அமரர் ஸ்ரீPதர் பிச்சையப்பா தனது அழகிய கையெழுத்தில் கவிதை வடிவில் எழுதியிருந்தார். முன் பின் அட்டைகள் இரு கவிஞர்களின் கை வண்ணத்தில் பெறுமதி சுமந்த இத்தொகுப்பு தாகம் பதிப்பகத்தின் ஐந்தாவது வெளியீடாக வெளிவந்தது.

எனது இரண்டாவது கவிதை நூல் 'சிலுவைகளே சிறகுகளாய்' 2019 இல் கிட்டத்தட்ட 27 வருடங்களின் பின்னர் மகுடம் பதிப்பகத்தினால் மட்டக்களப்பில் வெளியிடப்பட்டது. இந்த நூலானது பேராசிரியர் செ. யோகராசாவின் அணிந்துரையுடனும் எழுத்தாளர் நந்தினிசேவியரின் பின்னுரையுடனும் வெளிவந்தது. மேலும் எனது சிலுவைகளே சிறகுகளாய் கவிதை நூல் 2000 ஆம் ஆண்டுக்கான தேசிய சாகித்திய விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட மூன்று நூல்களில் ஒன்றாகத் தெரிவு செய்யப்பட்டதுடன் அந்த ஆண்டில் இந்திய திருப்பூர் இலக்கிய விருதுக்கும் தெரிவு செய்யப்பட்டது.

2021 ஆரம்ப காலத்தில் எனது 'வீணையடி நீ எனக்கு|| என்ற நாவல் வெளியானது. 2021 இன் இறுதியில் எனது மூன்றாவது கவிதை நூலான 'இவனைச் சிலுவையில் அறையுங்கள்' என்ற நூல் தமிழகப் பேராசிரியர் அ. ராமசாமி, கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் அருட் பணி அகுஸ்தின் நவரெட்ணம் ஆகியோரின் அணிந்துரைகளுடன் வெளிவந்தது. இதேகாலப் பகுதியில் எனது நான்காவது கவிதை நூலான 'எழுதித் தீரா பிரியங்கள்' வெளியானது குறிப்பிடத்தக்கது.

நீங்கள் வெளியிட்ட பரசுராம பூமி சிறுகதை நூல் பற்றி?

பரசுராம பூமி 1998 இல் வெளிவந்த எனது முதலாவது சிறுகதைத் தொகுப்பாகும். அது வெளிவந்த ஆண்டுக்கான கிழக்கு மாகாண சாகித்திய விருதைப் பெற்றுக்கொண்டது. பரசுராம பூமியின் சிறுகதைகள் அனைத்தும் மறுவாசிப்புக் கதைகள் ஆகும். முழுக்க முழுக்க தொன்மங்களையும், இதிகாச, புராண, மறை நூல்களை மறுவாசிப்புக்கு உட்படுத்தும் தமிழின் முதல் சிறுகதைத் தொகுப்பு என்ற பிரகடனத்துடன் வெளிவந்த இந்தத் தொகுதி ஒன்பது சிறுகதைகளைக் கொண்டது.

பேராசிரியர் சி. மௌனகுரு, பேராசிரியர் செ. யோகராசா, கவிஞர் ஜிப்ரி ஹசன் ஆகியோரின் அணிந்துரைகளுடன் வெளிவந்த இந்த நூலின் வெளியீடு மட்டக்களப்பிலும், அறிமுக நிகழ்வுகள் திருகோணமலையிலும், யாழ்ப்பாணத்திலும் நடைபெற்றது.

உங்கள் சிலுவைகளே சிறகுகளாய் கவிதை நூலின் வரவு பற்றி என்ன குறிப்பிடுவீர்கள்? இந்த நூலில் உள்ளடங்கியுள்ள கருப்பொருட்கள் பற்றியும் குறிப்பிடுங்கள்?

சிலுவைகளே சிறகுகளாய் எனது இரண்டாவது கவிதை நூலாகும். முப்பது வருடகாலமாக எமது மண்ணிலே நடைபெற்ற போராட்டம் தொடர்பான, அதன் இழப்புகள், வலிகள், வேதனைகள் பற்றி நிறையவே பேசிய தொகுப்பு. தேசிய சாகித்திய விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட மூன்று நூல்களில் (2019) முதல் நூல் இதுவாகும். இது இந்திய திருப்பூர் இலக்கிய விருதும் பெற்றது.

சமகாலமாக நாவல் இலக்கியங்களின் வரவு கணிசமாக குறைந்து வருகின்றது. அந்தவகையில் உங்களின் முதல் நாவலின் தனித்துவம் பற்றிக் குறிப்பிட முடியுமா?

ஷஷவீணையடி நீ எனக்கு|| (2021) என்ற எனது முதல் நாவல் கிழக்குப் பல்கலைக்கழக வாழ்வியலை பேசும் முதல் நாவலும் ஈழத்தில் முழுக்க முழுக்க பல்கலைக்கழக வாழ்வியலைப் பேசி வெளிவந்த மூன்றாவது நாவலுமாகும். இதுவும் காதலையும், அரசியலையும் இணைத்த வகையில் திருகோணமலை, மட்டக்களப்பு என்ற இரு பிரதேசங்களையும் வைத்து எழுதப்பட்டதாகும்.

வீணையடி நீ எனக்கு நாவலின் மூலம் சமூகத்துக்குச் சொல்ல விரும்பும் விசேட செய்தி என்ன?

நான் எனது எழுத்துக்கள் மூலம் போதனை செய்வதில்லை. சமூகத்தில் இருந்து பெற்றதை, எடுத்ததை சமூகத்திற்கே திருப்பிக் கொடுக்கின்றேன். அந்தவகையில் வீணையடி நீ எனக்கு என்ற நாவல் எனது பல்கலைக்கழக வாழ்வின் அனுபவங்கள். அங்கு நான் பெற்றதையும், எடுத்ததையும் எனது நாவலில் திருப்பிக் கொடுத்துள்ளேன்.

உங்களது படைப்புகள் பெண்களின் பிரச்சினைகளைப் பேசியிருக்கின்றதா?

நிறையவே பேசி இருக்கின்றது. வீணையடி நீ எனக்கு நாவலே முழுக்க முழுக்க பெண்களின் வாழ்வியலுடன் தொடர்புபட்ட அவர்களது பிரச்சனைகளைச் சொல்லும் நாவலாகவும் கொள்ளலாம். இராணுவத்தால் பாதிக்கப்பட்ட ஒரு இளம் பெண்ணின் கதையாகவும் கொள்ளலாம். மேலும் இதுவரை யாருமே எழுதாத ஊர்மிளையைப் பற்றி எனது ஓர்மம் சிறுகதையில் பேசியுள்ளேன்.

ஊர்மிளை ராமாயணத்தில் இலக்குவனனின் மனைவி. 14 வருடங்கள் கட்டில் வசித்த அண்ணன் ராமனுக்கு துணையாக இலக்குவன் சென்றுவிடுகிறான். காட்டில் ராமன் சீதையுடன் இணைந்தே இருந்தான். ஆனால் 14 வருடங்கள் இலக்குவனனும், ஊர்மிளையும் பிரிந்தே வாழ்ந்தனர். யாருமே ஊர்மிளையைப் பற்றிப் பேசுவதில்லை. பலருக்கு ஊர்மிளையின் பெயரே தெரியாது. 14 வருடங்கள் கணவனைப் பிரிந்து வாழ்ந்த அவளது மன உணர்வுகளை எனது ஓர்மம் கதையில் சொல்கிறேன்.

இன்னும் யாருமே அணுகாத புதிய பார்வையில் அகலிகையை வைத்து எழுதிய வரம் என்ற சிறுகதை முக்கியமானது. இப்படி இன்னும் பல கதைகளைக் கூறலாம்.

ஒரு சஞ்சிகையாசிரியராக மகுடம்சஞ்சிகையின் வரவு பற்றி என்ன சொல்வீர்கள்?

முதன் முதலாக மகுடம் சஞ்சிகை 2012 இல் வெளிவந்தது. மகுடம் கலை இலக்கிய சமூக பண்பாட்டு காலாண்டிதழாக இன்றுவரை தொடர்ந்து வெளிவருகிறது. இதுவரை 13 சஞ்சிகைகள் காலாண்டு இதழ்களாக வெளிவந்துள்ளது. எமது மகுடம் சஞ்சிகை பழமைக்கும் நவீனத்துவத்துக்குமான ஒரு பாலமாக, தொன்மங்களுக்கூடான எம் வரலாற்றைப் பேசும் இலக்கிய முயற்சிகளுக்கு களம் அமைத்துக் கொடுக்கிறது. அண்மையில் ஞானம் சஞ்சிகை ஆசிரியரின் பவள விழா நிகழ்வில் சஞ்சிகைக்களுக்கிடையிலான போட்டியில் மகுடம் சஞ்சிகை தேசிய ரீதியில் இரண்டாம் இடம் பெற்று 15000 ரூபாய் பரிசினைப் பெற்றுக் கொண்டது.

மகுடம் சஞ்சிகையின் சிறப்பம்சங்கள் குறித்தும் அதன் சமூகப் பயன்பாடுகள் குறித்தும் கூறுங்கள்?

மகுடம் ஏனைய கலை இலக்கிய சஞ்சிகைகளிலிருந்து வேறுபடுவதற்கு காரணம் அது தனது ஒவ்வொரு இதழையும் சிறப்பிதழாக வெளியிடுவதாகும். இதுவரை மகுடம், தமிழ்த் தூது தனிநாயகம் அடிகள் சிறப்பிதழ், மலையகச் சிறப்பிதழ் சிறுகதைச் சிறப்பிதழ், பிரமிள் சிறப்பிதழ் எஸ்.பொ. சிறப்பிதழ், கனடா சிறப்பிதழ், பேராசிரியர் மௌனகுரு இரட்டைச் சிறப்பிதழ், மருதூர்க் கொத்தன் சிறப்பிதழ், என பல சிறப்பிதழ்களை அதுவும் மலையகத்துக்கு எந்தவொரு சஞ்சிகையும் செய்யாத விடயமாக இரண்டு முறை (04 ஆவது, 08 ஆவது) சிறப்பிதழ்களை வெளியிட்டுள்ளது. மேலும் மகுடம் கலை இலக்கிய வட்டத்தினை ஆரம்பித்து இதுவரை 42 நிகழ்வுக்கும் மேலான பௌர்ணமி கலை இலக்கிய நிகழ்வுகளை நடாத்தியுள்ளது.

மகுடம் 09 ஆவது இதழ் ஈழத்தில் மட்டுமல்லாது இந்திய அளவில் புகழ்பெற்ற கவிஞர் பிரமிள் என்கிற தர்மு சிவராமுவுக்கு சிறப்பிதழ் வெளியிட்டது. இதன் 50 பிரதிகள் தமிழகத்திற்கு அனுப்பப்பட்டது. ஆனால் இந்த பிரதிகள் போதாமையின் காரணமாக மகுடம் பிரமிள் சிறப்பிதழ் தமிழ் நாட்டில் மறுபதிப்பு (சுநிச்வெ) செய்யப்பட்டு வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. ஈழத்தின் சிற்றிதழ் ஒன்று தமிழகத்தில் விற்பனைக்கு சென்றதும், அங்கு மறுபதிப்பு செய்யப்பட்டதும் சிற்றிதழ் வரலாற்றில் இது ஓர் சரித்திர நிகழ்வாகும். ஈழத்து இதழிற்கு கிடைத்த பெருமையாகும்.

மகுடம் பதிப்பகம் இதுவரை 60 க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளது. 2021 இல் 20 க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டு சாதனை படைத்துள்ளது. 2022 இல் இதுவரை 12 நூல்களை வெளியிட்டுள்ளது. இவ்வருட இறுதிக்குள் இது 20 நூல்களாகும்.

புலம் பெயர் படைப்பாளிகள் பலர் தாயகத்தில் தமது நூல்கள் வெளிவர வேண்டும் என்றும், அவர்கள் இல்லாவிட்டாலும் அதற்கான விழாக்கள், அங்கு நடைபெற வேண்டும் என்றும் விரும்புகின்றனர். மகுடம் அதற்கான ஏற்பாடுகளை செய்வதனாலும், அச்சுத் தொழில் நுட்பம், வடிவமைப்பு போன்றவற்றில் மகுடம் ஒரு வித்தியாசத்தைக் கடைப்பிடிப்பதினாலும் மகுடம் மூலம் தமது நூல்களை வெளிக்கொணர அவர்கள் விரும்புகின்றனர். மகுடம் கடந்த ஆண்டு வெளியிட்ட 20 நூல்களில் 10 நூல்கள் புலம் பெயர்ந்து வாழும் படைப்பாளர்களது நூல்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் கடந்த ஆண்டிலும் இந்த ஆண்டிலும் தாயகத்தில் அதிக தமிழ் நூல்களை வெளியிட்டது மகுடமாகத்தான் இருக்கும் என்பதை மிகுந்த மன நிறைவோடு குறிப்பிடுகின்றேன்.

இணையப் பாவணை அதிகரித்துள்ள தற்காலத்தில் சஞ்சிகைக்கான வாசகர்கள் போதியளவு காணப்படுகின்றார்களா?

இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் எழுத்தை கண்களால் தடவி அச்சு வாசனையை நுகர்ந்தபடி கையில் சஞ்சிகையை வைத்து வாசிக்கும் அந்த உணர்வு இணையத்தில் இல்லை. அந்த உணர்வு உள்ளவரை சஞ்சிகைகள் வெளிவந்து கொண்டுதான் இருக்கும்.

சஞ்சிகைகளைத் தொடர்ந்து வெளியீடு செய்வது சிரமமான பணியாகத் தோன்றவில்லையா?

இன்றைய அச்சகப் பொருட்களின் விலை ஏற்றம் சஞ்சிகைகளை மட்டுமல்ல நூல்கள் வெளியிடுவதையும் கேள்விக் குறியாக்கியுள்ளது.

எழுத்துத் துறையில் உங்களை வியப்பில் ஆழ்த்தியவர்கள் யார்? ஏன்?

பலர் உண்டு. தொடர்ச்சியான அவர்களது எழுத்தால் பிரமித்து போய் உள்ளேன்.

நீங்கள் அண்மையில் வாசித்த படைப்புகளில் உங்கள் மனதில் பதிந்துள்ள ஒரு படைப்பு பற்றிச் சொல்வீர்களா?

1992 1993 காலப் பகுதி எனது பல்கலைக்கழக வாழ்வியலின் முதலாம் வருடம். இக்காலப் பகுதியில் கண்டி சத்தியோதய நிறுவனத்தின் சார்பில் தமிழில் முதல் முறையாக நடாத்திய தமிழ் மொழி மூலத் தொலைக்காட்சிப் பாடநெறியில் கிழக்கில் இருந்து நான் தெரிவு செய்யப்பட்டிருந்தேன். மூன்று மாத காலம் நடைபெற்ற இந்த டிப்ளோமாப் பயிற்சி நெறியில் இயக்கம் திரைக்கதை எழுதல் ஆகிய துறைகளில் நான் பயிற்சி பெற்றேன். பிரபல சிங்கள திரைப்பட இயக்குனர்கள் பலர் இப்பயிற்சி நெறியின் வளவாளராகக் கலந்து கொண்டனர்.

இக்காலப் பகுதியில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடாத்திய தொலைக்காட்சி நாடகப் பிரதியாக்கல் போட்டியில் தேசிய ரீதியாக பரிசு பெற்ற ஷஷமரபை மீறும் மானுடம்' என்ற தொலைக்காட்சி நாடகப் பிரதியை எனது தொலைக்காட்சி பயிற்சி நெறி முடிந்தவுடன் திருகோணமலையில் குறும்படமாக எடுத்தேன். அதில் திருமலையைச் சேர்ந்த எனது பல்கலைக்கழக நுண்கலைத் துறை மாணவி கதாநாயகியாக நடித்ததும், தென்றலும் புயலும் திரைப்படப் புகழ் பிரபல திருமலை நாடக நடிகர் அமரர் சித்தி அமரசிங்கம் நடித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. அதன்பின்னர் நான் அதிகம் கலை இலக்கிய ரீதியாக செயற்பட்டதும், வெளியீட்டு முயற்சிகளில் இறங்கியதும் குறும்பட முயற்சிகளில் ஒரு தேக்க நிலையை ஏற்படுத்திவிட்டது.

நீங்கள் மிகப் பெரிய பலமாக எதனைக் கருதுகின்றீர்கள்?

நான் எதனையும் சவாலாக எடுப்பதில்லை. தடைக் கற்களையும் படிக் கட்டுக்களாக மாற்றியபடி எனது பயணம் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. பதவி, பட்டங்கள் என நின்று நிதானித்தாலே சில சிக்கல்களும் மன அவஸ்தைகளும் ஏற்படும். நான் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கிறேன். இயங்குவேன். அதுவே நான். இயங்குதலே எனது வெற்றி. கலைப் பணி என்னைப் பொறுத்தவரை ஒரு தவம். இது வரங்களை எதிர்பார்த்த தவம் அல்ல. வரங்களை வழங்கும் தவம். இதுவே எனது பலம்.

படைப்புகளை நீங்கள் பார்க்கும் பார்வை திறனாய்வா அல்லது விமர்சனமா?

இரண்டும் இல்லை. ஒரு வாசகனாக குறித்த படைப்பாளி தனது படைப்பின் மூலம் என்ன சொல்ல வருகின்றான் என்பதையே பார்க்கிறேன். விமர்சன, திறனாய்வு பார்வைகளால் பார்த்தால் படைப்பை ருசித்து அனுபவிக்க முடியாது.

உங்கள் இலக்கிய வாழ்வில் உங்களால் மறக்க முடியாத சம்பவம் ஒன்றைக் குறிப்பிடுங்கள்?

1988 காலப் பகுதியில் உயர் தரம் படித்துக் கொண்டிருந்தேன். இக்காலத்தில் தாகம் சஞ்சிகையின் ஆசிரியராகவும் இருந்தேன். எமது மண்ணிலே இந்திய ராணுவம் குடி கொண்டிருந்த காலம் அது.

தாகத்தில் வெளிவந்த எனது ஆட்டாமா ரொட்டியும் ஆட்டிறைச்சி கறியும் என்ற கவிதைக்காக இந்திய ராணுவம் கைது செய்து ஒரு வாரம் வைத்திருந்தார்கள். எனது கவிதை இந்திய வல்லாதிக்கத்தையே அசைத்ததை என்னால் இன்றும் மறக்க முடியாது

எதிர்கால எழுத்து முயற்சிகள் பற்றிக் குறிப்பிடுங்கள்?

2022 ஜுன் மாதம் 26 ஆம் திகதி எனது ஏழாவது நூலும் ஐந்தாவது கவிதை நூலுமான என் இனிய பட்டாம் பூச்சிக்கு கவிதை நூல் வெளிவந்தது. எனது காதல் மனைவியின் பிறந்த நாளை முன்னிட்டு தினம் ஒரு கவிதையாக எழுதிய 44 கவிதைகளின் தொகுதியாகவே இந்த நூல் அமைகிறது. இது வெறும் காதல் கவிதைகள் அல்ல. காதலுக்கூடாக எமது மண்ணைப் பற்றியும், எமது பெருமை பற்றியும், எமது தொன்மம் பற்றியும் பேசும் நூலாகும். அத்துடன் 2023 இல் எனது அன்பின் முத்தங்கள் என்ற கவிதை நூலும் பொஞ்சியூ பிலாத்து என்ற குறுநாவலும் வெளிவரும்.

வெலிகம ரிம்ஸா முஹம்மத் ...✍

Senthooram செந்தூரம்

சினி பஜார் கேள்வி பதில்

மொழிவாணன்

எஸ். கணேஷ். மன்னார்.

கேள்வி:- ஜெயம் ரவி இரட்டை வேடமேற்று நடிக்கும் படமொன்று வெளிவர இருக்கிறதாமே. .?

பதில்:- ஆமாம்... மூன்றாண்டு கால இடை வெளிக்குப் பிறகு ஜெயம் ரவி நடிக்கும் படம் படமாளிகைகளில் வெளியாகிறது. இதனால் அவரது ரசிகர்கள் உற்சாகத்தில் இருக்கிறார்கள்..ஜெயம் ரவி நடித்து வெளியான 'பூலோகம்' படத்தை இயக்கிய இயக்குநர் கல்யான கிருஷ்ணன் இயக்கியிருக்கும் 'அகிலன்' திரைப் படத்தில் கடற்படை அதிகாரியாக ஒரு கதாபாத்திரத்திலும், வித்தியாசமான இளைஞனாக மற்றொரு கதாபாத்திரத்திலும் என இரண்டு கதாபாத்திரங்களில் நடிக்கிறார். இதில் நடிகைகள் பிரியா பவானி சங்கர் மற்றும் தான்யா ரவிச்சந்திரன் ஆகியோர் ஜோடியாக நடிக்கிறார்கள்.

எஸ்.எஸ்.சேகர் வவுனியா.

கேள்வி:- கே: எம்.ஜி.ஆரும் சிவாஜியும் இணைந்து நடித்ததைப் போல் எம்.ஜி.ஆரும் ஜெமினி கணேசனும் சேர்ந்து நடித்திருக்கிறார்களா..?

பதில்:- ஆமாம்.தேவர் பிலிம்ஸ் அதிபர் தேவர் தயாரித்த 'முகராசி' படத்தில் இருவரும் சேர்ந்து நடித்திருக்கிறார்கள்.

எஸ். எம். சிவா, வவுனியா.

கேள்வி:- 'விக்ரம்' பட வெற்றிக்களிப்பில் மிதக்கும் தயாரிப்பாளர் கமல்ஹாசன் படத்தில் சம்பந்தப்பட்ட எல்லோரையும் பரிசு மழையில் நனையவைத்துக் கொண்டிருக்கிறாராமே அதைப் பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்?

பதில்:- ஆமாம். .திரைப்படத்தின் கதாநாயகனும் தயாரிப்பாளருமான கமல் ஹாசன்', யான் பெற்ற இன்பம் பெறுக 'இவ்வையகம்' எனத் தன்னுடைய சந்தோசத்தை பரிசுப்பொருட்களாக பகிர்ந்து அளித்து வருகிறார். படத்தின் வெற்றிக்கு முக்கிய காரணமான இயக்குநர் லோகேஷ் கனக ராஜுக்கு இந்திய மதிப்பில் ரூபா 75இலட்சம் மதிப்புள்ள Lexus ES300h கார் மற்றும் திரைப்படத்தில் பங்கு பற்றிய 13 உதவி இயக்குனர்களுக்கு'Apache RTR160'பைக்குகள் என ஆச்சரியம் கொடுத்தவர், படத்தில் சிறப்பு தோற்றத்தில் நடித்த சூர்யாவுக்கு 'ரோலக்ஸ்' கைக்கடிகாரத்தை பரிசளித்திருக்கிறார். படத்தில் சூர்யாவின் கதாபாத்திரத்தின் பெயரும் 'ரோலக்ஸ்'தான். படத்தில் சூர்யாவின் கதாபாத்திரத்தை ரசிகர்கள் மிகப் பெரிய அளவில் கொண்டாடி தீர்த்து வருகிறார்கள்! அது மட்டுமல்ல கமல் அளித்து வரும் பரிசுகள் திரையுலகையே வியப்பில் ஆழ்த்தி வருகிறது. இத்திரைப் படத்தில் மேலும் பலருக்கும் கமல் தொடர்ந்தும் ஏதேனும் பரிசுகளை வழங்கினாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை!

எம்.மாக்ரட். எலபடகம்.

கேள்வி:- 'சந்திரமுகி 2 தயாராகிறதாமே ரஜனிகாந்த்தான் நாயகனா...வேறு யாரெல்லாம் நடிக்கிறார்கள்?

பதில்:- சுப்பர் ஸ்டார் ரஜினி காந்தின் நடிப்பில் வெளியாகி அதிக நாட்கள் பட மாளிகையில் ஓடிய திரைப்படம் என்ற சாதனையை படைத்த திரைப்படம் 'சந்திரமுகி'. ஹொரர் திரில்லர் பேனரில் தயாரான. இத்திரைப்படத்தின் அடுத்த பாகம்' சந்திரமுகி2'என உருவாகிறது. சுப்பர் ஸ்டாரின் தீவிர ரசிகரான ராகவா லோரன்ஸ் கதாநாயகனாக நடிக்க அவருடன் 'வைகைப்புயல்' வடிவேலு இணைந்திருக்கிறார். லைகாவின் தயாரிப்பு, முன்னணி தொழில்நுட்பக் கலைஞர்கள், இயக்குநர் பி.வாசு என பிரமாண்டமான கூட்டணியுடன் உருவாகும் 'சந்திரமுகி2' வெளியான நிலையிலேயே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருக்கிறது. இந்தி லையில் ராகவா லோரன்சுக்கு ஜோடியாக நடிக்க முன்னணி பொலிவூட் நடிகை ஒருவரிடம் பேச்சு வார்த்தை நடப்பட்டு வருவதால் தகவல்கள் வெளியாகி வருகிறது!

எம்.எம்.முஸம்மில், மினுவங்கொட.

கேள்வி: ஹன்சிகா. என்று ஒரு நடிகை இருந்தாரே...எங்கே மொழி அவர்...?

பதில்:- இருக்கிறார்...இருக்கிறார்.. இகோர் என்ற இயக்குநருடன் புதிய படத்துக்காக புதிய கூட்டணி அமைத்துள்ளார் ஹன்சிகா. இப்படத்தின் படப்பிடிப்பு சமீபத்தில் தான் தொடங்கியது. இயக்குநர் இகோர் 2006 ஆம் ஆண்டு ஆர்யா நடிப்பில் வெளியான 'கலாபக் காதலன்' படத்தின் மூலம் பிரபலமானார். அதையடுத்து'திக் திக்'மற்றும் 'வந்தா மல'ஆகிய படங்களை இயக்கினார். ஆரி அர்ஜுனா, ஜனனி துர்கா மற்றும் சௌமியா ஆகியோரும் நடிக்கிறார்கள். இப்படத்தில் ஆரி அர்ஜுனன் வில்லனாக நடிப்பதாக. கூறப்படுகிறது.

இப்படம் ஒரு மோசமானவனை சந்தித்த சில பெண்களைப்பற்றியது. ஹன்சிகாவின் கதாபாத்திரம் இந்தப் பெண்களை பிரச்சினையில் இருந்து காப்பாற்றுகிறது. பெண்களுக்கு எதிரான அனைத்து விதமான வன் முறைகளையும் இந்தப்படம் பேசுகிறது.

இப்படம் ஒரு மோசமானவனை சந்தித்த சில பெண்களைப் பற்றியது. ஹன்சிகாவின் கதாபாத்திரம் இந்தப் பெண்களை பிரச்சினையில் இருந்து காப்பாற்றுகிறது. பெண்களுக்கு எதிரான அனைத்து விதமான வன்முறைகளையும் இந்தப்படம் பேசுகிறது.

எம்.மலர்ராணி கொழும்பு13

கேள்வி:- 'விக்ரம்' படத்தில் 'ரோலக்ஸ்' என்ற சிறப்புத் தோற்றத்தில் வந்ததைப் போல் வேறு ஏதாவது படங்களில் நடித்து வருகிறாரா நம்ம சூர்யா?

பதில்:- சூர்யா தயாரிப்பில். இந்தியில் உருவாகி வரும், சூரரைப் போற்று' படத்திலும் சிறப்பு தோற்றத்தில் நடிக்கிறார் 'அதேபோல் ,ஜ்லை மாதம் முதல் திகதியன்று வெளி வரும் நடிகர் மாதவனின் நடிப்பில் வெளி வரும் 'ராக் கெட்ரி தி நம்மி எஃபெக்ட்' எனும் படத்திலும் நடிகர் சூர்யா கௌரவ வேடத்தில் நடித்துள்ளார் என்பதும் குறிப்பிடத் தக்கது.

சினி பஜார் கேள்வி பதில்,
தினகரன் வார மஞ்சரி,
லேக் ஹவுஸ், கொழும்பு-10.

அக்னிபத்' திட்டம் ஆழமான அர்த்தம் கொண்டது

கங்கனா ரணாவத்

'அக்னிபத்' திட்டம் ஆழமான அர்த்தம் கொண்டது என்று நடிகை கங்கனா ரணாவத் பாராட்டு தெரிவித்துள்ளார்.

மத்திய அரசின் அக்னிபத் திட்டம் நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை கிளப்பி இருக்கிறது. இதை திரும்ப பெறக்கோரி பல்வேறு மாநிலங்களில் போராட்டம் வெடித்து உள்ளது. அதேநேரம் இந்த திட்டம் கொண்டு வந்ததற்காக பிரதமர் மோடியை நடிகை கங்கனா ரணாவத் பாராட்டி உள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில், 'இஸ்ரேல் போன்ற பல நாடுகள் தங்கள் இளைஞர்களுக்கு ராணுவ பயிற்சியை கட்டாயமாக்கி இருக்கிறது. ஒழுக்கம், தேசியவாதம் போன்ற வாழ்க்கையின் மதிப்பீடுகளை கற்றுக்கொள்ளவும், நாட்டின் எல்லைகளை பாதுகாப்பது என்றால் என்ன என்பது குறித்து அறியவும் சில ஆண்டுகள் ஒவ்வொருவரும் ராணுவத்தில் பணியாற்ற வேண்டும். அந்தவகையில் அக்னிபத் திட்டமும், தொழில் வாழ்க்கையை கட்டமைப்பதை விட ஆழமான அர்த்தம் கொண்டது' என குறிப்பிட்டு உள்ளார்.

விக்ரம் வெற்றிக்கு இது தான் காரணம்:

கமல்ஹாசன் நெகிழ்ச்சி

விக்ரம் திரைப்படம் தமிழில் மட்டுமல்லாமல் மற்ற மொழிகளிலும் மிகுந்த வரவேற்பை பெற்று வருகிறது. சென்னை, லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் உருவான திரைப்படம் 'விக்ரம்'. இப்படத்தில் , முன்னணி நட்சத்திரங்களான கமல்ஹாசன், பகத் ஃபாசில், விஜய் சேதுபதி, சூர்யா என பலர் நடித்துள்ளனர். ஜுன் 3ஆம் திகதி திரையரங்குகளில் வெளியான இப்படம் வகல் ரீதியாகவும் விமர்சன ரீதியாகவும் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது. மூன்றாவது வாரத்தில் அடியெடுத்து வைத்துள்ள இப்படம் தமிழில் மட்டுமல்லாமல் தெலுங்கு, மலையாளம், கன்னடம் மொழிகளிலும் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. இதையடுத்து சென்னையில் அண்மையில் விக்ரம் திரைப்படத்தின் வெற்றி விழா நடைபெற்றது. இதில் படத்தின் தயாரிப்பாளரும் நடிகருமான கமல்ஹாசன் கலந்து கொண்டு பேசுகையில், "விக்ரம் பட வெற்றிக்காக கார் பரிசளித்தது, வாட்ச் கொடுத்தது, பைக் கொடுத்தது குறித்தெல்லாம் சொல்கின்றனர். அதையெல்லாம் விட பெரியது உழைக்கும் மக்கள் தங்களது கூலியிலிருந்து ஒரு தொகையைக் கொடுத்ததே உண்மையான பரிசு. எங்கள் படத்தை திருவிழா மாதிரி மக்கள் கொண்டாடி வருகின்றனர். அவர்கள் இல்லை என்றால் இது நடந்திருக்காது. கலை உலகத்தில் மொழி வித்தியாசம் கிடையாது. கடந்த பத்து வருட காலத்தில் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் என்னால் வெளியிட முடிந்த ஒரே படம் இதுமட்டுமே. அதற்கு காரணம் மகேந்திரனும், உதயநிதி ஸ்டாலினும் தான்." என கூறினார்.

அரசியலுக்குள் திரிஷா

நடிகை த்ரிஷா அரசியலில் குதிக்கப் போவதாக சமூக வலைதளங்கள் மற்றும் ஒரு சில இணையதளங்களில் செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கும் நிலையில் த்ரிஷா தரப்பில் அரசியலுக்கு வருவதை உறுதிப்படுத்தவில்லை. தமிழ் திரையுலகில் 2002ல் நடிகையாக அறிமுகமான திரிஷா முன்னணி கதாநாயகியாக உயர்ந்தார். பெரிய நடிகர்கள் ஜோடியாக நடித்துள்ளார். தெலுங்கிலும் அதிக படங்களில் நடித்து இருக்கிறார். இந்தி படத்திலும் நடித்துள்ளார். திரிஷாவுக்கு ஏற்கனவே திருமணம் நிச்சயமாகி கடைசி நேரத்தில் நின்று போனது. தற்போது அவருக்கு 39 வயது ஆகிறது. ரசிகர்கள் வலைதளத்தில் எப்போது திருமணம் செய்து கொள்வீர்கள் என்று தொடர்ந்து கேள்வி எழுப்பி வருகிறார்கள். விரைவில் திருமண அறிவிப்பை வெளியிடுவார் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது. மணிரத்னம் இயக்கிய பொன்னியின் செல்வன் படத்தில் திரிஷா நடித்து முடித்துள்ளார். ராேட் என்ற படத்தில் நடித்து வருகிறார். மலையாள படமும் கைவசம் உள்ளது.

இந்த நிலையில் திரிஷா அரசியலுக்கு வர திட்டமிட்டு இருப்பதாக வலைதளத்தில் தகவல் பரவி வருகிறது. பா.ஜ.க. அல்லது காங்கிரஸ் கட்சியில் இணைய திரிஷா முடிவு செய்து இருப்பதாகவும். இரு கட்சிகளை சேர்ந்த தலைவர்கள் அவருடன் தொடர்பு கொண்டு அழைப்பு விடுத்து வருவதாகவும் அந்த தகவலில் குறிப்பிடப்பட்டு உள்ளது. காங்கிரசில் இணைய அதிக வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது. ஆனாலும் திரிஷா தரப்பில் அரசியலுக்கு வருவதை உறுதிப்படுத்தவில்லை.

காஜல் சினிமாவுக்கு முழுக்கு போட முடிவு

நடிகை காஜல் அகர்வால் சினிமாவுக்கு முழுக்கு போட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

தென்னிந்திய மொழிகளில் பிரபலமான நாயகியாக வலம் வந்தவர் காஜல் அகர்வால். கடந்த 2008 ம் ஆண்டு பரத் நடித்த 'பழனி' படத்தின் மூலம் தமிழில் தனது அறிமுகத்தை கொடுத்தார். ஆனால், அந்த படம் பெரிதாக வரவேற்பை பெறவில்லை

இதையடுத்து, தெலுங்கு பக்கம் சென்ற காஜல் அகர்வால், ராம்சரணுடன் மகதீரா படத்தில் நடித்திருந்தார். இத்திரைப்படம் இவருக்கு மிகப்பெரிய பெயரை பெற்றுத்தந்து வசூலில் சாதனை படைத்தது.

மகதீரா படத்தின் வெற்றிக்குப்பிறகு முன்னணி நடிகை என பெயர் எடுத்த காஜல் அகர்வால், விஜய்க்கு ஜோடியாக துப்பாக்கி, ஜில்லா படங்களில் நடித்தார். போலீஸ் உமனாகவும், ஸ்போர்ட்ஸ் கேர்ளாகவும் இவர் நடித்து ரசிகர்களிடம் வரவேற்பை பெற்றிருந்தார். மேலும், அஜித், சூர்யா, தனுஷ் என பல முன்னணி நடிகர்களின் படங்களில் நடித்து ரசிகர்கள் மனதில் தனக்கென தனி இடத்தை பிடித்தார்.

படங்களில் பிஸியாக நடித்துகொண்டு இருக்கும் போதே, 2020ஆம் ஆண்டு கவுதம் கிச்சலு என்பவரை பெற்றோர்கள் சம்மதத்துடன் திருமணம் செய்துக்கொண்டார். இவர்களது ஹனிமூன் புகைப்படங்களும், ரொமான்ட்டிக் புகைப்படங்களும் அவ்வப்போவது வெளியாகி ரசிகர்களை குஷிப்படுத்தின.

காஜல் அகர்வால் கர்ப்பகால போட்டோஷூட் நடத்தி ரசிகர்களுக்கு தான் கர்ப்பமாக இருப்பதை அறிவித்தார். இதையடுத்து, கடந்த ஏப்ரல் மாதம் காஜல் அகர்வால் கிச்லு தம்பதிக்கு இறைவனின் ஆசிர்வாதத்துடன் ஆண் குழந்தை பிறந்துள்ளது. குழந்தைக்கு நீல் என பெயர் வைத்திருந்தனர். தனது குழந்தையின் புகைப்படத்தை அன்னையர் தினத்தன்று வெளியிட்டு, அன்னையாக இருப்பதில் பெருமை அடைவதாக கூறியிருந்தார்.

இந்நிலையில், காஜல் அகர்வால், திரைப்படங்களில் நடிக்கும் எண்ணம் தற்போதைக்கு இல்லை என்றும், குழந்தையை கவனிக்க நேரம் தேவைப்படுவதாகவும், குழந்தையை தன் அரவணைப்பில் வளர்க்கவே விரும்புவதாகவும் இதனால், ஓராண்டு கழித்து நடிப்பது குறித்து யோசிப்பதாக கால்ஷீட் கேட்டு வருபவர்களுடம் காஜல் அகர்வால் கூறி வருவதாக கூறப்படுகிறது.

நடிகை காஜல் அகர்வால் எடுத்துள்ள முடிவால், கமலின் ரசிகர்கள் அப்போ இந்தியன் 2 என்னவாகும் என கேட்டு வருகின்றனர். ஏற்கனவே படப்பிடிப்பில் ஏற்பட்ட விபத்து, கொரோனா, இயக்குநர் ஷங்கருக்கும் தயாரிப்பு நிறுவனத்திற்கும் இடையேயான கருத்து வேறுபாடு ஆகிய பிரச்சனைகளால் 'இந்தியன் 2' படத்தின் படப்பிடிப்பு தடைப்பட்டு போன நிலையில், காஜல் அகர்வால் எடுத்துள்ள முடிவால் மேலும் தாமதமாகும் என கூறப்படுகிறது.

இந்தியன் 2' படத்தில் காஜல் அகர்வால் கமலுக்கு ஜோடியாக நடித்துள்ளார். எனவே காஜல் அகர்வால் நடித்த காட்சிகள் அனைத்தும் மீண்டும் படமாக்கப்பட உள்ளது. இயக்குநர் ஷங்கர், ராம்சரணை வைத்து RC15 திரைப்படத்தை இயக்கி வருகிறார். இப்படம் விரைவில் முடிவடைய உள்ள நிலையில், இந்தியன் 2 குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

“ நீர் இன்றி அமையாது உலகு"

சுத்தமான குடிநீர் வசதி இன்றி பல இன்னல்களை சந்திக்கும் மக்கள் சமூகம் இன்றும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றது. 30 வருடங்களுக்கும் மேலாக நாவலப்பிட்டி, இம்பூல்பிட்டிய தோட்டத்தில் எண்ணூருக்கும் அதிகமான குடும்பங்கள் குடிநீர் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ளன. இந்த குடிநீர் பற்றாக்குறைக்கான தீர்வாக பிரஜாசக்தி செயற்திட்டத்தின் பணிப்பாளர் நாயகம் பாரத் அருள்சாமியின் வேண்டுகோளுக்கு இணங்க அல் நூர் தொண்டு நிறுவனத்தின் நிதி ஒதுக்கீட்டில் குடிநீர் திட்டம் அமைக்கப் பட்டு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் பிரதேச ரீதியான அதிகாரிகள் உட்பட அல்நூர் தொண்டு நிறுவன தலைவரும் , இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முக்கியஸ்தருமான ரகு இந்திரகுமாரும் கலந்து கொண்டனர்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவைப் பிரிவு அகில இலங்கை ரீதியாக நடத்திய கவிதை, சிறுகதைப் போட்டிகளில் தெரிவானவர்களுக்கான பரிசு வழங்கும் நிகழ்வு கூட்டுத்தாபனத் தலைவர் ஹட்சன் சமரசிங்க தலைமையில் முஸ்லிம் சேவைப் பிரிவு கட்டுப்பாட்டாளர் ரினோசியா ஜவ்பர் முன்னிலையில் ஆனந்த சமரகோன் கலையரங்கில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது “இந்தியாவில் சாதனை படைத்த முஸ்லிம்களின் வரலாறு” என்ற புத்தகத்தை புரவலர் ஹாஷிம் உமர் கூட்டுத்தாபனத் தலைவரிடம் கையளிப்பதையும் தலைவர் ஹட்சன்சமரசிங்க, முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரப், கூட்டுத்தாபன நிகழ்ச்சித் தயாரிப்புப் பிரிவு பிரதிப் பணிப்பாளர் மயூரி அபேசிங்க ஆகியோர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டிருப்பதையும் கூட்டுத்தாபன தமிழ்ப் பிரிவு ஆலோசகர் புரவலர் ஹாஷிம் உமர் வெற்றிபெற்ற ஒருவருக்கு பரிசு வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களுள் ஒரு பகுதியினரையும் காணலாம்.

'அண்ணா' பாடல் வெளியீடு

UK மாலாகுமார் தயாரிப்பில் தளபதி விஜய்யின் பிறந்தநாள் பரிசாக வெளியாகும் 'அண்ணா' பாடல்.

மறைந்த முன்னாள் தமிழக முதல்வர் ஜெயலலிதா, முன்னணி தமிழக திரை நட்சத்திரங்களான சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் மற்றும் அஜித் குமார் ஆகியோரைப் பற்றி பாடல்களை எழுதி, இணையத்தில் வெளியாகி மில்லியன் கணக்கிலான பார்வையாளர்களால் 'சிறந்த பாடலாசிரியர்' என கொண்டாடப்படுபவர் ஈழத்துக் கவிஞர் அஸ்மின். "நான்" திரைப்படத்தில் "தப்பெல்லாம் தப்பே இல்லை" பாடலின் மூலமாக நடிகர் விஜய் ஆண்டனியால் திரைத்துறையில் பாடலாசிரியராக அறிமுகப்படுத்தப் பட்டவர்.

இவர் தற்போது தமிழ்த் திரையுலகின் வசூல் சக்கரவர்த்தியாக திகழும் தளபதி விஜயின் பிறந்த நாளை முன்னிட்டு, 'அண்ணா' எனும் பெயரில் பிரத்யேக பாடல் ஒன்றை எழுதியிருக்கிறார். விஜய் ரசிகர்களால் கொண்டாடப்படும் சுயாதீன பாடலாக உருவாகியிருக்கும் இந்தப் பாடலை யுகே மாலா குமார் படைப்பகம் எனும் நிறுவனம் தயாரித்து வெளியிட்டுள்ளது. இந்த வீடியோ வடிவிலான இந்த இசை பாடல் வெளியீடு இன்று உலக இசை தினத்தில் சென்னையில் குமரன் காலனியில் அமைந்துள்ள சிகரம் மண்டபத்தில் பிரம்மாண்டமாக நடைபெற்றது.

விஜய்யின் 'அண்ணா' பாடலை கவிஞர் அஸ்மின் எழுத, ஈழத்து பாடகர் கஜீபன் செல்வம், பின்னணி பாடகி ஸ்ரீநிதி ஆகியோர் பாடியிருக்கிறார்கள். பாடலுக்கு சிந்துஜன் வெற்றிவேல் இசையமைத்திருக்கிறார். இந்தப் பாடலுக்கான படத்தொகுப்பை கதிர் ராஜசேகரம் மிகவும் சிறப்பாக செய்துள்ளார். ஒலிக்கலவையினை ஆர்.கே.சுந்தர் செய்துள்ளார்.

யு கே மாலா குமார் படைப்பகம் சார்பில் தயாரித்துள்ள"அண்ணா" பாடலின் முதல் பார்வையினை தயாரிப்பாளர் ஜி.தனஞ்செயன், "சிவகாசி","திருப்பாச்சி" இயக்குனர் பேரரசு, "பகவதி"இயக்குனர் ஏ.வெங்கடேஸ், "தமிழன் "இயக்குனர் மஜீத், கோயமுத்தூர் மாப்பிள்ளை இயக்குனர், நடிகர் சி.ரங்கநாதன், "லவ்டுடே" இயக்குனர் பாலசேகரன், "சுறா"இயக்குனர் எஸ். பி.ராஜ்குமார், இயக்குனர் நடிகர், கின்னஸ்பாபு, நடிகர் சம்பத்ராம் ஆகியோர் வெளியிட்டுவைத்தனர்.

அதே போன்று பாடல் அல்பத்தினை

"லவ்டுடே" இ`யக்குனர் பாலசேகரன், "சாஜஹான்" இயக்குனர் ரவி, இயக்குனர் ராசய்யா கண்ணன், இயக்குனர் ஸ்டீபன், இயக்குனர் காவியன், தயாரிப்பாளர் மதுரை செல்வம், "கயல்" திரைப்படம் புகழ் வின்சன் நகுலன் ஆகியோர் வெளியிட்டு வைத்தனர். நிகழ்ச்சியினை இயக்குனர் குணாஜீ சிறப்பாக தமிழ் மணக்க தொகுத்து வழங்கினார்.

செல்ஃபி உலா

தலைவர் விஜே,
அகில இலங்கை கிராமியக் கலை ஒன்றியம்

குட்டி இங்கிலாந்திலிருந்து
ஷான் சதீஷ்

ஷாருலதா பாலகிருஷ்ணன்

அறிவிப்பாளர்
நடராஜா சசிரேகா ஸ்ரீஸ்

பழம்பெரும் கலைஞர்
எஸ். என். நடராஜா

டுலீப்,
வத்தளை

Duraisamy devaraj,
கொழும்பு

ச.உதயசாந்தன்,
டார்டன்பீல்ட் , அகலவத்தை

லோகேஷ்

ஏ.பி.சதாசிவம்,
உன்னஸ்கிரிய பெரியமோலை,
எல்கடுவ.

Selvaraj Thivagaran

Aiyakuddy Govindanathan

வழிகாட்டுங்கள்



பிராணிகளுக்கு பிடித்த உணவுகளை தொடர்புபடுத்துங்கள்

நிறம் தீட்டுங்கள்

07 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்

நான் நொம்ப பீலி...

சாதிக்கத் துடிக்கும் தாடை இல்லாமல் பிறந்த ஒரு மனிதன்

ஜோசப் வில்லியம்ஸ், அவருக்கு இப்போது 41வயதாகிறது.இவர் தாடை இல்லாமல் சிகாகோவில் பிறந்தார். அவர் சைகை மொழி மற்றும் குறிப்புகளைப் பயன்படுத்தித்தான் மற்றவர்களுடன் பேசுகிறார். 39 வயதுடைய வான்யா எனும் பெண்ணை மணந்தார். DJ ஆக தொழிலைத் தொடர இவர் திட்டமிட்டுள்ளார்.

விசித்திரமான நோய்கள் மற்றும் கோளாறுகளால் பாதிக்கப்பட்டவர்கள் தான் இவ்வாறு வித்தியாசமாக பிறக்கிறார்கள். அதன் விளைவாக அவர்களின் உடல் வித்தியாசமாகத் தெரிகிறது. அப்படிப்பட்ட ஒருவர் அமெரிக்காவில் வசிக்கிறார். இந்த மனிதர் தாடைகள் இல்லாமல் பிறந்தார், இதன் விளைவாக அவரது வாழ்க்கை மிகவும் சவாலாக அமைந்தது.

எப்பொழுதும் கடுமையான தொல்லைகளை அவர் முகங் கொடுத்ததோடு அவற்றை அவர் சகித்துக்கொண்டவர். பாதி முகம் மறைந்து பிறந்ததால் அவரின் வாழ்க்கையே பரிதாபமாக இருந்தது. அவரின் வாழ்வில் துணைவி ஒருவர் வந்த நிலையில் இனி துக்கப்படுவதை அவள் அனுமதிக்க மாட்டாள் என்பது ஜோசப் உணர ஆரம்பித்துள்ளார். ஏனெனில் அது அவரது சுயமரியாதையை மேம்படுத்துகிறது

. ஆட்டோஃபேஷியல் சிண்ட்ரோம் எனப்படும் மிகவும் அரிதான நோயின் காரணமாகவே அவருக்கு இந்த நிலை ஏற்பட்டது.

பிறக்கும்போதே அவருக்கு இந்தப் பிரச்னை இருப்பது கண்டறியப்பட்டது. மற்றவர்கள் பயத்தால் அவரைப் புறக்கணித்தாலும், அவரது இயலாமை வாழ்க்கையின் எந்த விடயத்திலும் பங்கேற்பதைத் தடுக்க அனுமதிக்கவில்லை . ஜோசப் இப்போது ஒரு மகிழ்ச்சியாக இருக்கிறார். அவரது நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் நேரத்தை செலவிடுகிறார்.இவை அனைத்தும் அவரது மனைவி வான்யாவை சந்தித்த பிறகு தான் நடக்கிறது.

வயிற்றில் செருகப்பட்ட ஒரு குழாய் மூலம் அவருக்கு உணவு அனுப்பப்படுகிறது.

தன்னை பற்றி ஜோசப் கூறுகையில், நான் பிறக்கும்போது தாடை இல்லாமல் பிறந்ததை கண்டு என் அம்மா ஆச்சரியப்பட்டார். , நான் பிறந்த இல்லினாய்ஸிலிருந்து சிகாகோவிற்கு மாற்றப்பட்டு பல அறுவை சிகிச்சைகளுக்கு முகங் கொடுத்தேன்.

புதிதாக தாடைகளை கட்ட முயன்றனர். ஆனால் நான் வளர வளர, என் உடல் அதை நிராகரித்தது. அந்த செயல்முறை தோல்வியடைந்தது.

பின்னர் என்னை பெற்றோர் தந்துக் கொடுத்துள்ளனர். எனக்குச் சாப்பிடுவதற்கும், பேசுவதற்கும், சாதாரணமாக மூச்சு விடுவ

எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

தற்கும் கூட சிரமமாக இருக்கிறது. வயிற்றில் பதிக்கப்பட்டிருக்கும் குழாயின் காரணமாக என்னால் சுத்தமான உணவை மட்டுமே உட்கொள்ள முடிகிறது. இதன் விளைவாக, உணவின் உண்மையான சுவை தொடர்பில் எனக்கு எந்த அனுபவமும் இல்லை.

எனக்கு இரண்டு வயதாக இருந்த போது, தொடர்பு கொள்ள உதவும் சைகை மொழியைக் கற்றுக் கொடுத்தார்கள். இருப்பினும், அப்போதிருந்து, குறிப்புகளை எடுத்துக்கொள்வது மற்றும் எனது தொலைபேசியில் தட்டச்சு செய்வது போன்ற தகவல் தொடர்புக்கு எனக்கு உதவக் கூடிய பிற வழிகளைக் கண்டுபிடித்தேன்.

பல சமயங்களில் அவன் தற்கொலை செய்து கொள்ள நினைத்தான். நான் தனித்தன்மை வாய்ந்தவன் என்பதை அவன் உணர ஆரம்பித்ததோடு தோற்றத்தை வெறுத்து ஏற்றுக்கொள்ள மறுப்போர் தொடர்பில் அவதானமாக செயற்பட்டான். " 2020 இல் நான் திருமணம் செய்தேன். முதலில் நாங்கள் நண்பர்களாக இருந்தோம், ஆனால் படிப்படியாக காதலித்தோம்.

புதிதாக தாடைகளை கட்ட முயன்றனர். ஆனால் நான் வளர வளர, என் உடல் அதை நிராகரித்தது. அந்த செயல்முறை தோல்வியடைந்தது. பின்னர் என்னை பெற்றோர் தந்துக் கொடுத்துள்ளனர். எனக்குச் சாப்பிடுவதற்கும், பேசுவதற்கும், சாதாரணமாக மூச்சு விடுவதற்கும் கூட சிரமமாக இருக்கிறது.

நான் திருமணம் செய்து கொள்வேன் என்று யாரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன்" என்கிறார் ஜோசப். ஜோசப் இசையில் ஆர்வம் கொண்டவர், ஏனெனில் அது அந்த ஊடகத்தின் மூலம் தன்னை வெளிப்படுத்த அனுமதிக்கிறது. ட்ரம்ஸ் வாசிப்பதும், டிஜே விளையாடுவதும் அவருக்குப் பிடிக்கும். வாழ்நாள் முழுவதும் வேதனையை அனுபவித்த ஜோசப் உலகம் முழுவதும் புகழ் பெற்றுள்ளார். அந்தப் புகழ் அவரின் வேதனைகளுக்கு தீர்வை தராத போதும் ஓரளவு மனநிம்மதியை தந்திருக்கும்.

மலரல்

முல்லை முல்லியா

சேரா வீடென எதையும் அறியேன்

அகமும் புறமும் பிரிய இயலாத நிறங்களின் திணைகளாக விரிபவை சேரனின் கவிதைகள். ஈழத்துக் கவிதைப் புலத்தில் முக்கிய புள்ளியாகி நிற்பவர் சேரன். மகாகவி வழி கவிதையை இன்னொரு தடத்தில் பாய்ச்ச முனைந்தவர். நவீன பார்வை உள்ளடர்ந்த வீரியத்துடன் புதிய மொழிக் கோலமிட்டிருக்கிறது சேரனின் 'திணை மயக்கம் அல்லது நெஞ்சோடு கிளர்தல்'' ஒரு நூறு சிறு கவிதைகளின் திரட்சி. இருவருக்கிடையில் ஒரு பெரும் பாலை தொடங்கி வீடு திரும்புதல் வரையான ஒரு நூறு கவிதைகளில் சேரா என்கிற விளிப்பு அல்லது கேள்வி மேலெழுந்து நிற்குமொரு பாணிக் கவிதைகள் இவை.

இதற்குள்ளடங்கிய காதலும் போருமான வாழ்தலின் வலி, இழப்பு,பெருந்துயர், காமம், மோகம், தவிப்பு, சஞ்சலிப்பு, பிரிவு, மண் இழப்பு எனத் தொடரும் ஒரு நூறு உணர்வுகளின் நதியெடுப்பாக சேரன் நிற்கிறார். 'என்பும் மலரும் காதலையன்றி வேறு எதைத்தேடும் கவிதை'' என்கிற கவிதையின் மீதெழும் காதல் பூத்த மனம் சேரனுடையது. 'கவிதை ஊறும் வரைகாதல் ஈரமல்லவா'' குறு மொழிக்குள் நுரைத்தெழும் சேரனின் கவி மனம் ஆழ் பயணம்.

வீடு திரும்புகிறேன்
ஓங்கிய மலைவேம்பு
முh, முன்பிருந்த
கமுகின் வெற்றுத்தனம்
அம்மா
மாதுளை, காணாமல் போன நாவல்,
சிறு தென்னை, புளிய மரம்,
சேரா
இதுவன்றோ நீழல்?

ஔவன் கவிதை

மௌனத்தின் வேலி

மீதமற்ற மௌனமொன்றின்
மீதமைதியிலொளிரும் ஒற்றைச்
சொல்லா இல்லை
இருளடர் வெளியலையும் உருவுமற்ற குரலாநீ
மௌனங்களின் அடர்த்தியிடையுள்
நுழைந்த ஆயிரம் சொற்களின்
அர்த்தத்தை எங்ஙனம் மொழிபெயர்ப்பாய்
அன்றேல்
இருளடராக் கணத்திலெழுதிய ஒளிப்பொட்டிடை
உருவொன்றினேலும் வரைந்திடவா முனைகிறாய்
முற்காலத்தின் சொற்களெல்லாம்
காலாவதியாயின
எனின்
உன் மௌனத்தின் அர்த்தத்தை
எந்த மொழியிலெழுதி உயிர்ப்பேன்
கணம்

ஓவியங்களில் உயிர்க்கும் தூரிகை

முதல் மணியொலித்தது. நேரம் 7.41இல் கடிகாரக் கம்பிகள் நகர்ந்தன. மூன்றாம் மாடியில் 7ஏ படிகளில் கால்கள் விரைந்தன. உள்ளே நுழைகையில் ஒவ்வொரு மேசையிலும் முகங்கள் அப்பியிருந்தன. வெறும் முகப்படங்கள், உணர்வற்றவை. இந்தப் படங்களின் ஓவியக்காரனா நான்?

என் தூரிகை எது? என் வர்ணங்கள் எவை? என் வரைதலின் இலக்கு என்ன? கேள்விகள் மீது வளர்கிறேன் நான்.

ஒவ்வொரு நாளும் வரைய முனைகிறேன்;. வரையத் தொடங்குகிறேன். வரைவு குறித்துத் திட்டமிடுகிறேன்;. வரைவின் பெறுமானத்தை அதன் இலக்கைத் தெளிகிறேன். ஆனாலும் வரைவற்று முடிவற்றுப் போகிறது என் ஓவியங்கள்.

இன்றும் 33 முகங்கள். வெவ்வேறு வடிவம்;, நிறம், குணம், அளவு, அசைவுத்தனம்.....

நான் ஓவியங்களை வளர்க்கிறேனா? ஓவியங்கள் என்னை வளர்க்கின்றனவா? இந்தக் கேள்வி எப்போதும் மிதப்பு நிலையிலிருக்கும். அந்த எல்லா முகமும் சேர்ந்து வரைந்த ஒரு முகம் தானா நான். நான் இன்னும் வரைதல் தொடர்கிறேன்....

பால்பருவமுகங்கள்;, பசிபடர்ந்த முகங்கள்;, கிழிந்தடுத்தகம் போன்ற முகங்கள்; பாசமுகங்கள்;, ஏக்கமுகங்கள்;, தேடல்முகங்கள்;, கனவுமுகங்கள். இந்த முகங்களின் காலத்தைக் களவாட முடியுமா?

என் கையில் தரப்பட்ட தூரிகை ஓவியங்களால்த்தானே பெறுமானமும் பெரு மதிப்பும் பெற முடியும். வழமை போல் இன்றும் எனக்குள் தாகம்; பெருந்தாகம். பசி பெரும்பசி தேடல், எனது தாகத்தையும், பசியையும் தீர்த்திருக்கிறது. இன்றும் தேடுகிறேன். குறையோவியங்களில் வரைதல் தொடங்குகிறேன். எனது கலவை, எனது கைலாவண்யம்;, எனது கற்பனை, எனது இலக்கு எல்லாமே குவிமையம் கொள்கின்றன. வரைதல் தொடங்கவும் ஓவியங்கள் உயிர்ப்புறுகின்றன. நான் கேட்பவை, தூண்டிவிடுபவை, ஊக்கிவிடுபவை, சிந்தனையைக் கிளறி விடுபவை, அனுபவங்களிலிருந்து தொடுப்பவை எல்லாம் இந்த உயிர்ப்புக்குக் காரணமாகலாம்.

இன்றும் குழுமுறையில் ஓவியங்களை அணுகுகிறேன். ஐந்தைந்தாக வட்டமிடப்பட்ட ஓவியங்கள். அவற்றிற்கே தேடல்;, திரட்டல் கருவிகளைக் கொடுக்கிறேன். மிக உற்சாகம். மேலும் தூண்டுகிறேன். மேலும் உயிர்ப்புறுகிறது.

மகாத்மா காந்தியின் தலை, கை ,நெஞ்சு மீது நானும் ஓவியமிடுகிறேன். இந்த ஓவியங்களின் கைகள் பழகுகின்றன. தவறுகின்றன. இலக்குகள் வருகின்றன. சேர்ந்து இயங்குகின்றன. திறன் வளர்கிறது. கூடவே தலைகள் வேலை செய்கின்றன. சிந்திக்கின்றன. அறிவு தொழிற்படுகிறது. அறிவும், திறனும் ஓ.கே தான். நெஞ்சைப் பார்க்கிறேன். மனப்பாங்கு மாற்றம் அற்றிரியூட் சேன்ச்சையும் உருவாக்க முயல்கிறேன். பயிற்சியளிக்கிறேன். கூட்டியக்கம் மேலும் மேலும் உயிர்ப்புறுகிறது.

எனது ஓவியங்கள் மீது எனது தூரிகை வளர்கிறது. ஆத்ம திருப்தியில் மிதக்கிறேன். மணியடிக்கிறது. இந்த மணிச்சத்தம்தான் என் இதயத்துடிப்பு. என் இதயத்துடிப்பு தூரிகை. நான் வரையும் ஓவியங்கள் ஒவ்வொன்றும் என் சுவாசக் காற்று...

பொன்மீரா

ஊமக்காச்சி 01

ஒன்றுக்கும் உதவாதென்று ஒன்றுமில்லைத்தான். ஒவ்வொன்றும், ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வழியில் உதவிக்கொண்டுதான் இருக்கிறார்கள். நமது சின்னக்கால பாடசாலை நாட்களின் ஆற்றுப்படுத்துநர்களாக ஆசிரியர்களைக் காணுகிறோம். எங்கட மௌலவி சேர் பற்றியும் நினைவுகள் உண்டு. அவர்தான் முதல் மௌலவி சேர். அதனால் அவரது பெயரே மௌலவியாகி விட்டது. மணியடிக்க மாமரத்து நிழலில் அல்லது வெயிலில் வட்டமாக நிற்போம். பாடம் தொடங்குவார். பாடமென்ன பாடம். ஊர்ப்பாடம் தான்.

பெரும்பாலும் இஸ்லாம் வாசிப்புத்தான். என்னை வாசிக்கச் சொல்லுவார். முதலாம் பாடத்தின் முதலாம் வரி மட்டும்தான் அன்றைய வாசிப்பு. பிறகு ஊர்ப்பாடத்தை அவர் தொடங்கி விடுவார். சுவாரஸ்யமான தொடக்கம். எல்லோரும் வாய் பிளந்து நிற்பர். நந்திக்கடல் இறால் வீச்சில் தொடங்கி, கள்ளமாடு பிடிக்கிறதில் கடந்து வயல்வெளியில் தண்ணீர் பாய்ச்சுறதில் மிதந்து கொட்டுப் பீலியில் பெண்டுகள் குசுகுசுப்பது வரை நீளும் கதை முடிவற்ற கதை. ஊர்ப்பாத்திரங்களை அவர் தம் குணாம்சங்களோடு நடத்துவார் மௌலவி.

ஆரம்ப வகுப்புகளில் இஸ்லாம் என்று கற்றது இதைத்தான். இஸ்லாம் ஒரு சமூகப் பாடம் என்பார். டிரஸ்டி போர்ட், விளையாட்டுக்கழகம், இளைஞர் அமைப்பு, சின்ன லெப்பை, பெரிய லெப்பை என்று அவரது விமர்சனம் தொடரும். பாடப்புத்தகம் ஒரு பக்கத்துடன் மூடப்பட்டு விடும்.

இனி மேலே பலாவில் முத்திப் பழுத்தது, பிஞ்சில் பழுத்தது, காகங்கள் சுவைத்தது, கொட்டைகள் உதிர்வதென்று கதை ஒவ்வொன்றுக்கும் கதை சொவ்லுவார்.

பிஞ்சில பழுத்ததுகள் எண்டு பொம்புள புள்ளைகளப் பார்த்துக் கிண்டலடிப்பார். தலை தெறிச்சதுகளெண்டு ஆம்புள புள்ளயளத் திட்டுவார்.

டேய்.....நீ மாடு மேய்க்கத்தான் சரி, நீ எரும, உழவுக்குத்தான் சரி, நீ வண்ணான் துறைக்குத்தான் சரி, உனக்கு வாப்பாட வல வீச்சுத்தான் பொருத்தம்,உங்களுக்கேனடி படிப்பு, அடுப்படிதான் உங்களுக்கெல்லாம் நல்லது....என்று அவர் சொல்லும் பொருத்தப்பாட்டை யோசித்துப் பார்க்கிறேன். அவரது மனமுகம் என்னிலிருந்து மறையவில்லை.

எப்படி மறையும். ஊர்க்கதைகளால் என்னை நிரப்பியிருக்கிறார். ஒருவகையில் அவர் அனுபவப் பாடம் நடத்தியிருக்கின்றார். சாதாரண சகமார்க்கரின் யதார்த்த வாழ்வை நிதர்சனபூர்வமாகச் சொல்லியிருக்கின்றார் என்பது பிறகு தெரியவந்தது.

அவரை எவரும் மறந்திருக்கமாட்டார்கள். ஏனென்றால் அவர் அடிப்பதிலும் மகான். கதிரைச் சட்டகத்தால் அல்லது கைகளை மேசையில் நீட்டவைத்து தடித்த அடிமட்டத்தின் விளிம்பால் விடும் அடிகளின் வலிகள் இவரது மாணவர்கள் அனைவருக்குமுண்டு.

'அடியாத மாடு படியாது' என்ற பழமொழி அவர் நிறுவியிருக்கிறார். அவர் கெட்டிக்காரர். அரபு மொழியில் கொத்பா ஓதி யும்மா பள்ளியைத் தொடங்கி வைத்த போது நானும் அவர் மாணவனாக இருந்து பிரசங்கம் கேட்டிருக்கிறேன்.

ஒன்றுக்கும் உதவாதென்று ஒண்டையும் ஒதுக்க முடியாது என்பதற்கு அவரும் சாட்சிதான்.

வித்தியாசமான நடிப்பில் திரையுலகை அதிர வைத்த நடிகர்

தனது வித்தியாசமான நடிப்பினால் திரையுலகை அதிர வைத்த நடிகர் ரகுவரன். இவர் 1958 டிசம்பர் 11ஆம் திகதி பிறந்தார். தமிழ், மலையாளம், ஹிந்தி, தெலுங்கு மொழிகளில் வில்லன் வேடங்களிலும் குணச்சித்திர வேடங்களிலும் ஏறத்தாழ 300 படங்களுக்கு மேல் நடித்த திரைப்பட நடிகராவார். ரகுவரன் கொல்லன் கோடு, பாலக்காடு மாவட்டம், கேரளாவில் பிறந்தவர். உடல் நலக்குறைவு காரணமாக காரணமாக 2008 மார்ச் 19ஆம் திகதி சென்னையில் காலமானார்.

இவர் நடிகை ரோஹிணியை காதலித்து மணந்தார். 1996இல் மணம் புரிந்த இத்தம்பதிகள் 2004இல் விவாகரத்து பெற்றனர். ராதாகிருஷ்ணன் வேலாயுதம் நாயர் கஸ்தூரி தம்பதியருக்கு முதல் மகனாக பிறந்தவர் ரகுவரன்.

இவர் தந்தை வேலாயுதம் நாயர் தொழில் செய்வதற்காக தமிழ்நாட்டில் உள்ள கோயம்புத்தூரில் தனது குடும்பத்துடன் குடியேறினர். அதன் பின் ரகுவரன் கோவையில் இளங்கலை பட்டத்தை படித்தார். இவர் 1982 ஆம் ஆண்டு "ஏழாவது மனிதன்" என்ற படத்தின் மூலம் தமிழ் திரையுலகில் அறிமுகமானார்.

கூட்டுப்புழுக்கள், கை நாட்டு, மைக்கேல் ராஜ் ஆகிய படங்களில் கதாநாயகனாக நடித்தார். எதிர்நாயகன் வேட நடிப்பும் ரசிகர்களால் வரவேற்கப்பட்டது. சம்சாரம் அது மின்சாரம், அஞ்சலி போன்ற படங்களில் குணச்சித்திர வேடத்தில் நடித்தார். இது தவிர ஹிந்தி, மலையாளம், தெலுங்கு, கன்னடப் படங்களிலும் நடித்திருக்கிறார். இவர் போதைப் பழக்கத்திற்கு அடிமையானதால் இவரது திரை வாழ்க்கை மட்டுமின்றி சொந்த வாழ்க்கையும் பாதிக்கப்பட்டது. இத்தகைய போதை பழக்கத்தால் இவர் காதல் திருமணம் செய்து கொண்ட நடிகை ரோகிணியும் விட்டு பிரிந்து செல்ல நேர்ந்தது. ரகுவரன் அவரது போதை பழக்கத்தில் இருந்து விடுபட முயற்சி செய்தாலும், அவரால் போதை பழக்கத்தில் இருந்து மீண்டு வர முடியாமல் போனது.

சில காட்சிகளில் தோன்றினாலும் எவ்வளவு திறமையான கதாநாயகர்களையும் தனது அபார ஆற்றல் கொண்ட நடிப்பால் விஞ்சி நிற்பவர் ரகுவரன்.

உடல் நலக்குறைவு காரணமாக சென்னை சேத்துப்பட்டில் நடிகர் ரகுவரன் காலமானார். நடிகை ரோகினியை திருமணம் செய்து கொண்ட ரகுவரனுக்கு ரிஷி என்ற மகன் உள்ளார்.

பாட்ஷா, முதல்வன், மிஸ்டர் பாரத், காதலன், அருணாச்சலம், ரட்சகன், முகவரி, சம்சாரம் அது மின்சாரம், ஏழாவது மனிதன் ஆகியன ரகுவரனுக்கு பேர் வாங்கிக் கொடுத்த சில குறிப்பிடத்தக்க படங்களாகும்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசனுடன் ரகுவரன் இணைந்து நடிக்க இருந்த "பூப்போல மனசு" என்ற படம் பூஜையுடன் நின்று போனது. நல்ல திறமையான நடிகர் என சிவாஜி கணேசனிடம் ஆசீர்வாதம் பெற்றவர் ரகுவரன்.

சில படங்களில் சில காட்சிகளில் தோன்றினாலும் எவ்வளவு திறமையான கதாநாயகர்களையும் தனது அபார ஆற்றல் கொண்ட நடிப்பால் விஞ்சி நிற்பவர் ரகுவரன். ரஜினிகாந்த் கதாநாயகனாக நடித்த பாட்ஷாவில் மார்க் என்டனியாக, அர்ஜுன் கதாநாயகனாக நடித்த முதல்வனில் அரங்கநாயகமாக இவர் நடித்த பாத்திரங்கள் ரசிகர்களை பெரிதும் கவர்ந்தன.

இது போன்ற படங்களில் அதிகமாக விஞ்சி நின்று அமோக வெற்றிக்கு வலு சேர்த்தவர் ரகுவரன். இவரேற்ற காதலன், "மல்லி", அமர்க்களம் "துளசிதாஸ்", முத்து "திவான்", உல்லாசம் "ஜி.கே.", இரனியன் "ஆண்டே", ரட்சகன் "ஈஷ்வர்", அஞ்சலி "சேகர்", தொட்டா சிணுங்கி "கோபால்", போன்ற பாத்திரங்கள் மறக்க முடியாதவைகளாகும்.

புரியாத புதிரில் இவர் சைக்கோவாகசெய்தஅட்டகாசம்பிரமாதம். நீண்ட காலம் சினிமாத் துறையில் தன் ஆளுமையை இருத்திக் கொள்ள வேண்டிய பெறுமதி மிக்க கலைஞர் ரகுவரன்.

போதைப் பழக்கத்திற்கு அடிமையாகி தன் வாழ்நாளை சுருக்கி கொண்டு திரையுலகம் விட்டு விண்ணுலகம் சென்றார். ஆயினும் அவரின் இருப்பிடம் இன்னும் வெற்றிடமாகவே காணப்படுகின்றது. நடிகவேள் எம்.ஆர்.ராதாவிற்கு பின் , அவருக்கு நிகராக சினிமாவில் கோலோச்சியவர் ரகுவரன் ஒருவரே. சிவாஜி, எம்ஜிஆர் போன்ற பெரிய நட்சத்திரங்கள் எம்.ஆர். ராதாவுடன் நடிக்கும் போது சர்வ ஜாக்கிரதையாக இருப்பார்களாகும். தனது உடல் மொழியாலும்,கரகரத்த குரலாலும் இரண்டு வரிகளில் வசனம் பேசி காட்சியின் போக்கையே அபாரமாக திசை திருப்பும் ஆற்றல் கொண்டவர் எம்.ஆர்.ராதா.

பாகப்பிரிவினை, ஆலயமணி, பாவ மன்னிப்பு,

பலே பாண்டியா,சாந்தி போன்ற சிவாஜி படங்களும், தாயைக் காத்த தனயன், பெற்றால்தான் பிள்ளையா, குடும்பத் தலைவன் போன்ற எம்ஜியார் படங்களும் இதற்கு உதாரணம். அதுபோல் ரகுவரன் தன் உடல் மொழியால் வசனமின்றி தலையை உயர்த்தி விழிகளை உருட்டியவாறே மிரளவைப்பார்.

ஆக்கம்: எஸ். கணேசன்
ஆச்சாரி சதீஷ் கம்பளை

இலங்கை தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட சிங்கள மொழிப் பாடநெறியைப் பூர்த்தி செய்த வைத்திய உத்தியோகத்தர்களுக்கான இறுதிநாள் நிகழ்வு சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் அஸாத் எம் ஹனிபா, மொழிக்கல்வி பயிற்சி நிறுவனத்தின் ஒருங்கிணைப்பாளர் உட்பட பயிற்சிநெறியை பூர்த்தி செய்த வைத்தியர்கள் கலந்து கொண்டனர்.

இலங்கை அரசாங்க மொழிபெயர்ப்பாளர்கள் சேவை ஊழியர்களுக்கான மாதாந்த செய்திமடல் 2022 ஜூன் மாதம் 26ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிடப் பிரசுரிக்கப்பட்டது.